321/நா-தொ/பிரமஎண்ணூறு
[90.] 2
பக்கம் 174

# பிரமமுனி எண்ணூறு

(முதல்முதலாக அச்சேறும் ஓலைச்சுவடி)



அருள்மிகு பழநி தண்டாயுதபாணி சுவாமி திருக்கோயில்
சித்த மருத்துவநூல் வெளியீட்டுக்குழு
1976

வெளியீட்டுத் தொடர் எண் : 28

# பிரமமுனி எண்ணூறு

(முதல்முதலாக அச்சேறும் ஓலைச்சுவடி)



அருள்மிகு பழநி தண்டாயுதபாணி சுவாமி திருக்கோயில்
சித்த மருத்துவநூல் வெளியீட்டுக் குழுவினருக்காக
கௌரவத் தலைவர்
**டாக்டர் இரா. தியாகராாசன்,** எல்.ஐ.எம்.,
அவர்களால் பதிப்பிக்கப்பெற்று
தமிழ்நாடு அரசுக்கு நன்கொடையாக அளிக்கப்பெற்றது.

கி.பி. 1976 விலை ரூ. 6–80

முதற் பதிப்பு : 1976

உரிமை :

அருள்மிகு பழநி தண்டாயுதபாணி சுவாமி திருக்கோயில்

சித்த மருத்துவநூல் வெளியீட்டுக் குழு,

இந்திய மருத்துவத்துறை இயக்குநர் அலுவலகம்,

சென்னை—600029.

அச்சிட்டோர் :

ரத்தினம் கிளை அச்சகம்,

65, திருப்பள்ளித் தெரு,

சென்னை—600001,

## அருள்மிகு

# பழநி தண்டாயுதபாணி சுவாமி திருக்கோயில்

### அறங்காவலர் குழு


திரு. கு. சின்னப்பன், தலைவர், அறங்காவலர் குழு

,, அ. தமிழரசு — அறங்காவலர்

,, இரா. சின்னதுரை — ,,

,, புலவர் சி. பழனிச்சாமி, எம்.எல்.ஏ. — ,,

,, ஏ. பச்சையப்ப கவுண்டர் — ,,

சி. எஸ். தீனதயாளு, பி.எஸ்ஸி., பி.எல்.,
துணை ஆணையர்—நிருவாக அதிகாரி.


## அருள்மிகு

# பழநி தண்டாயுதபாணி சுவாமி திருக்கோயில்

### சித்த மருத்துவ நூல் வெளியீட்டுக் குழு


டாக்டர் இரா. தியாகராசன், எல்.ஐ.எம்.,
பொறுப்பு அலுவலர்,
சித்த மருத்துவ மைய ஆராய்ச்சி நிலையம்,
சென்னை-600029. ... தலைவர்

டாக்டர் ஆ. ஆனந்தகுமார், ஜி.சி.ஐ.எம்.,
தலைவர், இந்திய மருத்துவ மத்திய கழகம்,
சென்னை-600005, ... பொருளாளர்

திரு. கு. சின்னப்பன்
தலைவர், அறங்காவலர் குழு,
அருள்மிகு பழநி தண்டாயுதபாணி சுவாமி
திருக்கோயில், பழநி. ... உறுப்பினர்

டாக்டர் ப. சிற்சபை, ஆர்.ஐ.எம்.பி.,
துணைத் தலைவர்,
இந்திய மருத்துவ மத்தியகழகம் ... உறுப்பினர்

திரு. சி. எஸ், தீனதயாளு, பி.எஸ்ஸி., பி.எல்,,
நிருவாக அதிகாரி, அருள்மிகு பழநி
தண்டாயுதபாணி சுவாமி திருக்கோயில்,
பழநி, ... உறுப்பினர்

டாக்டர் பு. மு. வேணுகோபால், எச்.பி.ஐ எம்.,
இந்திய மருத்துவத்துறை இயக்குநர், சிறப்பு
சென்னை-600029. அழைப்பினர்

## சித்த மருத்துவ அறிவியல் வளர்ச்சிக் குழு

### உறுப்பினர்கள்

1. டாக்டர் இரா. தியாகராசன், எல்,ஐ.எம்.,
பொறுப்பு அலுவலர், சித்த மருத்துவ மைய
ஆராய்ச்சி நிலையம், சென்னை-600029. ... தலைவர்

2. டாக்டர் பு. மு. வேணுகோபால், எச்.பி.ஐ.எம்.,
இயக்குநர், இந்திய மருத்துவத்துறை, ... உறுப்பினர்-
சென்னை-600029. செயலர்

3. டாக்டர் சி. எஸ். உத்தமராயன், எச்.பி.ஐ.எம்.,
முன்னாள் இயக்குநர், இந்திய மருத்துவத்துறை,
சென்னை-600005. ... உறுப்பினர்

4. டாக்டர் எம். சண்முகவேலு, எச்.பி.ஐ.எம்.,
முன்னாள் மருத்துவப் பேராசிரியர்,
இராமநாதபுரம், ... உறுப்பினர்

5. டாக்டர் கே. இராதாகிருஷ்ணன், எல்.ஐ.எம்.,
மருத்துவ அலுவலர், ஊராட்சி ஒன்றிய மருந்தகம்,
காவேரிப்பாக்கம், வட ஆர்க்காடு. ,,

6. டாக்டர் எ. சிறில் ஹென்றி, எல்.ஐ.எம்.,
ஓய்வுபெற்ற மருத்துவ அலுவலர்,
நகராட்சி மருந்தகம், திருச்சி. ,,

7. டாக்டர் ஆ. ஆனந்தகுமார், ஜி.சி.ஐ.எம்.,
தலைவர், இந்திய மருத்துவ மத்திய கழகம்,
சென்னை-600005. ... உறுப்பினர்

8. டாக்டர் ப. சிற்சபை, ஆர்.ஐ.எம்.பி.,
துணைத்தலைவர்,
இந்திய மருத்துவ மத்திய கழகம். ,,

9. பண்டிட். பெ. முத்துக்கருப்ப பிள்ளை, ஆர்.ஐ.எம்.பி.,
தலைவர், சித்த மருத்துவ சங்கம், மதுரை. ,,

10. டாக்டர் டி. வி. கல்யாணசுந்தரம், ஆர்.ஐ.எம்.பி.,
தலைவர், சென்டிரல் சித்தா மெடிக்கல் கவுன்சில்,
சென்னை-600012. ,,

11. டாக்டர் என், சேது ரகுநாதன்,
தமிழ்ப்பேராசிரியர், விருதுநகர். ,,

12. திரு. நீ. கந்தசாமிப் பிள்ளை,
முன்னாள் செயலர்,
தஞ்சை சரசுவதி மகால் நூலகம்,
சென்னை-600020. ,,

## சிறப்பு அழைப்பினர்கள்

1. டாக்டர் பொன். குருசிரோன்மணி, பி.ஏ., ஜி.சி.ஐ.எம்.,
முதல்வர், அரசினர் இந்திய மருத்துவக் கல்லூரி,
பாளையங்கோட்டை, திருநெல்வேலி.

2. டாக்டர் மு. வே. ரமணன், எல்.ஐ.எம்.,
பேராசிரியர், மேல் பட்டப் படிப்பு,
அரசினர் இந்திய மருத்துவக் கல்லூரி,
பாளையங்கோட்டை, திருநெல்வேலி.

3. டாக்டர் டி. வி. சுப்பா ரெட்டி, கௌரவ இயக்குநர்,
இந்திய மருத்துவ வரலாற்று ஆராய்ச்சி நிலையம்,
ஐதராபாத்.

4. டாக்டர் இரத்தினவேலு சுப்பிரமணியம்,
பி.எஸ்ஸி., எம்.டி., எம்.ஆர்.சி.பி, (லண்டன்),
சென்னை-600010.

### மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர்

### மாண்புமிகு

### பேராசிரியர் க. அன்பழகன், எம்.ஏ. அவர்கள்

அளித்த

# அணிந்துரை

முன்தோன்றிய—மூவா முதன்மொழியாம் தமிழுடனும் அதன் நாகரிகத்துடனும் பிறந்து வளர்ந்த—சித்த மருத்துவத்தின் நன்மையும் மேன்மையும் உலகம் என்றும் இழந்துவிடாது காப்பது நம் கடன். தமிழகத்திலும் பிற தென் மானிலங்களான திராவிடத்திலும் சித்த மருத்துவம் இன்றும் பலரால்—வழிவழியாகவும், கற்றறிந்தும்—கையாளப்பட்டு வரினும் அதன் சிறப்பும் புகழும் நிலைபெறுதற்கு நாம் ஆற்றவேண்டிய பணிகள் பலவாகும். தமிழக அரசின் ஆதரவாலும் இத்துறை வல்லுநர்களின் முயற்சியாலும்—மருத்துவ முறைகளுள் சித்த மருத்துவமும் இடம்பெற்று வளருகிறது. எனினும், அதன் தனிச் சிறப்புகள் அறிவியல் ஆய்வாளர்கள் ஒப்புக்கொள்ளுமாறு ஆய்வுகள் மூலம் நிலைநிறுத்துப்பட்டாகவேண்டும். அந்த நிலை உருவாவதற்கு—ஓலைச் சுவடிகளாகவும் ஒருகாலத்திலே அச்சேறியும் இன்று கிடைத்தற்கரிதாகியும் உள்ள நூற்றுக்கணக்கான சித்த மருத்துவ நூல்கள் உடனடியாகப் பதிப்பிக்கப்படவேண்டும். இவை வெளிவந்தால்தான் இன்று சித்த

மருத்துவம் பயிலும் மாணவரும் இளம் மருத்துவரும், அவற்றைப் பயின்று பயன்பெற இயலும். மருந்து செய்முறைகளை ஒப்புநோக்கி உண்மை தெளியவும், மருந்துகளின் தரத்தை உறுதிப்படுத்தவும், அரிய மூலப்பொருள்கள் கிட்டாதவிடத்து மாற்று மூலப்பொருள்களைக் கொண்டு மருந்து செய்திடவும், மருந்து உற்பத்தியைப் பல மடங்காகப் பெருக்கி மக்களுக்குப் பரவலாகக் கிடைக்கச் செய்யவும் வாய்ப்பாகும்; பரவலாக எங்கும் எளிதில் கிடைப்பதால் செல்வாக்குப் பெற்றுள்ள அலோபதி மருந்துகட்கு ஈடுகொடுத்து மக்களிடம் செல்வாக்குப் பெறவும் முடியும்.

எனவே, சித்த மருத்துவ நூல்கள் வெளியிடும் முயற்சிக்குத் தகுந்த நிதி உதவி வேண்டுமென்னும் எனது வேண்டுகோளை இசைவுடன் ஏற்று அருள்மிகு பழநி தண்டாயுதபாணி சுவாமி திருக்கோயில் அறங்காவல் குழுவினரும்—அதன் முந்நாள் தலைவர் திரு. பு மனோகரன் அவர்களும்—இதற்காக இரண்டு லட்சம் ரூபாய் நிதி ஒதுக்க முன் வந்ததுடன் சித்த மருத்துவ நூல் வெளியீட்டுக்கென டாக்டர், இரா. தியாகராசன், எல்.ஐ.எம்., அவர்களைத் தலைவராகக் கொண்ட ஒரு குழுவையும் அமைத்துச் செயல்படுத்தலாயினர்.

இக்குழுவின் தலைவரும், உறுப்பினர்களும் ஆர்வத்துடன் ஈடுபட்டு ஆற்றிவரும் நற்பணியும்—பல்வேறு வகையிலும் அவர்கட்குத் துணைநிற்போர் ஆற்றும் பணியும்—இந்திய மருத்துவத்துறை இயக்குநர் டாக்டர் பு. மு. வேணுகோபால் அவர்களின் இயக்குவித்திடும் திறனும் எனது பாராட்டுக் குரியனவாகும்.

அருள்மிகு பழநி திருக்கோயில் அறங்காவலர் குழுவினருக்கும், அக்குழுவின் தலைவருக்கும் எனது நன்றியும் பாராட்டும் உரியனவாகும்.

பிரமமுனி எண்ணூறு என்னும் இந்த நூல் வெளியீட்டுக் குழுவினரால் தேர்ந்தெடுக்கப்பெற்று, முதலில் வெளியிடப்படும் நூல் வரிசையில் 28-வது நூலாகும். ஓலைச்சுவடியிலிருந்து முதற்பதிப்பாக இந்நூல் வெளிவர, மலையப்பசாமி வைத்தியசாலை உரிமையாளர் அவர்கள் சுவடி கொடுத்து உதவி இருக்கிறார். அன்னாருக்கு நன்றி செலுத்துவதோடு, அரிய ஓலைச்சுவடி வைத்திருப்பவர்கள், அன்னு

ரைப் போல கொடுத்துதவினுல் சித்த மருத்துவம் மேலும் செம்மையாய் வளம்பெறவும், மக்கட்குப் பயன்படவும் வாய்ப்பாகும்,

மிகக் கொடிய நோய்களையும் அறத் தீர்க்கும் பற்பம், செந்தூரமாகிய முறைகள், நமது நாட்டு மருத்துவத்தில் இருப்பதுபோல மற்ற மருத்துவத்தில் இல்லையென நமது மருத்துவநூல் பயிற்சியுள்ள ஐரோப்பிய மருத்துவர்கள் மனப்பூர்வமாக ஒப்புக்கொள்கிருர்கள். ஆங்கில மருத்துவம், நாட்டு மருத்துவம் ஆகிய இரண்டிலும் சிறப்புப் பயிற்சியுள்ளவர்களான சிறந்த பண்டிதர்களின் தீர்மான மாவது :—

> "அறுவை செய்தல் முதலிய இரண மருத்துவத்தில் ஆங்கில முறை வைத்தியம் மிகவும் மேலானது. மற்ற நோய்களின் மருத்துவத்தில் தற்கால சாந்தியாகச் செய்வதிலும் ஆங்கிலவைத்தியமே அதிகம் சிறந்தது; ஆனுல் நாட்பட்ட நோய்களையும் பெரிய நோய்களான குன்மம். நீரிழிவு, சயம், எருவாய் நோய், பாண்டு, மந்தாக்கினி. மேகம், தாது இழப்பு முதலிய கடின நோய்களையும் அறத் தீர்ப்பதற்கு நாட்டு மருத்துவ முறைகளே மிக மேன்மையானவை. அவற்றுள்ளும் முறைக் கிரமமாகச் செய்யப்பட்ட பற்ப, செந்தூரங்களே மிக மேன்மை பெற்றவை." என்பதே.

இந்த அபிப்பிராயமானது மிகவும் சரியானதெனவும், உத்தமமானதெனவும், அதிகம் வாய்மையானதெனவும் சிறந்த மருத்துவர்களான ஒவ்வொருவரும் முழுமனதோடு ஏற்றுக்கொள்வார்கள்.

இக்கூற்று உண்மையாவதை, நவீன கருவிகள் வளர்ச்சியால் ஆலென வளர்ந்து அடர்ந்து நிற்கும் அலோபதி மருத்துவமும் ஏற்கும் வண்ணம் நடைமுறையில் செயல்படுத்தி எண்பிக்கும் வல்லமையும், ஆராய்ச்சி முறையில் சான்றுகளை உருவாக்கும் முயற்சியும் ஓங்க வேண்டுமென்பதே எனது பேரவா.

இந்த உயர்ந்த நோக்கத்துக்கு உறுதுணையாகுமாறு இவ்வரிய நூலைப் பதிப்பித்து வழங்கியுள்ள அருள்மிகு

பழநி தண்டாயுதபாணி சுவாமி திருக்கோயில் சித்த மருத்துவநூல் வெளியீட்டுக் குழுவினரின் முயற்சி பாராட்டுக்குரியதாகும்.

இவ்வெளியீடு மேலும் பல நூல்களை வெளியிடும் முயற்சியில் ஈடுபட்டுள்ளோரை ஊக்கப்படுத்துவதற்குத் துணைசெய்வதாகுமென நம்புகிறேன். அவர்கள்தம் முயற்சிவளர வாழ்த்துகிறேன்.

சென்னை
20—9—1975 } க. அன்பழகன்.

# முன்னுரை

உலக மொழிகளில் மிகப் பழமையானது தமிழ் மொழி; தமிழ் மருத்துவ முறையும் அத்தகைத்தே. இம் மருத்துவ முறையைத் தோற்றுவித்தவர் சித்தர்கள் எனப்படுவர், ஆகையால், இம் மருத்துவத்திற்குச் சித்த மருத்துவமென்று பெயர் அமையலாயிற்று. அச் சான்றோர்கள் தாம் கண்ட உண்மைகளையும் மருத்துவ நுணுக்கங்களையும் மருந்துச் சரக்குகளின் குணம் முதலானவைகளையும் மாணவர்கள் பலரை ஏற்று ஓதியும் ஓதுவித்தும் பற்பல ஏடுகளில் பதிவு செய்தும் உலகோர்க்கு உதவிசெய்து தம் மருத்துவ முறைகளைப் பரப்பி வந்தார்கள்.

காலப்போக்கில், சிறிது சிறிதாய் இயற்கையின்—நிலநடுக்கம், கடல்கோள் போன்ற—சீற்றம் காரணமாகவும், வெளிநாட்டார் படையெடுப்பு, சிதலை, இராமபாணம் போன்றவைகளின் தாக்குதலாலும் பல ஏடுகள் அழிந்தவை போக மிகுந்தவைகளில் சில மேலை நாட்டு நூல் நிலையங்களுக்கு எடுத்துச் செல்லப்பட்டனவெனக் கூறப்படுகின்றது. இன்னும் எஞ்சியுள்ள ஏடுகளாலும், அம்மருத்துவக் கலையைத் தொன்றுதொட்டுக் கையாண்டுவரும் மருத்துவர்கள் வாயிலாகவும், பல நூற்றுண்டுகளாக அதன் அடிப்படை உண்மை, தனித்தன்மை காரணமாகவும் சித்த மருத்துவம் அழியாது நிலைபெற்றிருக்கிறது.

தஞ்சையையாண்ட மராட்டிய மன்னர் சரபோஜி அவர்களின் ஆட்சிக் காலத்தில் சித்த, ஆயுள்வேத, யூனுனி மருத்துவ ஏடுகள் எல்லாம் சரசுவதி மகால் நூல்நிலையத்தில் அரியணை ஏறின. மருத்துவப் புலவர்களின் அனுபவங்கள் ஏடுகளில் ஏறி ஏமமுற்றன. மருத்துவம் செய்முறையும், பிணித் தீர்வும் அவர் ஏற்படுத்திய தன்வந்திரி மகாலில் மறுமலர்ச்சியுற்றன. அவர் ஆட்சிக்குப்பின் சித்த மருத்துவம் அரசு ஆதரவை இழந்து பழையபடி குடிமக்களின் ஆதரவு கொண்டு ஆங்காங்கு வழக்கில் இருந்துவரலாயிற்று.

மிக அண்மையில் வெள்ளையராட்சிக் காலத்தில் நீதிக்கட்சி சார்பில் முதல் அமைச்சராகப் பணியாற்றிய பானகல் அரசர் 1924-ல் இந்திய மருத்துவப் பள்ளியைத் தோற்றுவித்து,

பல கிராம மருத்துவ மனைகளையும் அமைத்து இயங்கச் செய்து சித்த மருத்துவம் முதலான இந்திய மருத்துவ முறைகளின் மறு மலர்ச்சிக்கு வித்தூன்றினர். அக்காலத்தில் மேற்படி கல்வி நிலையத்தில் பயிலும் மாணவர்களுக்கு அமைந்த பாடத்திட்டப் படி கற்பிக்கப் போதிய பாடப் புத்தகங்களும் முதல் (மூல) நூல் களும் இல்லாக்குறையை ஓர்ந்து பாடப் புத்தக ஆக்கக்குழுவை அரசு அமைத்தது. அந்நாள் சித்தமருத்துவத்துறைத் தலைமை ஆசிரியராய் இருந்த பண்டிட், வைத்திய ரத்தினம், மருத்துவ சிரோன்மணி காலஞ்சென்ற க. ச. முருகேச முதலியார் அவர்கள் குணபாடம் (மூலிகை வகுப்பு) என்னும் நூலைத் தன் சொந்த முயற்சியால் இயற்றி அரசினர்க்கு நன்கொடையாக அளித்து வெளியிடச் செய்தும், குழுவினர் அரசுவழி வெளி யிட்ட நஞ்சுநூல், பாலவாகடம் என்னும் நூல்களைப் பார்வை யிட்டும் உதவினர். அக்குழுவினர் நூற்றுக்கு மேற்பட்ட மருத்துவச் சுவடிகளையும் அச்சிட்ட நூல்களையும் சேகரித்து ஒரு நூல்நிலையம் ஏற்படுத்தினர்.

மேற்படி பள்ளி, கல்லூரியாக மிளிர்ந்தபோது, அந்நாள் கௌரவ இந்திய மருத்துவ இயக்குநராகப் பணியாற்றிய டாக்டர் ம. ரா. குருசுவாமி முதலியார் ஊக்கம் கொடுத்தமை காரணமாக 1950-ல் சித்த மருத்துவம், மருத்துவாங்கச் சுருக்கம், நோயில்லா நெறி, குணபாடம் (மூலிகை வகுப்பு), குணபாடம் (தாது சீவ வகுப்பு) என்ற நூல்கள் அப்போது பணிபுரிந்து வந்த கல்லூரி விரிவுரையாளர்களைக் கொண்டு எழுதுவித்து அரசுவழி வெளியிடப் பெற்றன,

அக் கல்லூரி நிகழ்ந்த காலத்திலும் பின்னர் பாளையங் கோட்டைக் கல்லூரி தோன்றிய பின்னுங்கூட, பாட நூல்களும் துணை நூல்களும் நிரம்பாமை பெருங்குறையாக நீடித்துவருவ தாயிற்று.

ஆகவே, பண்டைய சித்த மருத்துவ ஓலைச் சுவடிகளையும், கையேடுகளையும், ஒருமுறை அச்சாகிப் பின் விற்பனைக்குக் கிட்டாத புத்தகங்களையும் சேகரிக்கவும், மருந்து செய்முறை அட்டவணை தயாரிக்கவும், பாட நூல்கள் வெளியிடவும் ஆகிய பணிகள் செய்ய (Pharmacopea Committee, 1966 G.O.M.S. 2163 Dt. 23—8—60) ஒரு குழுவும், சித்த மருத்துவக் கல்வி மற்றும் பாட நூற்குழு என்று (G.O.M.S. No. 1060 Health Dt. 13—6—66) ஒரு குழுவும், திருவருட்பா, திருப்புகழ் முதலியவைகளில் உள்ள மருத்துவப் பகுதிகளை ஆய்வதற்காக ஒரு குழுவும் எனத் தமிழக அரசு குழுக்களை ஏற்படுத்தியது. அதன் விளை

வாக அறுவை மருத்துவம், சூல் மருத்துவம் என்ற நூல்கள் வெளிவந்தன,

மீண்டும் விரைவில் பயன்காண வேண்டி 1973ஆம் ஆண்டு அக்டோபர் திங்கள் 15ஆம் நாள் தமிழக அரசினர் மேற்கூறிய குழுக்களை ஒருங்கிணைத்துச் சித்த மருத்துவ அறிவியல் வளர்ச்சிக்குழு என்னும் ஒரு குழுவைத் (G.O.M.S. No. 2571 of 23—10—73) தோற்றுவித்தார்கள். அக் குழுவின் பணிகளாவன : சித்த மருத்துவ அரிய சுவடிகள், கையேடு கள், அச்சாகிய பழைய நூல்கள் ஆகியவைகளைச் சேகரித்துப் பாதுகாத்தல்; ஓலைச்சுவடிகளை ஆய்ந்து கையெழுத்துப்படி, தட்டெழுத்துப்படி முதலியவைகளை எடுத்து அச்சியற்றி வெளி யிடல்; ஒருமுறை அச்சில் வெளிவந்து விற்பனையில் கிடைக் கப் பெருத நூல்களை மீண்டும் வெளியிடல்; இதுவரை அச் சிடப்பெருத நூல்களை வெளியிடல் என்பனவாம். அதன்படி இக்குழுவினர் இதுவரை 400 சுவடிகளையும் 100 கையெழுத் துப்படிகளையும், 230 அச்சான பழைய நூல்களையும் சேகரித் துள்ளனர்.

இக்குழுவினர் தாம் மேற்கொண்ட பணிகளைச் செயலாற்ற, இந்திய மருத்துவத்துறை இயக்குநர் அலுவலகத்தில் ஒரு தனி அலுவலரையும் அவர்க்கு உதவியாளர்களையும் நியமித்துள்ள னர், அவர்கள் நூல்களைப் படியெடுத்துத் திருத்தம் செய்து அச்சியற்றத் தக்க வகையில் செய்துவருகின்றனர்.

அருள்மிகு பழநி தண்டாயுதபாணி சுவாமி திருக்கோயில் நிதியிலிருந்து சித்த மருத்துவ நூல் வெளியீட்டுக்கென்று ஒதுக்கப்பட்ட இரண்டு இலட்சம் ரூபாயைக்கொண்டு மேற்படி நூல்களை, நடைமுறைச் சிக்கல்களைத் தவிர்த்து வெகு விரைவில் வெளியிட மேற்படி சித்த மருத்துவ அறிவியல் வளர்ச்சிக் குழுவிலுள்ள உறுப்பினர் சிலருடன் அருள்மிகு பழநி தண்டா யுதபாணி சுவாமி திருக்கோயில் அறங்காவற்குழுத் தலைவர் அவர்களையும் மேற்படி திருக்கோயில் நிருவாக அதிகாரியையும் கொண்டு அருள்மிகு பழநி தண்டாயுதபாணி சுவாமி திருக் கோயில் சித்த மருத்துவ நூல் வெளியீட்டுக்குழு ஏற்படுத்தப் பட்டது. அக்குழு முடிவெடுத்தபடி முதல் வெளியீட்டு வரிசையில் 28வது நூலாக வெளிவருவது பிரமமுனி எண் ணூறு எனும் நூலாகும். முதன் முதலாக ஓலைச்சுவடியிலிருந்து அச்சுக்கு வரும் நூல்களில் இஃது இரண்டாவதாகும். இந் நூல் மலையப்பசாமி வைத்தியசாலையின் உரிமையாளர் அவர்

களால் நன்கொடையாகக் கொடுக்கப்பெற்ற 201 (இருநூற்று ஒன்று) ஓலைச்சுவடிகளில் ஒன்றுரும், இவ்வரிய நூலைக் கொடுத்து உதவிய அன்னருக்கு எங்கள் மனமார்ந்த நன்றி உரித்தாகுக.

இந்நூலுள் சூரணம், இளகம், குழம்பு, மாத்திரை, பற்பம், செந்தூரம், பதங்கம் ஆகிய முறைகள் கூறப்பட்டுள்ளன. முழுதும் பாட்டுக்களாக இருக்கும் இந்நூலுள் கூறப்பட்டுள்ள மருந்து முறைகள் அரியனவாக உள்ளன.

மேற்கண்ட அரிய நூல்களின் வெளியீட்டுப் பணிக்கு பெருந் தொகை தேவைப்படுவதால், இப்பெரும் பணியை விரைவில் செயல்படுத்த உளங்கொண்ட நம் தமிழக அரசின் நல்வாழ்வுத்துறை அமைச்சர் மாண்புமிகு பேராசிரியர் உயர்திரு. க. அன்பழகன், எம்.ஏ., அவர்கள் பேரார்வங் கொண்டு மேற்படி பணி முட்டின்றி முடிவதற்கு அரசு நிதியி லிருந்து ஆண்டொன்றுக்கு ஐம்பதாயிரம் ரூபாய் வழங்க ஆணை பிறப்பித்தார். மேலும் அருள்மிகு பழநி தண்டாயுதபாணி சுவாமி திருக்கோயில் அறங்காவலர்க் குழு முந்நாள் தலைவர் உயர்திரு. பு. மனோகரன் அவர்களைக் கொண்டு முதல் தவணை யாக மேற்படி திருக்கோயில் கருவூல நிதியிலிருந்து இரண்டு இலட்சம் ரூபாயை ஒதுக்கி வழங்கச் செய்தமையும், சித்த மருத்துவ நூல்கள் விரைவில் வெளியாக வாய்ப்புத் தேடித் தந்தமையும், காலஞ்சென்ற திரு, டாக்டர் ஜி. டி. நாயுடு அவர்களைக் கொண்டு காலஞ்சென்ற திரு, டி. வி. சாம்பசிவம் பிள்ளையவர்கள் தொகுத்து வைத்திருந்த மருத்துவப் பேரகராதியின் முதல் மூன்று பகுதிகளையும் பிற சித்த மருத்துவ இலக்கிய நூல்களையும் அச்சிட்டு வெளியிடச் செய்தமையும் அமைச்சர் பெருமகனுர் சித்த மருத்துவ மறுமலர்ச்சிக்கு முழு மனத்துடன் ஆற்றிவரும் செயற்கரிய ஆக்கச் செயல்களாகக் கூறிப் பெருமிதமடையலாம். இதற்குத் தமிழகம் என்றென்றும் நன்றி செலுத்தக் கடமைப்பட்டுள்ளது.

அருள்மிகு பழநி தண்டாயுதபாணி திருக்கோயில் அறங் காவலர் குழுவின் முந்நாள் தலைவர் உயர்திரு. பு. மனோகரன் அவர்கள் தமக்குள்ள பற்பல அறப்பணிகளுக்கிடையேயும் இக்குழுவின் கூட்டங்களில் பங்கு கொண்டு, நூல் வெளியீட் டுக்கான பற்பல வழிமுறைகளையும், ஆலோசனைகளையும் வழங்கி வெளியீட்டுப்பணி ஊக்கமும் ஆக்கமும் பெற்றுத் தங்குதடையின்றி நூல்கள் வெளிவர, மேற்படி திருக்கோயில்

நிதியிலிருந்து மேற்படி அறங்காவலர் குழுவினரைக் கொண்டு முதல் தவணையாக இரண்டு இலட்ச ரூபாய் வழங்கச் செய்த தோடு, சித்த மருத்துவக் கல்லூரி ஒன்று பழநியில் தோற்று விக்க உடன்பட்டமைக்கும் சென்னையில் மத்திய சித்த மருத்துவ நூலகமொன்றை நிறுவக் கட்டடம் கட்டித்தர முயன் றமைக்கும் இக் குழுவினரும், இதில் பணியாற்றி வருபவர்களும் என்றும் நன்றி செலுத்தக் கடமைப்பட்டவர் ஆவார்கள்.

மேற்படி அறங்காவலர் குழுத்தலைவர் அவர்களுக்கு உறுதுணையாக இருந்து ஒத்துழைத்து வரும் மேற்படி திருக் கோயில் நிருவாக அதிகாரி அவர்களுக்கும், இப்பணிகள் நிறைவுபெற ஆக்கிய தீர்மானங்களுக்கு ஒப்புதல் அளித்து வரும் இந்து சமய அறநிலையப் பாதுகாப்புக் குழுத் தலைவர் உயர்திரு. கே. எஸ். நரசிம்மன், ஐ.ஏ.எஸ்., அவர்களுக்கும் இக்குழுவினரின் உளங்கனிந்த நன்றி உரித்தாகுக.

இக்குழுவினர் பணியாற்றுவதற்கு ஏற்ற இடவசதியும், பிற வசதிகளும் தம் அலுவலகத்தின் ஒரு பகுதியில் கொடுத்து, பணி இடையீடின்றி நடைபெற வேண்டிய ஆலோசனைகளும் ஊக்கமும் அளித்துவரும் இந்திய மருத்துவத்துறை இயக்குநர் டாக்டர் பு. மு. வேணுகோபால் எச்.பி.ஐ.எம்., அவர்களுக்கு எங்கள் நன்றியைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

அச்சடிக்கும் தாள்கள் அடக்க விலையில் திருவாளர்கள் சேஷசாயி பேப்பர் மில்சிடமிருந்து மிக விரைவில் கிடைக் கும்படி செய்த முத்தமிழ்க் காவலர் கி. ஆ. பெ. விசுவநாதம் அவர்களுக்கு இக்குழு நன்றி தெரிவிக்கக் கடமைப்பட் டுள்ளது.

மற்றும் இந்நூல்களை அச்சியபற்ற ஏற்றவண்ணம் மூலப்படி களைத் திருத்தம் செய்வித்தும் அடிக்குறிப்புகள் எழுதியும், அச் சுப்படிகளைத் திருத்தம் செய்தும் இக் குழுவுக்குத் துணை புரிந்து வரும் தனி அலுவலர் டாக்டர் வி. விசுவநாதன், எல்.ஐ.எம்., அவர்களையும் அன்னாருக்குத் துணைபுரிந்துவரும் டாக்டர் மு. சௌரிராசன், புலவர்கள் வை. முரு. முத்துக்குமாரசாமி, வி. செ. விநாயகம், நா. மு. மாணிக்கம், தா. சிங்காரவேலு ஆகியவர்களையும் இக்குழு மனமுவந்து பாராட்டுகிறது.

இந்நூலைக் குறுகிய காலத்தில் அழகிய முறையில் அச்சியற்றிய இரத்தினம் கிளை அச்சகத்தாரின் சேவைக்கு இக் குழு மனமுவந்து பாராட்டுதலைத் தெரிவித்துக் கொள்கிறது.

சான்றோர் மிகுந்த இவ்வுலகு இந்நூலில் காணும் குற்றங் கண்டு முனியாது நனியாதரவு தந்து எம்மை ஊக்குவிக்கு மென்ற துணிவுடன் இந்நூல்களை வெளியிடுகின்றனம்.

டாக்டர் இரா. தியாகராாசன், எல்,ஐ.எம்.,
தலைவர்,

இந்திய மருத்துவத்துறை
இயக்குநர் அலுவலகம்,
சென்னை-600029.

அருள்மிகு பழநி தண்டாயுதபாணி சுவாமி,
திருக்கோயில் சித்த மருத்துவ நூல்
வெளியீட்டுக்குழு.

# பொருளடக்கம்


| | பக்கம் |
|---|---|
| அக்கினிகுமாரன் | 68 |
| அஞ்செண்ணெய் | 73 |
| அதிசாரக் குடிநீர் | 85 |
| அப்பிரகச் செந்தூரம் | 18 |
| அமுர்தாதி உருண்டை | 69 |
| ஆயகெந்திச் செந்தூரம் | 63 |
| அரிதார பற்பம் | 121 |
| அரிதார எண்ணெய் | 52 |
| அரையாப்பு, கிரந்தி, கைகால் பிடிப்புக்கு மருந்து | 43 |
| அழிஞ்சில் தைலம் | 94 |
| அறுகம்வேர் பற்பம் | 94 |
| ஆனந்த வைரவம் | 68 |
| இரச பற்பம் | 22 |
| இராமபாணம் | 81 |
| இருமல் உசிதம் | 61 |
| இலிங்கச் செந்தூரம் | 168 |
| ஈசுவரக் குழம்பு | 88 |
| எட்டித் தைலம் | 24 |
| கண்டங்கத்தரிச் சூரணம் | 47 |
| கண்ணோய் உசிதம் | 79 |
| கண்ணோய்க் கயிறு (1), (2) | 80 |
| கரிசாலைச் சூரணம் | 50 |
| கரிசாலை லேகியம் | 32 |
| கருஞ்செம்பைத் தைலம் | 72 |
| கபாடத்தூள் | 49 |
| காசவகை ஏங்கலுக்கு, சயங்களுக்கும் மருந்து | 106 |
| காந்த செந்தூரம் | 154 |
| காரீய பற்பம் | 152 |
| கிருமிபோக்கி உசிதம் | 79 |
| குக்குடச் சூரணம் | 91 |

| | பக்கம் |
|---|---|
| குமட்டியெண்ணெய் | 38 |
| குமட்டிக் குழம்பு | 86 |
| குமட்டிக்காய்க் குழம்பு | 89 |
| கோடாசுழிக் குளிகை | 65 |
| சதுரக்கள்ளி உசிதம் | 77 |
| சண்டமாருதக் குழம்பு | 100 |
| சருவாங்கத்துக்குக் கலிக்கம் | 110 |
| சர்வ பூபதி | 70 |
| சன்னிதோடத்துக்கு லிங்கக்கட்டு | 64 |
| சன்னி சுரத்துக்குப் பொட்டணம் | 132 |
| சாம்பிராணிப் பதங்கம் | 51 |
| சித்தாதி இளகம் | 118 |
| சிரவோட்டுப் பற்பம் | 93 |
| சிவன்வேம்புச் சூரணம் | 22 |
| சிவன்வேம்புத் தைலம் | 25 |
| சிறுசந்தனுதித் தைலம் | 58 |
| சுகபேதி உசிதம் | 78 |
| சுகபேதி எண்ணெய் | 78 |
| சுரபாணகுடோரி | 107 |
| சுரமாத்திரை | 82 |
| சூத செந்தூரம் | 158 |
| சேங்கொட்டை சுத்தி | 44 |
| சொறிசிரங்கு மேல்பூச்சு | 53 |
| சொறிசிரங்குத் தேங்காயெண்ணெய் | 53 |
| தங்க பற்பம் | 152 |
| தாம்பிர பற்பம் | 23, 122, 133 |
| தாபசுரக் கியாழம் | 85 |
| திப்பிலி ரசாயனம் | 128 |
| திரிலோக செந்தூரம் | 120 |
| தூதுகண்டன் கிருதம் | 30 |
| நாக பற்பம் | 123 |
| நாகச் செந்தூரம் | 154 |
| நிலவாகைச் சூரணம் | 50 |

| | பக்கம் |
|---|---|
| பஞ்சலவண பற்பம் | 41 |
| பஞ்சபாடாண செந்தூரம் | 62 |
| பதினெட்டுக்குட்டத்துக்குச் சிறுநீரில் சூட்சம் | 113 |
| பவழ பற்பம் | 120 |
| பாடாணக் கட்டு | 83 |
| பீனிசத் தைலம் | 73 |
| புங்கம்பூச் சூரணம் | 49 |
| பூபதி மாத்திரை | 81 |
| பெரும்பாட்டுக்கு | 132 |
| மகாமேக ராசாங்கம் | 10 |
| முகர்பேதி | 78 |
| முக்கூட்டுத் தைலம் | 54 |
| முடித்தைலம் | 110 |
| மேல்தலை வாயுவுக்கு எண்ணெய் | 109 |
| வச்சிர கபாடம் | 27 |
| வச்சிரவல்லிச் சூரணம் | 111 |
| வாயுவுக்கு எண்ணெய் | 74 |
| விடமுட்டித் தைலம் | 95 |
| வில்வாதி லேகியம் | 104 |
| வெடியுப்புச் செயநீர் | 140 |

உ

# பிரமமுனி எண்ணூறு.

திருவளரு மெய்ஞ்ஞானச் சோதி பாதம்
செப்பரிய கணேசனொடு கந்தன் காப்பு
அருவுருவா மாதியந்த வெளியுந் தாண்டி
அகன்றுநின்ற சின்மயத்தின் பாதம் போற்றிப்
பரிவுடைய சூட்சத்தில் சூட்சா சூட்சம்
பதியிருந்து மனோன்மணித்தாய் பாதம் போற்றிக்
குருவருளால் நாதாக்கள் பாதம் போற்றிக்
கூறுவேன் வைத்தியசூத் திரந்தான் காணே. 1

பாரப்பா பெருநூல்தா னெட்டுக் காண்டம்
பாடினே னதைக்குறுக்கி யெண்ணூறு சொன்னேன்
சேரப்பா வாதமொடு ஞான மார்க்கஞ்
செப்பரிய வைத்தியமு மட்ட கர்மம்
ஆரப்பா வகைவிவர மாகச் சொன்னூர்
அறியாத பசஙளக்கு மறியத் தானே
சீரப்பா கருக்குருவுந் திறந்து சொன்னேன்
செப்பியதோர் நூல்களுக்குத் திறவு கோலே, 2

திறவுகோ லாகவே பாடி வைத்தேன்
செப்பரிய சித்தரெல்லா மெச்சிக் கொண்டு
மறவென்று வெட்டவெளி யாகச் சொன்னூர்
மகத்தான பிரமரிஷி யாகை யாலே
உறவாகி நூல்வாங்கி யொளித்தார் சித்தர்
ஓகோகோ மோசம்வந்த தென்று சொல்லிச்
சதுராடி யவருடனே தர்க்கம் பேசிச்
சண்டையிட்டு நூல்வெளியாய் வாங்கி னேனே. 3

வாங்கியே யுலகத்தோர் பிழைக்க வென்று
மறையாதே வெட்டவெளி யாகச் சொன்னேன்
தாங்கியே யுருக்கினமுங் கட்டினமுஞ் சுத்தித்
தயங்காத நீற்றினமு மாத்திரைசெந் தூரங்

காங்கியே லேகியங்கள் கிருதங் கற்கங்
களுடனே திராவகமு மெழுகுசெய் நீரும்
பாங்கான தயிலங்கள் சூர ணங்கள்
பற்பவகை கியாழப்போக் கிவைக ளெல்லாம்
ஓங்கியதோர் கருவோடு குருவும் வேணும்
உற்பனமாம் கருவென்ன வுரைக்கக் கேளே. 4

கருவென்ன பூமியுட நாதம் விட்டால்
காணரிது வாதமுறை வயித்தியமு மாகா
கருவென்ன பூநீறு பூமி நாதங்
காணவே யுவர்பூமிப் பூசை போட்டுக்
கருவென்ன தையொடு மாசி பங்குனி
காத்திருந்து உவற்பூவை வாரு வாரு
பருவமாய் வாரியே யெடுத்து வந்து
பாண்டத்தி விட்டதிலே சுத்தசலம் வாரே. 5

வார்த்துமே கலக்கியந்தத் தெளிவை வாங்கி
வாகான புத்தோட்டில் வாரு வாரு
வார்த்துமே ரவிதனிலே காய்ந்த உப்பா
மறுபடியுஞ் சுத்தசலந் தெளித்து வாங்கி
வார்த்துமே புத்தோட்டில் ரவியி லுப்பா
மறுபடியுஞ் சுத்தசலத் திட்டு முன்போல்
பார்த்துமே தெளிவிறுத்து ரவியிற் காய்ந்து
பக்குவமா யிப்படியே பத்துமுறை செய்யே. 6

செய்தபின்பு இன்னமொரு சுத்தி கேளு
சிறப்பாக முன்போலே சுத்தசலத் திட்டுக்
கையாமல் பாண்டத்தூர் தமரு போட்டுக்
கதம்பை வைத்து அதன்கீழே தாழிவைத்து
நெய்யவே தாழிநடுத் தம்பை மூக்கு
நீக்கவே பக்குவமாய் வைத்து மூடு
துய்யவே தம்பையுட மூக்கா லப்பா
தூசின்றி சுத்தசல மிறங்கும் பாரே. 7

இறங்கியதோர் சலமதனை ரவியிற் காய்ந்து
யெடுத்திடவே வாதத்துக் காதி யுப்பாம்
அறங்கான கனகமுறை யறியார்பூ நீர்வாரி
அப்பனே கரைத்ததனைக் காய்ச்சிக் காய்ச்சி

யிறங்கியே கல்லுப்புச் சுண்ணம் நேராய்
யெண்ணெயிலே சவுக்கார மாச்சு தென்று
உறங்கியே பார்த்ததனு லொன்று மில்லையென்று
ஓகோகோ அலைந்துகெட்ட வாதி தானே. 8

அலையாதே முப்பூவுக் கினத்தைக் கேளு
ஆதியாங் கல்லுப்புப் படிதான் ரெண்டு
சிலையான அமுரிவிட்டுக் கரைத்து நன்ருய்த்
தெளிவிறுத்து ரவிதனிலே காய்ந்த வுப்பாம்
மலையாம லிப்படியே பத்துமுறை வாங்கு
மைந்தனே பிரமகற்ப மங்கல் லுண்ணம்
அலையாதே படியொன்று பாண்டத் திட்டே
அதனில்வார்த் தேறலென்ற சிப்பி நீரே. 9

சிப்பிநீர் வார்த்ததனைக் கரைத்து நன்ருய்ச்
சிறப்பான ரவியிலிடப் படரு முப்பு
உப்பதனை வாங்கியே சிப்பி நீரா
லுரைத்துமே கரைத்துமுன்போ லுப்பை வாங்கி
செப்பியே பத்துமுறை தெளிய வாங்கிச்
சிறப்பான முப்பூவுஞ் சித்தர் செய்வார்
அப்பெரிய முப்பூவுங் கல்வத் திட்டு
ஆட்டுவாய் முன்சிப்பி நீரால் காணே. 10

காணவே யாட்டியதை வில்லை தட்டிக்
கனகமாய் ரவியுலர்த்தி யோட்டி லிட்டுமூடிப்
பூணவே சீலைசெய்து குக்குடத்தில் போடு
புகழாக யெடுத்து முன்போல் கல்வத் திட்டுத்
தோணவே சிப்பிநீர் விட்டு ஆட்டி
துவளவரை வில்லைதட்டி ரவியி லிட்டு
ஆணவே யோட்டிலிட்டு மேலோடு மூடி
அப்பனே குக்குடத்தில் போட்டு வாங்கு
கோணவே யிப்படியே மூன்றுமுறை போடு
கடிதான முப்பூவுங் கட்டிப் போச்சே. 11

போச்சென்ற முப்பூவால் வாத மாச்சு
புகழான வயித்தியத்துக் காதி யாச்சு
ஆச்சென்று வயித்தியங்கள் செய்யும் போது
அப்பனே தயிலமது லேகியங்கள் கற்கம்

வாச்சென்ற கட்டினங்கள் உருக்கி னங்கள்
மகத்தான நீற்றினங்கள் மாத்திரைசெந் தூரங்
கூச்சென்ற விம்முறைகள் செய்வார் நமது
குருவிலொரு காசெடைதான் போட்டுச் செய்யே, 12

காசெடைதான் குருபோட்டுச் செய்தா யாஞல்
கண்காணு தோடுமடா நோய்க ளெல்லாம்
கூசாமல் வாதியென்றுல் செய்வா னப்பா
கூறுகெட்ட வயித்தியரோ செய்யப் போருர்
வாசியர் முப்பூவுஞ் செய்யா விட்டால்
மைந்தனே பூனீறு மொன்றே போதுந்
தேசியே பதினுறு தரந்தான் சுத்தி
செய்திட்டு வயித்தியத்தைச் செய்து பாரே, 13

செய்திடவே தீராத நோய்தா னுண்டோ
செப்புகிறேன் முப்பூவில் வேதை மார்க்கஞ்
செய்திடவே முப்பூவுங் கல்வத் திட்டுச்
சேர்த்திடுநீ யண்டவெள்ளை யர்க்கம் பாலும்
செய்திடவே ரெண்டுமொன்ருய்ப் பீங்கானி விட்டுச்
சிறப்பான சூடஞெரு காசு போடு
அய்திடவே யொருசாமம் ரவியில் வைக்க
அப்பனே முறித்ததுவுஞ் சலம தாமே. 14

சிலமான கடுங்காரச் செயநீர் விட்டுச்
சேர்த்தரைப்பாய்ச் சாமமொன்று வில்லை தட்டி
உலரவே ரவியினிலே காய வைத்து
ஓட்டிவிட்டு மேலோடு மூடி செய்து
தளரவே குக்குடத்தி விட்டு வாங்கிக்
கசகாதே மும்முறைதா னரைத்த ரைத்து
உலரவே மும்முறைதான் போட்டுத் தீரு
முசியாதே சவுக்காரச் சுண்ண மாச்சே. 15

சுண்ணமென்ற சவுக்கார வழலைத் தொட்டுச்
சொல்லுகிறேன் கடுங்காரக் கருவ தாக
அண்ணவே முதல்தரந் தானும் வாங்கு
ஆகாட்டால் ரெண்டாவ தல்லால் மூன்று
பண்ணவே நோயில்லை சிவந்த மேனி
பார்த்துநீ நாதத்தை வாங்கக் கேளு
கண்ணவே நாதந்தா னிறங்க வேண்டில்
கற்பூர சிலாசத்துச் சுண்ணம் பண்ணே. 16

பண்ணவே தாம்பூல மருந்தச் சொல்லிப்
பணவெல்லந் தேங்காயுங் கலந்து வூட்டு
நண்ணவே நாதமெத்த யிறங்கும் பாரு
நலமான பீங்கானில் வாங்கி யேதான்
உண்ணியே சிலமாகக் கற்பூரம் போடு
உத்தமனே விந்தொருகா செடைதான் சேரு
அண்ணவே முரிந்ததுவுஞ் சிலமாய் நிற்கும்
அதிவிடவு மருந்துவகை யறையக் கேளே. 17

அறைகிறேன் வீரமொடு புழுகு பூர
மப்பனே குருவண்டு உரமுஞ் சூதங்
கறையான அறுபுள்ளி வண்டின் முட்டை
கருநாவி வகைக்கு வகை பலந்தான் தூக்கி
உறையவே போட்டதிலே போட்ட முத்தி
யுத்தமனே கையிட்டால் வெந்து நீறுங்
குறையான குச்சியினல் மத்தித் தப்பா
கொடுரவியில் வைத்தெடுத்துக் கருதக் கேளே. 18

கருதியே சவுக்காரத் தூட்டி யாட்டிக்
கசகாதே வில்லைதட்டி ரவியில் போடு
அரிதியே ரவிமுகத்தி விட்டு வாங்கு
அஞ்சுசுண்ணக் குகையிலே வைத்து மூடு
சுருதியே யதன்மேலே சுண்ணச் சீலை
சுத்தியே ரவிதனிலே யுலர்ந்த பின்பு
பருதியே பத்தெருவில் புடத்தைப் போடு
பாங்காக ஆறவிட்டு யெடுத்து வாங்கே. 19

வாங்கியே முன்னீரி லரைத்துக் கட்டி
வாகாகச் சுண்ணும்புக் குகையில் வைத்துப்
பாங்கியே முன்போலே புடத்தைப் போடு
பதருதே ஆறவிட்டு யெடுத்து வாங்கு
ஆங்கியே கல்வத்தி விட்டுக் கேளு
அப்பனே முன்போலே யரைத்துப் போடு
காங்கியே யிப்படியே யரைத்த ரைத்துக்
கைமுறைகள் தப்பாம லைந்துதரம் போடே. 20

போட்டெடுக்க வழலையென்ற சுண்ண மாச்சு
புகல்வதற்கு நாவுமுண்டோ பாவுமுண் டோசொல்
காட்டான கடுங்காரம் ஏற்றக் கேளு
கனகமென்ற பரிச்சுண்ணம் வீரச் சுண்ணம்

ஆட்டுமே பூரநவச் சாரஞ் சீனம்
அறைகிறே னஞ்சுவகைச் சுண்ண மொன்றாய்த்
தீட்டவே வகைவகைக்குக் காசெடைதான் சுண்ணஞ்
சேர்த்துமே முன்னீரி லரைத்துக் கட்டே. 21

கட்டியதோர் வில்லைதனை ரவியி லிட்டுச்
கடுஞ்சுண்ணக் குகையிலிட்டு மூடி நன்றாய்த்
துட்டியே பில்லையப்பா சுண்ணச் சீலை
சுத்தியே குக்குடமாய்ப் புடத்தைப் போடு
யெட்டாத யீசனுக்கு மெட்டா வித்தை
யேகாந்த வெளியாகச் சொல்லிப் போட்டேன்
கட்டான மலைகளெல்லா முருகிப் பாயும்
கட்டுமுன்னே அண்டரண்டம் வேகும் பாரே. 22

வேகுமே நவலோகம் நவரெத்தி னங்கள்
விருதான பாடாண மறுபத்து நாலும்
வாகுமே சொல்வன் வகையிருபத் தைந்து
மைந்தனே உபரசம் நூற்றி ரெண்டு
பாகமின்ன காரசா ரம்பத் துந்தான்
படுமுன்னே கட்டாகுங் குருவு மாகும்
வேகுமே துருசியது வெந்து நீறு
மிடுமுன்னே நவச்சாரங் கட்டிப் போமே. 23

போமென்ற சவுக்காரச் சுண்ணந் தொட்டுப்
போட்டிட்டால் சூதமது கட்டிப் போகும்
மாமென்ற வழலைதொட்டுச் சுண்ணங் கோடி
யழகான கட்டினமு முருக்கினமுங் கோடி
தேமென்ற மெழுகோடு களங்கு கோடி
செயநீருந் திராவகமுந் தீநீருங் கோடி
கோமென்ற செந்தூரங் குளிகை கோடி
கொள்ளையே கொள்ளையிதில் வாதந் தானே. 24

வாதந்தான் முன்பின்னாய்ச் சொல்லி வைத்து
மறைத்தாரே நாதாக்கள் ரிஷிகள் சித்தர்
வேதந்தான் முடிவதற்கு ஒப்பாய் நின்ற
வேதாந்த வழலையைத்தான் வெளியாய்ச் சொன்னேன்
தீதறவே வெளிதோணச் சொன்னே னென்று
சித்தரெல்லா மென்மேலே சண்டை கொண்டார்
வாதில்லா தவருடனே வாது பேசி
வழுத்தினே னுலகத்தோர் பிழைக்க வென்றே. 25

உலகத்தோர் பிழைக்கவென்று சொன்னேன் யானும்
உத்தமர்க்காங் கருமிகட்கு உதவா தென்றே
உலகத்தில் பாசாணர் மெத்த வுண்டு
உத்தமனே வயிறுபிழைக்க வேடங் கொண்டு
உலகத்தில் வேதாந்தங் குருநா னென்று
ஓகோகோ மானிடரை வாய்ப்பேச்சா லேச்சு
உலகத்தோர் தங்களிடம் பொருள்ப றித்து
ஒன்றுமில்லை மதிகெட்டு அலைவான் மாடே. 26

அலைந்தலைந்து உலகமெல்லாம் செடிபூடு தேடி
அறுபத்து நால்சரக்குஞ் சுட்டுச் சுட்டு
அலைந்தலைந்து திரிந்ததிலே வாதங் காணார்
அம்பரத்தி னொளிகாணார் அசட ரப்பா
அலைந்தலைந்து இப்படியே சுட்டுக் கெட்டு
அப்பனே கோடானு கோடி மாண்டார்
அலைந்தாலு மவர்தம்மொடு ஞானம் ரெண்டும்
அறிந்திட்ட பெரியோர்கள் சொல்லார் கேளே. 27

சொல்வதுதான் சிவயோகி யானு லப்பா
சொல்குருவை வணங்கியே தொழுது நித்தம்
அல்லுபக லத்திடத்தே யமர்ந்த சோதி
அகண்டபரி பூரணத்தி லறிவை யுன்னி
வல்லமைகள் பேசாமலோ ரறிவாய் நின்று
வாழியென்ற வாலையைத்தா னிதம்பூ சித்துக்
கல்விநெறி யறிவுடையோர் பெரியோர் பாதங்
காட்டுவார் வாதமொடு ஞான மார்க்கம். 28

காட்டுவார் வாதமொடு ஞான மார்க்கம்
கரைகாணு அட்டாங்க யோக மார்க்கம்
காட்டினுல் கருத்தொட்டுக் காட்ட வேணும்
கைமுறையும் செய்முறையும் காண வேணும்
சாட்டையில்லாப் பம்பரம் போல்வே தாந்த
சாத்திரத்தைப் பார்த்ததனுல் வருமோ வாதங்
கோட்டியே யாசாணை யறியா மூடர்
கோடிநூல் பார்த்தாலுங் காணு தென்னே. 29

என்னவே குருதேடி வாதம் பாரு
இல்லாட்டா லென்னூலைக் குருவென் றெண்ணு
பண்ணவே பதனமாய் வைத்துப் போற்றிப்
பக்குவமாய் வாதமுதல் வாசி யோகங்

கன்னவே அட்டாங்க யோக மார்க்கங்
கைமுறையாய்ச் சவுக்கார வழலைப் போக்குங்
கன்னவே கருக்குரு வும்வெட்ட வெளியாய்க்
காட்டினேன் கண்ணுடி முகம்போற் காணே. 30

கண்ணுடி முகம்போலே காணு மிந்நூல்
கருக்குருவும் வெளியாகத் தோணு மிந்நூல்
கண்ணுன பசளைக்கு மிந்நூல் தோயுங்
கருவறியா மூடருக்கு மிந்நூல் தோயும்
பண்ணுன பண்ணறியார்க் கிந்நூல் தோயும்
பழையதங்க மென்றிதனைப் பதனம் பண்ணி
விண்ணுன பேர்களுக்கு யீந்தா யானுல்
விண்ணிலிடி வீழ்ந்துதலை தெறிக்கும் பாரே. 31

தெரியாத வாதமென்ன வயித்தியத்தைப் பாரு
செப்பரிய வைத்தியந்தான் திறமாய்ச் செய்தால்
குறியான வைத்தியமும் வாத முந்தான்
கோடிரசம் வாதமிதுக் கொக்கும் பாரு
அறியாம லிதைவிட்டு வாதம் பார்த்து
அதனுலே செலவுசெய்து பிழைப்போ மென்ன
அறிவுகெட்டுப் பலகூட்டங் கூடி நீயும்
ஆசைகொண்டு திரிந்திட்டால் வாத மாமே. 32

வாதந்தான் மனத்தடங்கி யறிவுக் குள்ளே
மற்றெருவர் காணுத மவுன மாகப்
போதாந்த நிறைந்துநின்ற மவுன தீட்சை
புகழான வாதத்தின் தீட்சை யோடும்
வேதந்தான் முடிவதுபோல் வாதஞ் செய்து
விள்ளாதே பூசைக்குங் கற்பத் துக்கும்
கோதில்லாப் பரதேசிக் கன்ன தானம்
கோவில்குளஞ் சாலைதர்மம் செய்ய வேணும்
ஓதுமிவை யன்றியே வீண்வாய் பேசி
உழலாம லூமைபோ லிருந்தி டீரே. 33

இருந்திட்டால் சாபத்தா லெய்தும் ரோகம்
இதனுலே கேடுகெட்டு அலைவான் மட்டை
புரிந்திட்ட தேவியுட பூசை செய்யான்
பிதற்றுவான் சாராய வெறியி னுலே

பரிந்திட்ட சாத்திரத்தைத் தூடணித்துப்
பலகாலம் பொய்சொல்வான் பலியா தொன்றும்
அருந்திடவே கூழின்றிக் கொடுப்பார் இன்றி
ஆகாத நாய்போலே அலேகு வாரே. 34

அலேயாதே வயித்தைப் பாரு பாரு
அதனுலே பரகெதியு மோட்ச முண்டு
மலேயாதே மானிடற்கு நோய்தா னேது
மைந்தனே யவரவர்செய் கர்மத் தாலே
தொலேயாதே முன்செய்த பாவத் தாலே
தொடர்ந்ததடா நோய்போலே தொடர்ந்த தப்பா
அலேயாதே சாபத்தை நிவர்த்தி செய்து
அந்தந்த நோயறிந்து அவிழ்தஞ் செய்யத்
தொலேயாத நோயுண்டோ கன்மந் தீர்த்தால்
சொல்பெரிய வயித்தியரே சொல்லக் கேளே. 35

சொல்லக்கே ளவர்கன்மந் தீராட் டாக்கால்
சூழநோய் வந்துதன்னேத் தொடரும் பாரு
அல்லவே வயித்தியரே சொல்லக் கேளு
அடிதொழுது நோயாளி வணங்கி ஞக்கால்
தொல்லேயா மவனுடைய கன்மந்தீ ராது
துடியான நோயறிந்து அவிழ்த மீந்தால்
வல்லேயாம் நோய்தீரும் மயங்க வேண்டாம்
மைந்தனே பொருளாசை யிச்சிக் காதே
சில்லேயாம் நோயறிந்து பொருள்கைக் கொள்ளும்
தீராத ரோகமென்ரு லகலப் போமே. 36

போகாமல் பொருளாசை கொண்டு நீயும்
பிணிதொலேயு மென்றுநீ பொய்புலேகள் சொல்லி
ஆகாத அவிழ்தங்கள் தன்னேச் செய்து
அதனுலே நோயாளி பிணிதீ ராமல்
போகாத வயித்தியந்தான் பொய்ய னென்று
புலம்பியே தவித்து நிற்பார் அதனுல் பாவம்
வேகாத பாண்டம்போல் விழுந்த லேவார்
விசுவாச பாதகங்க ளுன்னேச் சுற்றும்
ஆகாத ரோகத்துக் காளா காமல்
அப்பனே குறியறிந்து நிலேயில் நில்லே. 37

நிற்கவே சொன்னதென்ன வயித்தியரே கேளீர்
நீசனுய்ப் பொய்யுரைத்தால் நிசமா காது
கக்கவே பொய்யகற்றி மெய்யை நம்பு
கனமாகுஞ் சகலசித்தும் கைக்குள் ளாகும்
வைக்கிறேன் யென்னூலை வயித்தியரே பாரு
விருதான வயித்தியசி ரோமணிதா னுவாய்
அய்க்கவே நோயாளி நோய்தீ ரென்று
அடிதொழுது உன்னைவந்து அடுத்தா னுனல்
கைக்கவே தாதுநிலை யறிய வேணுங்
கண்ணைமுனம் பார்த்துநீ கையைப் பாரே. 38

பாரேநீ தாதுவுடல் கலக்கப் பாரு
பரிவுடைய ஆட்பலனு நோய்ப்பலனும் பாரு
தீரேநீ யுமிழ்நீரின் குறிப்பைப் பாரு
சிறுநீரைப் பிடித்ததிலே சூட்சம் பாரு
சேரேநீ சுவாசத்தி னிலையைப் பாரு
தசைநாடி நிற்கும்வகை திறமாய்ப் பாரு
நேரேநீ யிவ்வகையாங் குறிகள் பார்த்து
நிலைத்திட்ட அவுடதங்கள் அறிந்து செய்யே. 39

செய்யவே ரோகவகை வந்த வாறுஞ்
செப்புகிறேன் மேகவகை யறிந்து கேளு
நையவே வாதத்தில் நால தாச்சு
நலமான பித்தத்தி லாற தாச்சு
அய்யவே அய்யத்தில் பதினெனன் ருச்சு
அரிமேகந் தானிரு பத்தொன் றதாகப்
பையனு லாயிரத்து நாநூற்று நாலாம்
பத்தெட்டு ரோகமது விளைந்த வாறே. 40

## மகாமேக ராசாங்கம்

வாருக மேகவகை ரோகமெல்லாம் தீர
மகாமேக ராசாங்கஞ் சொல்லக் கேளு
கூருன மகாமேக ராசாங்க மொன்று
கூறரிய மதனவிந் தாதி யென்னும்
பேருன காமேசுர லேகியமா மொன்று
பேசினு ரீதுடைய பெருமை மெத்தத்
தூருன சர்வநோய் யெல்லாந் தீரச்
சூட்சுமமாய் ராசாங்கஞ் சொல்லு றேனே. 41

சொல்லுகிறேன் நிலப்பனையே முத்தக் காசு
சுகமான சிவன்வேம்பு தண்ணீர் விட்டான்
நல்லதொரு விலாமிச்சம் வில்வ வேரும்
நன்னாரி குமரிவேர் அமுக்கு ராவேர்
ஒல்லியதோர் சலந்திரட்டி[1] மூலி வேரும்
ஓரிதழின் மருள்கிழங்கு வெட்டி வேரும்
அல்லவே தாமரையின் வளையம் நெல்லி
ஆல்விழுது நீர்ப்பூலா அறுகின் வேரே. 42

வேரான வல்லாரை வீழி சங்கு
மிளகரணை கொடிவேலி காக்கை வேரும்[2]
சீரான சிற்றுமல்லி பேரா மல்லி
சிறுபீளை யிருவேலி சிறுகாஞ் சோரி
தூரான தூதுவளை கண்டங் காரி
துடியான நிலவாகை சித்தா முட்டி
வீறான கருங்காலி நாவல் அத்தி
வெள்ளறுகு சிறுபிரப்பங் கிழங்கா மென்றே. 43

கிழங்கோடு கரிசாலை பொன்னாங் காணி
கீழ்க்காயின் நெல்லிவெள்ளைச் சாரணையின் வேரும்
திளங்கவே நெரிஞ்சிநத்தைச் சூரி வேரும்
சிவதைவேர் முந்திரிவேர் முருங்கை வேரும்
வழங்கவே செருத்துத்தி முக்கா வேளை
மலாய்க்கெந்தம் வகைக்கஞ்சு பலம் நொறுக்கி
கிளங்கான ஈரெட்டு மரக்கால் நீர்தான்
கெடியாக நாலதனில் விரவி வாரே. 44

வார்த்துமே யடுப்பில்வைத்து எரித்துக் காய்ச்சி
வத்தியெட்டி லொன்றாக வருதல் கண்டு
வார்த்துமே நால்தாளிக் கியாழ மொன்றாய்
வடித்தெடுத்து யெட்டொன்றாய்ப் பாதி யாக்கி
வார்த்துமே மறுபாண்டத் தூற்றி வைத்து
மைந்தனே யின்னமொரு வரிசை கேளு
வார்த்துமே ஆவின்பால் படிதான் நாலு
வாங்கவதிற் சடைவண்ணிக் கற்பம் பத்தே. 45

பத்தான பலம்பத்துப் புடமே தீர்ந்து
பாலிவிட்டு அடுப்பேற்றி யெரித்துக் காய்ச்சி
வத்தியே படிரெண்டு ஆன வாறு
வடிகொண்டு முன்வைத்த கியாழத் தூட்டி

---

1. சலந்திரட்டி=கொத்தான்; 2. காக்கைவேர்=காக்கண வேர்.

வித்தான பருத்திவிதை படிதா னென்று
வேரிஊத்த புங்கம்பால் படிதா னென்று
சித்தான வெள்ளாட்டுப் பால்படிதா னென்று
தேங்காய்ப்பால் படியொன்று சேர வூட்டே. 46

ஊட்டடா பாலோடு கியாழ மெல்லாம்
உத்தமனே கடைச்சரக்கு விவரங் கேளு
மூட்டடா சாதிக்காய் பத்திரி கிராம்பு
முனையான ஏலமில வங்கங் கோட்டம்
ஆட்டடா குரோசாணி பேரீந் தோடு
மதிவிடயம் முந்திரிகை முத்தக் காசு
வாட்டடா குங்குமப்பூ கோரோசனை வராகன்
வால்மிளகு அபினியுட னேம மாமே. 47

ஓமமொடு வாலுளுவை கூகை நீரும்
உற்றவிரு சீரகமு [1]மத்தித் திப்பிலி
வேமமொடு தாளிசையும் விளங்கு மாஞ்சி
வெப்பாலை திரிகடுகு திப்பிலி மூலம்
யேமமொடு அதிமதுரம் கொத்த மல்லி
யெவச்சாரம் லவங்கப்பத் திரியுங் கூட்டிக்
[2]காமமொடு தக்கோலம் தகர மிந்து
கசகசா மஞ்சிட்டிச் சாரப் பருப்பே 48

பருப்பான திரிபலையுஞ் சமுத்திரப் பூவும்
பகரரிய வலம்புரிக்காய் கற்கடக சிங்கி
விருப்பான காமப்பூ மகரப் பூவும்
விழலரிசி சிறுநாகப் பூவுங் கூட்டிக்
கருப்பான சித்தரத்தை பறங்கிப் பட்டை
கார்போகி அரத்தைகத் தூரிப் பட்டை
மருப்பான தாமரையின் கிழங்கி னோடு
மரமஞ்சள் நிலப்பனைவேர் அல்லித் தண்டு
கருப்பான பூமிசர்க் கரைக்கி ழங்கு
கத்தூரி மஞ்சள்மர வள்ளி யாமே, 49

வள்ளியாங் கிழங்கோடு செங்கழுநீர் மூலம்
மாசக்காய்ச் செவியமுடன் அக்கிரா காரம்
வள்ளியா மகில்கெந்த மராட்டி மொக்கு
வளரோணி சிறுதேக்குச் சித்திர மூலம்

1. அத்தித்திப்பிலி=யானைத்திப்பிலி; 2. காமம்=பனையின் பூ.

வள்ளியாம் வகைவகைக்கு ஓர் பலந்தான்
வளமாக யிளவறுப்பாய்ச் சூரணமே செய்து
வள்ளியாம் வித்துவகை சொல்லக் கேளு
வாகான அகத்திவித்து அத்தி வித்தே. 50

வித்தான மருளூமத்தை சடைக்கஞ்சா வித்து
விதமான அழிஞ்சிவிதை முருங்கை வித்து
நத்தான தகரைநீர் முள்ளி வித்து
நாயுருவி வித்தோடு பூனைக் காலி
கத்தான சூரிவித்து நெருஞ்சி வித்து
கனமருவெல் லாம்வித்து யெட்டிமா தனையின்வித்து
முத்தான கூவிளையின் வித்தி னோடு
முசுட்டைவித்து கோதும்பை வெள்ளு ளுந்தே. 51

உளுந்தான குமட்டிமா தனையின் வித்து
உற்றதொரு ஆவாரை மொட்டரும்பு மரிசி[1]
குளுந்தான [2]தேத்தின்வித்து ஆசாளி வித்து
கூந்தற்பனை வித்தோடு தாமரைக்காய் வித்து
விளுந்தான சுரைவித்து புரசன் வித்து
வெண்குன்றி மாவித்து சரக்கொன்றை வித்து
நளுந்தான புன்னைபுன்கு கருஞ்செம்பை வித்து
நாய்வேளை முந்திரிகை யழிஞ்சி வித்தே 52

வித்தான தாவாரம் பீர்க்கன் வித்து
விருதான புளியம்விதைத் தோலு மேலுங்
கத்தான வெள்ளரியின் வித்தி னோடுங்
காரைவித்து மகிழம்வித்து பூவரசின் வித்து
முத்தான பருத்திவித்து மூங்கில் வித்தும்
முனையான பேய்க்குமட்டி வித்தி னோடு
மத்தான மகரப்பூ வரசின் வித்து
மஞ்சளொடு மருதோன்றி வித்துங் கூட்டே. 53

கூட்டிடுவாய் வகைக்கு அரைப்பலமுஞ் சொன்னோம்
குமுறவே யிளவறுப்பாய்ச் சூரணமே செய்து
மூட்டியே முன்மருந்தோ டொக்கச் சேர்த்து
முருங்கைப்பூ யிலுப்பைப்பூ பால்குரண்டிப் பூவும்

---

1. அரிசி=விதை (இங்கு ஆவாரை விதையாம்). 2. தேத்தின் வித்து=தேற்றான் கொட்டை.

ஆட்டியே கூவிளம்பூத் தென்னம் பூவு
மழகான புங்கம்பூ மாதுளையின் பூவும்
தீட்டியதோர் மாதுளந் தோடத்திப் பிஞ்சுஞ்
செண்பகப்பூக் காயத்திப் பூலாவு மாமே. 54

பூவோடு விளாம்பிஞ்சு யிலவம் பிஞ்சு
புகழ்பருத்திப் பிஞ்சோடு கோங்கிலவம் பிஞ்சு
சேவோடு குலாமல்லி அல்லி கொட்டி
செம்பருத்திப் பிஞ்சபா[1] மார்க்கப் பூவுந்
தேவான நந்தியா வட்டத் தோடு
சேர்வகைக்கு அரைப்பலந் தான்சொன் னேனே
பாவான பிசின்வகைதான் சொல்லக் கேளு
பகருகிறேன் முள்ளிலவு முருங்கை வாகை
கோவான வேம்புவிளா வேலத்தி யித்தி
கொன்னையுமா மாலரசு இலுப்பைவகை கேளே. 55

வகையென்ன பிசின்வகைக்கு அரைப்பலமே சொன்னோம்
வகையாக நிழலுலர்த்திச் சூரணமே செய்து
திகையாத முன்மருந்தோ டொக்கச் சேரு
செப்புகிறேன் மேகாதிக் காதியான
நகையான அமுர்தசர்க் கரைதா னப்பா
நலமாக ரெண்டுபலங் கூடக் கூட்டி
மிகையாதே யிவையெல்லா மொக்கச் சேரு
விளம்புகிறே னின்னமொரு விவரந் தானே. 56

தானென்ற சூரணத்துக் கிடையால் கேளு
சமரசமாய் வங்காளச் சீனி கூட்டி
ஆனென்று முன்வைத்த பாலொடு கியாழ
அடுப்பேற்றிச் சீனியதி லிட்டுக் கிண்டிப்
பானென்ற கியாழமெல்லாம் வற்றிப் பின்பு
பாலோடு சீனிரெண்டு பாகு சேரில்
கானென்ற சூரணத்தைப் போட்டுக் கிண்டிக்
கைமுறையாய் உண்டுவர நோய் பத்தாதே. 57

பத்தாத முந்திரிகை பேரீச்சம் பழந்தான்
பருவமாய் வகைக்கிரண்டு பலமே போடு
பத்தாதே ஆவினெய் படிதான் ரெண்டு
பாகமாய் வார்த்ததிலே கிண்டிக் கிண்டிப்

1. அபாமார்க்கம்=நாயுருவி.

பத்தாதே கருகாதே யடிபத் தாதே
பக்குவமாய் மெழுகுபதம் வருதல் கண்டு
சுத்தமாய் லேகியத்தை யிறக்கி வைத்துச்
சூடாறும் போதிலதில் தேனை வாரே. 58

தேனென்ற கொம்புத்தே னொருபடிதான் வாரு
செப்பரிய அப்பிரகச் செந்தூரங் கேளு
வானென்ற ஒருபலந்தான் போடு போடு
வங்கசெந் தூரமொரு பலமே போடு
கானென்ற ரசபற்ப மரிதார பற்பம்
கணக்கோடே வகைவகைக்கு ஒருபலந்தான் போடு
தேனென்ற கல்நாரின் பற்பம் போடு
சேர்த்துநீ லேகியத்தைத் திறமாய்ச் செய்யே. 59

செய்யவே சாபங்கள் நிவர்த்தி செய்து
சிறப்பான கணபதியுங் கந்த பூசை
செய்துமே ஆயிபதம் பூசை பண்ணி
சிறப்பான வியாதிமா ரணத்தை யோது
செய்துமே லேகியத்தைத் தானியபுடம் வேறு
திறமான மண்டலந்தான் சென்று வாங்கு
நைதுமே நாகத்துக் கீடா காமல்
நாலிலொன்று வயித்திய பாக மீயே. 60

ஈந்தவர்க்கு மனங்குளிர வெகுமானஞ் செய்து
விதமான ஆவின்பால் உண்டு தேறு
ஆய்ந்தவிதம் நாளொன்றுக் கிருநேர மாக
அந்திசந்தி நேரமொரு கொட்டைப்பாக் களவு
சேர்ந்ததொரு லேகியத்துக் கிச்சா பத்தியம்
திறமாக மண்டலந்தான் கொண்டு பாரு
ஆய்ந்துமே நோயேது பிணிதா னேது
ஆச்சரியந் தேகமது பசும்பொன் னாமே. 61

பசும்பொன்னாந் தீருகிற நோயைக் கேளு
பகருமிரு பதுவகைமே கந்தா னெங்கே
பசும்பொன்னுஞ் சிலேத்துமமாந் தொண்ணூற் றஞ்சும்
பறக்குமே கிரந்தியரை யாப்புச் சூலை
பசும்பொன்னுஞ் சயமீளை மந்தார காசம்
பரிசுகெட்ட காமாலை சோகை பாண்டு
அசங்காகுங் குன்மமெட்டு கிரிச்சரங்க ளாறு
மாகாத பதினெட்டுக் குட்ட மென்னே. 62

குட்டமொடு வாயுவென்ற யிருபத்து நாலுங்
குடிகெடுத்த பித்தம்நாற் பத்துநாலும் போகு
மட்டமாய் வாதமெண் பதுவும் மெங்கே
மஞ்சளா முதிரவெள்ளைப் பிரமி யங்கள்
பட்ட மாஞ் சிரங்குசொறி கரப்பா னெங்கே
படர்தேமல் தாமரைகள் பதினெட்டுச் சூலை
சட்டமாம் லிங்கப்புத் துயோனிப் புத்து
சட்டையாம் மேகவகை ஊற லென்னே. 63

என்னவே தண்டில்புண் கண்டமாலை
எழுவாளை விப்புருதி பிளவைப் புத்து
மன்னவே கன்னேசி கன்னப் புத்து
மகோதரங்கள் நீராமை கவுசியுள் மாந்தை
அன்னவே பெருவயிறு தொண்டைக் கட்டு
மத்திசுர மத்திவெட் டையுட்ண வாயு
வின்னமாம் இரோசியங்கள் அன்ன தோடம்
வெள்ளையோக் காளமொடு விக்கல் போமே. 64

விக்கலொடு கைகா லெறிவு காந்தல்
மெலிவான பெரும்பா டென்புருக்கி நோயும்
எக்கவே குழிவாழை ஆருப் புண்கள்
இயல்வான அழுகண்ணி நேத்திர வாய்வு
செய்க்கவே முலைக்குத்து மார்பி லாணி
செப்பரிய தொடைவாழை யிந்திர கண்டி
எய்க்குமே நரம்புவாய் சிலந்தி யோடு
யெச்சிலந்தி யுள்ளவகை யெண்பத்து நான்கே. 65

நான்கோடு பவுத்திரமும் நேத்திர ரோகம்
நலமான சிலநோய்கள் தொண்ணூற் ருறும்
பாங்கான மூலவகை யண்ட வாய்வு
பரிசுகெட்ட கயரோகம் நாக்கில் ரோகம்
தேங்காதே மேல்மூச்சு யுப்புசமு மேங்கல்
தேகமெல்லாம் விசிறிவிடு முளைவு குத்தும்
பாங்கியே கிறுகிறுப்பு மயக்கந் தூக்கம்
பறக்குமே பெண்டீர் கர்ப்ப நோய்கள்தானே. 66

தானென்ற பெண்களுக்குக் கர்ப்பநோ யேழும்
தணிந்திடுமே மலடியுமே பெறுவாள் பிள்ளை
பானென்ற சில்விடங்கள் அறுபத்து நாலும்
பறக்குமே யெலிக்கடியும் வண்டுகடி செய்யான்

தேனென்ற கால்கையை முடக்குஞ் சூலை
செரிசடிப் புச்சூலை கண்ட வாதங்
கோனென்ற மேகரா சாங்கப் பேரு
கூறினுல் நோயெல்லாந் தீர்ந்து போமே. 67

போமென்ற நீரடைப்புச் சதைய டைப்புப்
பொல்லாத துன்மாங்கிச மடைப்புக் கூடப்
போமென்ற நீரிழிவா லெடுத்த ரோகம்
பொல்லாத சலக்கழிச்சல் சீரெத்தக் கடுப்பு
வேமென்ற சரீரத்தில் வெப்புப் பார்வை
வெண்குட்டம் கருங்குட்டம் விசபா கங்கள்
பாமென்று சொல்லியதோர் நோய்க ளெல்லாம்
பஞ்சிலிடு நெருப்பதுபோல் பாறிப் போமே. 68

பாறியே நோயெல்லாம் பறந்து போகும்
பசுந்தங்கம் போலிருக்கும் தேக மெல்லாம்
ஆறியதோர் கற்பமெல்லா மிதற்கீ டல்ல
ஆச்சரியந் தேகமெல்லா மிறுகிக் கட்டும்
பாறியே நரைதிரையு மெல்லா மாறும்
பழம்பழுக்கு முடம்பெல்லாம் பாலே யாகும்
காரியாந் தேகமது கஸ்தூரி வீசுங்
கண்களுமே செவ்வரளிப் பூப்போ லாமே. 69

பூவாகும் தேகமிகச் சிவந்து மின்னும்
புனிதமிக விந்திரியம் சேரும் பொங்கும்
பூவான சுக்கிலந்தா னிறுகிக் கட்டும்
பெண்களுடன் அனுபோகஞ் செய்ய வேண்டில்
நாவான தனுலே சொல்லப் போமோ
நாள்தோறும் பத்துப்பே ரிருக்க வேணும்
ஆவான சையோகத் தாலே கெட்டு
அலையாதே பெண்மாயை தள்ளு தள்ளே. 70

மாய்கையென்ற பெண்மாய்கை தள்ளு தள்ளு
மயங்கினுல் சித்தியெல்லா மண்ணுய்ப் போச்சு
மாய்கையென்ற மோகவலைக் குள்ளே சிக்கி
மாண்டிட்டார் கோடானு கோடி யப்பா
மாய்கைவந்து மூடினதால் யோகங் காணுர்
வாயாது சுழுத்தியிலே மாளு வார்கள்
மாய்கைதள்ளி நாதாக்கள் ரிஷிகள் சித்தர்
மாளாம லுகந்தவரை யிருந்திட் டாரே. 71

இருந்திட்ட வாதிமக னிவனே யானல்
யிதமான கைமுறைக ளறிந்து செய்வான்
அறிந்திட்ட சுழிணைபற்றி நாடி பார்த்து
அந்தந்த நோயறிந்து அவிழ்தஞ் செய்வான்
அறிந்திட்ட தாதுவுடல் கலக்கம் பித்து
ஆட்பலனும் நோய்ப்பலனு மறிந்து பார்த்துச்
செறிந்திட்டு நோய்களெல்லாந் தீரச் செய்வான்
செகத்துள்ள வயித்தியனே செய்வார் பாரே. 72

## அப்பிரக செந்தூரம்

பாரப்பா மேகவகை யெல்லாந் தீரப்
பாடுகிறே னப்பிரக செந்தூரங் கேளு
பாரப்பா அப்பிரகம் நால்வகையாஞ் சாதி
பரிவான கிஷ்ணவண்ண வர்ணம் மெத்தநன்று
ஆரப்பா பலம்பத்து நிறுத்துக் கொண்டு
ஆவினுட கோமியத்தில் காணச் சாற்றில்
கூரப்பா அப்பிரக மதிலே யிட்டுக்
குமுறவே அவித்துமே யிடித்தி டாயே. 73

இடித்துமே சுணையுள்ள காரி நெல்லில்
இதனைநீ கலந்துநன்ருய் ரெட்டில் கட்டி
வடித்துமே காடியிலே பத்துவிசை தோய்த்து
வலுவாகப் பிசைந்ததைத் தள்ளி யிட்டு
நடித்துமே மூனுநா ளூற வைத்து
நலமான தெளிவிறுத்து நவநீதம் வாங்கே. 74

வாங்கியே கல்வத்தி லிட்டுக் கேளு
வாகான பழச்சாற்ருல் சாமம் நாலு
பாங்காக ஆட்டியே வில்லை தட்டிப்
பக்குவமா யோட்டிலிட்டு மேலோடு மூடி
ஆங்கியே குழிவெட்டிக் கசபுடமாய்ப் போடு
ஆறவிட் டெடுத்துமுன்போ லரைத்துக் கட்டித்
தேங்காதே யோட்டிலிட்டு மேலோடு மூடிச்
சீலைசெய்து முன்போலே கசபுடத்தில் போடே. 75

போட்டுமே யாறவிட் டெடுத்துப் பாரு
புகழாக யிப்படியே பத்துவிசை போடு
ஆட்டுமே கல்மிஷங்கள் அத்து நிற்கும்
அதன்பிறகு ஆலரசு நாவ லத்தி

பாட்டியே நாலுவகைப் பட்டை வாங்கி
பக்குவமா யிடித்து நன்ருய்க் கியாழஞ் செய்து
நாட்டியே கியாழத்தி லரைத்த ரைத்து
நலமாக முன்போலே புடந்தான் பத்தே. 76

பத்தான குமரிச்சார் புடந்தான் பத்து
பக்குவமாய் முருக்கிலைச்சார் புடந்தான் பத்து
அத்தான கொடிவேலிச் சாற்றில் பத்து
ஆற்றரளிச் சாற்றினல் பத்துவிசை போடு
கத்தான கவுதும்பைச் சாற்றில் பத்து
கரந்தைச்சார் செருப்படிச்சார் வகைக்குப் பத்து
அத்தான வெருக்கிலையின் பழுப்புச் சாற்ருல்
ஆட்டியே பத்துவிசை யரைத்துப் போடே. 77

அரைத்துமே குமுட்டிமா தளையினில் பத்து
அதன்பின்பு புளித்தமா தளையில் பத்து
குறைத்துமே போகாமல் முறைதப் பாமல்
குறையாமல் புடநூறு ரெண்டு பத்து
அரைத்துமே புடந்தீர்ந்தே எடுத்துப் பாரு
அம்மம்மா செந்தூர மருணன் போலாம்
திரைத்துமே சோதனைதா னறிய வேண்டில்
செலத்திலொரு மாவிடைதான் செந்தூரம் போடே. 78

போட்டதன்மே லரிசியிடு உளுந்து போடு
புகையாது செந்தூர மிதக்கும் பாரு
தாட்டிகமே செந்தூர மிதந்த தானல்
கசடில்லா தழுக்கற்ற கனக மாச்சு
ஊட்டியே யின்னமொருபக் குவத்தைக் கேளு
வுத்தான நெய்பாலுஞ் சர்க்கரைதேன் பழமுங்
கூட்டியே சமன்கொண்டு சட்டியிலே கரைத்துக்
கூடவே செந்தூர மாறவிட்டு வாங்கே. 79

வாங்கியே சர்க்கரைதேன் பழங்கள் நெய்பால்
வகையொன்றில் குன்றியெடை கொள்ளு கொள்ளு
பாங்கியே மண்டலமே கொண்டா யானல்
பாடியதோர் மேகவகை யிருபதுந்தா னெங்கே
நீங்கியே காசவகை உட்டணந்தா னெங்கே
நிலையாது என்புசுரம் வெட்டை காந்தல்
தாங்கியே சயரோகந் தொண்ணூற் ருறும்
சண்டாளக் கிரிச்சரங்க ளாறும் போச்சே. 80

போச்சப்பா பிரமேகம் வெள்ளை மஞ்சள்
புகழ்ரெத்தப் பிரமியமு மேக வாய்வு
போச்சப்பா கிராணிவகை யெல்லா ரோகம்
புகழான சன்னிவகை சுரங்கள் போகும்
காச்சப்பா கைகாலி லெரிவு காந்தல்
கனமான உள்வலிப் பிளைப்பிரும லீளை
பாச்சியே சர்வநோ யெல்லாந் தீரும்
பழம்பழுக்கு முடம்பெல்லாம் பாலையாமே. 81

பாலையாந் தாதுவெல்லா மிறுகிக் கட்டும்
பங்கயம்போல் தங்கநிற மாகு மேனி
பாலையாஞ் சுக்கிலமு மமுர்த மூறும்
பரிசுகெட்ட மாண்பர்களோ அறியப் போருர்
ஆலமுண்ட கண்டருட பாகம் வைத்து
ஆயியுட நாதமப்பா அறிந்து பாரு
ஆலையாஞ் சருவநோய்க் கெல்லாங் கால
னுதியாம் வாதத்துக் குறுதி மெத்த
வேலையா மப்பிரகச் செந்தூரப் போக்கு
வெகுசுறுக் கின்னமோர் விவரங் கேளே. 82

கேளாய்நீ சர்வநோய்க் கெல்லாந் தீரக்
கிளத்துகிறேன் கதளிகெந் தரசாயன மொன்று
காளேநீ கோட்டமது பலந்தா னுலு
கார்கொண்ட திப்பிலியும் பலந்தான் ரெண்டு
கேளேநீ சுக்குரெண்டு சாதிக்காய் ரெண்டு
கிராம்புரெண்டு சீரகமும் ரெண்டுங் கூட்டே. 83

கூட்டியே யிளவறுப்பாய்ச் சூரணித்துக்
குணமாக வைத்தபின்பு கூறக் கேளு
கூட்டியே மிளகரணை சங்கம் வேரும்
கூர்வகைக்குப் பலமிரண்டு இடித்துத் தூளாய்க்
காட்டியே புதுத்தாளிச் சட்டி யொன்றில்
காராவின் நெய்நாழி யதிலே வாரு
ஆட்டியே கதலிப்பழ நூறுமே வாங்கி
ஆவின்பால் தனில்கரைத்துச் சீலைவடி கொள்ளே. 84

கொண்டேதான் சொன்னபடிரெண்டு சட்டியிலே வாரு
கூருன வங்காளச் சீனிபலம் பத்து
காண்டேதான் கரைத்தொன்ரு யடுப்பி லேற்றிக்
காய்ச்சியே மெழுகுபத மான வாறு

பண்டேதான் முன்சொன்னசூர ணத்தைத் தூவிப்
பக்குவமாய்க் கிண்டிவர ரசாயனமாஞ் சொன்னேன்
விண்டேநீ யிறக்கிவைத்துக் கணபதியுங் கந்தன்
விதனமிலா வடுகனையும் பூசை பண்ணே. 85

பண்ணியே தேன்படிகால் விட்டுக் கிண்டிப்
பரணிதனி லாக்கியே நெல்புடத்தில் வைத்து
உண்ணவே நாளொன்றுக் கந்தி சந்தி
உத்தமனே கொட்டைப்பாக் களவு போடு
பண்ணவே கேள்பத்தியமா யுண்டு தேறு
பெரும்பா டெலும்புருக்கி பிரமே கங்கள்
பண்ணுன மேகவகை பதினெட்டுச் சூலை
பாழான அரையாப்பு கிரந்திகுட்ட மென்னே. 86

என்னவே அத்திசுர மத்தி வெட்டை
யியல்வான வுட்ணமுத லெரிவு காந்தல்
கன்னவே சிரங்குசொறி கரப்பா னூறல்
கனமான கிராணிவகை மூலச் சூடு
நண்ணவே யிளைப்பிருமல் காசக் கூறு
நல்லகெடு நீரிழிவு கிரிச்சினங்க ளாறும்
என்னவே பெண்களுக்குச் சிதைந்த கெர்ப்பங்
கேழுவகை நோயெல்லாந் தீர்ந்து போச்சே. 87

போச்சென்று சொன்னதென்ன வாய்ப்பேச்சோ மைந்தா
புகலுகிறேன் ரசபற்பம் வங்க பற்பம்
ஆச்சென்ற வாதமென்ன வயித்தியந்தா னென்ன
ஆராய்ந்து சாஸ்திரத்தைப் பார்க்க வேணும்
காச்சென்ற கைமுறையும் குருமுறையும் வேணும்
கருவான முப்பூவை யறிய வேணும்
நீச்சென்ற இவையெல்லா மாராய்ந்து பார்த்து
நிலைத்திட்டால் வாதியுமாய் வயித்தியனு மாமே. 88

ஆவதற்கு முப்பூவை யறிய வேணும்
அறியாட்டால் வாதியல்ல நிர்மூட னுவான்
ஆவதற்கு வழலையென்ற கருவ றிந்தா
லாடலாம் வாதமுதல் வயித்தியமுந் தேரு
ஆவதற்கு வழலைவிட்டால் வாதம் போச்சு
அவிழ்தங்கள் செய்தாலும் சித்தி யில்லை
ஆவதற்குக் குருதேடி யறிந்து போற்றி
ஆதியா முப்பூவை முன்னே செய்யே. 89

## இரச பற்பம்

செய்வதற்கு ரசபற்பஞ் சொல்லக் கேளு
செப்பரிய சூதமொரு பலந்தான் தூக்கு
நைவதற்கு மேனிச்சார் வெற்றி லேச்சார்
நலமான பசுமஞ்சள் காசா வின்தூள்
உய்வதற்குச் செங்கல்தூள் கொடிவே லித்தூள்
உற்றதொரு திரிபலையைக் குடிநீர் செய்து
நைவதற்கு வட்டமா மோட்டி விட்டு
நலமாக வடுப்பேற்றிப் பேய்க்க ரும்பாம். 90

கரும்பினுட கருணையால் தேய்த்து முத்திக்
கனமாக வொருசாமம் தீபம் போலே
விரும்பியே மேலோடு மத்தித்து மூடி
விதமான யெழுசீலை மண்ணுஞ் செய்து
அரும்பியே குக்குடமாம் புடத்தைப் போடு
ஆறவிட் டெடுத்துக் கருகொட் டாமல்
ஆட்டுமே முன்போலே மூடி செய்து
அப்பனே குக்குடத்தில் போட்டெ டுத்து
நாட்டுமே யிப்படியே போட்டுத் தீரு
நாலுபத்து வோர்புடந்தான் நன்ருய்ச் செய்யே. 91

செய்யவே தவளநிற மாகும் பாரு
சிவசிவா யென்னசொல்வேன் சூத பற்பம்
செய்யவே யனுபான மறிந்து போடு
தீராத நோயேது செப்பக் கேளு
பையவே பனைவெல்லம் நெய்தேன் சீனி
பரிவான லேகியங்கள் கியாழ கற்க
முய்யவே கொண்டுவரத் தீரும் நோய்கேள்
உரைக்கிறேன் கிரந்திகுட்ட மரையாப் பென்னே. 92

என்னவே குன்மமெட்டுக் கிராணி யாறு
மிசைந்துவரு மூலவகை பவுந்திரமுந் தீருங்
கன்னவே கைகாலு முடக்குஞ் சூலை
கபாலகுட்டம் நீரிழிவு காச நோய்கள்
வின்னமாம் பிளவைபுத்து கண்ட மாலை
விப்புருதி குழிவாலை யாருப் புண்கள்
சொன்னதொரு யிவைநோ யெல்லாம் மைந்தா
தொலைந்தோடுஞ் சூதபற்பப் பெருமையென்ன சொல்வேன். 93

## தாம்பிர பற்பம்

சொல்லவே தாம்பிரத்தின் பற்பங் கேளு
சொற்பெரிய தாம்பிரத்தைத் தகடாய்த் தட்டி
சொல்லியதோர் சுத்திவகை திறமாய்ச் செய்து
சுருக்காக வெடுத்தேயோ ரோட்டி லிட்டுச்
சொல்லியதோ ரடுப்பேற்றி யெரியை மூட்டிச்
சொற்பெரிய கரும்புதனைத் துண்டுதுண் டாய்நறுக்கி
மெல்லவே நறுக்கியதோர் கரும்பி னாலே
விதமான தாம்பிரத்தைத் தோய்த்தி டாயே, 94

தோய்த்திடவே நால்சாமம் கையோ யாமல்
தோய்க்கவே தாம்பிரந்தான் கருகி நிற்கும்
வாய்த்திட்ட கல்வத்தி லிட்டு நன்றாய்
மைந்தனே நெல்லுமியுங் கூட விட்டு
ஆய்த்துமே யரைக்கவுமே நொறுங்கித் தூளாம்
அதையெடுத்து ஓட்டிலிட்டு மோலோடு மூடி
வாத்துமே சீலைசெய்து கசபுடமே போடு
மைந்தனே செந்தூர பற்ப மாமே. 95

ஆகியதோர் பற்பமதில் அசடி ருந்தால்
அரையாமல் மறுத்துமொரு வோட்டில் மூட்டி
ஆகியதோர் சீலைசெய்து கசபுடத்தில் போடு
அருணனைப்போல் செந்தூர பற்ப மாகும்
பாகியதோர் செந்தூர பற்பந் தன்னைப்
பணவிடைதா னெடுத்துநெய்பால் தேனி லுண்ணு
வாகியென்ற குன்மமெட்டுங் கிராணி யாறும்
வாய்வென்ற ரெண்டுபத்து மாறும் போச்சே. 96

போச்சென்ற மேகவகை யிருபத் தொன்றும்
பொல்லாத கசரோக மெல்லாந் தீரும்
ஆச்சென்ற வாய்வோடு வாத சூலை
அத்திசுர மத்திவெட்டை உட்ண வாய்வு
காச்சென்ற பவுந்திரங்க ளண்ட வாதங்
கதிகெடுத்த நீரிழிவு பிரமே கங்கள்
தீச்சுட்ட கருகழலால் வெடிசூலைப் புண்கள்
தீருமின்னம் பலவகையாம் நோயெல்லாங் காணே. 97

காணவே பற்பங்கள் செந்தூ ரங்கள்
கருதியே கொள்ளுகின்ற விவரங் கேளு
பூணவே ஆவின்பால் நெய்யு மெத்தப்
போதரவாய் கொண்டுவரப் பேருண் டாகும்

ஆணவங்கள் மெத்த வுண்டாம் விந்து கட்டும்
அகலாத நோயெல்லா மகன்று போகும்
கோணாத பத்தியங்க ளிச்சா பத்தியம்
கொண்டுவா பெண்மாயை தள்ளி நில்லே. 98

நில்லென்று சொன்னபடி நிற்கப் போமோ
நீதியுள்ளோ ரதிமோகஞ் செய்ய மாட்டார்
வெல்லுவதார் விந்துவைத்தா னென்றால் கேளு
விருதுபெற்ற முனியல்லா லொருஞான யோகி
அல்லவென்று லுலகத்தார் விந்துவைத் தான்செயிக்க
அறியாமல் நோய்மிகுந்து செத்தார் கோடி
வல்லவனே ஆணுக்கால் அனுபோகஞ் செய்ய
வகைகேளு பட்சத்துக் கொருக்கால் செய்யே. 99

## வாய்வு வாதத்துக்கு எட்டித்தைலம்

செய்வதற்கு வாதமொடு வாய்வு சூலை
தீரவே யெட்டியுட தயிலங் கேளு
பையவே சொல்லுகிறே னெட்டிக் கொட்டை
படிரெண்டு அளந்துமே ஊறப் போட்டு
அய்யாநீ கல்லுரலி லிட்டுமாப் போல்
அந்திடைக்கு வெள்ளுள்ளி சேர்த்தி டித்து
உய்யவே திருகுகள்ளிச் சாற்றில் நாட்டி
உத்தமனே வில்லைதட்டி நிழலு லர்த்தே. 100

உலர்த்தியே குழிப்புடத்தில் தைலம் வாங்கி
உற்றரச கற்பூரங் கால்பலமே போடு
அலத்தியே குருவிலொரு காசு போடு
அப்பனே பரணிதனி லடைத்து மூடு
வலுத்துமே தயிலத்தில் காசெடைதா னெடுத்து
வாகான லேகியங்கள் சூர ணங்கள்
பலக்கவே செந்தூரி கொள்ளும் போது
பலத்துவரு நோய்களெல்லா மெங்கே போச்சே. 101

போச்சென்று அனுபான மறிந்து கொண்டால்
பொல்லாத சூலைபதி னெட்டு மெங்கே
வாச்சென்ற வாதமெண் பதுவு மெங்கே
வாகான கிரந்திவகை பதினெட்டுக் குட்டம்
காச்சென்ற வலியஞ்சுங் குன்ம மெட்டுங்
கரையடங்கா வாயுவென்ற திருபத் தாறும்
கூச்சென்ற மெய்க்கடுப்பு விளைவு குத்து
குலைமுட்டி குருத்திரனுங் கீலு வாய்வே. 102

## சிவன்வேம்புத் தைலம்

வாய்வோடு சர்வநோ யெல்லாந் தீரும்
மைந்தனே சிவன்வேம்புத் தயிலங் கேளு
வாய்வோடு சிவன்வேம்புச் சமூலம் வாங்கி
வளமாக நிழலுலர்த்திச் சூரணமே செய்து
வாய்வோடு சூரணத்தி லின்னங் கேளு
வாலுளுவை யரிசிசமன் கொண்டு நீயும்
வாய்வோடு கருடனுட கிழங்குச் சாற்றுல்
வளமாக ஆட்டிவில்லை கட்டு கட்டே. 103

கட்டியே பூப்புடத்தில் தயிலம் வாங்கு
கற்பூரங் காற்பலமே பொடித்துப் போடு
அட்டியே செய்யாமல் காசெடையாந் தயிலம்
அப்பனே மேலெங்கும் தடவிப் பூசு
குட்டமொடு குறைநோயும் பெருவி யாதி
குளங்கியதோர் மேகவகை வெடிசூலைப் புண்கள்
கட்டிய வண்டுகடி புடையன் குத்து
கரப்பனொடு சில்விடங்கள் காணு தோடும் 104

## சிவன்வேம்புச் சூரணம்

காணுது சிவன்வேம்புச் சூரணத்தைக் கேளு
கருதியே சிவன்வேம்புச் சமூலங் கொண்டு
கோணுதே நிழலுலர்த்திப் பலந்தான் பத்துக்
குறிப்பான சங்கம்வேர் பலந்தான் ரெண்டு
தோணுதே வெள்ளைச்சா ரணையின் வேரும்
தூதுவிளை மிளகரணை அமுக்கி ரும்வேர்
கோணுதே வகைவகைக்குப் பலந்தான் ரெண்டு
கொடிவேலி நொச்சிகருஞ் சூரி வேம்பே. 105

வேம்போடு திரிகடுகு திரிப லாதி
வெப்பாலை கார்போகி கரிய சீரகஞ்
சோம்பான கடல்நுரையும் வசம்பிந் துப்பு
சொற்பெரிய கருங்காலிப் பட்டை யோடு
கோம்பான மூலமொடு பறங்கிப் பட்டை
கோப்பிரண்டை கருவாளைகை சிறுபிரப்பன் கிழங்கு
சோம்பாதே வகைக்கிரண்டு பலந்தான் சொன்னேம்
சொற்பெரிய சிவனுர்தம் வேம்பு கேளே. 106

கேளுநீ யிவையெல்லா மொன்ருய்ச் சேர்த்துக்
கெடியாக நிழலுலர்த்திச் சூரணமே செய்து
தோளான் சூரணத்தைச் சட்டியிலே யிட்டுத்
திருகுகள்ளிச் சாற்ருேடு வெள்ளாட்டு நீரும்
வேளான பேய்க்குமட்டிச் சாற்றி ஞேடு
விதமான தேசிச்சார் வகைவ கைக்குக்
கோளாக வகைவகைக்கு ஒருபடிதான் வாரு
குமுறவே விரவிநன்ருய் மூடிப் போடே. 107

மூடியே நாள்மூன்று புதைத்து வைத்து
முசியாமல் ரவிமுகத்தி லுலர்த்தி நன்ருய்
நாடியே சட்டிதனி லிட்டு மூடு
நாளொன்றுக் கந்திசந்தி வெருகடிதூ ளப்பா
மூடியே தூளதனை யெடுத்துக் கொண்டு
முன்சொன்ன சிவன்வேம்புத் தயிலந் தன்னில்
பாடியே காசெடைதா னிருவேளை கொள்ளு
பதினெட்டுச் சூலைகுட்டங் குறைநோய் போமே. 108

குறைநோயா மட்டகுன்மங் கிரந்தியரை யாப்புக்
குன்ருத வெடிசூலை சிரங்குசொறி கரப்பான்
கறையான வாய்வோடு நிதம்பச் சூலை
கைமுடக்குங் கால்முடக்குஞ் சூலைக் கட்டு
சுரையான தாமரை கலினுக் கண்ணீர்
குட்டந்தொடை வாளைவிப் புருதிகண்ட மாலை
பறையாத லிங்கப்புத் தியோனிப் புத்து
படுவாளை ஆருப்புண் கன்னப் புத்தே. 109

புத்தான சிலந்திவரை ரெத்த வாளை
புரையான குளிவாளை யரையாப்புப் புண்கள்
எத்தான வண்டுகடி பொடையன் பூரான்
எலிகடியாம் பலபலவாஞ் சில்விடமுந் தாளா
மத்தான கன்ஞேசி கன்னப் புத்து
நாவரணை பல்குத்துப் பல்லரணை யோடு
மெத்திரமாம் வாய்வென்ற திருபத் தாறு
மேகவகை ரெண்டுபத்தும் விழலாய்ப் போமே. 110

போமென்ற திவ்வகையாம் நோய்களெல்லாம்
பொடியாக மகாசித்தி யாகும் பாரு
வேமென்ற உலகத்தோர் பிழைக்க வென்று
வெளியாகச் சூத்திரத்தை விரைந்து சொன்னேன்

காமென்ற வயித்தியரே சாஸ்திரத்தைப் பார்த்துக்
கைமுறையுஞ் செய்முறையுங் கருத்தாய்ப் பாரு
நாமென்ற ஆணவத்தால் நூல்கொ டாதே
நான்திரவா னென்றுதிடம் பேசி டாதே
காமமே கதியென்று வீழ்ந்தி டாதே
காலமெண் ணி மேலறிந்து நிலையில் பத்தே. 111

## கிராணிக்கு வச்சிர கபாடம்

பத்தான ஆறுவகைக் கிரா ணி தீரப்
பாடுகிறேன் வச்சிராதி கபாடங் கேளு
முத்தான சாதிக்காய் பத்திரி கிராம்பு
முனையான திரிகடுகு திரிப லாதி
கொத்தான மாதளையோ டதிமதுரங் கோட்டம்
குரோசானி வால்மிளகு அத்தித்திப் பிலியும்
வித்தான நாகப்பூ விடைய மாஞ்சில்
விதமான ஓமமிரு சீரகமு மல்லி
கத்தான தாளிசையு முத்தக் காசு
கன்னயில வங்கமொடு காட்டாத்திப் பூவே, 112

பூவான கசகசாவுங் கற்கடக சிங்கி
புடமேழுந் தீர்ந்தசடை வன்னி கற்பம்
வேவான பெருமரத்தின் பட்டை யோடு
விளாவோடு கூவிளத்தின் பழத்தி னோடு
பாவான அவினியொடு புரளிவிரைத் தோடும்
பரிவான மான்கொட்டைப் பருப்புவகை வகைக்குச்
சேவான திவையெல்லாம் கால்பலமே சொன்னோம்
சேரவகை யெல்லாமோர் கல்வத்தி லிட்டு
நேவான ஆலரசு நாவ லத்தி
நீர்ப்பூலா வேருதியம் பட்டை யாமே. 113

பட்டையா மாவரைவேர் வெடத்தோர் நெல்லி
பாங்கான யிலந்தைவேர் பத்துங் கேளும்
சட்டமுடன் வகைக்குரெண்டு பலந்தான் சொன்னோம்
தானிடித் தெட்டொன்றாய்க் கியாழம் செய்து
இட்டமாய் முன்சொன்ன சரக்கை யெல்லாம்
இளவறுப்பாய் வறுத்துமுன் கியாழத் திட்டு
முட்டியே பெருங்காய மோர்கழஞ்சி எடைதான்
மூதண்டக் கல்வத்தி லாட்டி டாயே. 114

ஆட்டியே யின்னமொரு சூட்சங் கேளு
அப்பனே நாவலிலைத் தொன்னை தைத்து
நாட்டியே யரைத்தமருந் ததனுள் ளாக்கி
நலமான சட்டியொன்று காய வைத்துத்
தோட்டியே காய்கின்ற சட்டிக் குள்ளே
தொன்னையுடன் மருந்ததனை நடுவே வைத்துமூடி
மாட்டியே புரட்டிநன்றாய் வேக வைத்து
மறுபடியு மெடுத்துவைத்துக் கல்வத் தாட்டே. 115

கல்வத்தி லிட்டுமுன்னே கஷாயத் தாட்டிக்
கலக்கவே யாட்டிமுன் தொன்னைக் குள்ளே
கல்வத்தில் முன்போலே மருந்தை யிட்டுக்
காய்கின்ற சட்டிக்குள் வைத்து மூடி
நல்வத்தில் முன்போலே வேக வைத்து
நலமாக வெடுத்ததனைக் கல்வத் திட்டு
இல்வத்தி லிப்படியே யரைத்த ரைத்து
யேழுதரம் பாவனையாய்ச் செய்தி டாயே. 116

செய்துமே சுண்டைக்காய்ப் பிரமா ணந்தான்
திரட்டியே குளிகைதனை நிழலு லர்த்திப்
பைதுமே யனுபான மறிந்து கொண்டால்
பறக்குமே யாறுவகைக் கிராணி யெங்கே
பொய்துமே பொன்னாங் காணிச் சாறு
பூக்கின்ற ஆவரையின் பட்டைச் சாறும்
எய்துமே கோவையின் கிழங்குச் சாறு
மேதியுடன் தயிர்மோர் தேனு மாமே. 117

தேனாகும் பச்சரிசிக் கழுநீ ராகும்
செப்பியதோ ரிவ்வகையா மனுபா னத்தில்
ஆனதோர் கிராணிவகை யின மறிந்து
அந்தந்தக் கிராணிக்கு அனுபானங் கண்டு
கோனென்ற வொவ்வொரு வுண்டை போடு
கைபிடித்தாற் போலவே கிராணி யாறுந்
தேனென்ற வயிறுளைச்சல் சீயும் ரெத்தம்
தேங்கியதோ ரபானத்தில் கடுப்பும் போமே. 118

போமென்ற கிராணிக்கு வச்சிரமாங் குளிகை
புகட்டினே னின்னமொரு லேகியத்தைக் கேளு
ஆமென்ற சாதிக்காய் பத்திரி கிராம்பு
ஆனைத்திப் பிலியோம மதிவிடையங் கோட்டம்

வாமென்ற கசகசா விருசீர கங்கள்
வால்மிளகு தாளியுங் குரோசானி யோமம்
வோமென்ற திரிகடுகு திரிப லாதி
மதுரமொடு வெந்தயமு மல்லி சிங்கி
தாமென்ற வங்கமுட னவினி கஞ்சா
சடாமாஞ்சி யகிலோடு காட்டாத்திப் பூவே. 119

பூவான தாமரையின் கிழங்கி னேடு
புகழான விழலரிசி நீர்முள்ளி வித்து
தேவான கார்போகி முத்தக் காசு
தென்ஊனமரத் தின்பாஊ மாதஊயின் வித்து
காவான பூலான்வேர்த் தோலி னேடு
கருவேலா வித்தினெடு பெருமரத்தின் வேரும்
பூவான காட்டுநல் கருஊ வேரும்
புளியவிரைத் தோலுமாம் பருப்போ டொக்கப்
பாவகத்தால் வகைவகைக்கு ரெண்டுபலம் போடு
பக்குவமாய் நிழலுலர்த்திச் சூரணமே செய்யே. 120

செய்துமே யின்னமொரு செய்தி கேளு
தீர்க்கமா யாலரசு நாவ லத்தி
அய்துமே முள்ளிலவு உதியம் பட்டை
அப்பனே முடக்கற்ருன் வேர்ப்பூ லாவும்
எய்துமே யிவைசமனு யிடித்து நன்ரு
யெட்டொன்ருய்க் கியாழத்தை யிறுத்துக் கொள்ளு
அய்துமே யாவின்பால் படிதான் ரெண்டு
அதில்போடு பஊவெல்லம் பலந்தான் பத்தே. 121

பத்தான பாலோடு கியாழம் ரெண்டும்
பக்குவமா யடுப்பேத்திப் பாகு சேரில்
வத்தான சூரணத்தைக் கொட்டிக் கிண்டி
ஆவின்நெய் படியொன்று அதிலே வாரு
முத்தவே கிண்டியே மெழுகுபதம் பாரு
முதிரவே யிறக்கிவைத்துத் தேஊ வாரு
பத்தாக வத்துமே கிண்டும் போது
பக்குவமாய்க் கெந்திசெந் தூரம் போடே. 122

போடவே லோகசெந் தூரம் போடு
புகழாக வகைவகைக்கு ஒருபலமே போடு
ஆடவே லேகியந்தா னிப்படியே யப்பா
அன்பாக நாளொன்றுக் கந்தி சந்தி

வாடவே வேண்டாங்காண் மண்டலமே கொள்ளு
மகத்தான கிராணிவகை ஆறுங் கேளு
சாடிவரும் சூசிகா கிராணிசலக் கிராணி
சந்தான கிராணியொடு மூல வாய்வே. 123

மூலவாய் வென்றதொரு கிராணி யோடு
முனையான சீக்கிராணி ரத்தக் கிராணி
ஆலமாம் பாண்டுவகைக் கிராணி யெல்லா
மசங்காத கிராணிகுன்மம் பித்த வாய்வு
சாலமாம் வாதபித்தத் தெடுத்து வந்த
சண்டாள மேகசயக் கிராணி தீருஞ்
சீலமாம் வயிற்றுரெத்தக் கடுப்பி ரைச்சல்
சீவிழுத லுள்மூலம் பிறமூலக் கடுப்புக்
காலனு மற்றுமுள்ள கிராணிவகைக் கெல்லாங்
கைகண்ட கபாடலே கியமாம் பாரே. 124

## சயக்காசத்துக்கு தூதுகண்டன் கிருதம்

பாரப்பா சயகாச மெல்லாந் தீரப்
பாடுகிறேன் தூதுகண்டண் கிருதந் தன்னை
நேரப்பா தூதுவளைச் சமூலங் கொண்டு
நிழலதனி லேயுலர்த்தித் தான்பலந்தா னுலு
சேரப்பா வழுதலையுங் கண்டங் காரி
சிறியகாஞ் சொறியோடு ஆடா தோடை
ஊரப்பா வகைவகைக்குப் பலந்தா னென்று
உலர்த்தித்தூள் முன்மருந்தோ டொக்கச் சேரே. 125

சேர்த்துமே திரிகடுகு திரிப லாதி
சிற்றரத்தை பேரரத்தை சிங்கி கோட்டம்
காத்துமே சீரகம் கொத்த மல்லி
கசகசா சாதிக்காய் கிராம்பு பத்திரி
சேர்த்துநீ கூகைநீ ரக்கிர காரஞ்
செண்பகப்பூ வசம்புமிரு சீரகமு மதுரம்
கோத்துமே நெல்பொரியும் பருத்தி வித்துங்
கொடியதொரு நெருஞ்சிவித்து விழாவொ டென்னே.

விழாவோடு நிலப்பனைவேர் முக்கா வேளை
மேலான அசுவகெந்தி வேருங் கூட்டித்
திளாவான சிறுதேக்குச் செவ்வியமு மாஞ்சி
திரமான தாளிசையுங் காட்டுமிள கோமம்

அளவான மூலமொடு தேவ தாரம்
அகிலொடுசன் னலவங்கப் பட்டை யேலம்
விளாவான மூக்கிரட்டை கீழ்க்காய் நெல்லி
மேனிகரி சாலேபேரா முட்டி யீந்தே. 127

ஈந்தோடு கருங்காலி யிதழி கொன்றை
யிருவேலி தேள்கொடுக்கி யிசுணஞ் சங்கு
ஈந்தோடு பொடுதலையுந் துளசி வேரும்
மிக்கச்சார் வெப்பாலை வேலிப்ப ருத்தி
ஈந்தோடு சூரிவேர் மணத்தக் காளி
யிவையெல்லாம் வகைவகைக்கு யொருபலமே போடு
ஈந்தான மூலியெல்லாம் நிழலு லர்த்திப்
யினிதான சரக்குவகை யிளவறுப்பாய்ச் செய்து
சீந்தாதே யிவையெல்லாம் வச்சிரகா யஞ்செய்து
திரமாக முன்சூரணத்தோ டொக்கச் சேரே. 128

சேர்த்துமே யின்னமொரு செய்தி கேளு
செப்பரிய ஆவின்பால் வெள்ளாட் டின்பாலுஞ்
சேர்த்துமே குமட்டிமா தளையின் சாறும்
தேசியென்ற பழச்சாறு நெல்லிக்காய்ச் சாறுஞ்
சேர்த்துமே கூழ்ப்பாண்டங் குமரிச் சாறுஞ்
செப்பரிய அசனச்சா றீருள் ளிச்சார்
பார்த்துமே வகைவகைக்குப் படியரைதான் சொன்னேம்
பாலான வகைவகைக்குப் படிதான் ரெண்டே. 129

இரண்டோ டிவையெல்லாம் தாளி சேர்த்து
இதமாகப் பனைவெல்லம் பலந்தான் பத்து
முண்டாதே வங்காளச் சீனிபலம் பத்து
மூன்றான பனைவெல்லம் பலந்தான் பத்து
அண்டாதே கரைத்தொன்றாய்த் தாளி சேர்த்து
அடுப்பேற்றி யொருவிறகா லெரியை மூட்டிக்
குண்டாதே சாறெல்லாம் வற்றக் காய்ச்சிக்
குழம்பாகும் பக்குவத்தில் சூரணத்தைக் கொட்டே.

கொட்டியே யடுப்பேத்திக் கிண்டி வாங்கு
குறுகியே யிறுகாமல் மெழுகுபதம் பாரு
அட்டியே பதமானல் சொல்லக் கேளு
ஆவின்நெய் படியொன்று வார்த்துக் கிண்டி

திட்டமாய் மெழுகுபதம் வருதல் கண்டு
தீயெரித்து அடுப்பைவிட் டிப்பால் வாங்கி
நிட்டமாய் வேடுகட்டி வடித்துக் கொண்டு
நீதியாய் நோய்கட்கு வார்த்துக் கொள்ளே. 131

வார்த்துமே யின்னமொரு வரிசை கேளு
வயித்தியரே யிம்முறைதா னறிய மாட்டீர்
ஆர்த்துமே நாகபற்பம் வங்க பற்பம்
அரிதார பற்பமொடு பவழ பற்பம்
வார்த்துமே வகைவகைக்குக் கால்பலமே போடு
வழலையென்ற குருவிலொரு காசு போடு
ஆர்த்துமே யப்பிரகச் செந்தூரங் கேளு
அட்டியே யொருபலந்தான் கூடப் போடே. 132

கூடவே போட்டுநீ கணேசன் முன்னே
குணமான [1]வடுகனையும் பூசை பண்ணி
வாடவே வேண்டாங்காண் தேவி பூசை
வகையாகச் சொல்லிநீ சாபந் தீர்த்துக்
கூடவே சட்டியிலே பதனம் பண்ணு
குறிப்பாக நெற்புடத்தி லிட்டு வாங்கு
பாடினேன் நேரமொரு கொட்டைப்பாக் களவு
பத்தியமாய் மண்டலந்தா னுண்டு தேறே. 133

உண்டிடவே வியாதிமா ரணத்தை யோது
உத்தமனே நோயாளி கர்மந் தீரும்
குன்றிடவே சயகாசந் தொண்ணூற் றுறுங்
குற்றிருமல் குறுகுறுப்பு மற்றை நோய்கள்
சண்டியா மிளைப்பீளை காச நோய்கள்
சயகாச முள்மாந்தை ரெத்த காசம்
தொண்டையிலே கோழைகட்டுச் சேட்ப காசந்
தொலையாத யிருமலொடு பித்த காசம்
மிண்டிவரு வாதசய மேக காசம்
[2]விருதான ரோகமெல்லாம் [3]விழலாய்ப் போமே. 134

## பாண்டுகாமாலைக்குக் கரிசாலை லேகியம்

போமென்ற பாண்டுவகை காமாலை சோகை
போகவே கரிசாலை லேகியத்தைக் கேளு
போமென்றே கரிசாலைச் சமூலங் கொண்டு
புகழாக நிழலுலர்த்திச் சூரணமே செய்து

1. வடுகன்—வயிரவன்; 2. விருது—வெற்றி; 3. விழல்—வீண்.

போமென்ற பலம்பத்து நிறுத்துக் கொண்டு
    புகழான கடுக்காயும் நெல்லி [1]தாணி
வேமென்ற திரிகடுகு மிருசீ ரகமும்
    விதமான தாளிசையு மோம மாமே. 135

ஓமமொடு அதிமதுரங் கொத்த மல்லி
    உற்றதொரு யேலமொடு லவங்கப் பட்டை
ஓமமொடு சடாமாஞ்சி [2]சிங்கி கோட்டம்
    உத்தமனே நாகப்பூ சந்தனமுங் கூட
ஓமமொடு மரமஞ்சள் முக்கா வேளை
    உத்ததொரு சாதிக்காய் பத்திரி கிராம்பு
ஓமவாய் விளங்கமொடு தகர மிந்து
    உற்றதொரு வெட்பாலை சிறுவிளா வேரே. 136

வேரான வெட்டியிலா மிச்சை முன்னை
    வில்லைவேர் விளாம்பழத்தி னோடுங் கூடப்
பேரான தழுதாழை பொன்னுங் காணி
    புகழ்பெரிய நாயுருவி கீழ்க்காய் நெல்லி
வீறான சிற்றாமுட்டி பேரா முட்டி
    வீழிசங்கு முசுமுசுக்கை யமுக்குரா நொச்சி
வேறான செருப்படியும் நெருஞ்சி வேரும்
    விதமான காட்டுக்கல் குறிஞ்சா வாமே. 137

வாமென்ற நிலவாகை விட்ணு கிராந்தி
    வனமுருங்கை [3]பெருமருந்து [4]காட்டு மல்லி
வேமென்ற சிறியவா லுழுவை யோடும்
    வெப்பாலை யரிசி முத்தம் பேரீச்சம் பழமாம்
வாமென்ற [5]முந்திரிவேர் சித்திர மூலம்
    வாகான [6]சிறுதேக்கு ஆவரைமொட் டரும்பு
தேமென்ற ஆல்விழுது தென்னம் பாளை
    செங்கழுநீர் மூலமொடு நெய்தற்கி ழங்கு
தோமென்ற வெட்டிவேர் தாமரையின் வளையந்
    [7]தும்பிமா தளைத்தோடு நீர்மிட்டான் கிழங்கே. 138

1. தாணி=தான்றிக்காய்; 2. சிங்கி=கற்கடக சிங்கி; 3. பெருமருந்து=ஈச்சுர மூலி; 4. காட்டுமல்லி=சிற்றாமல்லி, பேராமல்லி (வேர்கள்); 5. முந்திரிவேர்=முந்திரிகை வேர் (திராட்சைக்கொடியின்வேர்); 6. சிறுதேக்கு=கண்டுபாரங்கி; 7. தும்பி=கரும்புவேர்.

கிழங்குடனே பேய்ப்புடலும் பூமிசர்க் கரையும்
கெடியான வெள்ளறுகு காட்டரளிக் கிழங்கு
வழங்கியதோர முர்தவகைப் பூமாதளையின் பழமும்
வாகான சிறுபச்சைப் பயறு மாகும்
அழங்கியதோ ரிலுப்பைப்பூ தாமரையின் கிழங்கு
மசையாத வகைவகைக்குப் பலமா மென்னே. 139

என்னவே யிவையெல்லா மிளவறுப்பாய்ச் செய்தே
இனிதான மற்றெல்லா முலர்த்திப் பொடித்துப்
பன்னவே நீர்முள்ளி கரிய சாலை
பருவேப்பம் பட்டையொடு நெல்லிப் பட்டை
வன்னமுள்ள நாவலத்தி யுதியம் பட்டை
வாகான ஆல்விழுது கிளியூறல் பட்டை
நின்னயமாய்த் துளசியொடு கீழ்க்காய் நெல்லி
[1]நீலந்தான் நன்ஞரி [2]தோடை யாமே. 140

தோடையாம் சீந்திபேய்ப் பீர்க்கி னேடு
துரிசான கூழ்ப்பாண்டம் வெள்ளரியின் பழமும்
தோடையொடு சிறுகீரை யரசு நாவல்
துகையான கரும்புவேர் மூங்கில் புல்லு
தோடையொடு குமரிவேர் நெல்லி வேரும்
துய்யதொரு காக்கைவேர் முடக்கொத் தானும்
போடவே உழலாத்தி கோவைத் தண்டு
பிரமியொடு தழுதாழை வெள்ளிண்டு மாமே, 141

இண்டமொடு பேய்க்குமட்டி [3]வீழிதிரி கெந்தம்
இவையெல்லாம் வகைவகைக்குப் பலந்தா னந்து
இண்டோ டெடுத்துமே பாண்டத் திட்டே
இருதூணி நீர்விட்டே யெட்டொன் ருக்கிக்
குன்ருதே கியாழத்தை வடித்து வாங்கிக்
குமட்டிமா தளையின்பழச் சாறு நாழி
நன்ருன [4]நிம்பழச்சார் சிறுகீ ரைச்சார்
நாரத்தம் பழச்சாறு நாழி யொன்று
வண்டான ஆவின்பால் வெள்ளாட்டின் பாலும்
வல்லாரை புளியாரைச் சாறுவகை கேளே, 142

1. நீலம்=அவுரிவேர் ; 2. தோடை=ஆடாதோடை ; 3. திரி கெந்தகம்=சாதிக்காய், சாதிபத்திரி, ஏலம் ; 4. நிம்பழச்சாறு=எலுமிச்சைப் பழச்சாறு.

கேளேநீ வகையொன்று படிதா னென்று
    கெடியாக அளந்துமுன் கியாழத் தூட்டிப்
பாளேநீ வாராம லடுப்பி லேத்திப்
    பாவான சர்க்கரையே பலமிருபத் தஞ்சு
தாளேநீ போட்டதிலே யிஞ்சிச் சாறும்
    நாழிவிட்டு அகப்பையினுல் கிண்டிக் காய்ச்சு
கோளேநீ வாராம லெல்லாம் வத்திக்
    குழம்புபோல் வருதல்கண்டு சூரணத்தைக் கொட்டி
ஆளேநீ யடுப்பேத்திக் கிண்டிக் கிண்டி
    ஆவின்நெய் ஒருபடிதான் அளந்து வாரே. 143

வாரேநீ மைபோலே கூட வாங்கு
    வாகாக மெழுகுபதம் வருதல் கண்டு
காரேநீ கருகாமல் இறக்கி வைத்துக்
    கலங்காதே கொம்புத்தேன் ஒருபடிதான் விட்டுப்
பாரேநீ நெய்யதுதான் [1]பத்தா விட்டால்
    பக்குவமா யாவின்நெய் பின்னும் வாரு
சேரேநீ வார்த்துமே கிண்டும் போது
    திரிலோக செந்தூரம் பலந்தான் ரெண்டே. 144

ரெண்டோடு காந்தச்செந் தூரம் போடு
    நிலையான கற்பூர சலாசித்து பற்பம்
முண்டாதே யொருபலந்தான் போடு சொன்னேம்
    முப்பூவி லொருகழஞ்சு கூடப் போடு
தண்டாதே யிவையெல்லாம் போட்டுக் கிண்டி
    சட்டிதனி விட்டுநெற் புடந்தான் வைத்துக்
கொண்டிடவே நாளொன்றுக் கந்தி சந்தி
    கொட்டைப்பாக் களவருந்த இச்சா பத்தியம்
பண்டான புளிபுகையு மொன்று மாகா
    பச்சைமாங் கிசங்களொன்று மாகா தென்னே. 145

ஆகாத நோயறிந்து பத்தியத்தைச் சொல்லு
    அவிழ்தந்தான் மண்டலமே கொண்டு தேறு
போகாத காமாலை பாண்டு சோகை
    பொல்லாத சயரோக மெல்லா மெங்கே
வேகாத வெண்பாண்டஞ் சிங்கா லாச்சு
    வீறுன காசமுள மாந்தை போச்சு
வாகான பீலிபெரு வயிறு சோகை
    மகோதரமும் நீராம்பல் கவுசை போமே. 146

---

1. பத்தாவிட்டால்=பற்ருவிட்டால்=போதாதாகில்.

கவுசைபோம் பாண்டுவகை கிராணி சோகை
காமாலை பித்தவெட்டை கைகா லோச்சல்
கவுசைபோ [1]மத்திசுரம் அத்தி வெட்டை
கதிகெடுத்த குன்மமொடு சயரோ கம்போம்
கவுசைபோ மரோகியங் களன்ன தோடம்
கனமான உப்பிசங்க ளக்கினி மந்தம்
கவுசைபோம் பித்தத்தால் வந்த ரோகம்
காணுத வாதமெல்லா மெங்கே போச்சே. 147

போச்சென்ற மெய்யினைப்பு வாய்நீ ரூறல்
போகவே யின்னமொரு வகையைக் கேளு
காச்சென்ற வல்லாரை ஒருத்தலைவெள் ளுள்ளி
கசக்கியே வாயிலிட்டு மெள்ளத் தீரு
வேச்சென்ற யிம்முறைதா னுருஞ் சொல்லார்
வெகுசுறுக்கு வெகுசுறுக்கு மெய்யாம் பாரு
காச்சென்ற மகோதரமு நீர்க்கோவை போகக்
காட்டுகிறேன் இன்னமொரு சூட்சங் கேளே. 148

காணவே பேய்க்குமட்டிக் காயை வாங்கிக்
கத்திகொண்டு பதினறு கீற்றுய்க் கீறிக்
காணவே யஞ்சுவகை லவண மூட்டிக்
கலசத்தில் விட்டடைத்து [2]ஆவின் கோட்டம்
தோணவே புதைத்தாவின் நீரதிலே தாக்கு
துரியவே [3]பச்சமது சென்று வாங்கு
ஆணவே நாளொன்று கீற்றில் பாதி
யருந்திவெந் நீர்கொண் டிருந்தி டாயே. 149

இருந்திடவே மகோதரமும் விடநீர்க் கோவை
யினிதான சலக்கோவை நீராம்பல் கவுசி
அருந்திடவே யிவையெல்லாந் தீருஞ் சொன்னேன்
அப்பனே யின்னமொன்று அதீதம் சொல்வேன்
பொருந்திடவே யெள்ளுப்புண் ணுக்கி னேடு
புகழ்கச்சைக் கருவாடு மாதனை யிலையும்
அருந்தவே யிடித்ததனை உப்பில் லாமல்
அவித்துநா ளுண்ண [4]சலக் கோவை போமே. 150

1. அத்தி=என்பு; 2. ஆவின்கோட்டம்=மாட்டுத் தொழுவம்; 3. பச்சம்=பதினைந்து நாள்; 4. சலக்கோவை=நீர்க்கோவை.

போமென்ற காச்சலொடு தொண்டை கட்டுப்
　　பொருமலொடு உப்பிசங்கள் போகச் சொல்வேன்
தேமென்ற சாதிக்காய் கிராம்பே யேலம்
　　திரிகடுகு பெருங்காயம் வெள்ளை யுள்ளி
வேமென்ற கார்போகி கரியசீ ரகமும்
　　விருதான [1]தேசாவரம் கல்லுப் போடு
வாமென்ற யிந்துப்பு சவுட்டுப் போடு
　　வகையெல்லாஞ் சமன்கொண்டு நாய்வேளைச் சாறே.

நாய்வேளைச் சாற்றினு லரைத்து நன்ருய்
　　நாள்மூன்று நிழலுலர்த்திப் பின்னுங் கேளு
நீவேளைச் சாற்றினுல் முன்போ லாட்டி
　　நிழல்தனிலே உலர்த்திநாள் மூன்று சென்று
ஆயவே முன்போலே கலத்தி லிட்டு
　　அச்சாற்றி லாட்டிமுன்போல் நிழலு லர்த்தித்
தோயவே சூரணமாய்ப் பண்ணிக் கொண்டு
　　சொல்லுகிறேன் அனுபான வகையைக் கேளே. 152

வகைகேளு வாதமாஞ் சரீர மானுல்
　　மாட்டடா தேனில்வெரு கடிதா னப்பா
வகைகேளு சூடான சரீர மானுல்
　　மாசற்ற ஆவிநெய் சீரகக்கி யாழத் தூட்டு
வகைகேளு காச்சலொடு தொண்டைக் கட்டு
　　வாகாக வாய்வுதா னெல்லாம் போகும்
வகைகேளு அத்திவெட்டை சுரங்கள்பல நோயு
　　மாறுமே கைகண்ட வித்தை தானே. 153

தானென்ற வெள்ளைக்காக் கணத்தின் வேரைத்
　　[2]தானருக்க ளுளதிலே பிடிங்கி வந்து
வேனென்ற வெள்ளாட்டுப் பாலி லேதான்
　　வேர்த்தொலியைக் [3]கருநாவியதைத் தான ரைத்துக்
கோனென்ற கொட்டைப்பாக் களவு வீதம்
　　குழைத்துவொரு சிறங்கைப்பால் தன்னில் கொள்ள
ஊனென்ற வயிற்றுவலி சூதகமாம் வாயு
　　உதிரத்தின் திரட்சியது வாய்வுக் கட்டி
[4]பானுகண்ட பனியது போலே யோடும்
　　பத்தியமாய் மூன்றுநாள் கொடுத்துப் பாரே. 154

---

1. தேசாவரம்=கண்டந்திப்பிலி; 2. அருக்களுளதிலே=ஞாயிற்றுக்கிழமையிலே; 3. கருநாவி=கருநாபிக்கிழங்கு; 4. பானுகண்ட=சூரியனைக்கண்ட.

## குமட்டியெண்ணெய்

பாரப்பா சருவநோ யெல்லாந் தீரப்
பாடுகிறேன் குமட்டியெண் ணெய்தா னப்பா
சேரப்பா குமட்டிக்காய்ச் சாறுபடி ரெண்டு
[1]சித்தேரண் டத்தெண்ணெய் படிரெண்டு வாரு
ஆரப்பா ஆடுதொடா மூலிச் சாறு
அவுரியொடு திருகுகள்ளி வீழிகரி சாலை
வேரப்பா கழற்சிமுடக் கொத்தா னுக்க
வேம்பின்பட் டைச்சாறு வகைதான் கேளே. 155

வகைக்குவகை படியொன்று அளந்தே வாரு
வாகான வெள்ளாட்டு நீர்படி யரைதான்
தகையான யெருக்கினுட பழுப்புச் சாறு
சதிரான கள்ளிப்பால் [2]லவண]மாகும்
அகமாக யிவையெல்லாம் பாண்டத் திட்டு
அடுப்பேற்றிக் குறுக்கிவரும் பதத்தி லேதான்
மிகவான திரிகடுகு திரிப லாதி
வெங்கார மிந்துப்பு [3]விளங்க மாமே. 156

விளங்கமாம் வெண்கடுகு கடுகு ரோகணி
விருதான கரியசீ ரகமுங் கூட
வளங்கவே நவச்சாரம் சத்திச் சாரம்
வாகான யவச்சாரம் வளைய லுப்பு
களங்கமாம் அத்தித்திப் பிலிதிப்பி லிமூலம்
கல்லுப்பு மரமஞ்சள் வெடியுப் போடு
அளங்கமாம் [4]கார்கோலம் வகைவ கைக்கு
அப்பனே பலமொன்று அரைத்துப் போடே. 157

அரைத்துமே கரைத்தந்த கியாழ வர்க்கம்
அப்பனே அடுப்பேற்றி யெரித்துக் காய்ச்சி
வரைத்துமே மெழுகுபதந் தன்னைக் கண்டு
வடித்துநீ வாங்கியே பதமாய்ப் பாரு
மரைத்துமே தானியபுடம் வைத்து மூடு
மண்டலந்தான் சென்றுபின்பு சொல்லக் கேளு
உரைத்துமே நாள்மூன்றுக் கோர்கரண்டி வீதம்
உத்தமனே யுண்டுவர வுறுதி கேளே. 158

---

1. சித்தேரண்டம்=சிற்றுமணக்கு ; 2. லவணம்=சோற்றுப்பு ;
3. விளங்கம்=வாய்விளங்கம் ; 4. கார்கோலம்=கார்போகரிசி .

உறுதியாய் மூன்றுநாள் கொள்ளு நீயும்
உண்மையா யாறுநாள் பத்தியமே காரு
இறுதியே யேழாநாள் தலைக்கு வார்த்தே
யெட்டாநாள் மற்றதெல்லாங் கூட்டு கூட்டு
இறுதியாய்த் தீருகிற வியாதி கேளு
பிதற்ருதே வாயுவென்ற திருபத் தாறும்
பொறுதியாம் நீராமை கவுசி கெண்டை
பொருமல்மகோ தரமும்நீர்க் கோவைக் கட்டும்
உறுதியா மட்டகுன்ம பொரும லேங்கல்
உப்பிசமுந் தீருமென் றுரைத்த வாறே. 159

வாருன பெண்களுக்குக் கெர்ப்பநோ யேழும்
வரிசையாய்த் தீருமவள் குளித்தநாள் மூன்று
கூருன நாளொன்றுக் கோர்கரண்டி வீதம்
கொண்டுமே நாலாநா ளாறப் போட்டுத்
தாருன அஞ்சாநாள் தலைக்குநீர் வார்த்துச்
சாந்தியொடு ஓமங்கள் கிரக சாபம்
ஏருகு மிவையெல்லாந் தீர்க்கச் செய்து
யேழாநாள் நாயகனே டிணங்கச் சொல்லே. 160

இணங்கவே கர்ப்பநோ யேழு மெங்கே
பென்மகனே பெண்மலடு உண்டோ சொல்லு
வணங்கியே யிம்முறைதா னறியா மாண்பர்
மலடென்றும் பிள்ளையில்லை யென்று மாய்வார்
குணங்கத்தான் சொல்லிவிட்டேன் வயித்தியரே கேளீர்
[1]கூறுகெட்டு அலையாதே குறியாய்ப் பாரு
குணங்காய மேகவகை யெல்லாந் தீரக்
கூறுகிறே னின்னமொரு எண்ணெய் கேளே. 161

எண்ணெய்மிள கரணைவெள்ளைச் சாரணையின் வேரு
இதமான முந்திரிவேர் முருங்கை வேம்பு
தென்னைவேர் குமரிமர வள்ளி சீந்தில்
செலந்திரட்டி கரிசாலை பொன்னுங் காணி
விண்ணவே அமுக்குராயிசங்கு சங்கங் குப்பி
வெள்ளிண்டு நீர்ப்பூலா வீழி யோடு
திண்ணமாம் நிலப்பனைவேர் அத்திப் பட்டை
சிறுவிளா வெள்ளறுகு வல்லாரை யாமே. 162

1. கூறுகெட்டு=நல்லது தீயது என்ற பாகுபாடு செய்ய அறியாமல் கேடுற்று.

ஆரையடா முடக்கொத்தா னகத்தி யோடு
அப்பனே வகைக்கிரண்டு பலந்தான் போடு
ஆரையா மகத்தியொடு சமூலங் கொண்டு
அழகாக நிறுத்திடுவாய் பலந்தான் பத்து
சேரவே யொன்றாக விடித்து நன்றாய்ச்
சேரவொரு [1]தாழியிலே சலந்தான் கேளு
வேரையாஞ் சீரகமோ பலந்தா னெட்டு
வெந்தயமோ பலமெட்டு அதிலே போடே. 163

போட்டுமே பதினாறு படிசலந்தான் வாரு
போக்கோடே யடுப்பேற்றி யெட்டொன் றாக
ஆட்டுமே யடுப்புத்தீ யாறப் போடு
அழகான கியாழத்தை யிறுத்து வாங்கு
தீட்டியே கியாழந்தா னளவு கண்டு
சிற்றேரண் டத்தெண்ணெய் படிரெண்டு வாரு
காட்டியே யீருள்ளிச் சாறுபடி ரெண்டு
[2]காரானின் பால்ரெண்டு கல்நா ரெட்டே. 164

எட்டான கல்நாரு வத்திர காய
மிதமாகச் செய்ததிலே போடு போடு
மட்டான ராயப்பூர் சர்க்கரைதா னெட்டு
வாகாகப் போட்டதிலே கிண்டிக் காய்ச்சு
இட்டமாம் பாலோடு கியாழம் வத்தி
யெண்ணெய்தான் மெழுகுபத மாகக் கிண்டி
தட்டியே [3]கரகத்தோ டிறக்கி வாங்கிச்
சட்டியிட்டு மூடியே தாளிப்புடம் வையே. 165

வைத்துமே பட்சமொன்று கழித்து வாங்கி
மைந்தனே நாளொன்றுக் கொருகரண்டி வீதம்
உய்த்துமே தினந்தோறுங் கொண்டா யானால்
ஓடுகின்ற நோய்களை நீ யுற்றுக் கேளு
மெய்த்ததொரு மேகங்கள் ரெண்டு பத்து
மேலான கிரந்தியரை யாப்புக் குட்டம்
கைத்ததொரு மேகங்கள் அத்திசுரம் வெட்டை
கரப்பனொடு சொறிசிரங்கு மேகம் போமே. 166

---

1. தாழி=பானை; 2. காரானின்=காராம்பசுவின் (பசுக்களில் உயர்ந்த இனத்தைச் சேர்ந்தது); 3. கரகம்=எண்ணெய்காய்ச்சிய மட்பாண்டம்.

மேகமொடு நால்வகையாம் பிரமியங்க ளதுவும்
வெண்குட்டம் தாமரைகள் மேக வூறல்
மேகமாம் பித்தவாய் வுட்டின வாய்வு
மெய்யெரிவு கைகாலி லெரிவு காந்தல்
மேகமாம் வாய்வோடு அண்ட வாதம்
மெல்லியர்க்குக் கெர்ப்பநோ யேழுந் தீரும்
மேகமாம் மலடிகட்குப் பிள்ளை யுண்டாம்
விருதான வைத்தியரே விரைந்து பாரே. 167

பாரேநீ யெண்ணெய்க்குப் பத்தியமோ வில்லை
பரிவான சிறியவர்க்கும் பெரியோர்க்கு மாகும்
பாரேநீ யெண்ணெயிலே யின்னமொரு சூட்சம்
பாடுகிறேன் வயித்தியரே பண்பாய்க் கேளும்
சேரேநீ சருவநோ யெல்லாந் தீர
சேருரச கற்பூரம் வராகன் நாலு
சேரேநீ நண்டுச்சார் முசுமுசுக்கைச் சாறு
கருவாக இருசாமம் சுருக்குப் போடே. 168

சுருக்கிட்ட கற்பூரம் எண்ணெயிலே போட்டுச்
சுகமாகத் தானியபுடம் வைத்தெடுத்துத்
தருக்காதே சாபத்தை நிவர்த்தி செய்து
சண்முகற்குங் கணேசனுக்கும் பூசை பண்ணி
மருக்காத நவசித்தர் சாபந் தீர்த்து
மனங்குளிர வயித்தியர்க்கு வெகுமானஞ் செய்து
திருக்காவே யெண்ணெய்கொண்டு வந்தா யானல்
தீராத நோயேது செப்பக் கேளே. 169

## பஞ்சலவண பற்பம்

செப்புவேன் லவணவகைப் பற்பங் கேளு
சிறப்பான பஞ்சவகை லவண மொன்ருய்
மெய்ப்பாக வகைக்குவகை பலமொன் ருக
விருதான கல்வத்தி லிட்டு நீயுஞ்
செப்பாதே பிரண்டைச்சார் முருங்கைப் பட்டைசார்
திறமான மேனிச்சார் நொச்சிச் சாறும். 170

சாருன குமரிச்சார் வகைவ கைக்குச்
சாமமொன்று விட்டரைத்து வில்லை தட்டி
வீருக ரவியுலர்த்தி யோட்டி லிட்டு
மேலோடு மூடியே சீலை செய்து

கூருதே பத்தெருவில் புடத்தைப் போடு
கூறுகெட்டு அலையாதே லவண பற்பம்
வீருக எடுத்ததனைப் பீங்கானி லிட்டு
விருதான பெருங்காயம் நாலத் தொன்றே. 171

ஒன்ருகச் சேர்த்ததிலே தேனை வாரு
உறவுசெய்து மத்தித்து வைத்துக் கொண்டு
நன்ருக நாளொன்று கழஞ்சு வீதம்
நலமாக விருநேரம் கொள்ளு கொள்ளு
குன்ருதே வாதமெங்கே வாய்வ தெங்கே
குத்தலொடு குடைச்சல்வலி கடுப்பு சூலை
வன்ருன வாயுவதி திரட்சி சூலை
வகையான அண்டவாய் வசந்து போமே. 172

அரையாத வரையாப்பு கிரந்திசூலைக் கெல்லாம்
அறைகிறேன் மூலிகையா லப்பா கேளு
தசங்காதே சங்கங்குப்பி நுணு விலைச்சார்
தருவான கழற்சிச்சார் ஆவின் பாலு
மிசங்காதே நல்லெண்ணெய் சமனுய்க் கொண்டே
இயல்வாக மூன்றுநா ளாறு வேளை
கசங்காதே நேரமொரு படிகால் வீதம்
கண்டிப்பாய்க் கொண்டுநீ பத்தியத்தைக் கேளே. 173

கேளப்பா ஆவின்பால் வெள்ளாட்டின் பாலுங்
கெடியான வெந்நீரா மற்றென் ருகா
நாளப்பா வேழுநா ளுப்புவறுத் துண்டு
நலமர்கத் தலைமுழுகி மற்றதெல்லாங் கூட்டு
வேளப்பா அரையாப்புக் கள்ளிப்பூக் கிரந்தி
விதமான அரிகிரந்தி சொறிகி ரந்தி
காளப்பா புண்புரைகள் கைப்பிடிப்புச் சூலை
கால்பிடிப்பு ரோகமெல்லாந் தீர்ந்து போமே. 174

தீர்ந்துபோம் கற்பூரஞ் சேர்த்துக் கொள்ளத்
தீருமப்பா வாதமுதல் வாய்வு சூலை
தீர்ந்துபோம் பிரமேகம் வெள்ளை வீழ்தல்
தீராத ரணகிரந்தி பிளவைப் புற்று
தீர்ந்துபோ மேகத்தி லெடுத்த வூரல்
செப்பாதே பொருவருக்குஞ் செப்பொ ணுது
தீர்ந்துபோம் பித்தவகை அரையாப்புக் கெல்லாந்
தீரவே செப்புகிறேன் சூட்சங் கேளே. 175

## அரையாப்பு கிரந்தி கைகால் பிடிப்புக்கு மருந்து

சூட்சமாய் வல்லாரை கொண்டு வந்து
திறமாக மிளகுள்ளி யொக்கச் சேர்த்துச்
சூட்சமாய் மெண்ணிரக்க கால மேதான்
சுருக்கான வாய்க்கசப்பு வாய்நீ ரூறல்
சூட்சமமாம் மனேசியங்கள் என்ன தோடம்
துவர்ப்போடு வாயினிப்பு வாய்ப்பு ளிப்புஞ்
சூட்சமா யிவையெல்லாந் தீர்ந்து போகும்
சொன்னதொரு பச்சிலேதான் மெய்யாம் பாரே. 176

பாரப்பா வல்லாரைக் கிருதந் தன்னைப்
பாடுகிறேன் மேகவகை குட்டந் தீர
நேரப்பா சேங்கொட்டை ரசாயனமாம் நாமம்
நிகரில்லா நோய்களுக்குக் காலன் காலன்
தூரப்பா சேங்கொட்டை பலமிருபத் தொன்று
சுத்திசெய்து மூக்குவெட்டி வேறே வைத்து
ஆரப்பா பறங்கிப் பட்டை வெள்ளை
அப்பனே ஆவின்பால் சுத்தி பத்தே. 177

பத்தான நெல்லிமுள்ளி தானிக் காயும்
பரிவாக விதைபோக்கி வகைபலந்தான் பத்து
நத்தான சுக்கோடு சித்த ரத்தை
நலமான சடாமாஞ்சி சன்னயில வங்கம்
முத்தான வகைவகைக் கேழரையே பலந்தான்
முனையான கடுகுரோ கணிநிலப் பனைவெப் பாலை
பத்தான சிவன்வேம்பு பலம்ரெண் டுந்தான்
பாங்கான சாதிக்காய் கிராம்புபத் திரியே. 178

பத்திரியா மிளகேல மோமந் திப்பிலி
பரிவான செவ்வியமுந் திப்பிலி மூலம்
வத்தான கார்போகி கொத்த மல்லி
வாய்விளங்கங் கருஞ்சீரகம் சித்திர மூலம்
கொத்தாகுங் குங்குமப்பூ சிறியவா லுளுவை
கோரோசனையோடு அமுக்கு ராவேர்
நத்தான யிவையெல்லாஞ் சேர்த்து ஒன்றாய்
நலமான இளவறுப்பாய்ச் சூரணமே செய்யே. 179

## சேங்கொட்டை சுத்தி

செய்துமுன்னே சுத்திசெய்த சேங்கொட்டை தன்னைச்
சிறப்பாக வெடுத்துமொரு சுத்தி கேளு
செய்ததொரு புளியிலைச்சா றதிலவித் துலர்த்திச்
சிறப்பான குமரிச்சார் தனிலோர்நா ளவித்துச்
செவ்விளநீர் தன்னிலொரு நாளவித் துலர்த்தித்
திறமாக இன்னமொரு சுத்தி கேளு
செய்ததொரு முன்சுத்தி யெருமைச்சா ணகத்தி
லேழுதரம் செய்துலர்த்தி யிப்படியே செய்யே. 180

செய்தகொட்டை யொன்றிரண்டாய் வெட்டி யேதான்
சிறப்பாக இருநாழி நெய்யை விட்டு
நையவெந்து சிவந்துவரும் பதத்தி லப்பா
நலமான நெய்யதனை யிறுத்துக் கொண்டு
அய்யவந்த கொட்டைதனி லாவின் பாலை
அப்பனே யிருநாழி விட்டுக் காய்ச்சிப்
பையவே நெய்ப்பதமாய் வருகும் போது
பக்குவமா யிறுத்துப்பின் பகரக் கேளே. 181

கேளந்தக் கொட்டைதன்னை நல்ல தண்ணீர்
கெட்டியாய் ரெண்டுபடி விட்டுக் காய்ச்சி
ஆளந்தக் கொட்டைதனை யரித்தெ டுத்து
அப்பாலே போட்டுப்பின் பாலை வார்த்துத்
தேளப்பா தண்ணீரும் பாலு மொன்றுய்ச்
சிவக்கவே காய்ந்துவரும் பதத்தைப் பார்த்து
நாளப்பா ராயப்பூர் சர்க்கரையைக் கேளு
நலமாக மூன்றுபத்துப் பலமே போடே. 182

பலம்போட்டுக் கிண்டிவர வடிபற் றுமல்
பாகுவரும் பதத்திலச் சூரணத்தைக் கொட்டிப்
பதமாகச் சேர்த்தொன்றுய்க் கிண்டி நீயும்
பக்குவத்தைப் பார்த்ததில்முன் நெய்யை வார்த்து
தலங்காமல் கருகாம லடிபத் தாமல்
நயமாக மெழுகுபதம் பார்த்துக் கிண்டி
இளகமா யிறக்கியே யாற வைத்தே
இளஞ்சூடான போதுதேன் விட்டுக் கிண்டே. 183

கிண்டியே கணேசன்முன் வைத்துப் போற்றிக்
கெடியான சட்டிதனில் தானியபு டம்வைத்து
அண்டியே வயித்தியரை யுபசாரம் பண்ணி
அவர்கையால் தரச்சொல்லி வாங்கிக் கொள்ளு
மண்டியே தீராத நோய்தா னுண்டோ
மண்டலந்தா னிருநேரங் கொள்ளு கொள்ளே. 184

கொள்ளுவது நேரமொரு கொட்டைப்பாக் களவு
கூறுன புளிபுகையும் பெண்ணுந் தள்ளு
கள்ளவினைக் கரப்பனென்ற பதார்த்தந் தள்ளு
கனமான வாய்வென்ற பதார்த்தந் தள்ளு
விள்ளுறேன் [1]நாலுநாள் வட்ட மப்பா
விளக்கெண்ணெய் தேய்த்துநீ முழுகச் சொல்லு
மெள்ளவே யிப்படியே மண்டலந்தான் செய்யில்
விதமாகத் தீருகிற நோயைக் கேளே. 185

நோயேது மேகமா மிருபத் தொன்றும்
நோக்கரிய கிரந்தியரை யாப்புச் சூலை
நோயேது பதினெட்டுக் குட்டமெங்கே போச்சு
நோக்கரிய வாய்வென்ற திருபத் தாறு
நோயென்ற பிரமியங்கள் வெள்ளை வீழ்தல்
நுகர்கைகால் முடங்கினது சூலைபதி னெட்டு
நோயேது வாதபித்த வலிகடுப்பு குத்தல்
நுணுக்கமா மேகவெடி கரப்பானீர்ப் புண்ணே. 186

புண்ணோடு பிளவைபுற்று மேக வூரல்
புகழான சிரங்குசொறி கரப்பன் குட்டம்
அண்ணுன அத்திசுர மத்தி வெட்டை
அபானத்தில் மூலவாய்வு உட்ண வாய்வு
உண்ணுன உப்பிசங்க ளக்கினி மந்தம்
ஒட்டியபுண் ணுறிகிரந்தி யுதிரவலி வாய்வு
தண்ணுன பவுத்திரங்கள் பிளவை புற்று
தழுவணையும் வண்டுகடி யெலிவிடம்சில் விடமே. 187

விசமான சரீரத்தில் நோய்களெல்லாம் தீரு
விரைந்துசொல்லி வயித்தியரே விரைந்து பாரு
நிசமாகும் சரீரத்தில் பலனுண் டாகும்
விந்துகட்டுஞ் சுக்கிலந்தா னூறு மூறும்

1. நாலுநாள் வட்டம்=நாலுநாள்களுக்கு ஒருமுறை.

கசகாதே அவிழ்தங்கள் செய்யும் போது
கைமுறைகள் தப்பாதே கருத்தாய்ப் பாரு
விசுவாச மாயெண்ணிக் குருமுறைதப் பாமல்
மேதினியில் வைத்தியஞ்செய் பலிக்கும் பாரே. 188

பலித்திடவே ரசபற்பந் தாம்பிர பற்பம்
பாருநீ ரசாயனத்தில் சேர்த்துக் கொள்ள
நலித்திடவே பதினெட்டுக் குட்டமுதல் மேகம்
நான்கைந்து வகையான ரோக மெல்லாம்
சலித்திட்ட கருமருந்தில் பொறித்தான் பற்றி
யிட்டுமே நெருப்பேறும் தணல்போல் பாயும்
கெலித்துவரும் நோயெல்லா மேவல் லாதி
கெடுதியுள்ள பேர்களுக்குச் செப்பொ ணாதே. 189

ஒண்ணாது மேகாதி யின்னமொரு மூலி
உரைக்கிறேன் விவரமா யுற்றுக் கேளு
ஒண்ணாத நாறுகரந்தைச் சமூலம் வாங்கி
உத்தமனே நிழலுலர்த்திச் சூரணமே செய்து
ஒண்ணாது திரிகடுகு தான்றிக் காயும்
உற்றவசம் பிந்துப்பு வாலுளுவை கொட்டை
ஒண்ணான கரியசீ ரகமு மேலம்
ஓமமொடு மரமஞ்சள் கார்போக வித்தே. 190

வித்தான செவ்வியமும் வாய்வி ளங்க
விதமான ஆனைத்திப்பிலி திப்பிலி மூலம்
நத்தான சாதிக்காய் செண்ப கப்பூ
நலமான தாளீசை[1] சன்னல வங்கம்
முத்தான மதுரமொடு சாதிப் பத்திரி
முனையாக வகைவகைக்குப் பலமே தூக்கிச்
சித்தாக யிளவறுப்பாய்ச் சூர ணித்துச்
சேர்கரந்தைச் சூரணந்தான் சமனாய்க் கேளே. 191

கேளேநீ சூரணத்தில் நெய்தேன் விட்டுக்
கிண்டியே லேகியமாய்ப் பண்ணிக் கொள்ளு
நாளேநீ நாளொன்றுக் கந்தி சந்தி
நலமான கொட்டைப்பாக் களவு கொள்ளு
தேளேநீ ரசபற்பஞ் சேர்த்துக் கொள்ளு
தீருகிற நோயைநீ செப்பக் கேளு
மீளேநீ கிரந்தியரை யாப்புக் குட்டம்
மேகவெடி சூலைவெடி கரப்பன் போமே. 192

1. தாளீசை—தாளீசபத்திரி.

கரப்பனொடு புண்புரைகள் தழுதணைகள்[1] சூலை
பலகுட்டம் பவுத்திரங்க ளழுகண் ணீரும்
சிறப்பாக மேகவூரல் மேகப் புத்து
தினவுசொறி சரீரத்தில் படரும் வெள்ளை
கரப்பனென்ற கருங்கரப்பன் செங்க ரப்பன்
கள்ளிப்பூ அரிகிரந்தி லிங்கப் புத்து
துரப்பனொடு[2] கன்னப்புத்து யோனிப் புத்து
தொடைவா ழைவிப்புருதி பிளவைப் புண்ணே. 193

புண்ணோடு பாதசக் கரமுந் தீரும்
புளிபுகையும் கரப்பன் வஸ்தும் பெண்ணுந் தள்ளு
நண்ணுக மண்டலமே கொள்ளும் போது
நாடாது வாய்வேது அட்ட குன்மம்
கண்ணுன பதினெட்டுக் குட்ட ரோகம்
கடல்புக்குங் காசரோகங் காணு தோடும்
நிண்ணயமாய் வண்டுகடி யெலிக்கடி விடங்கள்
நெருப்பிலே மெழுகதுபோல் நீராய்ப் போமே. 194

நீரவே பித்தவாய் வுட்டண வாய்வு
நிலையான அரோசியங்க ளன்ன தோடம்[3]
வீருன பொருமல்கட்டி அக்கினி மந்தம்
வெள்ளோக்கா ளம்விக்கல் கக்கல்வா யூரல்
தாருன வாதத்தில் வாயு ரூட்சை
சரீரத்தில் வலிகடுப்பு உளைச்சல் குத்து
சேருத தலைமயக்கம் கிறுகி றுப்பு
திரமான அத்திசுரம் தீரக் கேளே. 195

## கண்டங்கத்தரிச் சூரணம்

கேளேநீ சொன்னதொரு நோயெல்லாந் தீரக்
கெடியான கண்டங்கத்தரிச் சூரணந்தான் சொல்வேன்
நாளேநீ நாரில்லா இஞ்சிபலம் பத்து
நலமான தொலிபோக்கி யிதழ்போல் சீவி
வேளேநீ சீரகம்ரெண் டரைப் பலமாம்
விரவியே பீங்கானில் பழநீர் விட்டு
ஆளேநீ மூன்றுநா ளூற வைத்து
அழகான ரவிதனிலே உலர்த்தி டாயே. 196

---

1. தழுதணைகள்=படர்மேகத்தடிப்பு; 2. துரப்பன்=கருப்பைப் புற்று; 3. அன்னதோடம்=உணவு சமைக்கும்போது ஏற்படும் கேடான தன்மைகள்.

உலர்த்தியே யாவின்நெய் விட்டு நன்று
யுடன்புரட்டி யேவறுத்து வைத்துக் கொண்டு
உலர்த்தியே யிடித்ததனைச் சூரணமே செய்து
உத்தமனே யின்னவகை யுரைக்கக் கேளு
உலர்த்தியே திப்பிலியு மிளகு கோட்டம்
உத்தமனே கிராம்போடு தாளிச பத்திரி
நலத்தியே திரிபலையும் விளங்கம் மாஞ்சி
நல்மதுரங் கொத்தமல்லி யோம மாமே. 197

ஓமமாந் திரிபலையு மூலத் தோடு
உற்றமுக்கா வேளைவேர் சந்தனமு மேலம்
நாமமாந் தழுதாழைவேர்த் தொலியுங் கூட
நலமாகச் சமன்கொண்டுகரி சாலைச் சாற்றில்
ஏமமாம் மூன்றுநா ளூற வைத்து
யெடுத்துலர்த்தி யிடித்ததனைத் தூள்செய் வாயே
தாமப்பா முன்வைத்த சூரணத்தோ டொக்கச்
சமனாகச் சேர்சரக்கைச் சாற்றக் கேளே. 198

கேளேநீ நெற்பொரியு முந்திரிகைப் பழமும்
கெடியாகக் கற்பூரச் சலாசத்துப் பற்பம்
தேளேநீ வகைவகைக்கு ஒருபலமாஞ் சொன்னேன்
சேர்ந்திடுமா யவையெல்லாம் [1]ரேகித் தொன்றாய்
வேளேநீ கண்டிடைக்குச் சீனி பாதி
விரவியே பூசைசெய்து வைத்துக் கொண்டு
நாளொன்றுக் கிருநேர மந்தி சந்தி
நலமாக நேரமொரு வெருகடிதான் கொள்ளே. 199

கொள்ளவே மண்டலந்தான் கொள்வா யானால்
குணமாகும் வியாதிதனைக் கூறக் கேளு
மெள்ளவே பித்தநாற் பதுவும் போகும்
விளம்பியதோர் முன்சொன்ன வியாதியெல்லாந் தீரும்
கள்ளமன்றிச் சொல்லிவிட்டேன் வயித்தியரே நீர்தான்
கைகண்ட வித்தையிது கண்டு பாரு
மெள்ளவே வாதபித்தம் வாய்வுக் கெல்லாம்
விருதாச்சி[2] சொல்லிவிட்டேன் சூட்ச மாக
எள்ளளவும் தப்பில்லை கருமறைப் பில்லை
யென்போல மற்றொருவர் சொல்லார் பாரே. 200

---

1. ரேகித்து=கலந்து (அல்லது) ஒன்றித்து; 2. விருதாச்சி—வெற்றியாயிற்று.

## புங்கம்பூச் சூரணம்

பாரப்பா மேகவகை யெல்லாந் தீரப்
பாடுகிறேன் புங்கம்வே ரென்ற சூட்சம்
நேரப்பா ஒருபடிபூ வாங்கி வந்து
நேர்ப்பாக ஆய்ந்தெடுத்துச் சட்டிதனி லிட்டுச்
சேரப்பா வடுப்பேற்றி யெரித்துக் கிண்டிச்
சிறப்பாக ஆவின்நெய் படிதா னென்று
ஊரப்பா வறுக்குமப்போ கொஞ்சங் கொஞ்சம்
உண்ணவுண்ண நீர்புரட்டி வறுத்து வாங்கே. 201

வாங்கியே நேரம்வெரு கடிதான் தின்ன
மண்டலத்தில் தீருநோய் வகையைக் கேளு
ஏங்கியே மேகவகை எல்லாந் தீரும்
இதமாகப் புளிபுகையும் பெண்ணுந் தள்ளு
தாங்கியே ஆட்சிசெயும் சொறிசி ரங்கும்
தப்பாது கழன்றோடும் வண்ணம் பாரே
வாங்கியே கரப்பனென்ற பதார்த்தம் தள்ளு
மற்றதிச்சா பத்தியமாய் உண்டு தேறே. 202

## கபாடத் தூள்

உண்டிடவே கபாடசூ ரணந்தான் கேளு
ஒளியாமல் சொல்லுகிறேன் உற்றுக் கேளு
சுண்டைவற் றல்கறி நிம்ப[1] பத்திரி
சொல்லரிய மாங்கொட்டைப் பருப்போ டோமம்
நின்றிடவே மாதளையின் [2]பழத்தி னோடு
நெல்லிமுள்ளி வெந்தயமு மெட்டுங் கேளு
கொண்டிடுநீ சமனாய் இளவறுப்புச் செய்து
குறையாம லிடித்துச்சூ ரணமே செய்து
விண்டதொரு கிராணிவகைக் கெல்லாங் கேளு
மேலான வெருகடிதூள் தயிரில் கொள்ளே. 203

கொள்ளவே யாறுவகைக் கிராணியதி சாரம்
குமுறிநின்ற சலக்கழிச்சல் மூல வாய்வு
விள்ளவே சீதமொடு பொருமலுப் புசமும்[3]
வெப்புரத்தங் கடுப்பு ஊப்பு மந்தம்

---

1. கறிநிம்பம்=கறிவேப்பிலை; (கருநிறப் பூவுள்ள வேம்பு இல்லை என்று உணர்க). 2. பழத்திேனாடு=பழத்தின் மேல் தோல் (ஓடு). 3. உப்புசம்=வயிற்றுவீக்கம்.

கொள்ளவே யிந்தவகை நோயெல்லாந் தீரும்
குடிலம்[1]விட்டு வெளியாகப் பாடி னேனே
பள்ளவே நோய்தீர வேணு மென்றால்
பண்டிதரே யென்னூலைப் பார்த்தி டீரே. 204

## நிலவாகைச் சூரணம்

பார்த்திட்ட நிலவாகைச் சமூலங் கொண்டு
பரிவாக நிழலுலர்த்திச் சூரணமே செய்து
ஆர்த்திட்ட திரிபலைதா னற்பத் தொன்று
அவ்வெடையே சீனிசர்க்க ரையைச் சேரு
ஏர்த்திடவே நாளொன்றுக் கந்தி சந்தி
யிருநேரம் வெருகடித்தூள் கொள்ளு கொள்ளு
பார்த்திட்ட மேகவகை யிருபத் தொன்றும்
பறக்குமே சிரங்குசொறி கரப்பான் பாரே. 205

கரப்பனென்ற வத்திசுரம் அத்தி வெட்டை
கதிகெடுத்த பித்தவாய் வுட்டிண ரோகம்
கரப்பனென்ற அரோசியமு மன்ன தோடம்
கடுகியே மேகத்தால் யெடுத்த வூரல்
கரப்பனென்ற கிறுகிறுப்பு மயக்கந் தூக்கம்
கண்ணெரிவு வாயில்நீ ரூறல் காந்தல்
புரட்டல்மலக் கட்டுள்ள தெல்லாம் போகும்
பித்தமெல்லாம் கீழ்நோக்கும் பெருமை தானே. 206

## கரிசாலைச் சூரணம்

பெருமையாய்ச் சருவநோ யெல்லாந் தீரப்
பேசுகிறேன் கரிசாலைச் சூரணந்தா னென்று
அருமையாய்ப் பொற்கையா னானல் நன்று
அல்லாட்டால் நற்கையான் பலந்தான் பத்து
வருமையா நிழலுலர்த்திச் சூரணமே செய்து
வாகான கடுக்காயுங் கோட்டமுடன் மிளகு
கருமையா மரமஞ்சள் சிங்கிகருஞ் சீரம்
சடாமாஞ்சி திப்பிலி மூல மாமே. 207

மூலமாந் தாளிசையுங் கிராம்பு திப்பிலி
முனையான சுக்கேலம் நெல்லி முள்ளி
மூலமாஞ் சீரகமு மதுரமுடன் மல்லி
முனையான விளங்கமொடு முக்கா வேலை

1. குடிலம்—வஞ்சகம்.

காலமாம் வகைகளெல்லாம் பாக மாக்கிக்
கரிசாலைச் சூரணத்திற் சமனாய்ச் சேர்த்துச்
சீலமா மின்னமொரு வகைதான் கேளு
திரிலோக மண்டூரஞ் சேர்த்துக் கொள்ளே. 208

கொள்ளவே நாளொன்றுக் கந்தி சந்தி
குறையாதே வெருகடிமண் டலந்தான் கொள்ளக்
கள்ளமாம் பித்தம்நாற் பதுவு மெங்கே
காணாது பாண்டுபித்தங் காமாலை சோகை
கொள்ளவே பீலிகையும் வலிபெரு வயிறும்
குடிகெடுத்த நீராம்பல் மகோதரமுங் குன்மம்
கள்ளமாம் அத்திசுரம் அத்தி வெட்டை
காலசதி கையசதி யெரிவு காந்தல்
அள்ளவே குறைந்தாற்போல் மயக்கந் தூக்கம்
அசதியொடு உப்பிசங்க ளெல்லாம் போமே. 209

## சாம்பிராணிப் பதங்கம்

போமென்ற கிரந்தியரை யாப்புச் சூலை
போகவொரு ரசாயனந்தான் புகலக் கேளு
ஆமென்ற பறங்கிப்பட்டைப் பலந்தான் பத்து
ஆன்பாலில் சுத்திசெய்து நொறுக்கித் தூளாய்க்
கோமென்ற கலசத்தி லிட்டுக் கேளு
குழிவெட்டி முழத்துயரத் துள்ளே வைத்து
ஆமென்ற பின்புரெண்டு கலசம் வாங்கி
அக்கலசத் தூரிலிரு [1]தமர்தான் போடே. 210

தமரிட்டுக் கலசத்தி னுள்ளே கேளு
சாற்றிய கெந்திபலம் ரெண்டரைதான் சொன்னோம்
பமரிட்டுச் சுத்திசெய்து கலசத் திட்டுப்
பட்டையிட்டு வைத்தகல சத்தின் மேலே
கமரிட்டுப் பின்னுமொரு கலசத் துள்ளே
கார்த்திகையாங்[2] கிழங்கோடு வசம்புள்ளி யோமம்
அமரிட்டே யிடித்தொன்றாய்க் கலசத் துள்ளே
ஆக்கியந்தக் கலசத்தை மேலே வையே. 211

வைத்துமே நிலமட்டும் கண்டு நீதான்
வாய்மூடி யதன்மேலே புடந்தான் கேளு
அய்த்துமே முழவுயரம் புடந்தான் போடு
ஆறவிட் டெடுத்துநீ பார்த்தா யானால்

1. தமர்=ஓட்டை; 2. கார்த்திகையாங் கிழங்கு=காந்தட் கிழங்கு.

உற்றதொரு கிழங்கினுட தைலந் தன்னை
யுருகியே கெந்தகத்தி லுருகிப் பாய்ந்து
பற்றுமே கெந்தியுட தைலந் தானும்
பறங்கிப்பட் டைதனிலே யுறைந்து போமே. 212

உறைந்தபட்டைத் தைலத்தோ டெடுத்து லர்த்தி
உறுதிபெற விடித்துவத்திர காயஞ் செய்து
அறந்தழைக்குஞ் சாம்பிராணிப் பதங்க மேற்ற
அறைகிறேன் தாழிவாய் வேடு கட்டிப்
புறந்தழைக்குந் தாழிக்குள் சொல்லக் கேளு
புளியந்தண விட்டுவிலாப் பக்கந் தாழி
சிறந்தமூ விரல்கனந் தமரிட் டுள்ளே
சிறப்பான சாம்பிராணி பொடித்துப் போடே. 213

போடப்பா ரெண்டரையாம் பலந்தா னப்பா
போட்டெல்லாம் பதங்கித்து ஆன பின்பு
நாட்டமுட னெடுத்ததனைப் பதனம் பண்ணி
நாளொன்றுக் கந்திவெரு கடிதான் கொள்ளு
வாடவே வேண்டாங்காண் பத்தியமா யுண்ணு
மைந்தனே கிரந்தியரை யாப்புப் பெண்கள்
சாடிவரும் பதினெட்டுச் சூலை ரோகம்
சந்திடுப்புச் சூலைகைகால் முடக்கும் போமே. 214

முடக்கான பிரமேகம் வெள்ளை வீழ்தல்
மோகத்தா லெடுத்த[1]பத கரியு மூறல்
கடக்கமாய் வந்ததொரு லிங்கப் புத்து
கழலண்ட வாதமொடு யோனிப் புத்து
நடக்கமாங் கன்ரேசி கன்னப் புத்து
நாடாது வாய்வோடு பதினெண் குட்டம்
அடக்கியே சொல்லிவிட்டே னிந்த நூலில்
ஆருக்குங் காட்டாதே யடங்கி யாடே, 215

## அரிதார எண்ணெய்

ஆடவே சிரங்குசொறி கரப்பான் புண்கள்
ஆருத ரணங்களெல்லா மாற வேண்டித்
தேடவே யரிதார யெண்ணெ யொன்று
செப்புகிறேன் வயித்தியரே தெரிந்து கேளு

1. பதகரி—ஆண்பெண் குறிகளில் தோன்றும் ஓர்வகைப் புண்,

ஆடவே நல்லெண்ணெய் படிதா னென்று
அதில்போடு அரிதாரம் பலமுங் கால்தான்
தேடவே யரிதாரம் பொடித்துப் போடு
சேங்கொட்டை நாலைந்து வெட்டிப் போடே. 216

வெட்டியே யொருகலசத் திட்டு மைந்தா
விதமான கலசம்வாய்க் கிட்டிக் கட்டி
அட்டியே யில்லாம லடுப்பி லேற்றி
ஆருமல் காய்ந்தெண்ணெ யனல்தான் பற்றித்
தட்டியே சேங்கொட்டை வெடிக்கும் போது
தாளியொன்று கொப்பரையில் நிறையத் தண்ணீர்
கொட்டியே கொதிப்பித்த எண்ணெய் தன்னைக்
கோல்பற்றி யெடுத்ததிலே கொட்டி டாயே. 217

கொட்டிடவே யெண்ணெயெல்லா மிதந்து நிற்கும்
குறிப்பாக வெடுத்தொரு கலசத் துள்ளே
கொட்டிடவே யுதயத்தில்மோ ரசனஞ் செய்து
குறிப்பான யெண்ணெயெங்குந் தடவி மேலே
கொட்டிடவே அந்தியிலே யரைப்புப் போட்டுக்
குளித்துவர இப்படியே நாள்மூன் றப்பா
கொட்டிடவே ஐந்துநா ளெண்ணெய் தேய்த்துக்
குளிப்பித்துத் தலைமுழுகத் தீரும் நோயே, 218

## சொறிசிரங்குக்கு மேல்பூச்சு

நோயேது சிரங்குசொறி கரப்பா னேது
நுணுக்கறவே யாருத புண்க ளேது
நோயேது இன்னமொரு செய்தி கேளு
நுணுக்கமாய்த் தேங்காயைக் கரியாய்ச் சுட்டு
நோயேது அதிற்பாதி மிளகு சேர்த்து
நுணுக்கமா யரைத்ததனை வைத்துக் கொண்டு
நோயேது மேலெங்கும் பூசு பூசு
நுணுக்கமாய் அந்தியிலே வெந்நீர் வாரே. 219

## சொறிசிரங்குக்குத் தேங்காயெண்ணெய்

வார்த்துமே யின்னமொரு சூட்சங் கேளு
வளமான தேங்காய்ப்பால் படிதான் ரெண்டு
வார்த்துமே சட்டியிலே அடுப்பி லேற்றி
வகையான கல்லுப்பு மஞ்சள் ரெண்டும்

சேர்த்துமே கரியசீ ரகத்தி னோடு
சேர்வகைக்குக் கால்பலந்தான் சமனாய்க் கொண்டு
ஆர்த்துமே பொடித்தந்தப் பாலில் தூவி
அடுப்பேற்றிக் காய்ச்சியந்த எண்ணெய் வாங்கே.

வாங்கியந்த எண்ணெய்தனை யுடம்பில் தேய்த்து
மாமரத்துப் பட்டைதனை யிடித்து நீரில்
ஏங்காதே குழைத்ததனை மேலே தேய்த்தே
இதமாக அந்தியிலே குளித்து வாநீ
ஆங்கியே யிப்படியேமூன் றுநாள் செய்ய
ஆகாத சிரங்குசொறி கரப்பான் போகும்
வாங்கியே யின்னமொரு சேதி கேளு
வளமாக மிளகுடனே வாகை வேரே. 221

வேரான திரண்டுபங்கு மிளகுதா னென்று
விருதான கரியசீ ரகமுங் கூட்டி
ஆறுன வசம்புசுட்டுக் கூடப் போட்டு
ஆடுதொடா மூலிச்சாறு விட்டே யாட்டிப்
பேறுன கார்போக வித்துங் கூட்டிப்
பெரியாரைச் சாற்றிலே கொஞ்சம் வாரு
ஆறுன திவைபெல்லா மரைத்து வொன்றாய்
ஆதியென்ற நல்லெண்ணெய் தன்னிற் போடே. 222

## சர்வநோய்க்கு முக்கூட்டுத் தைலம்

தானென்ற முக்கூட்டுத் தைல மொன்று
சாற்றுகிறேன் சருவநோ யெல்லாந் தீர
தானென்ற எள்ளெண்ணெய் சித்தேரண்டத் தெண்ணெய்
தருவான ஆவின்நெய் வகைவ கைக்கு
ஆனென்ற படியிரண்டு சேர்த்துக் கொண்டு
ஆவின்பால் படிநாலு அளந்து வாரு
பானென்ற செவ்விளநீர் படிதா னாலு
பக்குவமா மின்னவகை பகரக் கேளே. 223

பகருகிறேன் கரிசாலை பொன்னாங் கண்ணி
பகர்வீழி வல்லாரை யவுரி கொற்றான்
முகருகிறேன் தழுதாழை நொச்சிசெருப் படியும்
முறுக்கியகற் றாழையொடு கற்பூர வள்ளி
புகலுகிறேன் தூதுவளை கண்டங் கத்தரி
புளியாரை முசுமுசுக்கை சங்கங் குப்பி
பகருகிறேன் மேனிச்சிறு கீரை வேளை
பகர்தாழை விழுதாடா தோடை யென்னே. 224

தோடையொடு நொச்சிபுன முருங்கை காந்தள்
சொல்லரிய மரமுன்னை காட்டு மல்லி
தோடையொடு ஆதொண்டை கீழ்க்காய் நெல்லி
சொல்லாலின் விழுதுபரு நெல்லிக் காயும்
தோடையொடு அல்லிதொட்டி நெய்த லாம்பல்
சொல்லரிய நிலக்குமிழுந் தண்ணீர் மிட்டான்
போடவே யுலர்த்தியே மணத்தக் காளி
பொடிதனையும் துளசிதுத்திமுள் ளங்கி யாமே. 225

முள்ளங்கி வெள்ளறுகு செங்கழு நீர் தானும்
முத்திருக்கம் [1]நீர்வல்லி யத்திப் பட்டை
முல்லையங்கி திருநாமம் பாலை யோடு
மூக்கிரட்டை வெருகினுட கிழங்குச் சாறு
முள்ளங்கி கரந்தைபெரு நெருஞ்சி கொன்றை
முனையான பிரமிசிறு குரட்டை தானும்
முள்ளங்கி பருத்திதேள் கொடுக்குபற்ப டாகம்
முதிர்நாறு கரந்தையொடு வகைக்குக் கேளே. 226

வகைவகைக்கு யொருபடியாந் தனிச்சா றுக
வாங்கியந்த எண்ணெயிலே வார்த்துக் கேளு
நகையாதே வெட்டிலா மிச்சை வில்வம்
நன்னாரி சித்தாமுட்டி பேரா முட்டி
முகையாக இருவேலிமிள கருணை சங்கு
முரியவெள்ளைச் சாரணைவேர் குறுந்தொட்டி வேரும்
அகையான சித்தமல்லி பேரா மல்லி
ஆயிலிய மருந்திலந்தை யழக்குரா வேர்
வகையான சிறுபீளை சித்திர மூலம்
வாக்கான நிலப்பனைவேர் முத்தக் காசே. 227

காசோடு தூது[2]கண்டங் காரி நொச்சி
கருவாகை மரவள்ளி முந்திரிகை தேற்றான்
மாசில்லாப் புனலிச்சிறு குறிஞ்சா புன்னை
மயிலாடி வீழிவேர்ப்பூ வாளை யிலுப்பை
தேசில்லா நரியுடையும் சிறுவி ளாவும்
செப்பரிய முள்ளிலவு முருங்கை வேம்பு
ஆசில்லாச் சம்பங்கி விட்ணு கிரந்தி
ஆரையின்வே ரறுகங் கிழங்கு மாமே. 228

1. நீர்வல்லி=வெற்றிலை; 2. தூது=தூதுவளை.

அறுகோடு பொன்முசுட்டை சிறுகாஞ் சோறி
ஆதளை[1]வெட் பாலையகத்தி செம்பை
அறுகோடு செம்பங்கி முக்கா வேளை
அதில்தேவ தாரமொடு மலாக்காய்[2] கெந்தம்
அறுகோடு பிராய்முட்டி நிலப்பூலா வேரு
மாற்றரசு காட்டத்தி சிறியவழு திணையும்
அறுகோடு வகைக்குரெண்டு பலந்தா னேமம்
ஆட்டியே யிடித்துமொரு தாழி சேரே. 229

சேரேநீ பிரம்பினுட கிழங்கு ரெண்டு
சேர்த்தொன்ருய்த் தூணிநீர் கலசத் திட்டு
வேரேநீ யடுப்பேற்றி யொருவிறகுத் தீயால்
மாட்டியே யெட்டிலொன்ருய்க் குறுக்கி வாங்கிக்
காரேநீ முன்னெண்ணெய்க் கியாழத் தோடே
கலந்துவிட்டுக் கடைச்சரக்கு விவரங் கேளு
சேரேநீ திரிகடிகு திரிப லாதி
திப்பிலியின் மூலமொடு கோட்ட மாமே. 230

கோட்டமாஞ் சித்தரத்தை பேர ரத்தை
கொத்தமல்லி யேலமில வங்க மாஞ்சி
கோட்டமாந் தாளிசையு மிரண்டு சீரம்
கொடிதான வாய்விளங்கம் ஓமம் ரெண்டு
தீட்டமாம் நாகப்பூ மதுர மிந்து
செவியமுடன் மரமஞ்சள்கத் தூரி மஞ்சள்
வாட்டமாஞ் சாதிக்காய் சாதிப் பத்திரி
மஞ்சிட்டி வாலுழுவை சிங்கி யாமே. 231

சிங்கியொடு வால்மிளகு கூகை நீறு
செண்பகப்பூ வலம்புரிக்காய் கருவாய்ப் பட்டை
பங்கிளியாய் கிளிமூறல் பட்டை யோடு
பச்சிலைபூ லாங்கிழங்கு சோம்பு மஞ்சள்
வங்கமொடு சமுத்திராப் பழங்கச் சோலம்
வங்காளப் பச்சையுங்கோ ரைக்கி ழங்கு
அங்கேயே பெருங்குரும்பை யக்கிரா காரம்
அத்தித்திப் பிலிவகைக்கு அரைப்பலந்தான் போடே.

---

1. ஆதளை=காட்டாமணக்கு; 2. மலாக்காய்=மலாக்காச் சாம்பிராணி.

பலமாக இவையெல்லா மாவின் பாலால்
பக்குவமா யாட்டியந்த எண்ணெயிலே போடு
பலமாக இவையெல்லா மொன்றுய்த் தாக்கிப்
பருந்தாழி சேர்த்தடுப்பி லெரியை மூட்டிப்
பிலமாக யொருவிறகாய் யடிப்பற் றுமல்
பொங்காமல் தப்பையினல் கிண்டிக் கிண்டி
குலமாகக் கியாழமெல்லாம் வத்தி வத்தி
குறுக்கியே மெழுகுபதம் வருதல் காணே. 233

வருதலாம் முருங்கைப்பூ பொடிதான் போடு
மருக்கொழுந்து ஒருபிடிதா னதிலே போடு
கருகாமல் மெழுகுபத மானு லப்பா
கையைவிட்டுக் கிண்டியப்பா யடுப்பை யாற்றிப்
பருவமாய்த் தயிலமதை வடித்துச் சொல்வேன்
பாங்கான வடிகலசத் துள்ளே கேளு
பருவமாம் குங்குமப்பூ கழஞ்சோ வொன்று
பச்சைக்கற் பூரமொரு கழஞ்சு போடே. 234

போடப்பா கோரோசனைதான் கழஞ்சு போடு
புகலுகிறேன் புழுகொரு கழஞ்சு போடு
சாடவே செங்கழுநீர் கோட்ட மோடு
சாதிக்காய் வகைவகைக்குக் கழஞ்சு போடு
ஆடவே வடிகலசத் துள்ளே போடு
ஆதியென்ற குருவியொரு கழஞ்சு போடு
வாடாதே போட்டுநீ தயிலம் தன்னில்
வடித்துமேதா னியபுடம்வைத் தெடுக்க நன்று
சாடவே சூரணங்க ளெல்லா மிந்தச்
சாம்பிராணி பதங்கத்தி லேற வேணும்
தேடியே யிம்முறைதா னில்லா விட்டால்
தேகத்துக் கேருது குற்றங் காணே. 235

குற்றங்கள் வாராமல் தயிலம் மூழ்கு
குணங்கேளும் வைத்தியரே கூறு வேன்யான்
பத்தியமாய் நாலுநாள் விட்டு மூழ்கு
பசும்பயறு சீயக்காய் வெந்நீ ராகும்
வெற்றியாய்த் தீரும்நோய் சொல்லக் கேளு
மேகவகை யிருபதுந்தா னெங்கே போச்சு
சத்தியமா யத்திசுர மத்தி வெட்டை
தயங்காத மெய்யெரிவு காந்தல் போமே. 236

காந்தலொடு பித்தவாய் வுட்ண வாய்வு
கண்ணெரிவு கிறுகிறுப்பு மயக்கந் தூக்கம்
வாந்தியொடு வாயூறல் மண்டைச் சூலை
வறட்சியொடு காமாலை பாண்டு சோகை
மோந்துவரு மண்டையிடி மண்டைக் குத்து
மூக்குநீர்ப் பாய்ச்சலொடு பீனி சங்கள்
காந்தியாம் கன்னேசி கண்பு கைச்சல்
காலசதி கையசதி சூலை வாய்வே, 237

வாய்வோடு நீர்ச்சுருக்கு வாத பித்தம்
வகையான சிலேத்துமத்தால் வந்த ரோகம்
ஏயுமா மற்றுமுள்ள நோய்க ளெல்லாம்
இடிவிழுந்தாற் போலாகி யோடிப் போகும்
காயமாய்க் கண்ணெரியே குளிர்ச்சி யாகும்
கண்புகைச்சல் வெள்ளெழுத்து மாறிப் போகும்
பேய்போலும் வயித்தியரே யின்ன மின்னம்
பேசுகிறேன் சிறுசந்த னாதி யொன்றே. 238

## சிறுசந்தனாதித் தயிலம்

ஒண்ணான சந்தனந்தான் பலந்தா னூறு
உற்றவெட்டி லாமிச்சம் வில்வம் சங்கு
நன்றான நிலப்பனையு முத்தக் காசு
நன்னாரி சாரணைவேர் மிளகரணை வேரும்
கன்றான குறுந்தொட்டி பேரா முட்டி
காஞ்சொறி தூதுவளை காட்டு மல்லி
பன்றான தேத்தான்வே ரத்திப் பட்டை
பருநெல்லி ஆயில்யப்பட் டையுந் தானே. 239

பட்டையொடு ஆல்விழுது சித்திர மூலம்
பாலைமாம் பட்டையொடு குமரி வேரும்
திட்டமா யிருவேலி வட்டத் திருப்பி
தென்னம்பூப் பாளையொடு விடத்தேர் வீழி
வட்டமறு முன்னைகருஞ் செம்பை முத்து
மரவள்ளி நீர்ப்பூலா முந்திரிவேர் வகைக்கு
இட்டமுட னந்துபல மெடுத்துக் கொண்டே
இடித்துமொரு தாழியிலே யிட்டுக் கேளே. 240

கேளப்பா இருதூணி சலந்தான் வாரு
கெடியான சந்தனமோ தாழி யிட்டு
வேளப்பா இருதூணி சலந்தான் வாரு
வெவ்வேறே யடுப்பேற்றி யெட்டொன் றுக்கி

நாளப்பா கியாழம்ரெண்டு மொன்ருய்ச் சேரு
நலமான யெள்ளெண்ணெய் படிதா னெட்டு
ஆளப்பா செவ்விளநீர் படிதா னுலு
ஆவின்பால் படிநாலு அதிலே வாரே, 241

வாரேநீ சாறுவகை சொல்லக் கேளு
வல்லாரை கரிசாலே பொன்னுங் காணி
சேரேநீ கற்பூர வள்ளி யோடு
செருப்படியு முசுமுசுக்கை மணத்தக் காளி
பாரேநீ சீதாசெங் கழுநீர்ச் சாறு
பருத்திக்காய் நீர்மிட்டான் நெல்லி கொட்டி
வாரேநீ நந்தியா வட்ட மோடு
மல்லிகையுஞ் சிறுகீரைச் சாறுங் கூட்டே. 242

கூட்டடா [1]மயிலுமா தளையின் சாறும்
குமரியொடு முடக்கொற்ருன் பற்ப டாகம்
நீட்டடா தாழையுட விழுதுச் சாறும்
நெல்லிக்காய்ச் சாறுதழு தாழை நொச்சி
ஆட்டடா வெள்ளறுகு பெருநெருஞ்சி
[2]அமிர்தவள்ளி சீனியொடு கான வேளை
வாட்டமில்லாச் சதாவேரி யவுரிபழம் பாசி
மைந்தனே வகைவகைக்குப் படியரைச்சார் வாரே.

சாருன கியாழவகை யெல்லா மொன்ருய்ச்
சாரித்துத் தாழியொன்றிற் சாற்றக் கேளு
வாருன திரிகடுகு திரிப லாதி
வகையான யேலமில வங்கம் கோட்டம்
வீருன தாளிசையும் ஓமம் ரெண்டும்
விதமான மதுமிருசீ ரகமு மல்லி
மாருன சாதிக்காய் கிராம்பு பத்திரி
வால்மிளகு சடாமாஞ்சி விளங்கமிந் துப்பு
கூருன செவ்வியமும் சோம்பு மஞ்சள்
கூகைநீர் மரமஞ்சள்கத் தூரிமஞ் சளாமே. 244

மஞ்சளாங் கிளியூறல் கருவாப் பட்டை
மரியமகிழ் விந்தம்வங் காளப் பச்சை
மஞ்சளாம் அத்தித்திப் பிலியி னேடு
வாலுழுவை வெட்பாலே அரிசி கூட

1. மயில்=செங்கத்தாரி; 2. அமிர்தவள்ளி=சீந்தில்.

மஞ்சளா மலைப்பச்சைசூ லாங்கி மூங்கின்
மஞ்சட்டி பெருங்குரும்பை திப்பிலியின் மூலம்
வஞ்சியே நாகப்பூ கற்கடக சிங்கி
வலம்புரிகோ ரோசனையும் கார்போக வித்தே. 245

வித்தான வெப்பாலை வாலுழுவை யரிசி
விழலரிசி வகைக்குவகை கால்பலமே சொன்னேம்
நத்தான ஆவின்பால் தன்னு லாட்டி
நலமான எண்ணெயிலே கரைத்து வாரு
சித்தாக வடுப்பேற்றி மூன்று நாள்தான்
சிறுகொதியா யொருவிறகால் தீயை மாட்டி
கத்தான நாலாநாள் கடுந்தீ யிட்டுக்
கருத்தாக மெழுகுபதம் கண்டு பாரு
முத்தான முருங்கைப்பூ செண்பகப்பூ வோடு
முனையான இலுப்பைப்பூ சம்பங்கிப் பூவே, 246

பூவோடு பன்னீருமா தளையு முன்னை
பூங்கோங் கிலவுப்பால்பக் குரண்டிப் பூவும்
பூவோடு வகைவகைக்கு இருபிடி போடு
பொன்னுன மருக்கொழுந்து பிடிதான் போடு
பூவோடி வையெல்லாம் போட்டுக் கிண்டிப்
பொங்காமல் மெழுகுபதம் வருதல் கண்டு
காவோடு கையிலிட்டுக் கிண்டிப் பாரு
கடுகுருண்டு மெழுகாகு லடுப்பை யாற்றே. 247

ஆற்றியே வடிகலசந் தன்னிற் கேளு
அழகான குங்குமப்பூ கோரோசனை கத்தூரி
பாத்துமே சாதிக்காய் செங்கழுநீர் கோட்டம்
பச்சைக்கற் பூரமொடு புழுகுவகை வகைக்குப்
போத்தியே நாற்கழஞ்சு கொண்டு வந்து
பொடித்துமே வடிகலசத் துள்ளே யிட்டு
ஆற்றியே தைலத்தை வடித்து வாங்கு
ஐங்கரர்க்கு மறுமுகர்க்கும் பூசை பண்ணே. 248

பண்ணியே தைலத்தைப் பசுந்தா னியபுடமாய்ப்
பக்குவமாய் நாலுநாள் வட்ட மூழ்கு
நண்ணியே பசும்பயறு சீயக் காயும்
நலமாக முழுகினுல் புளிபுகையுந் தள்ளு
கண்ணியே பச்சைமாங் கிஷமு மாகாக்
கனமான பால்தயிரு மோரு மாகா
திண்ணமாம் பெண்ணேடு பலகார வர்க்கம்
தின்பண்ட மென்பதொன்று மாகாது தள்ளே. 249

தள்ளியே மற்றநா ளெல்லாங் கூட்டு
சாதகமாய்த் தீருகிற நோயைக் கேளு
வள்ளலே மேகமென்ற இருபத்தொன்றும்
வாதபித்தம் சிலேத்துமத்தால் வந்த நோயும்
உள்ளியே யத்திசுர மத்தி வெட்டை
உறைக்காய்ச்சல் கண்ணெரிவு கைகால் காந்தல்
கொள்ளவே சயகாசம் பதினெண் சூலை
சூலையெரிவு அட்டகுன்ம மயக்கந் தூக்கம்
கள்ளமாய்ச் சிரசில்நோய் தொண்ணூற் றாறும்
கருமருங்கில் பொறிவிழுந்தாற்போ லொடுங்கிப் போமே.

போமேதான் சிரங்குசொறி கரப்பான் குட்டம்
பூணுநீ ரிழிவுவலி கடுப்புவெண் குட்டம்
போமேதான் நெஞ்சுவலி மண்டைக் குத்து
பொறிகால்கை திமிரிணெடு வாய்வெல் லாமும்
வாமென்ற கண்ரோகம் தொண்ணூற் றாறும்
மற்றுமுள்ள சண்டாள ரோக மெல்லாம்
போமென்று சொல்லிவிட்டேன் சந்த ஞதி
புண்ணியமே செய்தவர்க்கே எய்தும் பாரே. 251

## இருமல் உசிதம்

பார்க்கவே யேங்கலுப் பசமோ பீளை
பரிவான யிளைப்பிருமல் போக்கக் கேளு
வார்க்கவே நன்னாரி பருவே ராக
வாங்கியே கொண்டுவந்து கழுவிப் போட்டே
யேற்கவே மேல்தொலியை யெடுத்து நன்று
யெலுமிச்சம் காயளவு அரைத்துக் கேளு
ஆர்க்கவே சம்பாநெல் பழவரிசி யாதல்
அல்லாட்டால் கருங்குறுவை யரிசி யாதல்
காக்கவே யொன்றி ரண்டாய் நொறுக்கி வாங்கி
கால்படியா மரிசியொருசட் டியிலே போடே. 252

போட்டுமே நீர்வார்த்தே உப்பில் லாமல்
பொங்கியே கஞ்சிதான் கொதிக்கும் போது
நாட்டமுடன் முன்னரைத்த பொடியைப் போடு
நலமான தேங்காய்ப்பா லவ்வளவும் போடு
ஆட்டவே குழைந்துவெந்து பாகு போலே
ஆகும்போ தாறவைத்துக் குடிக்கச் சொல்லு
வாட்டமிலா திப்படியே மூன்றுநா லுநாளும்
வளமாக ஐந்துநாள் கொள்ளு கொள்ளே. 253

கொள்ளவே சொன்னதொருநோ யெல்லாந் தீரும்
கொடிதான பத்தியங்க ளில்லை பாரு
கொள்ளவே மருந்திட்ட கஞ்சிக் குப்புக்
கூட்டாம லுண்ணமருந் தெல்லா மாகும்
கள்ளமாம் வாயுவுக்கா காத பண்டம்
கரப்பனென்ற பதார்த்தங்க ளெல்லாந் தள்ளு
விள்ளாதே நன்னாரிக் கஞ்சி யுண்டால்
வேளைதப்பி மற்றதெல்லா முண்ணு வுண்ணே. 254

## பஞ்சபாடாணச் செந்தூரம்

உண்ணவே சருவநோ யெல்லாந் தீர
உரைக்கிறேன் பஞ்சபாடாணச் செந் தூரம்
அண்ணவே சாதிலிங்கம் மனோசிலையும் காந்தம்
அரிதாரம் கெந்திரசம் வெள்ளைப்பா டாணம்
கண்ணான கற்பூரம் வகைக்குஒரு பலமாங்
கனமாகச் சுத்திசெய்து கல்வத் திட்டு
தன்னான மேனிச்சாறு சாமம் நாலு
நாகவல் லிச்சாறு சாமம் நாலே. 255

நாலோடு பருத்திநீர் சாமம் நாலு
நலமான வெள்ளறுகு சாமம் நாலு
வேலோடு துளசிநீர் சாமம் நாலு
வேலியாம் பருத்திப்பால் சாமம் நாலு
ஆலவே பொடுதலையில் சாமம் நாலு
அப்படியே யாட்டிநன்றாய் வில்லை செய்து
மாலைநிழ லுலர்த்தியே சட்டி யொன்றில்
மைந்தனே நாகவல்லி யிலைப ரப்பே. 256

பரப்பியே யதன்மேலே வில்லைவைத்து மூடி
பக்குவமா யெழுசீலை மண்ணுஞ் செய்து
பரப்பியே யடுப்பேற்றி யொருவி றகால்
பதறாதே சிறுதீயாய்ச் சாமம் நாலு
பரப்பியெரித் தாறியதா யானால் மைந்தா
பாங்கான சட்டித்தூர் சிவந்து காணும்
பரப்பியே சட்டிதனை யிறக்கிக் கொண்டு
பதமன்றி யடுப்பாற்றி யெடுத்துப் பாரே. 257

பார்க்கவே செந்தூர பற்ப மென்று
பகர்ந்திட்ட நோயெல்லாம் பாறிப் போகும்
காக்கவே யிஞ்சிசர்க்கரை தேன தாகும்
கசாயகற்கம் நோயறிந்துஅனு பானஞ் சேரு

பார்க்கவே சன்னிசுரம்பதின் மூன்று மெங்கே
    பறக்குமே கிரந்திகுட்டம் பதினெண் சூலை
காக்கவே வாய்வென்ற இருபத் தாறும்
    கனமான வாதமெண் பதுவும் போகும்
ஏற்கவே மேகமென்ற யிருபத் தொன்றும்
    எட்டுவகைக் குன்மமொடு கிராணி யாறே. 258

ஆறேடு கைகாலை முடக்குஞ் சூலை
    ஆருத வெடிசூலை பிளவை புற்று
கூருத கழலைகளும் கண்ட மாலை
    குட்டமொடு பெருநோயும் குறைநோய் கூடத்
தேருத அரிகரப்பான் சொறிகரப்பான்
    சிரங்குசொறி மதகரிகள் வண்டுகடி தேமல்
கூருத கழலண்ட வாதம்வலி யஞ்சுங்
    குழிவாழை அழுகண்ணி ஆருப் புண்ணே. 259

புண்ணோடு கன்னேசி கன்னப் புத்து
    பொறுக்காக் கபாலகுட்டம் பவுத்தி ரங்கள்
புண்ணோடு மூலமுளை விரண ரோகம்
    பொல்லாத கயரோகம் நாக்கில் ரோகம்
பண்ணுன பலபலவாம் ரோக மெல்லாம்
    பறக்குமே சந்திடுப்புக் கீலுச் சூடு
குண்ணுத கபாலகுன்ம வாயு சூலை
    குலைவலியும் மெய்குடைச்சல் உளைவு குத்து
பண்ணுன இருவகையாம் நோய்க ளெல்லாம்
    பருதிகண்ட பனிபோலப் பறந்து போமே. 260

## அயகெந்திச் செந்தூரம்

பறக்கவே அயகெந்திச் செந்தூ ரந்தான்
    பருநெல்லி கெந்திநா லரையே வாங்கி
சிறக்கயரப் பொடி யொன்றே சேர்த்து
    சீராகச் சுண்ணும்புத் தண்ணீர் விட்டுக்
கரக்கவே யேழுநா ரைத்துத் தூளாய்க்
    கனமான சட்டியிலே போட்டு நீயும்
மறக்கவே வறுத்திடவே செந்தூர மாகும்
    மைந்தனே யிதனுடைய மகிமை கேளே. 261

மகிமையென்ன வனுபானம் வெப்பாலை யரிசி
    மாசற்ற சீரகமும் கியாழத் தூட்டி
மகிமையென்ன பச்சரிசிக் கழுநீ ராகும்
    மகத்தான தொழிலாம் பிரள லாகும்

மகிமையென்ன இப்படியே யறிந்து போட
மைந்தனே சூலைபதி னெட்டும் போகும்
மகிமையென்ன கிராணிவகை யாறுந் தீரும்
மற்றுமுள்ள காமாலை சோகை பாண்டே. 262

பாண்டோடு கிராணிவகை யெல்லாங் கேளு
பக்குவமா யவிழ்தங்கள் செய்து கொண்டு
பாண்டோடு செந்தூர மதிலே யூட்டு
பறக்குமே சிரங்குசொறி கரப்பான் எல்லாம்
பாண்டோடு மேகவகை யெல்லாந் தீரும்
பாலிலுண்டு வரப்பிர மேகந் தீரும்
பாண்டோடு கரிசாலை லேகியத்து ளிட்டுப்
பன்னிரண்டு சோகைகா மாலை போமே 263

## சன்னிதோடத்துக்கு லிங்கக்கட்டு

போமென்ற அரிதாரஞ் சுத்திசெய்த கட்டி
புகழாகக் கருவங்கந் தன்னி லூட்டி
ஆமென்ற கருவங்கம் நொறுங்கிப் போகும்
அந்தெடைக்குக் கட்டியதோர் தாளகத்தைப் பின்னும்
வேமென்ற கல்வத்தி லிட்டுப் பின்னும்
மெல்லியர்தம் பால்விட்டு அரைத்து மைபோல்
ஆமென்ற லிங்கமொரு பலமே வாங்கி
அந்தெடைக்கு முன்னரைத்த மருந்தை வாங்கிக்
காமென்ற லிங்கத்தின் மேலே கேளு
கவசமாய்க் கட்டிமேல் சீலை செய்யே. 264

செய்யவே சாணழம் சாணகல மாகத்
திறமாகக் குழிவெட்டி யுமிப்புடந்தான் போடு
செய்திட்டுத் தீயாறி யெடுத்துப் பாரு
சேர்ந்துலிங்க முருகியது ஒருமணியாய் நிற்கும்
அய்த்திட்ட லிங்கசெந் தூர மாகும்
அப்பனே அனுபான மறிந்து போடு
மொய்த்திட்ட பதினெட்டுச் சன்னி தோடம்
முறையிடுமே வாத மெல்லாந் தானும்
கைத்திட்ட சுரங்களெல்லாம் காணு தோடும்
காட்டிடவே வெள்ளியிலே யேழு மாற்றே. 265

மாத்தென்ன வீணிலே காணுமோ சொல்
மருவியே கோசமுடன் பீசஞ் சேர்த்துச்
சேர்த்துமே போட்டிடவே வர்ணங் காணும்
சேராட்டால் வர்ணமில்லை உட்கொள் ளாது

பார்த்தாலே யுலகத்தே பறைசெய் யாதே
பாசாண்டி தன்னுடனே நீபே சாதே
காத்துன்னை யேவணங்கிக் கேட்டா லுந்தான்
காணேனு னூமையெனக் கருதி டாயே. 266

## கோடாசூழிக் குளிகை

கருதியதோர் சூதமொடு சிலையுந் தாரம்
காந்தமொடு வெண்காரம் செப்புத் தொட்டி
பருதியதோர் வெண்ணுவிசவுக் கார மிந்து
பச்சைக்கற் பூரமொடுவசு வாசி சூடன்
மருவியதோர் வெண்கெவுரி துரிசு துத்தம்
மருச்சிகையும் பெருமருந்து மல்லி வாளம்
குருதியாம் சேங்கொட்டை சித்திர மூலம்
குரோசானி வசம்பானைத் திப்பிலியு மிளகே. 267

மிளகோடு கடுக்காயும் நெல்லி முள்ளி
முனையான பெருங்காயம் கோரக்கர் மூலி
மிளகோடு மத்தம்விதை யக்கிராக் காரம்
முறையான் கோட்டமுடன் நில வேம்பு முத்தம்
பழகியதோர் தாளிசையும் கிராம்பி னேடு
பகரரிய தெசாவரங் கரியசீ ரகமுந்
திகழரிய சிறுதேக்குசெவ் வாலங் கொட்டை
சித்தமுட்டி வேர்த்தொலியும் விண்டு காந்தி
அழகான நிலப்பனைவேர் வெள்ளைப்பா டாணம்
அரத்தையொடு கருநாவி வகையைக் கேளே. 268

வகைகேளும் பேரரத்தை குரோசானி யோமம்
வகைவகைக்குக் கழஞ்சிரண்டு சமனுய்க் கூட்டி
நகையான கரந்தையுப்பு கழஞ்சி ரண்டு
நலமான தாம்பிரபற்பம் கழஞ்சி ரண்டு
தொகையான இவையெல்லாம் கல்வத் திட்டுச்
சொல்லரிய கையான்சார் நொச்சிச் சாறும்
பகையாத வேலியுட பருத்திச் சாறும்
பகரரிய செருப்படிச்சா ரவுரிச் சாறும்
நகையாத துளசிச்சார்கற் றுழஞ் சாறும்
நலமான வெவ்வேறு சாறு வாங்கே. 269

வாங்கியே நாளொன்று சாறென் றுக
வளமாக ஆட்டியின்னம் வகையைக் கேளு
வாங்கியே துளசிதும்பை வழையு[1] நீலி
வாகான குட்டிவிளா முக்கா வேளை

1. வழை=சுரபுன்னை.

தேங்கியே தழுதாழை கண்டங் காலி
சிறியகாஞ் சொறியோடு சித்திர மூலம்
பாங்கியே மலைதாங்கி காக்கை வேரும்
பரிவான திருப்பிவேர்[1] மேனி வேரும்
மாங்கியே திரிபலையும் வகைக்கோர் பலந்தான்
வட்டியே சமனுக்கிக் கியாழஞ் செய்யே. 270

செய்துமே யெட்டிலொன்று யெரித்து வாங்கிச்
சிறப்பாக முன்மருந்தி லிட்டு நீயும்
செய்துமே நால்சாமம் ஆட்டி யாட்டிச்
சிறுபயறு போலவே குளிகை செய்து
அய்துமே நிழலுலர்த்திச் செப்பில் வைத்து
ஆவினுட கொட்டத்தில் கீழே தாக்கி
மெய்யாகக் கோமயத்தின் வேகம் போட்டு
விருதான குளிகைவெகு சுத்தி யாச்சு
அய்துமே பட்சமொன்று கழித்து வாங்கு
அந்தந்தநோ யறிந்துஅனு பானத் தூட்டே. 271

ஊட்டிடவே சன்னிக்கே இஞ்சிச் சாரும்
உற்றதொரு சயமீளை யிருமல் காசம்
ஆட்டிடவே கையான்சா ருகும் சொன்னேன்
மகத்தான அத்திசுரம் பசுவின் மோராம்
ஆட்டவே பித்தசுரம் முக்கா வேளை
அப்பனே சிலேத்துமசுர மிஞ்சிச் சாறும்
நாட்டவே வாதசுரம் நொச்சிச் சாறும்
நாலாநாள் மாறலுக்குவேப் பிலையின் சாறும்
மூட்டவே தும்பையுட சாறு மாகும்
மூன்றுநாள் மாறலுக்கு முறையைக் கேளே. 272

முறைகேளு துளசிவேர் தும்பை வேரும்
[2]மூகண்ட நாயுருவி மிளகு சுக்கு
அறைகிறேன் கியாழம்வைத் ததிலே யிட்டு
அப்பனே வேண்சுரத்துக் கறையக் கேளு
பிறையான சீரகக்கி யாழத் தூட்டி
யிடுக்கமுள்ள சுரங்களுக்குக் கடுக்காய்ச் சாறும்
பிறையான விடக்கடிக்குப் பழச்சா றுகும்
பில்லிக்குமுள் ளிப்பழம் சூனியம் வெல்லம்
குறையான புண்களுக்கு வெண்ணெ யாகும்
கூறுகிறேன் கிரந்திக்குக் கூறக் கேளே. 273

1. திருப்பிவேர் = வட்டத்திருப்பிவேர்; 2. மூதண்டம் = அறுகும் மிளகும் சேர்ந்த கியாழம்.

கேளுநீ புளிப்பாணை சாம்பல் நீரும்
கெடியான தெளிவிறுத் ததிலே யூட்டு
கேளுநீ நேத்திரநோய் சகலத் துக்கும்
கிருபையுள்ள பழச்சாறு தன்னி லூட்டு
கேளே நீ கிராணிமுதல் பேதிக் கெல்லாம்
கெதியான அதிவிடையஞ் சாதிக் காயும்
வாழேநீ யபினியொடுகாட் டாத்திப் பூவும்
வகைசமனுய்ச் சேர்த்ததிலே குளிகை யூட்டு
தேளேநீ [1]மேதியுட தயிரு மாகும்
தேனுகும் பச்சரிசிக் கழுநீ ராமே. 274

நீரான காமாலை பாண்டு சோகை
நீராமை கவுசிக்குச் சொல்லக் கேளு
ஆருன நீர்முள்ளிகடுக் காய்கரி சாலை
ஆட்டினுட கோமயமு மூத்திரங் கூட்டிப்
பேருன யிடைப்பாகஞ் செய்து மைந்தா
பிலக்கவே குளிகையிடு மண்ட லங்கால்
சீரான வாதமெண் பதுவுந் தீரும்
சிறுகழுதைப் பாலுமதன் நீரு மாகும்
வீருன மலசலத்தைக் கட்டி நிற்கும்
விடவாய்வு தீரும்வேலிப் பருத்திச் சாறே. 275

பருத்தியாங் குன்மவகை மிளகோ டேலம்
பரிவான வல்லாரையறு கினுட கிழங்கு
பருத்தியா மனுபான மறிந்தே வூட்ட
பதினெட்டுக் குட்டமுடன் சூலைக் கெல்லாம்
பருத்தியாம் சிவன்வேம்புவா லுழுவை யரிசி
பரிவான கருங்காலிப்பட் டையுட தைலம்
பருத்தியாம் விடத்தேராம்வேர்த் தைலத் திலூட்டிப்
பதினெட்டுச் சூலைகைகால் முடக்குக் கெல்லாம்
பருத்தியாம் பறங்கியுட பட்டை கெந்தி
பகரெட்டிக் கொட்டையுட தைலங் கூடப்
பொருத்தியே வெள்ளுள்ளி கூடச் சேரு
புனலியுட தண்டுமதில் சுருக்காம் பாரே. 276

சுருக்காகு நாள்மூன்று கொண்டால் போதும்
சொல்லுகிறேன் பிள்ளையுட பிணிக ளெல்லாம்
சுருக்காகும் துளசிவில்வங் கஞ்சாங் கோரை
தூதுவளை கரிசாலை புட்டாய்ச் செய்து

---

1. மேதி=எருமை.

சுருக்காகும் நீர்தனிலே யூட்ட லாகும்
சொல்லியனே யனுபானத் தூட்டு வூட்டு
சிறுக்கான சிலந்திவகையெண் பத்து நான்கும்
சித்தயில முட்டியே போடு போடே. 277

போடுவது சித்தேரண்டப் பருப்பெ டுத்துப்
புகட்டியே யிளவறுப்பாய்க் கல்வத் திட்டுப்
போடுவது முலைப்பாலுமே ரண்டத் தெண்ணெய்
புகட்டியரை குழம்பாகும் குளிகை சேர்த்துப்
போடுவது [1]தூசிலே யூட்டிப் போடு
பிளவைபுத்துத் தொடைவாழை சிலந்தியரை யாப்புப்
போடுவது குழிவாழை கண்ட மாலை
பொலலாத புண்புரைகள் ரணங்கள் போமே. 278

## ஆனந்த வைரவம்

போமென்ற சருவநோ யெல்லாந் தீரப்
புகலுகிறேன் ஆனந்தவை ரவனைக் கேளு
நாமென்ற சிறுகடுகுவெண் கார மிந்து
நலமான வாளமொடு நாவி லிங்கம்
வேமென்ற சமனெடை தான் கல்வத் திட்டு
வெள்ளுள்ளித் தைலமுட னிஞ்சிச் சாறு
வாமென்ற யேழுநாள் மயனம் போலே
ஆட்டியே குன்றியள வுண்டை செய்யே. 279

செய்தவுண்டை நிழலுலர்த்திச் செப்பி லிட்டுச்
சேர்மானம் நெல்புடத்தி லிட்டு வாங்கு
துய்யவிஞ்சிச் சாற்றிலே யூட்டு வூட்டு
தொலையாத சன்னிபதின் மூன்று மெங்கே
மொய்த்ததொரு மூவேழு தோட மெங்கே
முனையான பதினெட்டுச் சுரமு மெங்கே
அய்த்திட்ட வாதமெண் பதுவு மெங்கே
அதிற்பிறந்த நோயெல்லா மெங்கே போச்சே. 280

## அக்கினிகுமாரன்

போச்சென்று சொல்லாமல்சஞ் சீவி யொன்று
புகலுகிறே னக்கினிகு மார னென்று
காச்சென்ற செம்போடுஉரு நாகம் சங்கன்
கனமான இரும்போடு சிலையுந் தாரம்

1, தூசிலே=துணியிலே.

வேச்சென்ற திப்பிலியுங்கரு நாவி சூதம்
வெங்காரம் திப்பிலியும் சமனாய்க் கொண்டு
காச்சென்ற திப்பிலியு நாவி தன்னை
யகற்றியே மற்றதெல்லாம் கல்வத் தூட்டே. 281

ஊட்டியே கற்றுழஞ் சாற்றி லாட்டி
உற்றரைப்பு நால்சாமம் குப்பிக் கேற்றிக்
காட்டியே பன்னிரண்டு சாமம் தீயே
கமலம்போல் மூட்டியே விட்டு வாங்கு
ஆட்டியேசிந் தூரம் முருக்கம் பூப்போல்
ஆமடவாகக் கல்வத்தி லிட்டுக் கேளு
நாட்டியே கருநாவிதிப் பிலியுங் கூட்டி
நலமான வெள்ளுள்ளித் தைலத் தாட்டே. 282

ஆட்டியே யிருசாம மாட்டி மைபோ
லப்பனே கயிறுபோல்சுண் டைக்கா யளவு
தீட்டுமே குளிகைசெய்து நிழலு லர்த்திச்
செப்பிலிட்டு நெல்புடத்தி லிட்டு வாங்கு
பாட்டுமே யிஞ்சிச்சார் தேனுங் கூட்டிப்
பதின்மூன்று சன்னிகா தோசம் போகும்
மாட்டுமே யக்கினிகு மார னென்றால்
மாற்றுவமை தேசத்தி லுண்டோ சொல்லே. 283

## அமுர்தாதி உண்டை

சொல்லவென்று லமுர்தாதி யுண்டை கேளு
சுகமான திரிகடுகு நாவி லிங்கம்
சொல்லுகிறேன் வகைவகைக்குக் கழஞ்சு வீதம்
சுத்திசெய்து அவ்வெடைக்கு ரசமும் கூட்டு
சொல்லுகிறே னிவையாறுங் கல்வத் திட்டுத்
தோகைமுலைப் பாலாலே நாலு சாமம்
சொல்லுகிறேன் மயனம்போ லாட்டி வாங்கு
சுண்டைக்காய்ப் பிரமாணம் உண்டை கட்டே. 284

கட்டியுண்டை நிழலுலர்த்திச் செப்பி லிட்டுக்
கசகாம லொருகுளிகை மென்று தின்ன
மட்டடங்கா உடம்பிளைத்தல் கடுப்புக் குத்தல்
வாய்வோடு சன்னிவகையுப் பிசமு மந்த
தெட்டடங்குந் தொண்டைவலிநெஞ் சுவலி யிருமல்
நீர்த்தோஷம் வெகுதாக மாயா சங்கள்
திட்டமுடன் மதலைக்கு வரும் பிணிநோ யந்தஞ்
செப்பரிய மாந்தசன்னி தீர்ந்து போமே. 285

## சர்வ பூபதி

போமென்ற சர்வபூ பதியைக் கேளு
 புகழான [1]கற்பூரமொரு பலமே வாங்கி
வாமென்ற முசுமுசுக்கை நண்டுச் சாறு
 வகைக்குவகை யிருசாமம் சுருக்குத் தாக்க
வேமென்ற பூரமது கட்டிப் போகும்
 விருதான அனுபான மறிந்து போடே
வாமென்ற சன்னியுடன் வாய்வு தானும்
 மகத்தான மேகவாய்வு மேக சூலை
நாமென்ற நாவறட்சி சன்னி தோடம்
 நலமான சந்திடுப்புச் சூலை யென்னே. 286

சூலையொடு கைகாலு முடக்குஞ் சூலை
 சொல்லரிய கரப்பனொடுகிரந் தியரை யாப்பு
சூலையாம் பூபதியின் பெருமை சொன்னால்
 தொலையாத ரோகமெல்லாந் தொலைந்து போகும்
[2]பாலையாந் தேகசித்தி யாகும் பாரு
 பண்டிதரே உங்களுக்குப் பழைய தங்கம்
ஆலையா மிதுவிட்டா லவிழ் தமேது
 அதில்தீரும் நோயேது அறிந்து பாரே. 287

பாரேநீ கிரந்தியரை யாப்புச் சூலை
 பகரரிய கரப்பனென்ற தெல்லாந் தீர
வேரேநீ பொடுதலைச்சார் படியே ரெண்டு
 வீழிச்சார் கரிசாலை சங்கங் குப்பி
வாருன யீருள்ளி தேசிச் சாறும்
 வகைக்கொரு படிவீதமுன் சாறூ டொக்கச்
சேரேநீ சித்தேரண்டத்தெண் ணெய்படி ரெண்டு
 சேரதிலே சங்கம்வேர் சித்திர மூலம்
தீரேநீ வாய்விளங்கம் பறங்கிப் பட்டை
 செம்முள்ளி யமுக்குரா செங்கத் தாரி
காரான திரிபலையுங்கத் தூரி மஞ்சள்
 கரியசீ ரகமேலங் கார்போக வித்தே. 288

வித்தான கரப்பனும்பூ தமென்றகரப்பன் பட்டை
 மிளகொடுவா லுழுவைசெஞ் சந்தனம் வசம்பு
நத்தான குமரிவேர் தகரை விதையும்
 நலமான அத்தித்திப்பிலி திப்பிலி மூலம்

---

1. கற்பூரம்—இரசகற்பூரம் (இதுவே பூரமாம்); 2. பாலை—இளமை

மூத்தான சாரணைவே ரின்பப் பட்டை
    மூக்கரட்டை வேருடனே நெருஞ்சி வேரும்
நத்தான வலம்புரிக்காய்கற் கடக சிங்கி
    நாகப்பூ மதுரமிந்துப் போம மாமே. 289

ஓமமொடு நிலவாகை வேருங் கூட்ட
    உயரீந்துநிலக் குமிழோடு நிலவிளா வேர்
வாமமே வெப்பாலை அரிசி காயம்
    மாசற்ற ரோகணியும் பங்கம் பாளை
சேமமாங் கருஞ்சூரை நாக தாளி
    செங்கழுநீர் கோட்டமுடன் சத்திச் சாரம்
காமமாஞ் சிறியகாஞ் சோறி யோடு
    கழற்கொடி யின்பருப்போடுவ கைதான் கேளே.

கேளேநீ வகைவகைக்குப் பலமே சொன்னோம்
    கெடியான கல்வத்தி லிட்டுக் கேளு
காளப்பா மூன்றுமொன்ருய்க் கலந்து ஆட்டு
    கருதியே யெண்ணெயிலே கரைத்து வாரு
வேளப்பா கொடிக்கள்ளிச் சாற்றி னோடு
    வெள்ளாட்டுப் பாலினொடு புங்கம் பாலும்
வாளப்பா அடுப்பேற்றி யெரித்துக் காய்ச்சி
    மைந்தனே மெழுகுபதம் வருதல் காணே. 291

வருதல்கண்டு மெழுகுபதம் தன்னைக் கண்டு
    வடிக்குமப்போ வடுகனுக்கும் பூசை செய்து
வருதல்கண்டு சுத்திசெய்த ரசகற் பூரம்
    மைந்தனே கழஞ்செடைநால் பொடித்துப் போடு
திரிதல்கண்டு அரிதார பற்பம் ரெண்டு
    சேர்த்ததிலே தைலத்தை வடித்து வாங்கி
விருதான கணேசர்க்குப் பூசை பண்ணி
    வேடுகட்டி நெற்புடம் வைத்து வாங்கே. 292

வாங்கியே நாளொன்றுக்கோர் கரண்டி வீதம்
    வாகாக நாள்மூன்று நாலஞ்சு பொழுதே
ஏங்காதே ஆள்வன்மை நோய்வன்மை பார்த்து
    இதமாக உண்டுவரப்பத் தியமாய் நில்லு
வாங்கியே யுண்டைநா ளெண்ணி நீயும்
    மறுபத்தி யங்காத்துநீ தலைநீர் வார்த்து
ஆங்கியேபுளி யுப்புபுகையு மெல்லாங் கூட்டு
    அதில்தீரு நோயையினி யறையக் கேளே. 293

அறைகிறேன் கிரந்தியரை யாப்பு சூலை
அதில்பிறந்த சிரங்குசொறி காளான் புண்ணும்
அறைகிறேன் மேகவெட்டை சூலைப் புண்கள்
அல்லல்தரும் தொடைவாழை ஆருப் புண்ணும்
பறையாதே மேகவெடி கரப்பா னூறல்
பகரரிதா மரைப்பிளவை புத்து தேமல்
கறையான கன்னேசி கன்னப் புத்து
கருங்கிரந்தி செங்கிரந்தி கள்ளிப் பூவே, 294

கள்ளிப்பூக் கிரந்தியொடு குறைநோய் குட்டம்
கழலண்ட வாதமொடு நாக்கில் ரோகம்
தெள்ளியதோர் பிரமேகம் வெள்ளை வீழ்தல்
தீர்ந்திடுமே பெண்களுக்குக் கெர்ப்பனே யெல்லாம்
கள்ளமின்றிச் சொல்லிவிட்டே னிந்த யெண்ணெய்
கனகமடா வயித்தியரே கண்டு பாரு
உள்ளபடி தலைமுழுக இன்ன மொன்று
உரைக்கிறேன் சூட்சசஞ் சீவி யாமே. 295

சஞ்சீவி யிஞ்சிச்சார் படிதா னென்று
தருவான நல்லெண்ணெய் படிதா னென்று
சஞ்சீவி யாவின்பால் படிதா னென் று
சாரித்து மெழுகுபத மாகக் காய்ச்சி
சஞ்சீவி யாகவே வடித்து வாங்கிச்
சாதகமாய் முழுகிவரத் தீரும் நோய்கேள்
சஞ்சீவி பீனிசமும் வாய்வு சூலை
தலைகபால மதில்நோய் மண்டைக் குத்து
சஞ்சீவி கபாலகுட்டம் சன்னி வாதம்
தலைமயக்கங் கிறுகிறுப் பெல்லாம் போமே. 296

## கருஞ்செம்பைத் தைலம்

போமென்ற மேகவகை யெல்லாந் தீரப்
புகலுகிறேன் தைலமொன் றேக மூலி
ஆமென்ற கருஞ்செம்பை யிடித்துச் சாறு
ஆவின்பால் விட்டதிலே பிசைந்து நன்றாய்
நாமென்ற படிரெண்டு பிழிந்து கொண்டு
நல்லெண்ணெய் படிரெண்டு அதிலே வாரு
ஆமென்ற அடுப்பேற்றி யெரித்துக் காய்ச்சி
யப்பனே மெழுகுபதம் வடித்தி டாயே. 297

வடித்துமே நாலுநாளைக் கொருநாள் மூழ்கு
மகத்தான மேகவகை சூடு காந்தி
நடித்துமே யத்திசுர மத்தி வெட்டை
நாடாது மெய்யெரிவுகண் ணெரிவு காந்தல்
செடித்துமே தேகசவுக் கியமு மாகுஞ்
சேர்ப்பார்கள் வயித்தியர்களிம் முறைக ளாறும்
படித்திட்ட மதனுதி சந்த ஞதி
பருவான மேகாதி யிதற்கொவ் வாதே. 298

## பீனிசத் தைலம்

ஒவ்வாத பீனிசங்க ளெல்லாம் போக
உரைக்கிறேன் மூலிகைதா னென்று சூடி
யொவ்வாத நொச்சிச்சார் படிதா னென்று
உத்தமனே யாவின்பால் படிதா னென்று
ஒவ்வாத நல்லெண்ணெய் படிதா னென்று
உத்தமனே முன்கலந்த மூலி வேரை
ஒவ்வாத ஒருபலந்தான் போட்ட ரைத்து
உத்தமனே யடுப்பேற்றிமெழுகுபத மாகக் காய்ச்சே.

காய்ச்சியே வடித்தந்த யெண்ணெய் மூழ்கக்
கதிகெடுத்த பீனிசங்கள் சொள்ளு மெங்கே
தாட்சியே வாராமல் நாலு நாள் வட்டம்
தயிலமிட்டுச் சீயக்காய் பயறு மூழ்கு
காய்ச்சியே பெற்றவைத் தியரே யுங்கட்
காய்ச்சொன்னேன் கனமானயிந்நூலைக் கைவி டாதே
சூட்சமமா யெண்பது வாதந் தீரச்
சொல்லுகிறே னஞ்செண்ணெய்த் தயிலந் தானே.

## அஞ்செண்ணெய்

தானென்ற அஞ்செ ண்ணை சொல்லக் கேளு
சாதியாம் நிம்பெண்ணெய் இலுப்பை யெண்ணெய்
தேனென்ற நல்லெண்ணெய் தேங்கா யெண்ணெய்
சித்தேரண் டத்தெண்ணெய் விவரங் கேளு
வேனென்ற வகைவகைக்கு ஒரு படிதா னெண்ணெய்
வேப்பெண்ணெய் படிரெண்டு அளந்து வாரு
வானென்ற திருகுகள்ளி யிஞ்சிச் சாறு
வெள்ளுள்ளி தூதுவளை நொச்சிச் சாறே. 301

சாருன மணியுத்தா மணியி னேடு
தழுதாழை முடக்கொத்தான் சித்திர மூலம்
தேரான மருங் கையுட பட்டைச் சாறு
தேள்கொடுக்கி தைவேளைச் சாறுங் கூட்டி

தாருன பாதாளம்[1] மூலிச் சாறு
நதிகெசாச் சாறுவகை சொல்லக் கேளு
பேருக் வகைக்கொரு படிதான் சொன்னேன்
பேசாதே யெண்ணெயிலே யளந்து வாரு
கூருன வேறுவகை சொல்லக் கேளு
கொடிவேலி வேலைநிம்ப மேனி யாமே. 302

## வாயுவுக்கு எண்ணெய்

மேனியாந் தழுதாழை நொச்சி சங்கு
விருதான கருவாகை முன்னை குன்றி
ஆனியா மாவிலங்கம் பட்டை யோடு
மாயிலியம் பட்டையுடன் [2]காட்டுக் கொட்டை
ஞானியாங் கொள்ளுக்காய் வேலை நீலி
நாய்வேலை தூதுவளைச்சா ரணையின் வேரும்
வானியா மருள்கிழங்கு [3]வாதங் கொல்லி
வரியகத் தாழையொடுவன முருங்கை யாமே. 303

முருங்கையாங் கருங்காலி விடத்தோர் முன்னை
முத்திருக்கஞ் செவியிநெடு பேய்க்கு மட்டிவேர்
முருங்கையாங் கோப்பிரண்டை திருகுகள்ளி
முசங்காது கள்ளியுத்தா மணியின் வேரும்
குருங்கைபெரு மத்திப்பட்டைசித்தே ரண்ட மூலி
குமிழோடு சதாவரி தென்னை வேரும்
முருங்கையா மிருவேலி நாய்க்கொட் டான்வேர்
எருக்கம்வேர் சிவன்வேம்பு தேவ தாரம்
கருங்கையா மாதளைவேர் நாணல் வேரும்
காட்டாத்திப் பட்டைகருங் குருந்தின் வேரே. 304

குருந்தான அமுக்குரா முக்கா வேளை
கொட்டான கிழங்கா தண்டை வேரும்
குருந்தான மயிலரளிப் பட்டை வேரும்
குணமான கருஞ்சூரைபெரு மரத்தின் வேருங்
குருந்தான நீர்க்கடம்பு காசா வன்னி
குறையாதே வகைவகைக்குப் பலந்தா னூலு
குருந்தாக இவையெல்லாம் சமனுய்க் கொண்டு
குழறவே யிடித்தொருபாண் டத்தி லூட்டே. 305

---

1. பாதாளமூலி=ஆடுதின்னைப்பாளை; 2. காட்டுக்கொட்டை=காட்டாமணக்கு; 3. வாதங்கொல்லி=வாதநாராயணன்.

ஊட்டியே யீரெட்டு மரக்கால் நீர்தான்
ஊறவைத்து யீராறி லொன்ருய்க் காய்ச்சி
மூட்டியே முன்னேநீ பாகஞ் செய்த
மூனையான யெண்ணெயொடு சேர்த்தொன் ருக்கி
நாட்டியே கற்கவகை சொல்லக் கேளு
நலமான பெருங்காயம்வெள் ளுள்ளி வசம்பு
சூட்டியே சுக்கோடு மிளகு ஓமம்
சொல்லிய திப்பிலியுந் திப்பிலி மூலம்
மாட்டியே சதகுப்பைநவச் சாரங் குக்கில்
ஆனைத்திப் பிலியோடு அரத்தை ரெண்டே. 806

இரண்டோடு பெருமருந்து முசுறு முட்டை
நேரான மயிலாகு மண்டத் தோடு
அன்ருன குதிரையுட குளம்பு சீவி
ஆகாசத் தூளோடு மாமரம் பூத்த காளான்
கன்ருன கடல்நுரையுஞ் சமுத்திராப் பழமும்
குருங்கோடு நண்டோடு கழற்சி வித்தும்
வண்டான திரிபலையும் பறங்கிப் பட்டை
வளமான சதகுப்பைமர மஞ்ச ளாமே. 807

மஞ்சளொடு செஞ்சந்தந் தேவ தாரம்
மாசற்ற வக்கிரா காரங் கோட்ட
மிஞ்சாதே வகைக்கொரு பலந்தான் சொன்ேனம்
வெள்ளாட்டுக் கோமியத்தா லரைத்துப் போடு
அஞ்சாது லடுப்பேற்றிஒரு விறகால் மாட்டி
அதுவற்றி மெழுகுபதம் வருதல் கண்டு
கஞ்சமாம் வடிகலசத் துள்ளே கேளு
காந்தசெந் தூரமொரு கழஞ்சு நாலே. 808

நாலோடு லிங்கசெந் தூரம் போடு
நலமான தாம்பிரசெந் தூரம் போடு
பாலோடு லோகசெந் தூரம் போடு
பக்குவமாய்த் தைலத்தை வடித்து வாங்கிச்
சேலோடு கணபதியைப் பூசை செய்து
செப்பரிய விபாதிமா ரணத்தை யோது
மேலான தானியபுடம் வைத்தெ டுத்து
மேலெங்கும் பூசியே முறுக்கி டாயே. 809

முறுக்கியே யனல்காட்டிக் கடுகித் தேய்த்து
முனையான தைலமொருகா செடைதா னுண்ணு
முறுக்கியே நோயறிந்து ஆட் பலனும் பார்த்து
மூனுநா ளாறுநாளொன் பதுநாள் கொள்ளு

முருக்கியே உப்போடுபுளி புகையுந் தள்ளு
வெந்நீரும் சோறுமா யுண்டு தேறு
மருக்கியே கடிதானபத் தியந்தான் வேணும்
மக்களே தீரும்நோய் வகையைக் கேளும். 810

வகைகேளும் வாதமெண் பதுவு மெங்கே
மகத்தான வாய்வென்ப திருபத் தாறும்
தொகைகேளு பக்கவாதம் பாரிச வாதம்
துடியான இளம்பிள்ளை வாத மெங்கே
திகையாதகை முடக்குங்கால் முடக்கு வாதந்
திமிரான பதினெட்டுச் சூலை யெங்கே
பகையான கழலண்ட வாத மெங்கே
பதின்மூன்று சன்னியெங்கே வாத மெங்கே
திகையான கபாலசன்னி கபால வாய்வு
சிரசிலுள்ள மேகமெல்லாம் சேரப் போமே. 811

சேரப்போ முள்குத்துப் புறவீச் சோடு
சிறப்பான இசிவேங்கலுப் பிசமும் பாண்டு
நீரான பெரும்பாடு நீரான பெருவயிறு
காமாலை சோகைநீர்க் கோவை தானும்
குவலையத் தீளையோடு மாந்தை வெப்பு
கூரான குமரகண்டன் முயலி னோடு
குதிரைவலி காக்கைவலி நடுக்கு வாதம்
தீராத வஞ்சனையும் பில்லி சூனியம்
சிரங்குசொறி கரப்பனொடு குறைநோய் குட்டம்
சேராத வண்டுகடி பலவி டங்கள்
சில்விட்டமும் பேய்நரியும்நாய் கடிகள் போமே. 812

கடினம்போம் கெவுரிசிந்தா மணியி னோடு
கடிதான திரிலோகஞ் சேர்த்துக் கொள்ளு
கடிகளாஞ் சுகபேதி யெண் ணெய் கேளு
கனமான சித்தேரண்டத் தெண் ணெய்படி யொன்று
கடியான பசுவின்பால் படிதா னுலு

... ... ... ... ... ... ... ... ... ... ... ... ... ... ... ... ...

துடிகளா மதிமதுரங் கடுக்காய் இந்து
சுத்திசெய்த வாளமொடு கடுதரோ கணியும்
அடிகளாம் வகைவகைக்குக் கழஞ்சு நாலு
அரைத்துமே கரைத்ததிலே யடுப்பி லேற்றே. 813

அடுப்பேற்றி மெழுகுபத மாகக் காய்ச்சி
அப்பனே வடித்தெடுத்து வைத்துக் கொண்டு
அடுப்பேற்றி யெண்ணெய்கொள்ள விவரங் கேளு
ஆளறிந்து சிறுபிள்ளைக்கோர் கரண்டி யாகும்

கடுப்பாற்றிப் பெரியோர்க்குமுக் கரண்டி யாகும்
கற்குடல் காரருக்குஅரைக் கால்சேர் கால்சேர்
அடுப்பாக எண்ணெயுண்டு கடிகைக் கைப்பால்
அப்பனே யுப்பில்லை வெந்நீர் கொள்ளே. 814

வெந்நீர்தா னுண்ணநல்ல பேதி யாகும்
வேணமட்டும் பேதிகண்டு தாங்கா தென்றால்
செந்நீராஞ் சுடுகஞ்சி யதனை யாற்றிச்
சிறுகநீ யுப்பிட்டுக் கொள்ளு கொள்ளு
மன்னீர மில்லாட்டால்மோ ரசனம்[1] பண்ணு
மாலையிலே சீரகமு மிளகு சுக்கு
நன்னயமாய்க் கியாழமிட்டு ராத்திரிக்கு
நலமாக மிளகுநீர்ச் சோறு முண்ணே. 815

உண்ணவே யிப்படியே திங்க ளொன்று
உறுதியாய்க் கொண்டுவர நோய் தானேது
உண்ணவே வாய்வேது வாத மேது
உத்தமனே சிரங்குசொறி கரப்பா னேது
உண்ணவே கணமேது மாந்த மேது
உட்சூடு அத்திசுரம் வெட்டை யேது
உண்ணவே தேகவலி திமிர்க டுப்பு
ஓதுகின்ற வாதநீர்ச் சுரப்பு வாங்கும்
உண்ணவே பித்தமெல்லாங் கீழே நோக்கும்
உசத்தியா மெண்ணெய்தனை யுரைக் கொணுதே. 816

## சுகபேதிக்குச் சதுரக்கள்ளி உசிதம்

ஒண்ணன சதுரக்கள்ளிவேர்ப் பட்டை வாங்கி
உத்தமனே துண்டுதுண் டாய் நறுக்கி நீயும்
ஒண்ணது ஆவின்பா லவித்து லர்த்தி
உத்தமனே யிப்படியேமூன்று தரமு லர்த்தி
ஒண்ணது உலர்த்தியே வைத்துக் கொண்டு
உத்தமனே பாக்களவு பட்டை கொள்ள
ஒண்ணது பத்துவிசை பேதி யாகும்
உத்தமனே குளித்துமோ ரசனம் பண்ணு
உண்ணவே மாலையிலே சீரகமு மிளகு
உற்பனமாய்க் கியாழமிட்டு உண்ணச் சொல்லே. 817

---

1. மோரசனம்—மோரும் சோறும்.

## முகர்பேதி

சொல்லவே தேகசு வுக்கிய மாகுஞ்
சொல்லுகிறேன் சுகபேதி யாகக் கேளு
வல்லான வெள்ளைக்குங் கிலியங் கட்டி
வாங்கியே சதுரக்கள்ளி மரந்து ளைத்து
மெல்லவே யதற்குள்ளே குங் கிலியம் வைத்து
மூடியே பட்சமொன்று கழித்து வாங்கு
நல்லவே யுலர்த்தித்தான் வைத்துக் கொண்டு
நலமான குங்கிலிய மெடுத்துக் கொஞ்சம்
மெல்லவே கனலிலிட்டு அரளிப் புட்பம்
மேற்பிடிக்கில் குங்கிலியப் புகைதா னேறும்
வல்லதொரு புகையெல்லாம் பூவி லூட்டி
மைந்தனே பூமுகர்ந்தால் பேதி யாமே. 818

## சுகபேதி உசிதம்

பேதியாம் பூமுகரு மட்டும் பேதி
பேதியில்லை முகராட்டால் சூட்சம் சூட்சம்
பேதியின்ன மொருசுக பேதி யப்பா
பேசுகிறேன் அதிமதுரம் நிலவா வாரை
கோதில்லா வித்துலர்த்தித் தூளாய்ப் பண்ணிக்
கொடிதான அதிமதுரத்தூள் வாயி லிட்டுச்
சோதியாம் வெந்நீரைக் கொள்ள வேதான்
சுகபேதி யாகுமப்பா சிவதை வேரைச்
சோதியாய் அதிமதுரம்போல் பாகஞ் செய்து
தூளிட்டு வெந்நீர்கொள்ளச்சுக பேதி யாமே. 819

## சுகபேதி எண்ணெய்

பேதியா மின்னமொரு சேதி கேளு
பிரமியொடு கற்ருழைகருவே லின்கொ ழுந்து
காதியாங் கடுகுரோகணி யுநில வாகை
கடுக்காய்[1]களியடைக் காயிது சமனுய்க் கொண்டு
சேதியா மெட்டொன்ருய்க் கியாழஞ் செய்து
சித்தேரண்ட எண்ணெயதில் சமனுய் விட்டு
நீதியாய்க் கொண்டிடவேசுக பேதி யாகும்
நித்திய மாய்க்குளித் தசனம் பண்ணே. 820

---

1. களியடைக்காய்=களிப்பாக்கு.

## கிருமிபோக்கி உசிதம்

பண்ணுபுர சம்வித்து ஆவின் பாலில்
பாங்காக அவித்துண்ணவெகு பேதி யாகும
சண்ணுவது தேகசுகஞ்ச லிக்கய மாகும்
சண்டாளக் கிருமியெல்லா மற்றுப் போகும்
நண்ணுவது கிருமிக்கே யின்ன மொன்று
நலமாகக் கொன்றையுட கொழுந்து வாங்கி
மண்ணுவது உப்பில்லா தவித்து உண்ண
மறுநாளில் கூட்டோடே கிருமி வீழும்
திண்ணமாய்க் கைகண்ட வித்தை யாகும்
செப்புகிறே னின்னமொன்று துவரை வாங்கே. 821

துவரைதனை வேகவைத்துச் சலத்தை வாங்கு
சொல்லரிய கரும்புவெல்ல முள்ளே யுண்ணு
துவரைவெந்த நீரதன்மேலரைச் சேரை யுண்ணச்
சொற்பெரிய கிருமியெல்லாம் சேர்த்துச் சேர்த்துத்
துவரையா மற்றைநா ளெல்லாம் வீழும்
துயரமது வும்நசிக்குந் தோட மில்லை
துவரையாம் நேத்திரநோய்க் கெல்லா மைந்தா
சொல்லுகிறேன் மருந்தொன்று சூட்சங் கேளே. 822

## கண்ணோய் உசிதம்

சூட்சமாஞ் சமுத்திராப் பழத்தை வாங்கித்
துப்புரவா யாவின்பா லவித்து லர்த்திச்
சூட்சமாம் நேத்திரநோய் சகலத் துக்குஞ்
சொல்லரிய முலைப்பாலி லுறைத்துப் போடச்
சூட்சமாய் நேத்திரநோ யெல்லாந் தீரச்
சொல்லுகிறே னின்னமொரு சூட்சங் கேளு
சூட்சமாங் கூவிளத்தின் பழத்தின் வித்துச்
சுத்திசெய்து கழுவியே யெடுத்து நன்றாய்ச்
சூட்சமாம் பழச்சாற்று லரைத்து மைபோல்
சிமிழில்வைத்து நந்திப்பூச் சாற்றில் போடே. 823

போடவே கண்புகைச்ச லெரிவு காந்தல்
புகைமேகம் நீர்ப்பாய்ச்சல் பூச்சி வெட்டு
நாடாதே கடுப்புவலி பிணிகள் வாய்வு
நலமான வெளிச்சமிரு ரோகந் தீரும்
வாடாதே நேத்திரநோய்க் கெல்லா மிந்த
வளமான குளிகையொன்று சொல்லக் கேளு
சாடவே சங்குதிரி கடுகு காரம்
தருவான அதிமதுரம் புங்கம் வித்தே. 824

## கண்ணேய்க் கயிறு (1)

வித்தான மனேசிலையும் பீத ரோகணி
விருதான துத்தமிவை பத்துங் கேளு
நத்தியே கொண்டுவந்து கல்வத் திட்டு
நந்தியா வட்டப்பூச் சாற்றி லாட்டிச்
சித்தியாம் கயிருக்கி நிழலு லர்த்தித்
தேனிலிட்டு நேத்திரநோய் தொண்ணூற் ருறும்
சத்தியமாய்ச் சொல்லுகிறேன் தீர்ந்து போகும்
சண்டாளர்க் கிந்நூலைக் காட்ட வேண்டாம்
முத்தியார் மாணிப்பூ மாறல் வேண்டி
முக்கியமா யின்னமொன்று மொழிகி றேனே. 325

## கண்ணேய்க் கயிறு (2)

மொழிகிறேன் கலங்கொம்பு முத்தி ராட்சம்
முனையான வெள்ளைச்சா ரணையின் வேரும்
தெளிவான தேசிப்பா லானைத் தந்தம்
சேவலுட நெஞ்செலும்பு சரிகை வெள்ளி
பழியான புலிநகமும் மேனி வேரும்
பாங்காக எடைசமனு யாவின் னீரில்
கழியாமல் மூன்றுநாள் ஊறப் போட்டுக்
கல்வத்தி லிட்டுமுலைப்பா லாட்டிக் கொண்டு
அழியாமல் கயிறுசெய்து நிழலு லர்த்தி
ஆணிப்பூக் குந்தத்துக் கறையக் கேளே. 326

அறைகிறேன் தேனிலிடக் கரைந்து போகும்
அப்பனே கைகண்ட வித்தை பாரு
இறையான மேல்தலைநோய் கண்வலிக் கெல்லாம்
எலுமிச்சம் பழத்தினுட முத்தைச் சீவி
அரையான கத்திகொண்டு தோய்த்து நன்ருய்
அரப்பொடியை அதனுள்ளே செலுத்தி மேலே
பறைகிறேன் மெலிதான சீலை கொண்டு
பந்துபோல் பொட்டணமாய்ப் பிடித்துக் கொண்டு
திரையான முலைப்பாலை மேலே விட்டுத்
தீபமுகங் காய்ச்சியே கசக்கி டாயே. 327

கசக்கியே கையிலே வைத்துக் கொண்டு
கண்களிலே மாறும லொத்து வொத்து
மசக்கற்றுக் கண்வலிகள் கடுப்புக் குத்து
மாருதசிவப் போடுமேல் தலைவாய் வெல்லா

மிசகில்லா நாள்மூன்றில் தீர்ந்து போகும்
இதுபோல நேத்திரத்துக் கொன்று மில்லை
[1]குசக்கணக்குச் செய்யாதே நேத்திர நோய்க்குக்
குறிப்பறிந்து குணமாக நன்கு செய்யே. 328

## சுர தோடத்துக்குப் பூபதி மாத்திரை

செய்யாய்நீ பூபதியைச் சொல்லக் கேளு
செப்பரிய நாவிரசம் அரிதாரங் கெந்தி
தையான திரிகடுகுவெங் காரம் வாளம்
சமனுகச் சுத்திசெய்து கல்வத் திட்டு
மெய்யான கொடிவேலிச் சாற்று லப்பா
விடாம லெழுநாளாட்டி மையைப் போலே
கையாலே கயிறுபோ லுண்டை செய்து
கனமான நிழலுலர்த்திச் செப்பில் மூடே. 329

மூடியே தேனிஞ்சிச் சாற்றி லூட்டு
முரிந்தோடுஞ் சன்னிசுர தோட மெல்லாம்
நாடாது வாயுவோடு வாத மெல்லாம்
நடுங்குமே சுரமெட்டும் குன்ம மெட்டும்
ஓடியே போகுமடா நா வறட்சி தோடம்
ஒடுங்காத சயகாச மெல்லாம் போகும்
வாடாதே யிளையாதே யெண்ணல் போலே
வயித்தியரே உங்களுக்குக் கிட்டு மோசொல்
தேடியே வயித்தியநூல் கிட்டி னுலும்
தெளிவாக எனைப்போலே சொல்லார் பாரே. 330

## இராமபாணம்

பாரேநீ சுரமனைத்துந் தீர வேண்டிப்
பாடுகிறேன் சுரராம பாணந் தன்னைச்
சேருநீ வெள்ளையொடு கெவுரி ரெண்டும்
சேர்சமனுய்க் கற்சுண்ணத் துள்ளே வைத்துக்
காரேநீ தொளாந்திரமே யெரித்து வாங்கிக்
கல்வத்தி விட்டதனை யரைக்கக் கேளு
ஆரேநீ பெரும்பாகல் சாறு விட்டே
அரைத்திடுவாய் மூன்றுநாள் கைமா ருமல்
சேரேநீ உளுந்தளவு குளிகை கட்டிச்
சிறப்பாக நிழலுலர்த்தித்தா னியபுடம் வையே. 331

---

1. குசக்கணக்கு=பிசகான கணக்கு.

வைத்துமே செப்பிலே பதனம் பண்ணு
வளமான சுரங்களுக்கு அனுபானங் கேளு
முந்துமே யிஞ்சிதேன் முலைப்பா லாதல்
முனையான நொச்சிநல் முருங்கைப் பட்டை
கொத்துமே தும்பைநீர்சுக் கரத்தைக் கியாழம்
சொல்லியதோ ரனுபான மறிந்து போடு
மொய்த்துமே மூன்றுநாள் போடு போடு
முறைச்சுரங்கள் குளிர்காய்ச்சல் மூன்று மாறல்
நைத்துமே நாலாநாள் மாற லோடு
நலமான பதினெட்டுச் சுரமும் போமே. 332

## சுர மாத்திரை

சுரம்போகும் சுராங்குசமாங் குளிகை கேளு
சொற்பெரிய அரிதாரம் பலமே தூக்கிச்
சிரமாகப் பாக்களவாய்த் துண்டு துண்டாய்ச்
சீவியே சீலையிலே கிழிபோல் கட்டி
உரமான ஓட்டிவிட்டுக் கல்லுச் சுண்ண
முத்தமனே கீழ்மேலு மிட்டுக் கேளு
அரமான தேசிநீர் விட்டு நீற்றி
அப்படியே தேசிநீர் விட்டு விட்டே
வுரமான வேழு தரமே நீற்ற
உத்தமனே கடியசுத்தி யாகும் பாரே, 333

சுத்தியா யெடுத்ததனைக் கழுவிப் போடு
சொற்பெரிய கற்சுண்ணம் சிறுநீர் விட்டுச்
சுத்தியாய்க் கரைத்தந்தத் தெளிவை வாங்கித்
தொளாந்திரங் கட்டியே நாலு சாமம்
சித்தமாய் நிரலான சிறுதீ யாக
சித்தியாயோர் இனவிறகால் எரித்துப் போடு
பத்தியாந் தொளந்திர மாக வாங்கிப்
பக்குவமாய்க் கட்டியினுல் சாம மாட்டே. 334

ஆட்டியே யரசம்பட்டைக் கியாழத் திட்டு
அப்பனே தொளாந்திர நாலு சாமம்
கூட்டியே யெரித்துநன்றுய்க் கழுவிப் போடு
கொம்பினுட பாகக்காய் முற்றல் வாங்கி
வீட்டிமை யாய்க்குடைந்த விதையைப் போக்கி
விதமான அரிதார மதனுள் வைத்து

ஆட்டியே சுண்ணும்புச் சீலை செய்து
அதன்மேலே யெருமையுடசா ணம்பொ திந்து
காட்டியே புடம்போடு பாகற் காய்தான்
கருகாமல் வெந்துவரும் பதத்தைப் பாரே. 335

பதம்பார்த்துச் சுண்ணும்புச் சீலை தள்ளிப்
பக்குவமாய்க் காயோடே கல்வத் திட்டுப்
பதமாக அரைத்திடுவாய் நாலு சாமம்
பத்தாட்டால் பாகலிலைச் சாறு விட்டே
இதமாக மயனம்போ லரைத்து நன்ரு
யெடுத்ததனைச் சிறுபயறு குளிகை கட்டி
அதமாக நிழலுலர்த்திச் செப்பி விட்டு
அப்பனே தானியபுட மிட்டு வாங்கே. 336

வாங்கியே வாதசுரம் மிஞ்சிநீர் தேன்
மைந்தனே பித்தசுரம் நொச்சிச் சாறு
தேங்கியே மல்லியுட கியாழ மாகுஞ்
சிலேற்றுமத்துக் கரத்தைசுக்குக் கியாழ மாகும்
ஏங்காதே யிவ்வகையாமனு பானம் பாரு
இல்லாட்டா லதுக்கிசைந்த கியாழத் தூட்டே
ஏங்கியே வெகுசுருக்காம் ராம பாணம்
இன்னமொரு பாடாணக் கட்டைக் கேளே. 337

## பாடாணக் கட்டு

பாடாண வெள்ளையது பலந்தான் வாங்கிப்
பரிவான சுண்ணும்புச் சீலை சுத்திப்
பாடாண வெள்ளாவிக் கல்லில் வைத்துப்
பதமாக வெந்தெடுத்து மறுபடியும் வைத்துப்
பாடாண மிப்படியே மூன்றுதரம் வைக்கப்
பரிவான எண்ணெய்கக்கிச் சுத்தி யாச்சு
பாடாண மிப்படியே சுத்தி செய்து
பாங்கான அயக்கரண்டிக் குள்ளே வைத்துப்
பாடாண முந்திரிகைச்சா ராயங் கொண்டு
படிகொண்டு நால்சாமம் சுருக்குத் தாக்கே. 338

தாக்கவே பாடாணங் கட்டிப் போகும்
தனியெடுத்துப் பிராயப்பட்டைத் தைல மூட்டி
ஆர்க்கவே கட்டியது மெழுகு போலாம்
அப்பனே வேதையிட வெள்ளி யாகும்

ஏற்கவே யனுபான மறிந்து போட
எட்டெட்டு வகைச்சுரங்க ளெங்கே போச்சு
காக்கவே சன்னிசுர மெல்லாம் நீங்கும்
காணுது பாடாணக் கட்டுத் தானே. 339

கட்டான குளிர்சுரத்துக் கியாழங் கேளு
காட்டுநல்ல கரந்தையொடு சுக்கெட் டாகும்
துட்டான கழற்சியுடை பருப்பஞ் சாரும்
குளஞ்சிவே ரஞ்சாகும் கூட்டி யொன்ருய்க்
கொட்டியே நீர்வார்த்துக் குறுக்கிக் காய்ச்சிக்
குடித்திடவே குளிர்சுரங்க ளெல்லாம் போகும்
திட்டமா மின்னமொரு கியாழங் கேளு
சீந்திலொடு பேய்ப்புடலுந் தோடை வேரே. 340

வேரான நிலவேம்பு கண்டங் காரி
விருதான சுக்கோடு பற்ப டாகம்
சேரவே யிடித்தொன்ருய்ப் பாண்டத் திட்டுத்
திரமாக நீர்வார்த்தெட் டையொன் ருக்கி
கூருக அந்திசந்திதேன் கலந்து கொள்ள
கோடான கோடிசுர மோடிப் போகும்
நீருகு மற்றுமுள்ள சுரங்க ளெல்லாம்
நில்லாதின் னமொன்று நிகழ்த்து றேனே. 941

நிகழ்த்துறேன் சர்வசுரக் கியாழங் கேளு
நிலையான லாமிச்சஞ் சீந்தில் முத்தம்
நிகழ்த்துறேன் காஞ்சொறி பற்ப டாகம்
நிசமான தெசாவரம்வேப் பீர்க்கு கோட்டம்
நிகழ்த்துறேன் சிறுதேக்கு கண்டங் காரி
திப்பிலியும் சுக்கோடு சிற்ரு முட்டி
விகழ்த்துறேன் துளசிவேர் பேரா முட்டி
விட்டுணுகிராந்தி சமனிடித்தோர் பாண்டத் துட்டே.

இட்டுமே நீர்வார்த் தெட்டொன் ருக்கி
யியல்பாக வருந்தசுர மெல்லாம் போகும்
தட்டியே நாள்பட்ட சுரத்துக் கெல்லாம்
சாற்றுகிறேன் தாமரையின் கிழங்கு முத்தம்
எட்டுமே நன்னரி கிராம்பு கோட்டம்
ஏலமொடு தாளிசையும் நாகப் பூவும்
மட்டுமே யிலவங்கபத் திரியி னேடு
மதுரங்கோ ரோசனையும் விட்டுணு காந்தி
தட்டியே தென்னம்வேர் வில்லைத் தோடும்
சமனுக எட்டொன்ருய்க் கியாழ மூட்டே. 343

ஊட்டவே பழஞ்சுரங்க ளெல்லாம் போகும்
உரைக்கிறேன் வாதபித்த சுரத்துக் கெல்லாம்
வேட்டவே சங்கம்வேர் வில்வ வேரும்
விளாவேரும் நன்னாரி அறுகம் வேரும்
தீட்டியே நெல்பொரியு முக்கா வேளை
சிறுபயறு வகைசமனாய்ச் சேகரித் தொன்றாய்
ஆட்டியே நீர்வார்த் தெட்டொன்றாக்கி
அருந்திடவே வாந்திசுரம் பித்தம் போகும்
மாட்டிடவே தாபசுரம் எல்லாந் தீரும்
மைந்தனே யின்னமொரு வரிசை கேளே. 344

## அதிசாரச்சுரக் குடிநீர்

வரிசையென்ன வதிசார சுரத்துக் கெல்லாம்
மாம்பட்டை யதிவிடைய முதியார் கூந்தல்
கிரிசையாஞ் சுக்கோடு முத்தக் காசு
துண்டித்து நீர்வார்த்தே யெட்டொன் றாக்கிப்
பிரிசமா யிலவினுட பிசினும் நன்றாய்ப்
பொடித்திட்டுக் கொண்டிடவே புகலக் கேளு
கரிசையா மதிசார சுரங்க ளெல்லாம்
கண்காணா தோடுமடா கண்டு பாரே. 345

கண்டுபார் பித்தசுரம் பித்த வெட்டை
கண்காணா அத்திசுரம் காணா தோடக்
கொண்டுபார் பேய்ப்புடலுங் கிராம்பு சுக்கு
கொன்றைவேர் மருட்கிழங்குநில வேம்பு மல்லி
தண்டுமிண்டு செய்யாதே சமனாய்க் கொண்டு
சாதகமாய் நீர்வார்த்தே யெட்டொன் றாக்கிக்
கொண்டிடவே சொன்னதொரு சுரங்க ளெல்லாம்
குலைந்தோடு மென்றுமுனி கூறி னாரே. 346

## தாபசுரக் கியாழம்

கூறினார் தாபசுரத் தோட மெல்லாம்
குணமாக இன்னமொன்று கூறக் கேளு
நேரான வில்வவேர் விலாமிச் சம்வேர்
நெருஞ்சிவேர் நன்னாரிஅதி மதுரம் சோம்பு
வீறான விளாவோடு முத்தக் காசு
விருதான நெல்பொரியுமுந் திரிகைப் பழமும்
சீரான நெல்விமுள்ளி யிலுப்பைப் பூவும்
திரமான சுக்குவகை சமனாய்க் கொண்டு

கூருகக் கியாழமதை யெட்டொன் ருக்கிக்
கொடுத்திடவே தாபசுரம் மயக்கந் தூக்கம்
தேருன நாவறட்சி தோட மெல்லாம்
தீர்ந்துபோம் வயித்தியரே திறமாய்ப் பாரே. 347

பாரேநீ பித்தவகை யெல்லாந் தீரப்
பாடுகிறேன் பஞ்சதாரைக் கிழங்கு ரெண்டு
பாரேநீ யதிமதுரம் கழஞ்சு மூன்று
பயிலிஞ்சி நாற்கழஞ்சி யேல மொன்று
ஆரேநீ திப்பிலியோர் கழஞ்சு கூட்டு
அரைத்தாவின் பாலுடனே கொள்ளு கொள்ளு
மீறிவரும் மிஞ்சுபித்தம் நெஞ்செரிப்பு
வெள்ளோக்கா ளத்திெனுடு வுட்ண வாய்வே. 348

வாய்வோடு அரோசியங்க ளன்ன தோடம்
வளர்பித்த சுரமோடுப் பிசமுங் கூட
வாயுவா மிவையெல்லாம் போகு மின்னம்
வலிப்புவகைக் கின்னமொரு வரிசை கேளு
தேய்வென்ற தாளகமோர் பலந்தான் ரெண்டு
சீலையொன்று கெவுரியொன்று வீரமரைப் பலந்தான்
நாயமாம் வெடியுப்புக் கல்லுப் போடு
நவச்சாரம் பூநீறுவகைக் கரையாம் பலமே. 349

பலமாக இவையெல்லாஞ் சுத்தி செய்து
பாங்காகக் கல்வத்தி லிட்டுக் கேளு
விலமான மஞ்சளென்ற கருவா லாட்டி
வில்லைகட்டி உலர்த்திநன் ருய்த் தைலம் வாங்கி
நலமான சன்னிவகை வலிப்புக் கெல்லாம்
நாகவல்லி வெற்றிலையில்பண வெடைதா னூட்டு
குலமாகும் பதின்மூன்று சன்னிவலி யெல்லாங்
குடிபோகும் போகும்மறு தேசம் பேர்த்தே. 350

## குமட்டிக் குழம்பு

பேர்க்கவே குமட்டிக்காய்க் குழம்பு கேளு
பேய்க்குமட்டிக் காய்ச்சாறு படிதா னென்றே
ஆக்கியே வடித்துத்தாளியில் சேர்த்து நீயும்
அடுப்பேற்றி யெரிகுழம்பாய் வருகும் போது
தூய்க்கவே கருப்பான சீரகமுங் கழஞ்சு
சுத்திசெய்த வாளமொரு கழஞ்சு கூட்டி
வீக்கவே கடுகுரோணி கடுக்கா யிந்து
வெண்காரந் திப்பிலியோர் வகைவ கைக்குக்

காக்கவே கழஞ்சியொன்று கல்வத் திட்டுக்
காயமொரு கழஞ்சிட்டு அரைத்து மைபோல்
வேர்க்கவே குழம்பிலே போட்டுக் கிண்டி
வேப்பெண்ணெய் ஒருகழஞ்சு கூட வாரே. 351

வாருமே பனைவெல்லங் கழஞ்சி யஞ்சு
வளமாக இவையெல்லாஞ் சேர்த்துக் கொண்டு
பாருமே மெழுகுபதம் பார்த்து வாங்கு
பரணிதனி லடைத்துவைத்துப் பாகங் கேளு
சேருநீ பெரியோர்க்குப் புளியம்விதை யளவு
சிறியோர்க்கே யதிற்பாதி பனைவெல்லத் தூட்டு
கூருக வெகுபேதி யாகும் பாரு
குளிர்ந்தசலம் தனிற்குளித்து அசனம் பண்ணே. 352

பண்ணவே பேதிநிற்கும் தீரும் நோய்கேள்
பருவாளை கௌசிகெண்டை யைவகை வெப்பு
நண்ணவே பெருவயிறுமகோ தரமும் பீலி
நலமான உளமாந்தைநீர்க் கோவை யோடு
வண்ணமாம் பாண்டோடு சோகை குன்மம்
வலுவீக்கம் கீரிப்புழு வாய்வு குன்மம்
கண்ணுன விவையெல்லாந் தீருஞ் சொன்னேம்
கனகமாம் வைத்தியரே கண்டி டீரே. 353

கண்டிடீர் சர்வசுர சன்னி தோடம்
கர்மமெல்லாந் தீரவொரு குளிகை சொல்வோம்
நன்றதாம் மால்தேவி கெந்தி லிங்கம்
நலமான கோரோசனை கூடக் கூட்டிப்
பண்டுள்ள சுத்திசெய்ததைக் கல்வத் திட்டுப்
பாகவிலைச் சாற்றிஞல் சாம மாட்டி
விண்டிடவே மைபோலே யாட்டி நன்ருய்
வெந்தயம்போல் குளிகைசெய்து நிழலு லர்த்தி
அண்டிவரு சன்னிசுரம் தோட மெல்லாம்
அனுபான மறிந்திடவே யகன்று போமே. 354

அகன்றுபோம் விதைவாதம் அண்ட வாதம்
அகலவேசித் தேரண்டஎண் ணெய்படி ரெண்டு
விகண்டமிலா மிளகுசுக்கு வசம்போ டோமம்
வெள்ளுள்ளி திப்பிலியுங் கழற்சி வித்தும்
புகண்டிடவே வகைவகைக்குப் பலமரைதான் சொன்னேம்
பொடிசெய் திளவறுப்பா யெண்ணெயிலே போடு
உகண்டுதான் சூரியபுடமொன் பதுநா ளிட்டு
உற்றநிம்பக் குச்சியிலே கிண்டு கிண்டே. 355

கிண்டியே நாளொன்றுக் கந்தி சந்தி
 கெட்டியாய் நேரமொரு கரண்டி கொள்ளு
உண்டிடவே விதைவாத மண்ட வாதம்
 ஓரண்ட மீரண்ட வாத மெல்லாம்
கண்டிடவே அண்டவாய்வு முதலா யுள்ள
 கதிகெடுத்த ரோகமெல்லாங் காணு தோடும்
திண்டிடவே வந்தநோ யெல்லாந் தீரும்
 திரவியமா மிந்நூல்தனைத் தேடிப் பாரே. 356

## ஈசுவரக் குழம்பு

பாரேநீ சருவநோ யெல்லாம் தீரப்
 பாடுகிறே னீசுவரக் குழம்பு தானும்
காரேநீ முத்தினதோர் தேங்கா யொன்று
 கண்திறந்து நீர்போக்கி யதனுள் கொள்ளே
வாரேநீ கொடிக்கள்ளி சதுரக் கள்ளி
 வகைவகைக்கோர் கழஞ்செடை பாலை வாங்கிச்
சேரேநீ தேங்காயி னுள்ளே வார்த்துச்
 செப்புகிறேன் கடைச்சரக்குத் தெளிந்து கேளே. 357

கேளப்பா கெந்திரசம் காந்த மோடு
 கெடியான திரிகடுகு காயங் காரம்
வாளப்பா கடுகுரோணி கடுக்கா யிந்து
 வகைவகைக்கு ஓர்கழஞ்சு பொடித்துப் போடு
தேளப்பா கொடிக்கள்ளிக் கட்டை யாலே
 தேங்காயின் கண்மூடிப் பொதிந்து சாணி
நாளப்பா பெரியதொரு புடத்தில் போடு
 நலமான புடமாறி யெடுத்தி டாயே. 358

எடுத்துமே யதிலுள்ள மருந்தை யெல்லாம்
 இதமான கத்திகொண்டு வழித்து வாங்கிப்
படுத்துமே கல்வத்தி லிட்டு நன்றுய்ப்
 பனைவெல்லம் காய்ச்சியந்தப் பாகு வார்த்தே
வரைத்திட்ட மைபோலே யாட்டி வாங்கி
 வழித்தொரு சிமிழில்வைத்து வகைதான் கேளு
கடுத்திட்ட காசெடைதா னுள்ளே கொள்ளக்
 கனபேதி யாகுமதற் கைய மில்லை
வடித்திட்ட பேதியது அதிக மானல்
 மயங்காதே மோரசனம் பண்ணு பண்ணே. 359

பண்ணவே நிற்காதாயின் வசம்பு சுட்டுப்
பக்குவமாய்க் கியாழத்தை யுண்ணத் தீரும்
நண்ணுன சுகபேதி யாகும் பாரு
நலமாகத் தீருநோய் சொல்லக் கேளு
பண்ணுன பெருவயிறு மகோதரம் பீலி
பாண்டோடு அகவைகாமாலை சோகை வெப்பு
புண்ணுன கால்கைகள் முடக்கு சூலை
பொல்லாத குன்மமொடு கிருமி யோடும்
பண்ணுன வாய்வோடு வாத மெல்லாம்
பறக்குமே பருதிகண்ட பனிபோல் தானே. 360

## கும்மட்டிக்காய்க் குழம்பு

காணவே யின்னங்குமட்டிக் காய்க்கு ழம்பு
காட்டுகிறேன் சருவநோய் யெல்லாந் தீர
ஊணவே பேய்க்குமட்டிக் காய்தா னூறு
உறுதியா யிடித்துச்சார் படிதான் பத்து
பேணவே பாண்டத்தி லிட்டுக் கேளு
பெருங்காயங் கழஞ்செடைதா னைந்து போடு
ஊணவே வெண்காரம் வாள மிந்து
உற்றகருஞ் சீரங்கடு ரோணி யாமே. 361

ஆமேதான் வகைவகைக்குக் கழஞ்சு வீதம்
அரைத்திடுவாய் மைபோலச் சாறு விட்டு
வாமேதான் அடுப்பேற்றிக் கிண்டிக் கிண்டி
வற்றுமட்டு மெரித்துமைபோல்சித் தேரண்டத் தெண்ணெய்
வேமென்ற இருகழஞ் சதிலே வாரு
மெழுகுபோல் கிண்டிவரும் பதத்தில் வாங்கி
ஆமென்ற சிமிழில்வைத்துப் பதனம் பண்ணு
ஆளறிந்து குன்றியெடை உண்டை போடே. 362

போட்டவுடன் பேதிகண்டால் மலைக்க வேண்டாம்
புகழான மோரசனம் பண்ணத் தீரும்
வாட்டமாய் வாதமெண் பதுவுந் தீரும்
வாய்வோடு குன்மமெட்டுச் சூலை தீரும்
பாட்டென்ன முடக்கியதோர் சூலை யெல்லாம்
பஞ்சிவிடும் நெருப்பதுபோல் பற்றித் தீரும்
தேட்டென்ன இந்நூல்போ லாருஞ் சொல்லார்
செப்புகிறேன் சூலைவகை தீரக் கேளே. 363

தீரவே கருவாகைப்பட் டைபலம் பத்து
சிக்காட்டால் வெள்வாகைப் பட்டை யாகும்
தீரவே பலம்பத்து ஆயில் பட்டை
சிறப்பான கொடிவேலிஅழிஞ் சிபலம் பத்து
தீரவே புனலியுடதண் டுபலம் பத்து
சிறுபிரம்பின் கிழங்குபத்துபேய்த் தேத்தான் பத்து
தீரவே கோப்பிரண்டை பலந்தான் பத்து
திரமான தூதுவளைதழு தாழை பத்தே. 364

பத்தான நொச்சியுத்தம தாளி யோடு
பாங்கான தேள்கொடுக்கு வெள்ளைச்சா ரணையின்
கொத்தான மிளகரணை சகடச் சிங்கு
குமரிவேர் பெருமருந்து மாவிலிங்கம் நிம்பம்
சித்தான முருங்கைகரு பூலா இண்டு
சிறப்பான மயிலாளிவெள் ளறுகுவ கைக்குச்
சித்தாகப் பலம்பத்து அமுக்கிரா பத்து
செப்பரிய பறங்கிப்பட் டைபலமும் பத்து
பத்தான இவையெல்லாம் நிழலு லர்த்திப்
பட்டைதனை ஆவின்பால் சுத்தி செய்யே. 365

செய்துமே யிடித்துவடி கொண்டு வேறே
செப்புகிறேன் வசம்புதிரி கடுகு காயம்
கைதுமே சதகுப்பை சமன தாகக்
கார்போகி மரமஞ்சள் கரியசீ ரகமும்
நைதுமே தழுதாழைவெப் பாலை கோட்டம்
நலமான திருகுகள்ளிப் பொருக்குக் கூடக்
கொய்துமே ஆனைத்திப்பிலி திப்பிலி மூலம்
குக்கிலொடு வாலுழுவை தாளிசபத் திரியே. 366

தாளிசையாஞ் சுத்திசெய்த ரசகற் பூரம்
தனித்தனியே வகைக்கோர் பலந்தான் சொன்னேன்
மீளவெல்லா மிளவறுப்பாய்ச் சூரணமே செய்து
விதமான முன்மருந்தோ டொக்கச் சேர்த்துத்
தாளவே சர்க்கரைதா னுலத் தொன்று
சர்க்கரைதா னில்லாட்டால்பனை வெல்ல மாகும்
தேளாக ரேகித்து வைத்துக் கொண்டு
தினந்தோறு மந்திசந்தி வெருகடிதூள் கொள்ளு
நாளான மண்டலமே கொண்டா யானல்
நலங்கெடுக்கும் வாதமொடு சூலைபதி னெட்டே. 367

எட்டோடு மட்டகுன்மங்கிரந்தியரை யாப்பு
எண்பதுவா தமொடுவாய் விருபத் தாறும்
கெட்டோமென் றேடிவிடு மண்ட வாதம்
கேடுகெடும் பதினெட்டுக் குட்ட ரோகம்
மட்டடங்காச் சிவப்புவெள்ளை மஞ்சள் மேகம்
மண்டைவரும் சூலைபுத்து கண்ட மாலை
நட்டணையாய் வருமேகமிருபத் தொன்றும்
நாடாது சிரங்குசொறி கரப்பன் போமே. 368

போமென்ற பத்தியமா யுண்டு தேறு
பொல்லாத விடகடிக ளெல்லாந் தீரும்
நாமென்ற பத்தியந்தான் துவரைசிறு பயறு
நலமான தூதுவளை வத்த லாகும்
ஆமென்ற வெள்ளாட்டு வத்த லாகும்
அயிரைவிரால் மசரைகெளிறு லாந்த தாகும்
ஓமென்ற முயலொடு காடைகவு தாரி
யூர்க்குருவி [1]ஞானியண்ட முயலு மானே. 369

மானேடு [2]வழுதலையு முருங்கை யாகும்
மாசற்ற வரைக்கீரைசிறு கீரை யாகும்
தேனேடு ஆவின்பால் நெய்யு மாகும்
சீனியொடு கதலிரதப் பழமு மாகும்
கானேடு சூதரத்தின் பிஞ்சு மாகும்
கதலியுட பிஞ்சாகும் மற்றென் றுகா
பானேடு தலைமுழுகவே ரண்டத் தெண்ணெய்
பரிமாற வெந்நீரா முப்புவறுத் துண்ணே. 370

உண்டுவர மண்டலத்தில் நோய்கள் தீரும்
உறுதியப்பா நினைத்ததெல்லா முண்ண லாகும்
கண்டிதமாய் நோய்தீர வேணு மென்றால்
கடிதான பத்தியங்கள் காக்க வேணும்
தண்டுமுண்டு பண்ணினால் நோய்தீ ராது
தருகுறும்பர்க் கவிழ்தங்க ளீய லாகா
பண்டிதரே யிம்முறைதான் பார்த்துச் செய்வீர்
பாராட்டால் பழிபாவ மாகும் பாரே. 371

### குக்குடச் சூரணம்

பாரேநீ கெண்டையொடு காய்ச்சல் கட்டி
பறக்கவொரு குக்கிடசூ ரணந்தான் கேளு
காரேநீ முற்றினதோர் சேவல் வாங்கிக்
கால்தலையோ டிறகுபோக்கி முதுகைக் கீறிப்

1. ஞானி=கோழி; 2. வழுதலை=கத்தரிக்காய்; 3. சூதரம்=மா.

பேருன குடலீரல் எல்லாம் போக்கிப்
புகட்டுதற்கு மருந்துவகை புகலக் கேளு
தீரேநீ பெருங்காய மோம மிந்து
திரிகடுகு வெள்ளுள்ளி கரியசீ ரகமும்
பாரேநீ நவச்சாரஞ் சத்திச் சாரம்
பாங்கான கல்லுப்பு வளைய லுப்பே. 372

உப்பான கறியுப்பு சவட்டுப் போடு
உற்றதொரு வாய்விளங்கம் சீரக முந்தான்
செப்பாத சாதிக்காய் கிராம்போ டேலம்
சிறுநாகப் பூவோடு தாளிச பத்திரி
மெய்ப்பாகவ கைவகைக்குக் கழஞ்சி ரண்டு
விதமான கல்வத்தி லிட்டுக் கேளு
உப்பான பிரண்டையொடுகொடி வேலிச் சாறு
உற்றகொடிக் கள்ளிச்சார் பேய்க்குமட் டிச்சார்
நட்பாக வார்த்தரைத்துக் குக்குடத்தி னுள்ளே
நாடியாமிவ் வகையாஞ்சார் நாலு மூட்டே. 373

ஊட்டியே சவுரியினு லரைத்து மூட்டி
ஒருதாளிக் குள்ளிட்ட திலேதான் கேளு
நாட்டியே கரிசாலை மேனிச் சாறும்
நலமான கோமியமுங் கலந்தொன் ருக
பாட்டியே யீராறு படிதான் வாரு
பக்குவமாய் மேல்மூடிச் சீலை செய்து
தாட்டிகமா யடுப்பேற்றி யொருவிறகு கொண்டு
சாறெல்லாம் வற்றுமட்டு மெரித்து வாங்கே. 374

வாங்கிடவே யத்தியெல்லா மகன்று போகும்
மைந்தனே யெலும்பையெல்லா ந் தள்ளிப் போடு
ஆங்கியே மற்றதெல்லாம் பாண்டத் தோடே
யப்பனே ரவிதனிலே யுலர்த்தித் தூளாய்ப்
பாங்கியே கலசத்தி லிட்ட டைத்துப்
பருவமாய் நாளொன்றுக் கந்தி சந்தி
வாங்கியே வெருகடிதூள் கொள்ளு கொள்ளு
மண்டலந்தான் கொண்டுவரத் தீரும்நோய் கேள். 375

கேளப்பா விதனுடனே திரிலோகஞ் சேர்த்து
கெட்டியாய்க் கொண்டிடவே கிலேசம் போகும்
கோளப்பா அட்டகுன்மம் காமாலை சோகை
குடிகெடுத்த மகோதரமும் பீலி பாண்டு

ஆளப்பா நீர்க்கோவை யகவை வெப்பு
அப்பனே காய்ச்சல்வருங் கெண்டைக் கட்டு
நீளப்பா வாய்வோடு வாத மெல்லாம்
நில்லாது சொல்லிவிட்டேன் நிசமாய்ப் பாரே 376

## சிரவோட்டுப் பற்பம்

பாரேநீ சிரவோட்டுப் பற்பங் கேளு
பரிவான சிரவோடு பச்சை வாங்கி
ஆரேநீ தேசியுட நீரை வாங்கி
அதிலிட்டு வர்ப்பூவைக்[1] கலக்கி வாங்கிப்
போரான தெளிவிறுத்துக் கபால வோடு
போட்டடுப்பி லேற்றியே வெந்து லர்த்தி
ஆரேநீ நொறுக்கியே யுவருப் பூவை
அரைத்துநீ பொதிந்தொரு புடத்தைப் போடே. 377

போட்டாறி யெடுத்ததனைக் காடி வார்த்துப்
புகழான கோமியமுங் கழுவி நன்றாய்
ஆட்டடா கல்வத்தில் சுண்ண நீரால்
அரைத்துமே வில்லைகட்டிக் காயப் போடு
மாட்டடா மேல்மூடிச் சீலை செய்து
மாசறவே முழப்புடத்தில் போட்டு வாங்கி
யிட்டடா மறுபடியும் கல்வத் திட்டே
இளநீரும் ஆவின்பா லிசைய வாட்டே. 378

இசையவே மயனம்போ லரைத்து நன்று
யினிதான வில்லைகட்டி ரவியு லர்த்தி
யசையாதே யோட்டிவிட்டுமே லோடு மூடி
அதட்டியே முன்போலே புடத்தைப் போடு
கசகாதே யாறவிட்டெ டுத்துப் பாரு
கண்டுகொள்வாய் சங்குவெள்ளை யிதற்கொவ் வாது
மசகாதே தேவிபதம் பூசை செய்து
மகத்தான பற்பமதைப் பதனம் பண்ணே. 379

பண்ணவே யடிமுடியு மிதுவே யாச்சு
பாதாளங் கீழேழா முலகு மாச்சு
விண்ணான ஆகாச மிதுவே யாச்சு
விருதான நோயெல்லாந் தீர லாச்சு

1. உவர்ப்பூ=பூநீறு.

எண்ணுன வனுபான மறிந்து போட
　　வீஊசய மந்தார மிருமல் காசம்
பண்ணுன மேகவகை சூலே குட்டம்
　　படரான கிரந்தியரை யாப்பும் போமே. 380

அரையாப்பு கிரந்திசொறி கரப்பன் போகும்
　　அப்பாலு மற்றுமுள்ளநோய்க ளெல்லாம் போகும்
திரமான வனுபானந்திரி கடுகு தூளாம்
　　தேனிளநீர் நெய்யாவிள் பாலு மாகும்
கரமான வெண்ணெயாஞ் சீர மாகும்
　　கண்டுபா ரனுபானங் கண்டு போடு
சரமான வனுபான மறிந்து போட்டால்
　　[1]சலமான ரோகமெல்லாந் தகர்ந்து போமே. 381

## மேகவெட்டை, பிரமேகத்துக்கு அறுகம்வேர்ப் பற்பம்

பொடியாக மேகவெட்டை பிரமே கங்கள்
　　போவதற்கு வகைகேளு புகலு றேன்யான்
பொடியாக ஆணயுட வறுகின் வேர்தான்
　　புகழாக வொருசுமைதான் பிடுங்கி வந்து
பொடியாக விடித்ததைப் பாண்டத் திட்டுப்
　　புகட்டியே சலமதனை நிறைய வார்த்துப்
பொடியாகப் பிசைந்து நன்ருய்ச் சீலேவடி கொண்டு
　　பிழிந்திட்டுச் சக்கையெல்லா மெறிந்து போடே. 382

போட்டுமே பிழிந்தநீர் தெளிய வைத்துப்
　　புகழ்மூன்று நாள்சென் றிறுத்துக் கொண்டு
போட்டுமே யடிவண்ட லுறைந்த வட்டப்
　　புகழாக ரவியுலர்த்தி உண்டை செய்து
மாட்டுமே யுலர்த்திநன்ருய்ப் பதனம் பண்ணு
　　வாகான மஞ்சள்ரத்தப் பிரமே கங்கள்
ஆட்டுமே சீவிழுதல் வெள்ளை வீழ்தல்
　　அடங்காத மேகவகை யெல்லாம் போமே. 383

## அழிஞ்சில் தைலம்

போமென்ற வழிஞ்சியுட தயிலங் கேளு
　　புகழான வேறழிஞ்சி யானுல் நன்று
நாமென்ற வில்லாட்டால் சொல்லக் கேளு
　　நாட்டிலுள்ள வழிஞ்சியது சமூலம் வாங்கி

1. சலமான=தீராத, பிடிவாதமாய் உள்ளதான.

ஆமென்று நறுக்கியேகுழித் தயிலம் வாங்கி
அதிற்போடு சுத்திசெய்த ரசகற் பூரம்
நேமமுடன் பதனமாய் வைத்துக் கொண்டு
நித்தமொரு காசெடைதான் தைலங் கொள்ளே, 384

கொள்ளவே நோயறிந்தனு பானங் கேளு
குடிகெடுத்த மேகவகை பிரமே கங்கள்
மெள்ளவே மேகத்தா லெடுத்த வாய்வு
விடபாக முள்ளதெல்லாம் விழலாய்ப் போகும்
கள்ளமாங் கரப்பனொடரி சிரங்கு சொறியுங்
கண்காணு தோடுமடா குட்ட ரோகம்
வள்ளலே பத்தியந்தான் காக்க வேணும்
வாகையுட பட்டைமுன்போல் தைலம் வாங்கே. 385

வாங்கியே காசெடைதா னுள்ளே கொள்ளு
மைந்தனே மேல்பூசு புனலில் வேது
தாங்கியே நாள்மூன்று தைலம் பூசு
சாதகமாய் வேதுவிட்டுப் பிடிக்கக் கேளு
ஆங்கியே வாதமெண் பத்து நான்கும்
அதில்பிறந்த வாயுவெல்லா மெங்கே போச்சு
பாங்கியே யதிலெழுந்த மேகம் போச்சு
பாடுகிறேன் விடமுட்டித் தயிலங் கேளே. 386

## விடமுட்டித் தைலம்

கேளப்பா வாதபித்தஞ் சிலேற்ப னத்தால்
கெடியான ரோகமுதல்சன்னி வகைவ லிப்புங்
கேளப்பா வாயுவென்ற விருபத் தாறும்
குட்டமொடு பதினெட்டுச் சூலை குன்மம்
ஆளப்பா விடங்களென்ற விருபான் நாலும்
அடங்காத பூதமொடுபி சாசுவே தாளம்
தாளப்பா இன்னமின்னம் பலவா யுண்டு
சண்டாள ரோகமெல்லாம் சாந்த மாகும்
ஆளப்பா இமசண்டமா ருதகு டோரி
யடங்காத சர்வமா ரணமி தாமே. 387

மாரணமாங் குடோரியென்ற விடமுட்டித் தைலம்
வரிசையாய்ச் சொல்லுகிறேன் வைத்தியரே கேளீர்
மாரணமா மாவிலங்கு முருங்கை வேம்பு
வாகைகரு வாகையுகா அழிஞ்சி யெட்டி
மாரணமாம் பேய்த்தேற்றான் பேய்க்கு மட்டி
மருக்காரை தூதுவளை கண்டங் காரி

மாரணமா மறுகுகருங் குருந்து வன்னி
மாவிலுப்பை விடத்தோர்வேர் தேவ தாரம்
தாரணமா மிளகரணை சங்கு வெள்ளைச்
சாரணையாங் கருமுள்ளிசெம் முள்ளி யாமே. 388

முள்ளியாஞ் சத்திச்சா ரணையி னேடு
முன்னைபுங்கு காட்டாத்திஅ கில்கருங் காலி
முள்ளியாங் கோப்பிரண்டை சீந்திகொடி வேலி
முதிரான வெருக்கோடுநாய்க் கொட்டான் முன்னை
தெள்ளியதோர் பெருவிளாபெருங் குமிழின் வேரும்
செங்கெந்த[1] மாலரசு நாவ லத்தி
நள்ளியதோர் நாவலுடன கத்திசிற் ருத்தி
நாய்வேளை குப்பைமேனியோ டுமிவை யாமே, 389

மேனியொடு கருநொச்சி சங்கங் குப்பி
வெள்ளறுகு அமுக்குரா முக்கா வேளை
மேனியொடுசித் தாமுட்டி பேரா முட்டி
விராலிபெருங் கொன்றையுத்தா மணியாந் தில்லை
மேனியொடு திருகுகள்ளி சதுரக் கள்ளி
வெள்ளைக்கா வளைகொழுஞ்சிகொடிக் கள்ளி நீலி
மேனியா நறுங்கரந்தைநா யுருவி மத்தை
[2]வில்லைவேர் முசுமுசுக்கை யாடா தோடை. 390

தோடையாஞ் சீந்தில்பங்கம் பாளை யோடும்
சொற்பெரிய இருவேலி கடம்பு காயாம்
தோடையாம் சித்தேரண்டங் காட்டே ரண்டம்
சோதரியாங் காஞ்சொறி சிறுகாஞ் சோறி
வாடாதே கையோடுகால் தலையுங் கூட்டு
வல்லாரை கீழ்க்காயின் நெல்லிபே ருள்ளி
ஆடவே சிறுகுறிஞ்சா முருக்கா தொண்டை
ஆத்தாளி களக்கொட்டி குருக்கா மென்னே. 391

குருக்கோடு பேயத்தி கிளுவை காஞ்சி
கோவையொடு நிலவாகை புனலித் தண்டு
குருக்கோடு வெப்பாலை சிவனார் வேம்பு
ஐவிரலி முடக்கொத்தான்முத் திருக்கன் செவியுந்
திருக்கான மலைதாங்கி காக்கை வேரும்
சிறுபிரப்பங் கிழங்குவெப் பாலை வேரும்
பெருக்கானத் தெருத்துத்திவட்டத் திருப்பி வேரும்
பிராயோடு முந்திரி கைவே ராமே. 392

1. செங்கெந்தம்=செஞ்சந்தனம்; 2. வில்லை=வில்வம்.

வேரான சலந்திரட்டி[1] மூலி வேரும்
விருதான கரணைகாட்டுக் கரணைபுளி நரளை
காரான மலையரளிக் கொக்கெ ருக்கு
கவிழ்தும்பை மரவள்ளியாள்[2]வேர் [3]ஞானி மூலி
கூரான துளசிநில வேம்பு நிம்மங்
குறுந்தொட்டி நன்னாரிகத் தூரிப் பட்டை
ஆரான சித்தாமல்லி பேரா மல்லி
அழகான வெருகுமருள்கற் றாழை யாமே. 393

கற்றாழை மயிரளிதிரு நாமப் பாலை
கடியதொரு நாணல்வேர்நரி விரட்டி வேரும்
கற்றாழை யானையாம் நெருஞ்சி வேரும்
கருவாளை யாற்றறுகு தென்னம் வேரும்
கற்றாழை தழுதாழை தேவ ருக்குக்
காட்டுமர மஞ்சளாமகில் கோத மோடு
கற்றாழை யிலந்தைபே ரீச்சம் பாளை
கனமான மரக்காளான் வகைவ கைக்குச்
சத்தான பட்டைவகைவேர் வகையா மூலி
சமூலந்தான் வகைக்கொரு பலந்தான் பத்தே. 394

பலமாக வாங்கியெல்லாம் நிழலு லர்த்திப்
பாங்காக வடித்தொருபாண் டத்தி விட்டுச்
சலமான குழிப்பிடத்தில் தைலம் வாங்கிச்
சார்வாக வைத்தபின் சாற்றக் கேளு
திலமான யானைலத்தி குதிரை லத்தி
சேவலத்தி மனிதலத்தி கூடச் சேர்த்து
வலமான முயல்புழுக்கை வயத்த தோடு
வாகாக வெள்ளாட்டின் புழுக்கை சேர்த்துக்
குலமான புலிகரடி முதலை [4]புல்வாய்க்
கொம்பீறு மத்திதசை யுலர்ந்த தாமே. 395

உலர்ந்ததொரு முள்ளெலியு முள்ளுப் பன்றி
உற்றதொரு அழுகாமை யெருமைக் [5]கோம்பி
பிலந்தமொரு பசுந்தவளை பச்சைப் பாம்பு
பெருவிரியன் வெண்ணாந்தை காக்கை கூகை
நலந்திகழும் யீப்புலியும் நண்டு சிப்பி
நாய்க்கட்டம் வெளுப்பொடுபா தாள மூலி

---

1. சலந்திரட்டி=கொத்தான்; 2. ஆள்வள்ளி=மலைச்சர்க்கரை வள்ளிக்கிழங்கு. 3. ஞானிமூலி=அறுகன்வேர்; 4. புல்வாய்=மான். 5. கோம்பி=பச்சோந்தி.

அலர்ந்ததே வாங்குபச் சோந்தி உடும்பு
ஆனைலத்தி குதிரைலத்தி ஒட்டகத்தின் லத்தி
உலர்ந்திட்ட கழுதைலத்தி முசுறு முட்டை
உற்றமல புளியோடு குக்குடத்தின் மலமே. 396

குக்குடமா மண்டத்தோல் மண்டையோடு
குலமான பன்றிக்கொம் பெருமைக் கொம்பு
திக்கான குதிரையடைக் குளம்பு சீவல்
செம்போத்துக் கதுவாலி கழுதை மண்டை
கக்கான மணக்காடை பூனை யத்தி
கழுதைக்குளம்பு கழுதைவண்டுசெங் குளவிக் கூடு
ஒக்கவே வகைவகைக்குப் பலந்தான் பத்து
உலர்த்தியே தாழியிட்டுகுழித் தைலம் வாங்கே. 397

வாங்கியே முன்தைலத் தொக்கச் சேரு
வரிசைபெற இன்னமொரு வகைதான் கேளு
தாங்கியே பெருங்காயம் வசம்பு இந்து
தகரமொடு கரியசீ ரகமு மோமம்
பாங்கியே கெசத்திப்பிலி திப்பிலி மூலம்
பரிவானகடல் நுரையும் சமுத்திராப் பழமும்
ஓங்கியே தெசாவரமுந்திப் பிலியுஞ் சுக்கு
உறவான குக்குலன்ன பேதி யென்னே. 398

பேதியா முசுடுமுட்டை கார்போக வித்து
பிலமான வெண்கடுகோ டிந்திர கோபம்
சாதியே தக்கோலம்வா லுழுவை வித்து
கிராம்போடு காவிவெண் காரஞ் சீனம்
வாதியாங் கெந்திநவச் சார மோடு
வளமான பாறையுப்பு வளைய லுப்பு
ஆதியா மெவச்சாரஞ் சத்திச் சாரம்
அழகான காட்டுநல்ல சாரங் கூட்டே. 399

சாரமாம் சாம்பிராணி குதிரை யோமம்
தருவான வரத்தைரெண்டு கோரோசனைதான்ரெண்டு
வீரமாம் வகைக்குரெண்டு பலந்தான் சொன்னேன்
வெண்காரம் நல்லசாதிக் காயி ரெண்டு
பாரமாம் வெள்ளுள்ளி பலந்தான் பத்து
பாதாள மூலிபத்தா மிஞ்சிபலம் பத்து
தீரமா யெட்டிவிதை பலந்தான் பத்து
சேங்கொட்டை பலம்பத்துகார்த் திகைக்கி ழங்கே. 400

கிழங்கோடு புன்னைகொட்டை புங்கங் கொட்டை
கெடியான வேப்பங்கொட்டை வகைபலந் தான்பத்து
அளங்கோடு வகையெல்லா மிடித்து ஒன்ருய்
அப்பனே முன்போலே தைலம் வாங்கி
களங்கோடு மூன்றுவகைத் தைலம் ஒன்ருய்க்
கலந்துநன்ரு யின்னமதிற் கருதக் கேளே. 401

கருவென்ன ரசபற்பமரி தார பற்பம்
கடியதோர் சாதிலிங்கம் வீரம் பூரம்
திருவென்ன மனேசிலையுங் கெவுரி வெள்ளை
சேரதிலே கத்தூரி வகைவ கைக்குப்
பருவமாய்ப் பலங்கால்தா னிறுத்துப் போடு
பசுமாட்டுக் கொட்டத்தில் புதைத்து மூடு
திருவென்ன திங்களொன்று கழித்து வாங்கு
சிவசிவா நோயேது செப்பக் கேளே. 402

கேளடா கணேசனெடு கந்தன் பூசை
கெடியான வடுகனையும் பூசை பண்ணு
வாளேநீ பதனமாய் வைத்துக் கொண்டு
வாகாய்நீ துவளையிட்டுப் பிடிக்கச் சொல்லு
காளேநீ வலுவான ரோக மானல்
காசெடைதா னுள்ளுக்குக் கொடுத்துப் பாரு
நாளேது கோளேது நோய்தா னேது
நலங்கெடுக்கும் பூதவே தாள மேது
கோளேது யமதூதர் கண்டா லுன்னைக்
கும்பிட் டகலநிற்பார் குறித்துப் பாரே. 403

பாரேநீ தைலத்தின் பாகங் கேளு
பாங்கான நிம்பெண்ணெய் படிதா னிரண்டு
கூரேநீ மயிலிறகும் வெட்டிப் போட்டுக்
குமுறவே காய்ச்சியதிற் கூட வாரு
ஆரேநீ வெள்ளுள்ளித் தயிலம் நாழி
அண்டத்தின் தைலமது நாழி வாரு
காரேநீ வார்த்தொன்ருய் ரேகித் தேதான்
கைப்பாணம் போலிதனைப் பதனம் பண்ணே. 404

பண்ணியே விருதுசொல்லி வயித்தியத்தைப் பாரு
பரிவான மேகவகை யிருபத் தொன்று
மெண்ணியே யெண்பது வாத மோடு
மிதமான பித்தநாற் பதுவு மெங்கே

பண்ணியதோர் கசரோகந் தொண்ணூற் ருறு
பறக்குமே யட்டகுன்மம் பதினெண் சூலே
சண்ணியதோர் சயமெண்பத் தாறு மெங்கே
சன்னிபதின் மூன்றுமெங்கே யான வாறே. 405

வாருன வலிப்புவகை மரண வாதம்
வாயுவென்ற விருபத்தி யாறும் போச்சு
கூருன கூட்டம்பதி னெட்டும் போச்சு
குலேமுட்டி யந்திரமாம் ருத்திர வாய்வு
தாருன கைமுடக்கும் கால்மு டக்கும்
சந்திடுப்பு சூலேயொடு கீலு வாய்வு
பேருன பட்சவாதம்பா ரிசமாம் வாய்வு
விதைவாதங் கழலண்ட வாத மோடு
தீராத அரிகரப்பான் சொறிசி ரங்கு
செங்கரப்பான் கருங்கரப்பான் சேரப் போமே. 406

போமென்ற விடபாண்டு விடநீர்க் கோவை
பொல்லாத அகவைவெப்பு வலுவீக் கங்கள்
ஆமென்ற விடக்கடிகள் எல்லாம் மாளும்
ஆகாச பூதவே தாள மோடும்
வேமென்ற வஞ்சனே பில்லி சூனியம்
வெருளாமே அய்யனெடு துர்க்கை காளி
தாமென்ற இதுவெல்லா மோடிப் போகும்
சண் டமா ருதக்குழம்பைச் சாற்றக் கேளே. 407

## சண்டமாருதக் குழம்பு

மாருதமாங் கொடிவேலி முருங்கை வாகை
மாவிலிங்க மெருக்குவேளே குப்பை மேனி
மாருதமா மிஞ்சியெட்டி வேம்பு புங்கு
மருக்காரை பொற்கையான்நாய் வேளே சிவதை
மாருதமாம் நாய்ப்பாகல் வீழிமுடக் கொற்ருன்
மாசற்ற சிற்றேரண்டங் காட்டுக் கொட்டை
காருதமா மிளகரணே சங்கங் குப்பி
கருநொச்சி தழுதாழை நொச்சி யாமே. 408

நொச்சியாம் புரசினெடு கொன்றை தானும்
நுகரறிய பெருமருந்து காக்கை வேரும்
கச்சியாம் கருஞ்சூரை செங்கத் தாரி
கரிசாலே வெள்ளிண்டுகற் ருழை பிரமி

நிச்சயமாங் கழற்கொடியுங் கருவேல் குன்றி
நிலவாகை பேய்க்குமட்டி திருகு கள்ளி
கொச்சையா மூக்கரட்டி சதுரக் கள்ளி
கொடிக்கள்ளி அரிசிறுகு றிஞ்சா வாமே. 409

குறிஞ்சாவாங் கீழ்க்காயி னெல்லி யோடு
கோவைநீர் முள்ளியொடு பங்கம் பாலை
குறிஞ்சாவாஞ் சித்தாமுட்டி பேரா முட்டி
குருமத்தை தூதுவளைகண் டங் காலி இம்பூரல்
குறிஞ்சாவாம் வழுதுணையுஞ் சிறுகாஞ் சொறி
கொடிதான பேய்ப்பீர்க்கு கெருடனுட கிழங்கு
குறிஞ்சாவா மைவிரலிவே லிப்பருத்தி வகைக்குக்
கூசாதே பலம்பத்து நிறுத்து வாங்கி
குறிஞ்சாவேர் முதலாகநிழ லுலர்த்தி யிடித்துக்
குணமாக மிடாவிலிட்டுக்குழித் தைலம் வாங்கே. 410

வாங்கியே தைலத்தைமறுபாண் டத்தி லிட்டு
வகையான பேய்க்குமட்டிச் சாறு நாழி
கோங்கியே திருகுகள்ளி சதுரக் கள்ளி
கொடிக்கள்ளிப் பால்வகைக்கு நாழி நாழி
தீங்கில்லாத் தில்லைப்பால்கால் படிதான் சொன்னோம்
சேரவே தைலத்தில் வார்த்துக் கேளே
பாங்கியே சமனிலிங்கம் கெந்தி தாரம்
பரிவான வெண்காரம் சிலையு மிந்து
காங்கியே காரமொடு வீரம் பூரம்
கடுகுடனே பெருங்காயம்கரு நாவி சூடன்
காங்கியே கடுக்காயுந் துரிசு துத்தம்
கருநாவி கரியசீ ரகமு மாமே. 411

சீரகமாந் திப்பிலியுந் திப்பிலி மூலம்
சிறுநாகம் சிற்றரத்தை மதுரங் கோட்டம்
காரமாங் கடல்நுரையும்வா லுழுவை சிங்கி
கடுகுரோ கணிசாரமெவச் சாரங் கூட
வீரான வத்தித்திப் பிலியி னோடு
வெண்கடுகு தெசாவரங்கழற்கொடி யின்ப ருப்பு
வாரமாம் புரசுவித்து மத்தம் வித்து
வகையுடனே பேய்ப்புடோலோம மல்லி யாமே. 412

மல்லியாம் வகையிரண்டு கழஞ்சு சொன்னேம்
மருந்தெல்லாமோர் நிறையாய்வாளமதிற் சேர்த்துப் பாதி
சொல்லவே பணவெல்லங் கழஞ்சு பத்து
தேங்காயின் குடுக்கையுடகரி கழஞ்சு பத்து
மல்லவே யிவையெல்லாந் தேங்காய்ப் பாலால்
மயனம்போ லாட்டிமுன் தைலத் தூட்டே. 413

ஊட்டியே யடுப்பேற்றியொரு விறகு கொண்டு
உறுதியோ டெரிமூட்டி யடிபற் றுமல்
மாட்டியே கருகாமல் கிண்டிக் கிண்டி
மயனம்போல் மெழுகுபத மாக வாங்கி
ஆட்டியே அயச்சிமி ழெருமைக் கொம்பில்
அடைத்துமே மண்டலந்தான்தா னியபுடம் வைத்துக்
காட்டாமல் குழம்பதனைப் பதனம் பண்ணு
காசினியி லிந்நூலைக் கண்ணில் காட்டார்
நாட்டலாஞ் சண்டமாருதமா மென்று நாமம்
நல்கிடவே நமனங்கே நாடான் பாரே. 414

நாடவே குழம்புக்கனு பானம றிந்து
நாட்டினல் நோயெல்லாம் நாடா தோடும்
பாடியதோர் குழம்புக்கனு பானங் கேளு
பதின்மூன்று சன்னியொடு பயந்தே ஓடும்
போடவே வெள்ளுள்ளிக்கோழி முட்டைத் தைலம்
பொருந்துமே மாவிலிங்கு முருங்கைப் பட்டை
வாடாதே குறிஞ்சி நொச்சிச் சாற்றி லூட்டு
மாறலொடு சுரதோட மகலக் கேளே. 415

அகலுமே குளிர்சுரந்தான்சுக்கு நீரி லூட்ட
அதிகபித்த மென்சுரத்துக் காதிசீ ரகமாம்
புகலுகிறேன் நடுக்குசுர மிரண்டு பத்தும்
போய்விடுமே கடுக்காயு மரத்தைச் சுக்கு
அகலாதே சுரமெட்டு மிளகொ டேலம்
அறுபத்து நால்சுரமு மகன்று போகும்
நவிலுகிறேன் மூவேழு தோடம் போகும்
நாவினில் தேய்த்துப்பின் வெந்நீ ரூட்டே. 416

ஊட்டவே தோடமெல்லா மோடிப் போகும்
உற்றசுர மூன்றுநாலாம் மாறல் போகும்
காட்டவே மூவிரண் டெட்டா மாறல்
கதிகெடவே துளசிதும்பைநா யுருவி வேரும்

ஆட்டவே யரத்தைசுக்கு மஞ்சும் போடு
அப்பனே கியாழமஃ தெட்டொன் ருக்கி
நாட்டியே குழம்பிலொரு குன்றி போடு
நலமில்லா மாறலெல்லா நாடா தென்னே. 417

என்னவே வாதமெண் பதுவும் போக
இதமான வெள்ளறுகு பறங்கிப் பட்டை
சொன்னதொரு திப்பிலியுந் திப்பிலி மூலம்
சுக்கரத்தை நல்பிரப்பின் கிழங்கிறோ டேழு
மன்னவே சமன்செய்து கியாழஞ் செய்து
மதித்தூட்டு குழம்பிலரைக் கழஞ்சி யாக
அன்னவே யில்லாட்டால் தேசி நீரால்
அதனுட பாலிலேயு மாகு மென்னே. 418

ஆகுமேவிட வாய்வு வேலிப் பருத்தி
அதனுடதழையா மறுபத்து நால்ப முப்பாம்
ஆகுமே சோகைகா மாலை பாண்டுக்
காராட்டி னுடகோமியமு மேரண்டத் தெண்ணெய்
தாகுமே திரிபலையின் தூளோ டொக்கச்
சதிரான குழம்பிலொரு காசு போடு
போகுமே பாண்டுவொடு அகவை வெப்பு
பெருவயிறு பீலிகைநீ ராம்பல் கோவை
ஆகுமே நீராமை விட நீர்க் கோவை
ஆகாத உள்மாந்தைக்கனு பானங் கேளே. 419

அனுபான நீர்முள்ளிகரி சாலை கடுக்காய்
அழகான பிரமியொடு மிளகு கூட
அனுபான மிடித்துப்பாண் டத்தி லிட்டு
அடுப்பேற்றி யெட்டொன்ருய்க் கியாழஞ் செய்து
அனுபானம் வெள்ளாட்டுநீ ரேழு சுத்தி
அதிலிட்டு ரேகித்துவெண் காரம் பொரியும்
அனுபான கடுகுரோகணி கடுக்காய் கூட்டி
அதிலூட்டிக் குழம்பிலொருகா செடைதான் போடே.

காசெடைதா னூட்டிடவே சொன்னவகை ரோகங்
கண்காணு தென்றுமுனி கருதிச் சொன்னர்
ஆசிடைதான் சிரசில்நோய் தொண்ணூற் ருறு
மக்குழம்பைச் சீலையிலே ஊட்டி யாற்றித்
தேசிடைதான் புகைகாட்டத் தீர்ந்து போகும்
சிலந்திபுத்து பிளவைவகை புண்புரைக ளுள்ளதும்
தோசிடைதான் பவுந்திரமு மாருப் புண்ணும்
துரந்திட்ட தூசதனில் தடவிப் போடே. 421

போடவே நோயறிந் தினம றிந்து
புகழான அனுபான மறிந்து போடு
போடவே குட்டமொடு பெருவி யாதி
பதினெட்டுச் சூலைகுன்மங் குறைநோய் தீரும்
வாடவே வேண்டாங்காண் சிவனுர் வேம்பு
வாலுழுவை கருங்காலி கொல்லன் கோவை
தேடியே யிடித்தொன்ருய்த் தயிலம் வாங்கி
தில்லைப்பூக் கூட்டியதில் காசெடை தானும்
பாடியே குழம்பதனைச் சேர்த்துட் கொள்ளப்
பறக்குமே சொன்னவகை ரோகந் தானே, 422

ரோகந்தான் போகவென்ருலனு பானம் பாரு
நுணுக்கமா யந்தந்தநோ யறிந்து பாரு
யாகந்தா னனுபான மறியா விட்டால்
அவரென்ன வயித்தியங்கள் செய்யப் போருர்
பாகந்தான் தப்பினுல்ரோ கந்தீ ராது
பரிசுகெட்ட மாண்பர்களே பரிந்து கேளும்
காகந்தான் பறந்தாற்போல் நோய்களெல்லாம்
கண்காணு தோடுமிந்த வேகந் தானே. 423

## வில்வாதி லேகியம்

தானென்ற குழம்பாலே சர்வ நோயும்
சண்டாள ரோகமெல்லாந் தீர்ந்து போகும்
பானென்ற பித்தநாற் பதுவும் போகப்
பாடுகிறேன் வில்வாதிலே கியந்தான் கேளு
ஆனென்ற வில்லைவேர் தொலியைப் போக்கி
அழகாகப் பலம்நூறு நிறுத்துக் கொண்டு
வேனென்ற சங்கம்வே ரமுக்கு ராவேர்
வெள்ளைச்சா ரணைநன்னுரிமிள கரணை வேரும்
வானென்ற லாமிச்சை முக்கா வேளை
மணிவேம்பு அறுகுகற் ருழை வேரே. 424

வேரான தழுதாழை கீழ்க்காய் நெல்லி
விளாவேரும் வெள்ளறுகு நெல்லிப் பட்டை
கூருன தூதுவளை குமரி வேலி
குட்டிவிளா நொச்சிசிறுவழு தலையுங் கேளு
ஈருன விவைவகைக்குப் பலந்தான் பத்து
இடித்துமே யிருதூணி சலத்தை வாரு
மீருதே யெட்டொன்ருய்க் கியாழஞ் செய்து
மீதுமொரு தாளிவடி கட்டிக் கொள்ளே. 425

கட்டியே சாறுவகை சொல்லக் கேளு
கரிசாலை வல்லாரை நெல்லி யோடு
குட்டியாம் புளியாரை மணத்தக் காளி
கொம்மட்டி மாதுளையின் பழத்தின் சாறும்
அட்டியாம் புளித்தமா துளையின் சாறும்
ஆற்றுநீர் முள்ளிச்சா றிஞ்சிச் சாறும்
வட்டியே முள்ளிவன சாற்றி னோடு
வாடாதோ டைமுசுமு சுக்கைச் சாறே, 426

சாறோடு வகைக்கோர் படிதான் சொன்னோம்
தருவான ஆவின்பால் படிதான் ரெண்டு
வீறான கியாழத்தோ டொக்கச் சேரு
விதமான கடைச்சரக்கு விவரங் கேளு
வாறான சாதிக்காய் கிராம்பு பத்திரி
வால்மிளகு குராசாணி மதுரங் கோட்டம்
தாறான சன்னலவங் கமுட னேலம்
சடாமாஞ்சி வாலுழுவைதா ளிசபத் திரியும்
பேறான சீரகமும் விளங்கமதி விடையம்
பெலமான வரத்தைரெண்டு சிங்கி யோமம் 427

ஓமமாந் திப்பிலியுந் திப்பிலி மூலம்
உற்றமர மஞ்சளொடுகத் தூரி மஞ்சள்
வாமமாம் விழலரிசிவெப் பாலை யரிசி
மல்லியுடன் கூகைநீர்காட் டாத்திப் பூவும்
சேமமா விளாவோடு வில்வத் தோடும்
சிறுதேக்கு கறிவேம்பு இலுப்பைப் பூவும்
சேமமாஞ் சந்தனத்தின் தூளோ டொக்கச்
சேர்வகைக்குப் பலங்காலாயிள வறுப்புச் செய்யே,

செய்துமே சூரணத்தை வேறே வைத்துச்
செப்பியதோர் கியாழத்தை யடுப்பி லேற்றி
அய்துமே சீனிபல மைம்ப தாக
அதிலிட்டுக் கிண்டியே பாகு சேரில்
பைய்துமே சூரணத்தைக் கொட்டிக் கிண்டி
பக்குவமா யாவின்நெய் படிதான் வாரு
கைய்துமே மெழுகுபத மாகக் கிண்டிக்
கருகாம லிறக்கிவைத்துத் தேனை வாரே. 429

தேன்வார்த்துக் கிண்டியே மெழுகுபத மாகச்
செப்பரிய சாடியிலே யிட்டு மூடு
தேன்வார்த்துத் தானியபு டமும் வைத்துத்
தினந்தோறு மண்டலந்தா னந்தி சந்தி

தேன்வார்த்து நேரமொருகொட் டைப்பாக் களவு
தின்றுவரத் தீருகிற நோயைக் கேளு
ஊறுன பித்தம்நாற் பதுவு மெங்கே
உப்புசமு முட்டிணத்து வாயுவதும் போச்சே. 430

போச்சென்ற கையொடுகா லெரிவு காந்தல்
பொல்லாத வரோசியமு மன்ன தோடம்
வாச்சென்ற வத்திசுர மத்தி வெட்டை
மயக்கமொடு குலையெரிவுகுன் மகிறு கிறுப்பு
மாச்சென்ற வேங்கலுப்பி சமும்வாய்க் கசப்பு
வாந்திவிக்கல் வெள்ளோக் காளம் தானும்
ஆச்சென்ற பித்தத்தா லெடுத்த ரோகம்
அதிலெடுத்த கிராணியெல்லா மகலப் போமே. 431

அகலப்போங் காமாலை சோகை பாண்டு
அதிலெடுத்த நீரிழிவு யந்திர வாய்வு
தொகையான வாதபித்த சிலேற்ப னத்தால்
தொந்திப்போங் காரமெல்லாந் தொலைந்து போகும்
இகலாத திரிலோகசெந் தூர மப்பா
இதனுடனே சேர்த்திட்டால் என்ன சொல்வேன்
பகையான பித்தமுதல் சருவ நோயும்
பகலவனைக் கண்டதொரு பனியா மென்னே. 432

### காசவகை ஏங்கலுக்கு, சயங்களுக்கும் மருந்து

பனியான சிலேற்பனநோய் தொண்ணூற் ருறும்
பறக்கவொரு மூலிகைதான் பகரக் கேளு
தனியான சிறுகாஞ்சூ ராட்டி[1] யப்பா
சமூலமங்கே யாதி[2]நாள் கொண்டு வந்தே
அணியாக நிழலுலர்த்திச் சூரணமே செய்நீ
அழகான பவழபற்பம் சேர்த்துக் கொண்டு
கெணியாக வெள்ளாட்டின் பாலி லப்பா
கெட்டியாய் மண்டலந்தான் கொண்டு தேறே, 433

கொண்டிடவே சிலேற்பனநோய் தொண்ணூற் ருறும்
குலைந்தோடு மின்னமொரு குறியைக் கேளு
கண்டிடவே பெரியதொரு காஞ்சொறி வாங்கிக்
கனமாக நிழலுலர்த்திச் சூரணமே செய்து
பண்டான நாகபற்ப மதிலே சேர்த்துப்
பக்குவந்தான் மண்டலமே கொண்டா யானல்

1. ஆட்டி=அதிமதுரம்; 2. ஆதிநாள்=ஞாயிற்றுக்கிழமை.

அண்டாது சயமீளை மந்த காச
மனுகாது வறட்சிகாசம் ரெத்த காசம்
கண்டோடிப் போங்காச வகையே ழுந்தான்
கைகண்ட வித்தையிது கண்டு பாரே. 484

கண்டுபா ரேங்கலுப் பசமோ டீளை
காசவகைக் கெல்லாமோர் கருவைக் கேளு
கண்டுபார் வெள்ளாட்டி [1]னுதப்பை வாங்கிக்
கருதிய நீரதனைப் பிழிந்து போட்டு
அண்டியே புதுச்சட்டி யிட்டு லர்த்தி
அப்பனே யிடித்துத்தூள் வத்திர காயம்
கொண்டுமே பலம்ரெண்டு நிறுத்துக் கொண்டு
குங்குமப்பூ கோரோசனை திப்பிலி யேலம்
இன்றுகே ளசமோதஞ் சித்த ரத்தை
யிருசீரங் கிராம்புமனே சீலைநெற் பொரியே. 485

பொரியான தோடைவேர்த் தொலியி னேடு
புகழ்சீனக் கற்கண்டு அக்கிரா காரம்
வரியான கோட்டமுடன் வகைவகைக்குக் கேளு
வகையாகக் கழஞ்செடைதா னிளவறுப்புச் செய்து
வரிசையாய்ச் சூரணித்துமுன் மருந்தைச் சேரு
வாகானவெள் ளாட்டின்பா லாவின் பாலிற்
பரிசையாய் நனைத்துரவி யுலர்த்திக் கொண்டு
பசுவினுட நெய்யிலரைமண் டலமே கொள்ளக்
கரிசையாய்ச் சிலேற்பனநோய் தொண்ணூற் றுறும்
காசவகை பதினெட்டு மீளைகளும் போமே. 486

ஈளையொடு யிளைப்பிரும லேங்கலுப் பசமு
மீதல்லாமல் பித்தவாய் வுட்டிண வாயு
ஈளையொடு வாய்வுபித்த வாதம ருத்தீ
டியல்பான வறட்சியுப் பிசமும் வாந்தி
ஈளையொடு முசறுவல்நோ யெல்லாந் தீரு
மினியதொரு தேகமது வச்சிர காயம்
ஈளையாஞ் சருவசுர மெல்லாந் தீர
இயம்புகிறேன் சுரபாணக் குடோரி கேளே. 487

## சுரபாணக் குடோரி

குடோரியாங் கெவுரிவெள்ளைபழ மிளகு சூதம்
குணமாகக் கியாழ நாலுஞ் செய்து
குடோரியாங் கரிசாலைச் சாற்றிற் சாமம்
குணமான மிளகினுட சாற்றிற் சாமம்

1. உதப்பை=உதப்பி=ஈரல்.

குடோரியா மவுரிபாக விலைகள் சாற்றில்
கொள்கியதோர் வகைசாமங் குமுற வாட்டிக்
குடோரியாம் பயறளவு உண்டை கட்டிக்
குணமாக நிழலுலர்த்திச் செப்பி லூட்டே. 438

ஊட்டியே தான்யபுடம் வைத்தெ டுத்து
முற்றுவருஞ் சுரங்களுக்கனு பான மறிந்து
நாட்டியே குளிகையொன் றீந்தா யானல்
நாடாது சுரமனைத்தும் நசித்துப் போகும்
மூட்டியே தினசுரத்துக் கோர்நா ளாகும்
மூன்றுநாள் மாறலுக்கு மூன்றுநா ளூட்டு
நாட்டுவாய் நாலுநாள் மாற லுக்கு
நாலுநாள் வஞ்சியர்பா[1] லிஞ்சிவெந்நீர் மல்லிநீராம்
பாட்டிலே சொன்னதென் றெண்ண வேண்டாம்
பழையதங்க மென்றிதனைப் பதனம் பண்ணே. 439

பண்ணவே சிலேற்பனநோயீ ளையிளைப் பிருமல்
பறக்கவே திரிகடுகு கடுக்காய்ப் பூவும்
நண்ணவே கிராம்பேலம் பறங்கிப் பட்டை
நலமான கடுக்காயுந் திப்பிலி மூலம்
கண்ணவே தூதுவளைகடுகு தோடை வேரும்
கண்டங்கத் தரிப்பழமும் நிலவா வாரை
வண்ணமாஞ் சிறியகாஞ் சோறி வேரும்
வகைவகைக்கு மூலிகைதான் பலந்தா னென்றே. 440

ஒன்றுன கடைச்சரக்கு வகைக்கரைப் பலமாம்
உலர்த்தியே யிளவறுப்பாய்ச் சூரணமே செய்து
நன்றுகப் பதனமாய் வைத்துக் கொண்டு
நலமான வெருகடிதூள்தா னெடுத்து வைத்து
உண்டான தேனதிலே கொஞ்சம் விட்டே
உண்டுநா ளொன்றுக்கிரு நேர மாகக்
கொண்டுவர மண்டலந்தா லுண்டா யானல்
குடிகெடுத்த சயமெண்பத் தாறும் போச்சே. 441

போச்சென்ற பவழபற்ப மரிதார பற்பம்
புகட்டியே கொண்டுவரப் புதுமை கேளு
கூச்சென்ற சயமீளைமந் தார காசம்
குத்திருமல் நெட்டிருமல் கிறுகி றுப்புக்

1. வஞ்சியர்பால்=முலைப்பால்.

காச்சென்ற வாதமொடு மேகஞ் சூலை
கால்குடைச்சல் கைக்குடைச்சல் சீத வாய்வு
போச்சென்ற சிலேற்பனங்கள் தொண்ணூற் றுறும்
போகுமே கபரோக மெல்லாந் தீரும்
நீச்சென்ற பித்தவாயு சிரங்கு சொறியும்
நில்லாது சருவநோய் யெல்லாங் காணே. 442

காணென்ற நரித்தலையா முழங்காற் சூலை
கலந்தோடு [1]மலையாளி யிலையைக் கொண்டு
தேனென்ற ராகியொரு சிறங்கை வாங்கிச்
சிறப்பாகக் கலக்கியதில்சுக்கு நாற்க ழஞ்சி
ஆனென்ற அரளியிலை கூட வைத்து
அம்மிப்பா லுண்ணவே யரைத்து மைபோல்
ஆனென்று கொதிப்பித்துமேல் பற்றுப் போட
அஞ்சு நா ளுள்ளுக்கு மருந்தை யூட்டே, 443

மருந்தென்ன பஞ்சபாணச்செந் தூர மூட்டு
மாசற்ற கற்பூரம் வெல்லத் தூட்டு
பரிந்தென்ன மேகவாய்வு சூலை யென்றுல்
பறங்கிப்பட்டை ஆவின்பால் சுத்தி செய்து
விருந்தென்ன பனைவெல்லம் எள்ளுஞ் சேர்த்து
விரவியே யிடித்தொன்றுய்ச் சூரணமே செய்து
திருந்தவே கற்பூரம் கூடச் சேர்த்துத்
தினமொன்றுக் கொருகால்மண் டலமே கொள்ளே.

கொள்ளவே வாதமொடு வாய்வு சூலை
குண்டல வாய்வுமேகங் கீலுச் சூலை
விள்ளாது நரித்தலையாம் வாய்வு சூலை
விழலாகும் விசுவாச மாகக் கொள்ளு
துள்ளாதே பழிபாவம் நினையா தேகேள்
துட்டரென்று மலையாதே தொகுத்துப் பாரே. 445

## மேல்தலைவாய்வுக்கு எண்ணெய்

தொகுத்துவரும் மேல்தலையாம் வாய்வுக் கெல்லாம்
சொல்லுகிறேன் சூட்சமொரு எண்ணெய் கேளு
தொகுத்துப்பார் தூதுவளைவேரும்நா யுருவி வேரும்
துடியாக வகைவகைக்குக்கால் பலமே போடு
தொகுத்துப்பார் பொன்னுங்கண்ணிச் சாறு நாழி
சோரவிட்டு மெழுகுபத மாகக் காய்ச்சே. 446

---

1. மலையாளி=மிளகு.

காய்ச்சியே நாலுநாள் விட்டு மூழ்கு
கண்புகைச்சல் நீர்ப்புகைச்சல்மேல் தலையாம் வாய்வு
போச்சப்பா கபாலத்திற் சூடு காந்தல்
பொல்லாதவுட் டினவாய்வு போகும் பாரு
கூச்சென்ற கண்புகைச்சல் வெள்ளெழுத்து
குடிகெடுத்த கண்புகைச்சல் நீர்ப்பாய்ச்சல் தினவு
மாச்சென்ற விவையெல்லா மோடிப் போகும்
மகத்தான தலைமயக்கம் போகக் கேளே, 447

## மயக்கத்துக்கு முடித் தைலம்

கேளேநீ நல்லெண்ணெய் தன்னி லப்பா
கீழ்க்காயின் வேர்சுக்கு ரெண்டுங் கூட்டி
வாளேநீ நொறுக்கியந்த யெண்ணெயிலே போடு
வளமான ரவிபுடமாய் வைத்து மூழ்கு
ஆளேநீ யில்லாட்டா லெரித்து மூழ்கு
ஆகாத கிறுகிறுப்பு மயக்கந் தூக்கம்
கோளேநீ கிறுகிறுப்பு மண்டைக் குத்து
கூறுகெட்ட வாய்க்கசப்பு வாய்நீ ரூறல்
ஆளேநீ சிரசிலுள்ள நோய்கட் கெல்லா
மப்பனே யென்னூலை யாய்ந்து பாரே. 448

## சருவாங்கத்துக்குக் கலிக்கம்

ஆய்ந்துபார் சருவாங்கக் கலிக்க மொன்று
அறைகிறேன் வயித்தியரே யன்பாய்க் கேளு
தோய்ந்துபார் திப்பிலியுந் துரிசு துத்தம்
சொற்பெரிய கிராம்புசுக்கு திப்பிலி மூலம்
வாய்ந்ததொரு புருவெச்சம் நாய்க்கட்டம் வெளுப்பு
வாகான குக்குடத்தின் வெண்மலமுங் கூட
நேர்ந்ததொரு மேனிவேர்த் தொலியுங் கூட்டி
நெடியசா ரணைவேரும் சாதி லிங்கம்
சேர்ந்ததுவும் வகைவகைக்குக் கழஞ்சு கூட்டிச்
செம்மைசெய்த செம்புத்தூ ளீராங் கூட்டே. 449

கூட்டியே பழச்சாற்றல் சாம மாட்டு
குப்பைமே னிச்சாற்றல் சாம மாட்டு
வாட்டமில்லா தும்பைவெத் திலையின் சாறு
வகைவகைக்குச் சாமமொன் றாட்டி வாங்கு
காட்டியே கயிறுகட்டி நிழலு லர்த்திக்
கண்ணிலிடச் சன்னிபதி மூன்றுக் குங்கேள்

மூட்டியே மேனிச்சார்வெத் திலையின் சாறு
முருங்கைப்பூச் சாற்றிவிடுசன் னிவகைக் கெல்லாம்
பேட்டில்லா ரிஞ்சிச்சா றதுவு மாகும்
பித்தத்தில் மருளுதற்குத் தும்பைச் சாறே. 450

சாறுவகை யினமறிந்து கண்ணில் தீட்டச்
சண்டாள ரோகமெல்லாஞ் சணத்தில் தீரும்
கூருன சன்னிவகை வலிப்புள்ள வெல்லாம்
குடிபோகும் சயித்தியங்கள் குளிர்தோ டங்கள்
வீருன பேயோடு நோயுந் தீரும்
விடக்கடி களுள்ளவெல்லாம் விழலாய்ப் போகும்
பேருன அய்யனெடு துர்க்கை காளி
பிடித்தாலு மஞ்சனத்தைக் கண்டா லோடும்
சாராதே யெந்தெந்த நோய்வந் தாலும்
சருவமா ரணக்கலிக்கம் சண்ணுந் தானே. 451

## வச்சிரவல்லிச் சூரணம்

சண்ணுமே வச்சிரவல்லிச்சூ ரணமாம் பற்பம்
சாற்றுகிறேன் கோப்பிரண்டை முற்ற லாக
நண்ணவே நாலுபத்துப் பலந்தா னப்பா
நறுக்கியே நரம்புதள்ளிக் கரணை யாகப்
பண்ணவே ஒருபாண்டத் துள்ளே யிட்டுப்
பகருகிறே னின்னமதிற் பகரக் கேளே. 452

பாகமாங் கல்லுப்பு கறியுப் போடு
பாறையுப்பு யிந்துப்பு வளைய லுப்பு
ஆகமாங் கெந்தியுப்பு சவட்டுப் போடு
அட்டுப்பு வெடியுப்பு கண்ணுப் போடு
வேகமாம் வகையொன்று பலமொன் ருக
விரவியே பொடித்துநன் ருய் பிரண்டையிலே ஊட்டு
வாகுடனே பிசறியே யூற வைத்து
மாட்டினுட கொட்டத்தில்பு தைத்தி டாயே, 453

புதைத்துமே பட்சமொன்று கழித்து வாங்கு
புகழாக ரவியிலிட்டு லர்த்தி வாங்கு
புதைத்ததொரு நீரெல்லாம் வற்றி வாங்கிப்
பொரிப்போலே யுலர்ந்துநன் ருய்ப் புகலக் கேளு
புதைத்ததொரு திப்பிலியுங் கடுகு சுக்கு
புகலாணத் திப்பிலியுந் திப்பிலி மூலம்

புதைத்ததொரு பெருங்காயம் வசம்பொ டேலம்
புகலரிய தாளிசையு மிரண்டுசீ ரமும்
வதைத்திடா நவச்சார மன்ன பேதி
வாங்விளங்க மோமநவச் சார மாமே. 454

சாரமாந் திருகுகள்ளிப் பொருக்குங் கூடச்
சமத்தான புருப்பொருக்குஞ் சித்திர மூலம்
வீரமாம் மாவிலிங்கு முருங்கைப் பூவு
மேனிவேர்த் தொலியுடனே வகைக்குக்கால் பலமாம்
ஆரமாம் பிரண்டையோ டொக்கச் சேர்த்து
அப்பனே யிளவறுப்பாய்ச்சூ ரணமே செய்யே. 455

செய்துமே யந்தத்தூள் கலசத் திட்டுச்
சிறப்பான மேனிச்சார்வெள் ளாட்டி னீரும்
அய்துமே யிஞ்சிச்சார் கரிசா லைச்சார்
ஆமணக்கி னிலைச்சாறும்பேய்க் குமட்டிச் சாறும்
எய்துமே முசுமுசுக்கைசதுரக் கள்ளிச் சாறும்
யிதமான திருகுகள்ளிச் சாறு டொக்க
அய்துமே சங்குநொச்சிதழு தாழைச் சாறும்
அப்பனே வகைவகைக்குப் படியா மாக்கு
அய்துமே வார்த்தந்தச்சூ ரணத்தைப் பிசறி
யப்பனே புட்டுப்போல் பிசைந்த மிழ்த்தே. 456

அமிழ்த்தியே மேல்மூடிச் சீலை செய்து
அப்பனே புடம்போட் டாற விட்டு
அமிழ்த்தியே யெடுத்ததனைப் பதனம் பண்ணி
அப்பனே நாளொன்றுக் கந்தி சந்தி
அமிழ்த்தியே நேரமொருவெரு கடித்தூள் கொள்ள
அதிசயந்தான் தீருநோய் சொல்லக் கேளு
அமிழ்த்திவிடு கவுசிகெண்டை காய்ச்சல் கட்டி
அட்டகுன்ம வாய்வோடு அண்ட வாய்வே. 457

வாய்வோடு வாதமெண் பதுவுஞ் சூலை
வாங்காத நரிச்சூலை சந்தி டுப்புத்
தேய்வோடு திமிர்வாதம் முழந்தாள் வாதம்
தேகமெல்லா முதறிவிடு முளைவு குத்தல்
ஆய்வோடு பித்தவாய் வக்கினி மந்த
மரோசியமு முப்பிசமு மன்ன தோடம்
வாய்வோடு சீதளமாஞ் சன்னி வாத
மகத்தான நீராமை கவுசி போமே. 458

கவுசிபோ மவிழ்தங்கள் தயிலங் கற்கம்
கைமுறையாய்க் குருதொட்டுக் காட்ட வேணும்
அவசியமா முறையறியார் மூட ரப்பா
அறியாமல் சாத்திரத்தைப் பொய்யென் பார்கள்
தவசியாய் சிவயோகிச் சித்தர் பாதம்
தணவணங்கிப் பெரியோரை யனுச ரித்து
நிவுசியமா முள்கருவும் புறக்கருவும் பார்த்து
நிசவாத வைத்தியமும் செய்வார் பாரே. 459

## பதினெட்டுக் குட்டத்துக்கும் சிறுநீரில் சூட்சம்

செய்யவே பதினெட்டுக் குட்டஞ் சூலை
தீரவே சிறுநீரில் சூட்சங் கேளு
பைய்யவே பேய்த்தேத்தான் வேரை வாங்கி
பாத்திரந்தா னென்றுசெய்து வைத்துக் கொண்டு
உய்யவே காலமே யெழுந்தி ருந்து
உன்னுடைய சிறுநீரில் சேரை வாங்கி
நைய்யவே கடுக்காய்த்தூள்வெரு கடிதான் போட்டு
நாள்தோறு மண்டலந்தா னுண்டு பாரே. 460

மண்டலந்தா னிப்படியே கொள்ளும் போது
மைந்தனே சாபத்தை நிவர்த்தி செய்து
மண்டலந்தான் சிவசிவா வென்று கொள்ள
மகத்தான கிளிமுனைகண் ணுடிப் பாரு
மண்டலந்தா னிப்படியே கொள்ளும் போது
வசியங்கள் விந்துநிலை மருவி நிற்கும்
மண்டலந்தா னிப்படியே செய்து கொள்ள
மகத்தான காயசித்தி யாகும் பாரே. 461

பாரேவெண் குட்டமொடு குறைநோ யெங்கே
பரிசுகெட்ட கிரந்தியரை யாப்புச் சூலை
ஆரேநீ சிரங்குசொறி கரப்பா னெங்கே
ஆளுகட்டி வெடிசூலை யாருப் புண்ணுந்
தீராத புண்புரைகள் திமிரு சூலை
தேகத்தில் பதகரியுந்தழு தழையு மூரல்
காரேநீ வாய்வோடு கர்ம ரோகம்
கரைகாணு தோடுமடா கண்டு பாரே. 462

கண்டுபார் சர்வநோ யெல்லாந் தீர
கனமான தேகமதுகற் பாந்த காலம்
உண்டுவா காயசித்தி சித்த னுவாய்
ஒருவருக்கு மிக்கருவை யுரைக்கொ ணுது

கண்டுபார் தன்னுக்குள் ளவிழ்த மெல்லாம்
கட்டிவைத்து காட்டிலே யலைகி ருர்கள்
பண்டுள்ள நோய்தீர அவிழ்த மெங்கே
பாங்கான வாதமெங்கே கற்ப மெங்கே
கண்டிடாய் ஐங்காயக் கருத்தா னெங்கே
கருவறியு மூடர்களே கண்டி டீரே. 463

கருவான பஞ்சபூத சரக்கு மெங்கே
கல்லான அண்டமெங்கே வீர மெங்கே
கருவான வழலையெங்கே முப்பூ வெங்கே
கரைகாணு வுட்கருவும்புறக் கருவு மெங்கே
கருவான ரவிமதியு மெங்கே சொல்லு
காரணமாம் நாதவிந்து தானு மெங்கே
கருவான அண்டபிண்டம் ரெண்டு மெங்கே
காரமெங்கே சாரமெங்கே கண்டு பாரே. 464

பாரப்பா பஞ்சதே வதைக ளெங்கே
பரையோடு சிவமெங்கே வெளிதா னெங்கே
காரப்பா வாசியெங்கே கலைதா னெங்கே
கலைக்கான யோகமெங்கே ஞான மெங்கே
ஆரப்பா வடியெங்கே முடிதா னெங்கே
ஆதிவத்து அனுதிவத்தி ரண்டு மெங்கே
சீரப்பா வத்துவொடு வாம மெங்கே
திருநீறும் செயநீரும் நீறு மெங்கே
கூறப்பா சாகாது வேகா தெங்கே
கூறுகெட்ட மாந்தர்களே குறித்துப் பாரீர். 465

குறித்துப்பா ரிவையெல்லாந் தன்னுக் குள்ளே
குறிப்பறியா ருலகத்தோ ரலைந்து கெட்டார்
குறிப்புடனே தன்னைத்தான் அறிய மாட்டார்
குறிப்பறிந்தோன் சிவயோகி சித்த னுவான்
குறிப்புடைய நாதவிந்தாய் எல்லா மாச்சு
கோடான கோடிசித்து மாட லாச்சு
குறிப்புடைய நாதவிந்து நிலையுங் காணுர்
கொள்கிவரு நோய்ப்பிணியின் குறியைக் கேளே. 466

கேளப்பா நாதத்தில் விந்து புக்கில்
கெடியாநா லாயிரத்துநூற்று நாற்பத் தெட்டுந்
தேளப்பா கொட்டியதோர் விடங்கள் போலே
திசைநாடி யெழுபத்திரா யிரந ரம்பில்

வேளப்பா அடங்கிநின்ற யோக மெல்லாம்
விளைந்ததடா அவரவர்கள்வினைப் பயனுல் காணும்
சூளப்பா நோயவிழ்ந்த விபரங் காணுர்
சுழுனைபற்றி நிலைநாடிப் பாரா ரென்னே. 467

பாரான சகலகலை யறிந்தாற் போலே
பண்டிதன்நா னென்றுபழி பாவஞ் செய்வான்
கூரான நோயென்பான் பேய்தா னென்பான்
குலதெய்வக் குறையென்பான்குறளி பில்லி யென்பான்
ஆருன நோயறிந்து அவிழ்தஞ் செய்யான்
அகப்பட்ட மருந்தையெல்லாங் கொடுத்துப் பார்த்துத்
தீராது போனதென தவிழ்த மென்பான்
செத்தபின்பு தூரப்போ யொளிவான் பாரே. 468

பாரப்பா வாதியென்ரு லாய்ந்து பாரு
பலபலவா நோயறிந்து பாகஞ் செய்வான்
கூறப்பா சகலசித்து மாடச் செய்வான்
குறிப்பறிந்து வாதமுறை செய்வான் பாரு
ஆரப்பா மனமடங்கிப் போதம் பார்த்து
அப்பனே போதத்தி லடங்கி நின்று
பாரப்பா குருபதத்தை யடுத்துக் காத்து
ஆயிபதம் போற்றியடி வணங்கு வானே. 469

வணங்கிடவே பூரணத்திற் சொல்லக் கேளு
மாசற்ற [1]சடை கற்பமப்பா மேலும்
இணங்கிடவே விதைபோக்கி யாவி னெய்யில்
யேழுசுத்தி செய்துபலம் நிறுத்துக் கொண்டு
குணங்கேளு யிளவருப்பாய்ச் சூரணமே செய்து
குமுறவே வைத்துப்பின் கூறக் கேளு
மணங்கவே கடைச்சரக்கு விபர மாக
மைந்தனே சொல்லுகிறேன் வகைதான் கேளே. 470

வகையென்ன சாதிக்காய்சாதிபத் திரிகி ராம்பு
வகையான ஏலமில வங்கங் கோட்ட
மிகையாக லவங்கபத் திரியுங் கெட்டி
மிளகுடனே சதாப்பூ இலையுங் கூட்டித்
துகைகேளு தாளிசையு நாகப் பூவும்
சொற்பெரிய வால்மிளகு கூகை நீரும்
நகையாதே வாலுளுவைகற் கடக சிங்கி
நலமான கசகசா காமப் பூவே. 471

1. சடை—சடைக்கஞ்சா இலை.

பூவோடு சடாமாஞ்சி சீரகமு மல்லி
புகழான அத்தித்திப்பிலி திப்பிலி மூலம்
ஆவான மதுரமொடுவெப் பாலை யரிசி
அவினியொடு மாசிக்காய் முருங்கை வித்து
மர்வான நிலப்பனைவேர் மருளூ மத்தை
வளமான சடைக்கஞ்சா வித்துங் கூட
தேவான வாய்விளங்கம் மருட்டி மொக்கும்
செவியிலுப் பைப்பூவு மதனப் பூவே. 472

மதனமா முந்திரிகை பேரீச் சோடு
வகைக்குக்கால் பலங்கொண் டிளவறுப்பு செய்து
திகையாதே யிடித்துநன் ருய்ச்சூ ரணமே செய்து
செப்பரிய முன்மருந்தோ டொக்கச் சேர்த்து
பதனமா யாவின்பால் படிதா னுலு
பாண்டத்தி லிட்டுஅடுப் பேற்றிக் கேளு
பதனமாய் வங்காளச்சீ னிபலம் பத்து
பழையபனை வெல்லமது பத்துத் தானே. 473

பத்தான பாலிவிட்டுக் கரைத்துக் காய்ச்சி
பாகுவரில் சூரணத்தைக் கொட்டிக் கிண்டி
பத்தாதே லேகியந்தான் சேரும் போது
பசுவினெய் ஒருபடிதா னதிலே வாரு
முத்தாகக் கிண்டியேமெ ழுகுபதம் கண்டு
முன்னிறக்கி வைத்துத்தேன் வார்த்துக் கிண்டி
நத்தான மயனம்போல் கிண்டி வாங்கு
நலமான சாடிதனி லிட்டு மூடே. 474

மூடியே கணேசனொடு கந்தன் பூசை
முக்கியமுள்ள வடுகனொடு தேவி பூசை
நாடியே நாதாக்கள் பாதம் பூசை
நலம்பெறவே செய்துநீ [1]லகிரி செய்து
வாடாதே தங்சம்போல் பதன்ம் பண்ணு
மைந்தனே நா ளொன்றுக்கிரு நேர மாக
கூடியே நேரமொருகொட் டைப்பாக் களவு
கொண்டுவரில் லகிரியுட குணந்தான் ஆக்கும். 475

ஆக்கவே புலம்பாது மவுனங் கொள்ளும்
ஆரவரும் விந்துவது மேலே யேறும்
தாக்கியே வாசிகொண்டு ஒளியே மீறும்
சஞ்சரிக்க வாறுதலம் வெளியாய்க் காணும்

1. லகிரி=துதி;

பார்க்கவே பசுந்தங்கம் போலே மேனி
பனியான நோயெல்லாம் பறந்து போகும்
காக்கவே குகைவாசல் காத்தா யானல்
சகனமாம் சித்தருணைக் காண்பார் பாரே. 476

கண்டுமே சகலசித்து வகையீ வார்கள்
கவனமென வோடுதற்குக் குளிகை யீவார்
கொண்டுபார் கோரக்கர் மூலி வேகம்
கூறுதற்கு நாவுமுண்டோ பாவுமுண் டோசொல்
தண்டுமிண்டு பண்ணுமற் கொண்டு தேறு
சரீரசுக முண்டாகுந் தேகங் கல்லாங்
கண்டறியா மூடரப்பா கஞ்சா கள்ளு
கடியதொரு சாராய மகிமை தன்னை
அன்றிட்ட சாபங்கள் நிவர்த்தி செய்ய
அறியாமல் கொண்டுகெட்டு அலைந்திட் டாரே. 477

அலையாமல் சாபங்கள் நிவர்த்தி செய்து
அட்சரத்தை யறியசெடத் தூணிப் பார்த்து
கலையான தெட்டாதே யொன்றிற் சேருங்
கருவறிந்து மவ்வுமுவ்வு மிருந்தவிடங் கண்டு
அலையாம லறிவுக்குள் ளறிவை யுன்னி
மவுனமென்ற சுழுமுனையிலே மனக்கண் ணூட்டி
அலையாம லிருக்கவென்றால் சொல்லக் கேளு
அடிமூலங் கண்டத்தி லகார மூணே. 478

அகாரமா நடுமைய்ய முகார மூணு
அண்ணுக்கில் மகாரமா மவுன மூணு
ககாரமா நாசிநுனிரீங் கார மூணு
கண்மூக்கு மத்தியிலே சிகார மூணு
அகாரமாம் சிகாரமிரு புறமு மூணு
நாடியே வாசிதனையடிமூலத் தங்கென் றூணு
அகாரமா யொத்ததோர் செய்யு மார்க்கம்
அதுகடந்த ஞானியென்றால் மவுன விந்தே. 479

மவுனமென்ற விந்துவிலேரீங் கார மிட்டு
மகாரமதின் மேலிட்டு மவுனத் தூணு
மவுனமென்ற ஓங்கார வட்ட மாச்சு
வட்டத்தி லூன்றியதோ ரெழுத்தொன் றுச்சு
மவுனமென்ற தொன்றாலே சத்திசிவ மாச்சு
மாசற்ற நாதாக்கள் மவுனங் காண்பார்
மவுனந்தான் மனமுரைத்த ஞானிக் கெய்தும்
வாய்ப்பேச்சால் திருடருக்கு வாயா வாறே. 480

வாருன வீரமொடு ஞான மார்க்கம்
மைந்தனே நாதாக்கள் சொல்லார் சொல்லார்
கூறுன வாலையிலேமூன் றெழுத்தைச் சொல்லார்
கொள்கியதோர் அட்டாங்கஞ் சொல்லார் சொல்லார்
பேருன வாசியுட கருவைச் சொல்லார்
பிலத்ததொரு சுழுனையிலேகண் ணுடி சொல்லார்
தாருகப் பன்னிரண்டு வருடந் தானும்
தொண்டுபண்ணி நின்ருக்கால் சொல்லு வாரே. 481

சொல்லுவா ரிதைவிட்டு நூலைப் பார்த்தும்
துஞ்சாமல்பேச் சால்சகலசித்து மறிந்தே னென்று
நல்லோரைப் பெரியோரைத் தர்க்கம் பேசி
நான்திறவா னென்றுதிறம் பேசிப் பேசி
சொல்லோடு பொருளறியான்கருக் குருவுங் காணுன்
சொற்குருநா னென்றுவெரு ஓர்மை பேசி
மல்லுவார் மானிடரை யேற்றி யேற்றி
மயக்கியே பொருள்பறித்து மாளு வாறே, 482

## அனைத்துப் பாண்டுவுக்கும் சித்தாதி இளகம்

மாளாமல் பாண்டுகா மாலை தீர
மகத்தான சித்தாதி சொல்லக் கேளு
மாளாதே புளியினிலை பலந்தான் நூறு
மகத்தான நீர்முள்ளி உலர்ந்த தாக
மாளாம லஞ்சுபத்து பலந்தான் சொன்ேனும்
மாசற்ற கரிசாலையஞ் சுபத்து பலந்தான்
மாளாம லவ்வீதம் கீழ்க்காய் நெல்லி
வளமாக விடித்துமொரு பாண்டத் திட்டு
மாளாம லீரெட்டு மரக்கால் நீர்தான்
வார்த்ததிலே துருப்பிடித்த இரும்பைக் கேளே. 483

இரும்பதிலே பலம்நூறு கூடப் போட்டு
எட்டொன்ருய்க் காய்ச்சியே யிறுத்துக் கொண்டு
விரும்பியே நல்லெண்ணெய் படிதான் வாரு
விருதான பழச்சாறு படிதான் வாரு
கரும்புநீர் நாரத்தம் பழத்தின் சாறு
கருவான வெள்ளாட்டுப்பால் படிதான் வாரு
அரும்பான நெல்லிக்காய்ச் சாறுபடி யொன்று
அரிதான முசுமுசுக்கைச் சாறுபடி யொன்றே. 484

ஒன்றான பேய்க்குமட்டிக்காய்ச்சாறு நாழி
உற்றதொரு குமட்டிமா தளையின் சாறு
கன்றுகப் படியொன்று அளந்து வாரு
கற்றாழைப் பிரமிச்சா றிஞ்சிச் சாறு
பன்றுக விவையெல்லா மொக்க விட்டுப்
பழையபனை வெல்லமது பலந்தான் பத்து
வன்றுகக் கரைத்ததனை யடுப்பி லேற்றி
வற்றியே குழம்புபோல் வருதல் காணே. 485

காணவே திரிகடுகுதிரி பலையு மேலம்
கரியசீ ரகமோடுதா ளிசையு மோமம்
பூணவே மரமஞ்சள்கற் கடக சிங்கி
புகழான சீரகமும் மஞ்ச ளோடு
தாணவே மதுரமொடுசாதிக் காய்கி ராம்பு
சடாமாஞ்சி நாகப்பூ ரோகணியுங் கூட
வீணல்ல விழலரிசிகாட் டாத்திப் பூவும்
வெப்பாலை யரிசியொடு சந்தனமுங் கூடத்
தோணவே யத்தித்திப்பிலி திப்பிலி மூலம்
சொல்லரிய நெற்பொரியுமுக்கா வேளைவேரே. 486

வேரான தூதுவளை வேருங் கூட
விபரமாய் வகைக்குக்கால் பலமுங் கூட்டிப்
பாரடா யிளவறுப்பாய்ச் சூரணமே செய்து
பாகிலிடு சாத்திரமாம் வருடஞ் சென்ற
தீரமாம் பழங்கிட்டம் பலம்நாலு வாங்கித்
திறமாக வேழுசுத்தி செய்து நன்றாய்
ஆரமாம் பொடிசெய்து கூடப்போட்டு
அடுப்பேற்றி மெழுபத மாகக் கிண்டே. 487

கிண்டியே லேகியமாய்ப் பண்ணிக் கொண்டு
கணேசனுக்குப் பூசைசெய்துதா னியபுடம் வைத்து
அண்டியே நாளொன்றுக் கிருநேரமாக
அப்பனே நேரமொரு கொட்டைப்பாக் களவு
பண்டியே மண்டலமே கொண்டா யானால்
பாண்டேது சோகைகா மாலையெங்கே
கிண்டியே பெறுவயறு பீனிசமு மெங்கே
கிராணிவகை யுள்ளதெல்லா மெங்கேபோச்சே. 488

## திரிலோக செந்தூரம்

போச்சென்ற திரிலோகசெந் தூரஞ் செய்து
புகட்டிடவே நோயெல்லாம் பொடியாய்ப் போகும்
வாச்சென்ற கைகா லெரிவு காந்தல்
வாகான வயறெறிவு கைகா லசதி
காச்சென்ற குன்மமெட்டும் பறந்து போகும்
கனகமென்ற திரிலோகசெந் தூரங் கேளு
வாச்சென்ற வரப்பொடியு முருக்குக் கிட்டம்
வகைவகைக்குச் சுத்திசெய்து பலந்தா னென்றே. 489

ஒன்ருகக் கல்வத்தி லிட்டுக் கேளு
உற்றதொரு நாவல்பட்டை சாற்ருல் சாமம்
அன்ருக ஆட்டியே ரவிபுடமாய் வைத்து
ஐந்துமுறை யிப்படியே பாகமாய்ச் செய்து
குன்ருத சிற்றேரண்ட விலைபொ திந்து
கூறுகிறேன் நெல்பாண்டத் திட்டு மூடு
நன்ருகச் செந்தூர மருணம் போலாம்
நலமான செப்பில்வைத்து மூடு மூடே. 490

மூடியே பணவெடைதான் செந் தூரந் தேனில்
மூட்டவே பாண்டுகா மாலை சோகை
நாடியே பெருவயிறுபீ னிசமும் பாண்டு
நலமான வுப்பிசங்கள் கிராணிவகை யோடு
நீடியே சலக்கழிச்சல்நீர்க் கோவை தானும்
நில்லாதே மெய்யிளைப்பு யீளை காசம்
வாடியே யேங்கலுப்புசம் வாய்வி னேடு
வாய்க்கசப்பு நீருறல் வாந்தி போமே. 491

## பவழ பற்பம்

போமென்ற பவழபற்பம் சொல்லக் கேளு
புதுமையா நற்பவழங் கொண்டு வந்து
ஓமென்ற சுத்தசலத் திட்டு நன்ருய்
ஒருநாள்தான் ராப்பகலா யூற வைத்து
வேமென்ற வவையெடுத்துக் கழுவித் தேய்த்து
விதமான ஆவின்பால் தன்னி லிட்டு
வாமென்ற நாளொன்று வைத்துப் பின்பு
வரிசையாய்க் கழுவிவிட்டு வகைதான் கேளே. 492

வகையென்ன தேள்கொடுக்குக் காயி டித்து
வாகாகப் புத்தோட்டில் பரத்திக் கொண்டு
நகையான பவழத்தைப் பரப்பி மேலே
நன்ருக விடித்ததொரு காய்ப ரப்பி

பகையாதே மேல்மூடிச் சீலை செய்து
பக்குவமாய்க் கெசபுடம்போட் டெடுத்துப் பாரு
அகையாதே சங்குபோல் நீறிக் காணும்
அதையெடுத்துப் பீங்கானி லாவின்பா லூட்டே. 493

ஊட்டியே கடுரவியில் சாம மொன்று
உருவேற வைத்தெடுத்து ஆல்பழுப்பில்
காட்டியே பொதிந்துகட்டிநெற் பாண்டத் திட்டு
கனமான மூன்றுநாள் கழித்து வாங்கி
தாட்டிகமாய்ப் பற்பமது தவளம் போலாஞ்
சாதகமாம் பரணிதனி லடைத்து வைத்து
ஆட்டியே பணவெடை தானெடுத்து
ஆவினுடை பால்நெய்தே னருந்தி டாயே. 494

அருந்திடுவாய் தைலபற்பம் லேகி யுங்க
ளனுபான வகையறிந்து கொள்ளு கொள்ளு
வருந்திவருஞ் சயமீளைமந் தார காசம்
வகையான சயரோகம் தொண்ணூற் றுறு
திருந்திவருஞ் சுரமீளை சுவாச காசம்
சிரங்குசொறி யுடனேதான் சேரப் போகும்
அறிந்துநான் வயித்தியரே யுங்களுக்காய்ச் சொன்னேன்
ஆண்பிள்ளை நீரானு லறிந்து பாரே. 495

## அரிதார பற்பம்

பாரப்பா வரிதார பற்பந் தன்னைப்
பாடுகிறேன் மக்களே பரிந்து கேளும்
காரப்பா வரிதாரம் பலந்தா னென்று
கட்டியாய் வாங்கியதைக் கிளியாய்க் கட்டி
கூறப்பா புத்தோட்டில் கிழியை வைத்துக்
குறிப்பான கல்சுண்ணங் கீழ்மே லிட்டு
ஏரப்பா தேசிநீர் வார்த்து மூடு
யெடுத்தெடுத்து முந்நீரை வார்த்து நீற்றே. 496

நீற்றிடவே யேழுசுத்தி செய்து நன்றாய்
நிலையான வாழையுட கிழங்கு தன்னில்
நாற்றியே கிழங்கதனைக் குடைந்து நீயும்
நலமான கட்டியதி னுள்ளே வைத்து
மாற்றியே கிழங்கதனுல் மூடிக் கொண்டு
மைந்தனே கிழங்கினது மேலே சீலை

பாய்த்தியே செய்துவைத்துக் குழிதான் வெட்டி
பாங்கான கெசபுடம்போட் டாறிப் பாரு
சாத்தியே அரிதாரங் கட்டி யங்கே
சங்குபோல் நீறியது தவள மாமே. 497

தவளமாம் பற்பமதைச் செப்பில் வைத்துத்
தன்னிலொரு பணவெடைதா னெடுத்துக் கொண்டு
தவளமாம் ஆவின்பால் தேனி லுண்ணு
சயமீளை மந்தார காச மெங்கே
தவளமாஞ் சிலேற்பனங்கள் தொண்ணூற் ருறும்
சளமான காசநோ யெல்லாந் தீரும்
தவளமா யழுகண்ணி ரோகந் தீரும்
சண்டாளக் கிரந்தியரை யாப்புச் சூலை
கவளமாங் கரப்பனொடு சிரங்கு நோயும்
கபமான சன்னிசுரம் தோட மெல்லாம்
பவமான ரோகமெல்லாம் மாத மொன்றில்
பஞ்சிவிடு நெருப்பதுபோல் பாறிப் போமே. 498

## தாம்பிர பற்பம்

போமென்ற தாம்பிர பற்ப மொன்று
புகலுகிறேன் வெள்ளெருக்கம் பாலை வாங்கி
வேமென்ற தாம்பிரத்தை யதிலே போட்டு
வெய்யிலிலே நாளொன்று வைத்திட் டாக்கால்
காமென்ற பகலெல்லா மூறி வத்தி
கற்கமா யிருக்குமந்த கற்கம் வாங்கி
போமென்ற தாம்பிரத்தைப் பொதிந்து நன்ருய்ப்
புதுவோட்டி லிட்டுமறு வோடு மூடித்
தாமென்ற கெசபுடந்தான் போட்டு வாங்கு
சங்குபோல் நீறியது தவள மாமே. 499

நீறியதோர் பற்பத்தில்பண வெடைதானெ டுத்து
நெய்தேனி லாவின்பால் தன்னி லேனும்
ஆறியே கொண்டிடவே குன்ம மெட்டும்
அசையாத ரெண்டுபத்து மேக சூலை
பாரியே பதினெட்டுக் குட்டம் போகும்
பறக்குமே வாயுவென்ற விருபத் தாறும்
கூரியதோர் மேகவகை ரோக மெல்லாம்
குணமாகும் கைகண்ட வித்தை கூறே. 500

## நாக பற்பம்

கூறவே நாகபற்பஞ் சொல்லக் கேளு
கூருன நாகமொரு கட்டி வாங்கி
ஆருன வயக்கரண் டிக் குள்ளே யிட்டு
அடுப்பேற்றி கரிசாலைச் சாறு நாழி
ஈருன நால்சாமம் சுருக்குப் போட
இயல்பான நாகமது நீறிப் போகும்
கூருன கரிசாலைச் சாற்றி லாட்டக்
குறிப்பான யீருள்ளிச் சாற்றி லேயும்
சீராக இல்லாட்டால் சிறியா நங்கை
செப்பரிய குகைதனிலே கீழ்மேல் வையே. 501

வைத்துமே நாகத்தை நடுவே வைத்து
வாய்மூடி யுலையிலிட் டூதப் பற்பம்
உத்தமனே பொருமியது நீறிப் போகும்
உற்பனமா யனுபான மறிந்து மாட்ட
பத்துமே யீளையிளைப் பிரும லோடு
பதினெட்டுக் காசவகைசிலேற் பனமுள் ளதுவும்
மெய்த்துமே சருவநோ யெல்லாந் தீரும்
விருதுசொல்லி வயித்தியரே விரைந்து பாரே. 502

பாரேநீ கிராணிவகை யெல்லாந் தீரப்
பாடுகிறேன் துருசுபற்பம் மக்காள் கேளீர்
காரேநீ துருசுவொரு கட்டி வாங்கி
கருந்துளசிச் சாற்றிலே யூறிச் சாமம்
ஆரேநீ யெடுத்தந்த இலைய ரைத்து
அங்கியாய்க் கட்டிக்குக் கவசம் பூசி
காரேநீ மேல்நாலு சீலை செய்து
சாணுழம் சாணீளம் சதுர மாகக்
கூரேநீ தரையளவு கண்ட மட்டுங்
குழிப்புடமாய்ப் போட்டெடுத்துப் பின்னுங் கேளே.

பின்னுங்கேள் கருமத்தஞ் சாற்றில் சாமம்
போட்டெடுத்து அவ்விலையை யரைத்துக் கட்டிப்
பின்னுங்கேள் முன்புடமாய்ப் போட்டெ டுத்துப்
பொருமியே துருசதுவும் நீறிப் போகும்
பின்னுங்கேள் சிமிழியிலே வைத்து மூடு
பெரியதொரு குருவாகும் பேசொ ணுது
பின்னுங்கேள் சாறுவராத் தழைகட் கெல்லாம்
பிசைந்தழுத்திப் பிழிந்திடவே தண்ணீ ரென்னே, 504

தண்ணீராம் வாதியென்ரு லறிந்து செய்வான்
சார்வான வயித்தியரே சொல்லக் கேளும்
பின்னீராம் சன்னிசுரம் தொண்டைக் கட்டு
பல்லசைவு அட்டகுன்மம் பறக்கும் பாரு
விண்ணீராம் மேலிளைப்பு யீளை காசம்
விம்மலொடு அகவைபெரு வயிறு வீக்கம்
பண்ணீராம் பித்தவகை காமாலை சோகை
பறக்குமே பித்தசயம்நீர்க் கோவை யென்னே. 505

கோவையாந் துரிசிலொருகுரு முடிக்கக் கேளு
கூறுகிறேன் நாதாக்கள்கூ ருத தெல்லாம்
கோவையாம் பூநீரு யீராறுமரக்கால்
கோதியே மண்படா தெடுத்து வந்து
கோவையாம் வெளவாலின் புழுக்கை தானும்
குணமாக வேயிரண்டு மரக்கால் தானும்
கோவையாங் குக்குடத்தின் வெண்மலந்தான்
கூட்டியே ரெண்டுபடி கொண்டிடாயே. 506

கொண்டிடவே துரிசிலொரு கட்டி வாங்கி
கூருன சுண்ணும்பு சீலை சுற்றி
அண்டிடவே குகையிலெட்டு கருவங்கம் மாட்டி
யதிலிட்டு ஏழுதர மதணவாங்கு
கண்டிடவே கவசத்தைத் தள்ளி வாங்கு
கட்டியது பச்சையது வெளிறிக் காணும்
தண்டியே அரையளவு குழிதான் வெட்டிச்
சதுரமாய் வெட்டியதில் பூநீர் கேளே. 507

பூநீரின் அடியிலே மரக்கா லானும்
போட்டதன்மேல் வெளவாலின் புழுக்கை கொட்டிப்
பானீரா மதன்மேலேபதக் களந்து போடு
பக்குவமா யதன்மேலேகுக்கு டத்தின் மலந்தான்
தூநீராம் படியொன்று அளந்து போடு
துரிசியென்ற கட்டியதன் மேலே வைத்து
வானீராம் குக்குடத்தின்மலமும் மேலே போடு
வெளவாலின் புழுக்கையதன் மேலே போடு
கோனீரா மதன்மேலே உவர்ப்பூ வைத்தான்
கொட்டியே யதன்மேலே திரணை போடே. 508

திரணையென்ன ரெண்டுமுழ முயரப் போடு
திரமாக வாறுதிங்கள் செல்லு மட்டும்
திரணையென்ன மழைபெய்தால் நணையா வண்ணம்
செய்தாறு திங்கள்சென்று திறந்து பாரு

திரணையாங் கட்டியது பொருமி நீறும்
சிவசிவா யென்னசொல்வேன் குருத்தா னப்பா
திரணையாஞ் சிங்கிக்கு யேற்ற சொல்லி
செப்பரிய நாதவிந்து முகத்தான் வாங்கே. 509

வாங்கியே பீங்கானில் வீரம் பூரம்
வளமான கருஉரமுஞ் சூதஞ் சேர்த்துத்
தாங்கியே அறுபுள்ளி வண்டின் முட்டை
தருவான குருவண்டு சூடன் வாங்கி
வாங்கியே வகைக்குப்பண எடைதான் போட்டு
மத்தித்து துரிசியென்ற சுண்ணத் தூட்டு
யேங்கியே ரவியிலிட்டு யெடுத்துப் பூசு
யிப்படியே யேழுநாள் பூசிப் போடே. 510

போட்டெடுக்கக் கடுங்காரச் சுண்ண மாச்சு
புகழாகக் கைபட்டால் வெந்து நீறும்
பாட்டுமே யெண்ணெய்கக்கித் தண்ணீ ராகும்
பக்கரசு பட்டையெல்லா நீறு மாகும்
நாட்டுமே பாசாணமறு பத்து நாலும்
நவலோகம் நவரெத்தி னம்உள் ளதுவும்
மாட்டுமுன்னே குருவாகும் மெழுகு மாகும்
வாடைபட்டால் சூதமது விறைத்துப் போமே. 511

விறைத்துப்போ மண்முதலாய் மலையும் நீறும்
வெகுசுறுக்கு வெகுசுறுக்கு வேதை கோடி
அரைத்திட்ட துரிசியுட குருவைத் தொட்டு
அரகரா ஆடினேன் கோடி காலம்
அரைத்திட்ட குளிகைகட்டிக் கெவுன மார்க்கம்
அண்டரண்ட கடாகமெல்லா மோடி மீண்டேன்
உரைத்திட்டார் தோடமென்று மனதி லெண்ணி
மனமுரைத்த சீடருக்குச் சொன்னேன் பாரே. 512

சொன்னேன்கேள் சூதவெண்ணெ யெடுக்கு மார்க்கம்
சொற்பெரிய நாதாக்கள் செய்யும் மார்க்கம்
மன்னவே சூதமொரு பலந்தான் பத்து
அடிகனத்த பெருஞ்சாலி விட்டுக் கேளு
தன்னவே வேப்பிலைதா னுருவி மூடு
தாழிரொம்பக் கொட்டியதில் தண்ணீர் வார்த்துப்
பண்ணவே மேல்மூடி யடுப்பி லேற்றிப்
பருவிறகாய் மூட்டியே கனலை மூட்டே. 513

மூட்டியே வடுகனுக்கு யீசா னத்தில்
முறையுடனே வஸ்த்துவொடு சுத்தி யாகக்
காட்டியே வைத்திட்டுச் சாபந் தீர்த்துக்
கனமாக வடுகனையும் லெட்சமுரு வேத்தி
நாட்டியே ராப்பகலும் கனலா றுமல்
நலமான காடாக்கினி யாக மூட்டு
மாட்டியே சலமெல்லா மெரிந்துவத்தி
பக்குவமா யடியில்நிற்கும் பதத்தைப் பாரே, 514

பதம்பார்த்து இலையெல்லா மெடுத்துப் போடு
பார்த்திட்டால் நீர்வத்தி சூதம் நிற்கும்
யிதமாகத் தானெடுத்துமறு சாலி விட்டு
யியம்பியதோர் சால்நிறையநிம்பிலையமூத்தி
அதமான சலமதன்மேல் நிறைய விட்டு
அடுப்பேற்றி மேல்மூடி வன்னி மூட்டு
சுதமான விரவுபக லாறு வன்னி
கனல்மூட்டி நீர்ச்சுண்டும் பருவம் பார்த்தே. 515

கருகாமல் மறுபாண்டத் திட்டுமுன் போல்
கனல்மூட்டி நீர்சுண்டும் பருவம் பார்த்தே
விருவென்ன விப்படியே முறைதப் பாமல்
வெவ்வேறு சாலிலிட்டு வன்னி மூட்டி
மருவென்ன கைமுறையு நன்று யப்பா
மறவாமல் வடுகனையும் பூசை செய்து
நறுவிசாய் மண்டலந்தான் சாறு மாற்றி
நாலுபத்து நாள்சாறு மாற்றிச் செய்யே. 516

மாற்றியே நாற்பத்து ஒருநா ளப்பா
மைந்தனே சூதவெண்ணெய் அருணன் போலாம்
காத்துமே வடுகனுக்கும்ஆத்தா ளுக்கும் பூசை
கைமுறையாய்க் கணேசனுட கந்தன் பூசை
பார்த்துமே நாதாக்கள் பூசை பண்ணு
பஞ்சகர்த்தாள் பூசைபண்ணி பணிந்து நில்லு
யேத்துமே நவச்சாரம் தீரச் செய்து
இந்தவெண்ணெய் தனையெடுத்துப் பதனம் பண்ணே.

பண்ணியதோர் ரசவெண்ணெய் யார்தான் செய்வார்
பத்திமுத்தி வயிராக்கிய முற்றோர் செய்வார்
கண்ணான சிவயோகி சித்தர் செய்வார்
கசடரென்ற மானிடரோ செய்யப் போறார்

நண்ணியே மாதவத்தோர் செய்ய வேணும்
நலமுடைய பெரியோரே செய்ய வேணும்
புண்ணியமே செய்தவர்க்கு எய்து மெய்தும்
பொய்சொல்லும் புலையருக் கெய்தா வாறே. 518

வாருன ரசவெண்ணெய் எடுத்துக் கொண்டு
[1]மஞ்சாடி வெற்றிலையில் தடவி யுண்ணு
ஆருன பனைவெல்லந் தன்னி லுண்ணு
ஆவின்பால் திரிகடுகு தேனி லுண்ணு
கூருக யில்லாட்டால்வெற் றிலையி லுண்ணு
குட்டமொடு அட்டகுன்மம் சூலைபதி னெட்டும்
மாருன மேகவகை யிருபத் தொன்றும்
அதிலெழுந்த ரோகவகை யெல்லாம் போமே. 519

போமேதான் கிரந்தியரை யாப்புச் சூலை
புண்புரைக ளழுகண்ணி பிளவை புத்து
ஆமேதான் வாதமெண் பதுவு மெங்கே
அதிலெழுந்த முடக்குவகை சூலை யெங்கே
வேமேதான் பாரிச பட்சவாதம்
விழலாமே வாயுவென்ற விருபத் தாறும்
காமேதான் கண்ணேசி கன்னப் புத்து
கணமூல பவுத்திரங்க ரப்பான் போமே. 520

கரப்பனொடு சிரங்குசொறி மேகவெடி சூலை
கழலண்ட வாய்வோடு யோனிப் புத்து
கரப்பனொடு விரணங்க ளெல்லாம் போகும்
கால்கடிகை விப்புருதி கண்ட மாலை
கரப்பனொடு பித்தவாய் வுட்டின வாய்வு
காசநோய் நீரிழிவுபத கரியு மெங்கே
கரப்பனொடு குலைமுட்டி யந்திர வாய்வு
கருங்குட்டம் வெண்குட்டம்செங் குட்ட மென்னே.

குட்டமொடு சருவநோ யெல்லாந் தீரும்
குறைநோயும் பெருநோயும் குடிபோஞ் சொன்னேன்
கெட்டியாந் தேகங்கற் பாந்தகாலம்
கெடியான தாதுவெல்லா மிறுகிக் கட்டும்
மட்டமாம்பால் சொரிந்தாற் போலே யப்பா
பழம்பழக்கு முடமபெல்லாம் பாலை யாகும்
திட்டமே சொல்லிவிட்டோம் சூத பற்பம்
தின்றிடிலோ சாவேது தேகம் கல்லே. 522

1. மஞ்சாடி—பெருங்குன்றி (இது எடுத்தல் அளவுக்கு உபயோக மாகும் பொருள்.

கல்லான காயசித்தி தேக சித்தி
    கற்பமொடு ரசவாதம் சணமாங் குளிகை
கல்லான [1]கெவுனமாக் குளிகை யோடு
    கனமான சருவநோ யெல்லா மைந்தா
சொல்லாதே சூதத்தை விட்டால் வேறே
    சொல்லுக்கு வல்லவரார் சொல்லக் கேளு
சொல்லாரே சித்தர்கள் பதினெண் பேரும்
    [2]சிவவிந்தைக் கட்டியல்லோ திரமா [3]னாரே. 523

## சயரோகத்துக்குத் திப்பிலி ரசாயனம்

திரமான சயரோகந் தொண்ணூற் றாறும்
    தீரவே திப்பிலிரசா யனத்தைக் கேளு
திரமான திப்பிலியோ பலமோ ரெண்டு
    சீரகமுஞ் சுக்கேலந் திப்பிலி மூலம்
திரமான சிறுதேக்கு வாய்வி ளங்கம்
    செப்பரிய மிளகுவகை பலந் திப்பிலிவறுத்துத்
திரமாக யிடித்துவடி கொண்டு நீயும்
    தேனதுக்குத் தக்கதுகண் டப்பால் கேளே. 524

கேளேநீ தேனைவடி கொண்டு நீதான்
    கெட்டியாய்ச் சட்டியிலே வாரு வாரு
கேளுநீ பனைவெல்ல மானால் நன்று
    கிடையாட்டால் பஞ்சாரைச்சூ ரணத்தி லப்பா
பாளேநீ வாராமல் தேனி விட்டு
    பாகுவரில் சூரணத்தைப் போட்டுக் கிண்டி
வேளேநீ மெழுகுபதம் போட்டு வாங்கு
    விற்பனமாய் நாளொன்றுக்கிரு நேரங் கொள்ளே. 525

கொள்ளுவது யிருநேரம்பாக் களவு சொன்னோம்
    குணமாக மண்டலந்தான் கொள்ளக் கேளு
கொள்ளவே சயமெண்பத் தாறு காசம்
    குத்திருமல் நெட்டிருமல் கிறுகி றுப்பு
கொள்ளவே யிருமலொடு சருவ நோயும்
    குடிபோகும் வயித்தியரே கூர்ந்து கேளும்
கூர்ந்துகேள் அரிதார பற்பம் சேர்த்துக்
    கொண்டிட்டால் வெகுசுருக்கு குறித்துப் பாரு. 526

---

1. கெவுனமாக்குளிகை=கமனமாக்குளிகை என்பது. (கமனம் என்பது மோதல்) விண்வெளியில் போக உதவும் குளிகை—இதனைக் ககனக் குளிகை யென்பாரும் உண்டு (ககனம்=விண்). 2. சிவவிந்து=இரசம்; 3. திரம்=(ஸ்திரம்) நிலைபெறல். பல்லாண்டு வாழ்தல்—அழியாநிலை.

பாய்ந்துபார் கரிசாலைவல் லாரை யோடு
பயன்மிக்க மருதோன்றி நீலிச் சாரும்
தோய்ந்துபா ரிதுக்கிசைந்த தைல மொன்று
சொல்லுகிறேன் வயித்தியரே கேளு கேளு
ஆய்ந்துபா ரெள்ளெண்ணெய் படிதான் ரெண்டு
ஆவின்பால் படிரெண்டு அளந்து கொள்ளு
காய்ந்துபார் முசுமுசுக்கை குமரி தாழை
கற்பூர வல்லிநிம்பச் சாறுங் கூட்டே, 527

கூட்டப்பாபொன் னுங்கண்ணி கீழ்க்காய் நெல்லி
குறிப்பான புளியாரை வகைவ கைக்கு
ஆட்டப்பா வகைவகைக்கோர் படிதான் சாறு
அளந்துவிட்டுக் கற்கவகை யறையக் கேளு
மேட்டிமையா விலாமிச்சம் வில்வ வேரும்
வெட்டிவேர் கிளியூறல் தேவ தாரம்
மாட்டப்பா மரமஞ்சள்கத் தூரி மஞ்சள்
வாலுழுவை சிறுதேக்கு சிங்கி யேலம்
பாட்டப்பா சந்தனமுங் கிராம்பு மஞ்சள்
பச்சிலைபூ லாங்கிழங்கு சீரக மாமே. 528

சீரகமாங் குங்குமப்பூ வகைவ கைக்குத்
திறமாகக் கழஞ்சிரண்டு பாலா லாட்டிச்
சீரகமாய்க் கலக்கியந்தவெண் ணெயிலே வாரு
தீயேற்றி யொருவிறகால் வன்னி மூட்டி
சீரகமாய் மெழுகுபதம் வருதல் கண்டு
தீயாறி வடித்தெடுத்து வைத்துக் கொண்டு
சீரகமாய் நாலுநாள் வட்டம் மூழ்க
சீயக்காய் பாசிப்பயறு வெந்நீர் மூழ்கே. 529

மூழ்கின நாள் புளிதகைபால் தயிர்மோர் தள்ளி
முசியாதே பெண்ணுசை பச்சைமாங் கிடங்கள்
மூழ்கின நாள் உடன்தூக்கம்பெருந் தூக்கம் தள்ளு
மூழ்கிவரும் போதெல்லாம் கூட்டு கூட்டு
மூழ்கிவரும் போதுநோய் தீரும்வகை கேளு
முனையான சிலேட்டுமநோய் தொண்ணூற் ருறு
மூழ்கிவரும் யீளைப்பிரும லீளை காசம்
மூச்சேங்க லுப்பிசமும் சுவாசகாசம் போமே. 530

சுவாசமாம் வறட்சியொடு உட்டி ணங்கள்
தொலையாத சிரசில்நீர் பீனிசங்கள்
கவசையா மிவையெல்லாங் காணு தோடும்
கண்ணிணீர்ப் பாச்சலொடு நேத்திரச் சூடு

தவசையாம் சரீரத்தில் மேகச் சூடு
 தணிந்துவிடும் தயிலம்வெகு சாந்த மாகும்
இவசையா மின்னமொரு சூட்சங் கேளு
 இயம்புகிறேன் சிரசில்நீர் போக்கக் கேளே, 531

கேளப்பா சிரசில்நீ ரெல்லா மாறக்
 கிருகையொன்று சொல்லுகிறே னெண்ணெய் கேளு
பாலப்பா படியொன்று அளந்து வாங்கு
 பசுமஞ்சள் சாறதுதான் படிகால் சொன்னேன்
மூளப்பா ஆவினுடசாணிப்பால் படியோ கால்தான்
 மோராதல் தயிராதல் படிகால் வாரு
ஆளப்பா நல்மிளகு வகைவ கைக்கு
 அப்பனே சுக்கிரண்டு அரைத்துப் போடே. 532

அரைத்துமே சுக்கிலொரு கழஞ்சு கூட்டி
 அழகான கீழ்க்காயின் நெல்லி வேரும்
அரைத்துமே கழஞ்சிரண்டு கூடப் போடு
 அடுப்பேற்றி மெழுகுபத மாகக் காய்ச்சி
அரைத்துமே நாலுநாள் வட்ட மூழ்க
 அப்பனே சிரசிலுள்ள சலதோ டங்கள்
கரைத்துமே கண்ணில்நீர்ப் பாச்சல் மற்றும்
 கண்வெளுத்துப் பொங்கிவரும்கண் சூடு காங்கை
வரைத்திட்ட கிறுகிறுப்பு மயக்கந் தூக்கம்
 மண்டையிடி குறைநோவு தீரு மூழ்கே, 533

மூழ்கப்பா சருவமேக வகைதான் தீர
 மொழிகிறேன் மேகாதி குளிகை யொன்று
சூழ்கவே யரிதாரங் கெந்தி ரெண்டும்
 சுத்திசெய்து வகைக்குக்கழஞ்சி ரெண்டு பத்து
வாழ்கவே யப்பிரகசெந் தூரம் பத்து
 வாகான சூதசெந் தூரம் பத்து
ஆழ்கவே வங்கசெந் தூரம் பத்து
 அழகான வெள்ளிசெந் தூரம் பத்தே. 534

பத்தான திரிகடுகுசாதிக் காய்கி ராம்பு
 பகரரிய நிலப்பனைவேர் தேத்தாங் கொட்டை
கத்தான சன்ன லவங்க மோடு
 கசகசா வலம்புரிக்காய் கரிய சீரகம்
புத்தான வாலுளுவை ஆவாரைமொட் டரிசி
 புளியன்விதைத் தோலுமா தளையின் வித்து
வத்தாதே முருங்கைவிதை பூனைக் காலி
 விதைவகைக்கு முக்கழஞ்சு வரிசை கேளே. 535

வரிசையாய் முன்மருந்தி லொக்கச் சேர்த்து
வளமான ஒதியஞ்சா ருவின் பாலுங்
கரிசையாங் கொடிவேலி தேங்கா யின்பால்
கற்ருழஞ் சாறுவகை வகைக்குச் சாமம்
உரிசையா யாட்டிமைபோல் உருண்டை கட்டி
உத்தமனே நிழலுலர்த்திதா னியபுடம் போடு
நிரிசையாய் நாளொன்றுக்கிரு நேர மாக
நேரமொரு வுண்டைகொள்மண் டலந்தான் காணே.

காணவே மேகமென்ற விருபத் தொன்றுங்
கபமான சயரோகந் தொண்ணூற் ருறுங்
கோணுத சீழிரத்தம் பிரமியநீ ரிழிவு
குட்டமொடு கிரந்தியரை யாப்புச் சூலை
ஆண்மையா யரிகரப்பன் செங்க ரப்பான்
அழுகண் ணி பெரும்பாடு யெலும்பு ருக்கி
காணவே கண்ணேசி கன்னப் புத்து
கபாலகுட்டம் பவுத்திரங்கள் கண்ட மாலை
தோணவே மேகவெடி சூலைப் புண்ணும்
சொற்பெரிய கிராணிகுன்ம மெல்லாம் போமே. 537

போமென்ற தாதுவெல்லா மிறுகிக் கட்டும்
புளகிதமா நாடியெல்லாம் சிறந்து மின்னும்
வேமென்ற விந்தாதிக் காதி யாகும்
மெய்யாகச் சொல்லிவிட்டேன் விரைந்து பாரு
காமென்ற யின்னமொருஅரி தார பற்பம்
களங்கமாய்ச் சொல்லுகிறேன்வெண் புரசு பார்த்து
வேமென்ற பட்டையதில் வேரில் லாமல்
விதமான பூவாதல் லொன்றி லாதல்
தேமென்ற தாளகத்துக் கரைத்துப் பூட்டி
சீலைசெய்து குக்குடமாம் புடத்தைப் போடே. 538

புடம்போடு நீறியது சுண்ண மாகும்
புகழான வெள்ளிசெம்பில் பத்துக் கொன்று
மடம்போட்டு புகட்டிடவே மாற்றே ழாகும்
ஆருக்கும் சொல்லாதே வேதை மார்க்கம்
சடமான நோயறிந்துஅனு பானம றிந்து
தாக்கவே சயந்தொண்ணூற் ருறும் போகும்
படமான பதினெட்டுக் குட்ட ரோகம்
பறக்குமே நோயோடு சூலை போமே. 539

## பெரும்பாட்டுக்கு

போமென்ற பெரும்பாட்டுக் கின்ன மொன்று
புகழாகச் சூட்சமொன்று வெகுசு றுக்கு
தேவென்ற பூங்காவி தேர்ந்து கொண்டு
சிறப்பாக வெடுத்துவந்து யிடித்து நன்றுய்ப்
பாமென்ற யேழுதரம்வடி கட்டிக் கொண்டு
அதிற்பாதி வங்காளச் சீனிபலஞ் சேர்த்து
வேமென்ற நாளொன்றுக் கந்தி சந்தி
வெருகடிது ளஞ்சுநாள் கொள்ளு கொள்ளே. 540

கொள்ளவே பெரும்பாடு யெல்லாந் தீரும்
குடிகெடுத்த புளியோடு புகையுந் தள்ளு
மெள்ளவே கைகண்ட வித்தை சொன்னேன்
விருதாக வின்னமொரு கலிக்கங் கேளு
விள்ளவே பெருங்காயந் திப்பிலி மிளகு
வெள்ளுள்ளி கிராம்புமிவை யைந்தும் நேராய்
மெள்ளவே வெற்றிலைச்சார் மேனிச் சாறும்
வெள்ளைச்சா ரணைச்சாறும் பழச்சா றூட்டே. 541

ஊட்டியே சாறுென்று சாம மொன்று
உற்பனமா யரைத்துநன்று யுண்டை கட்டி
மாட்டடா நிழலுலர்த்தி சன்னி தோடம்
மாயவேவெற் றிலைச்சாறு தும்பைச் சாறு
வாகான மேனிச்சார் முலைப்பா லோடு
நாட்டியே யிவ்வகையா லனுபா னத்தில்
நலமான வஞ்சனங்கள் தீட்டிப் பாரு
கூட்டியே சருவநோ யெல்லாந் தீருங்
குடிலமாம் பேயோடு பிசாசு போமே. 542

## சன்னி சுரத்துக்கு பொட்டணம்

போமென்ற சன்னிவகைப் பொட்ட ணத்தைப்
புகலுகிறேன் வெண்ணொச்சி யிலையி னோடு
போமென்ற முருங்கையுட பட்டைப் பூவும்
புகழான சீந்திலிலை சமனாய்க் கொண்டு
காமென்ற ஓமமொடுநவச் சாரங் கூட்டி
கரியசீ ரகமோடுவேப் பரிசி கூட்டி
வாமென்ற வெருக்கினுட பழுப்பி னோடு
மாவிலங்கம் பட்டையொடுவெள் ளுள்ளி யென்னே.

என்னவே தேத்தான்விதை வசம்பு கூட்டி
யிடித்தொன்றுய்ப் பொட்டணமாய்க் கட்டி வைத்து
தன்னவே சன்னிவகை பதின்மூன் றுக்கும்
தலைப்பாரம் பிடரிவலி யிசிவுக் கெல்லாம்
புண்ணவே யயக்கரண்டி யடுப்பில் வைத்துப்
பூணவே நிம்பெண்ணெய் குத்திக் காய்ச்சிப்
புண்ணமா நிம்பெண்ணெய் தோய்த்துத் தோய்த்து
பொட்டணத்தைப் போட்டிடவே புனித மாமே. 544

## தாம்பிர பற்பம்

புனிதமாந் தாம்பிர பற்ப மொன்று
புகலுகிறேன் நாதாக்கள்புக லாத தெல்லாம்
புனிதமாஞ் சதுரக்கள்ளிப்பாலி லொருசி றங்கை
புகழாக வாங்கியதில்தாம் பிரத்தைப் போட்டு
புனிதமாம் நாளொன்று ஊறப் போட்டுப்
போமென்ற மற்றநா ளந்தப் பாலை
புனிதமா மொருதுணியில் புரட்டிப் போட்டு
புகழாக மறுபடியும் பாலை வார்த்து
புனிதமா முன்போலே யொருநா ளூறிப்
புகழாக மறுநாள்தான்மறு துணிது வட்டி
புனிதமா யிப்படியே நாற்பத் தைந்து
நாளூறிப் பாலையெல்லாந் துணியி லூட்டே. 545

ஊட்டுவது வெவ்வேறு துணியி லூட்டு
உத்தமனே யூறியதோர் தாம்பி ரத்தை
ஊட்டுவது பாலுண்ட துணிக ளெல்லாம்
ஒவ்வொன்றுய்த் தாம்பிரத்தில் பொதிந்து சுற்றி
மாட்டமா யதன்மேலேமண் சீலை சுற்றி
மாசற்ற கெசபுடமே போட்டெ டுத்து
தேட்டமாம் தாம்பிரத்தி னெடைப டாது
சிவசிவா சங்குநீ றிதற்கொவ் வாது
காட்டாதே வெகுசுளுவு தாம்பிர பற்பம்
கைகண்ட வித்தையிது கண்டு பாரே. 546

கண்டுபார் சருவநோ யெல்லாந் தீர
கணமான சூதத்தினெடைக் கெடைதான் சேர்த்து
கண்டுபார் சூதத்தில் விட்டு நன்றுய்க்
கருதியே யரைத்துவில்லை கட்டிக் கொண்டு
கண்டுபா ரண்டவெள்ளையோட்டில் வைத்து மூடி
கருதியே சுண்ணும்புச் சீலை செய்து
கண்டுபார் குக்குடத்தின் சுண்ண மாகும்
கண்கொள்ளா ரசவாதங் கொண்டிட் டாரே. 547

கொண்டிட்டா ரின்னமதி லனேக வித்தை
குறிப்பறிந்த வாதியென்றால் குறித்துச் செய்வான்
கண்டுபார் மனமுறைத்த பெரியோர் செய்வார்
கதிகெட்ட மாண்பர்களோ செய்யப் போறார்
கண்டுபார் கருக்குருவு மறிந்தால் வேதை
கைமுறையுஞ் செய்முறையு மறிந்தால் வேதை
கண்டுபா ரிந்நூலில் வெளியாய்ச் சொன்னேன்
கனகத்தைக் கண்டுநீ யிச்சிக் காதே
அண்டுதான் பூசைக்கும் கற்பத் துக்கும்
அடைவாகச் செய்துமன மடங்கி நில்லே, 548

அடங்கியதோர் மகத்தான திராவ கத்தை
அறைகிறே னதனை யறிந்த மாத்திரம்
விடங்கொண்ட பாறையுப்புக்கல் லுப்பிந் துப்பு
வளையலுப்பு சவுட்டுப்பு கரியுப் போடு
கடங்கின்ற வட்டுப்பு கறியுப் போடு
கல்லுப்பு சாரமாங் கட்டுச் சாரம்
மடங்காத ஆனைநீருங் குதிரை நீரும்
மனிதநீ ரொட்டகநீர் கழுதை நீரே. 549

மீறுதே யெலிப்புழுக்கைவெளவா லின்பு ழுக்கை
முயல்புழுக்கை வெள்ளாட்டின் புழுக்கை கூட
பேறான விம்மலமுங்குக் குடத்தின் மூலம்
பேணியெல்லாம் வெவ்வேறே சுட்ட சாம்பல்
நீருக்கி யித்தனையுங் காச்ச வப்பா
நீலியொடு கொடிவேலி உருவி மேனி
யேறான நாணலொடு தென்னை கள்ளி
யெருக்கோடு புங்குபுளி புறணி யாமே. 550

புறணியாங் குருக்கத்தி வாழை தாழை
புரசுவள்ளி மாவிலங்கு பிரண்டை கூட
புறணியா மாடுதொடா மூலி யோடு
பேய்க்குமட்டி திருகுகள்ளி சதுரக் கள்ளி
புறணியாங் கரத்தையொடு வாகை வீழி
பேரான நண்டுநத்தை சங்கு சிப்பி
புறணியாங் குக்குடத்தி னண்டத் தோடு
புகல்சமனாய் வெவ்வேறு சாம்ப லாக்கே. 551

சாம்பலாய்க் கரைத்ததனை யுப்பாய்க் காய்ச்சி
சாற்றியதோர் வகையெல்லாஞ் சமனாய்க் கொண்டு
சாம்பலாந் துருசுசீனஞ் சமனாய்ச் சேர்த்துச்
சத்தான சாதியொடு காந்தம் லோகம்

சாம்பலாஞ் சூடமொடு வீரம் பூரம்
சமன்கெவுரி நிமிளைதொட்டிமிரு தார சிங்கி
சேம்பனமால் தேவிகெந்தி காந்தம் துத்தம்
சிலகெவுரி வெண்ணுவி நாகங் கூடச்
சோம்பாதே யுப்புநிறை சமனுய்க் கொண்டு
சொல்லுகிறேன் நாயுருவி மேனிச் சாறே. 552

சாருேடு மயனம்போ லாட்டி வில்லை
சமமாகக் கட்டிவில்லை ரவியு லர்த்தி
சாருேடு அஞ்சுபங்கு வைத்து நன்ருய்
சார்வாக ஒருபங்கு பாண்டத் திட்டு
சாருேடு சகசமாம் வாலை யென்ற
சட்டிமூடி சந்துவாய் பொருத்திப் பார்த்துச்
சமரசமா யுளுந்தரைத்துச் சீலை செய்து
தூருக வாலுகையின் மேலே வைத்துத்
தூலமாங் கமலவன்னி மூட்டி டாயே. 553

மூட்டியே சக்கரமாம் வாலைச் சட்டி
மூக்குநேர் பீங்கானுங் கிண்ணி வைத்து
ஆட்டியே கமலமாம் வன்னி மூட்டி
அரகரா திராவகமு மிறங்கும் பாரு
பூட்டியே முந்திமுந்தி வெள்ளை நீர்தான்
புகையோடே யிறங்குநீர் வீசிப் போடு
மாட்டியே சிவந்தநீர் வருகு மக்காள்
வாலுகையின் முன்போலேதிராவ கத்தை வாங்கே.

வாங்கியே மறுபங்கு சரக்கி லூட்டு
மைந்தனே யைந்துதரம் மடக்கி யேத்தி
தூங்கியே திராவகமே வாங்கும் போது
தூரமுகமா நீநின்று வாங்கு வாங்கே
தாங்கியே பார்த்திட்டால் விரிந்து போகும்
சாதகமாய்க் கனகமுறையாய் வாங்கு வாங்கு
வாங்குவது அரக்கானகுப் பியிலே வாங்கு
மற்றதொரு லோகமென்ருல் கரைந்து போமே. 555

கரையாமல் பதனமாய் வைத்து மூடு
கனகமாம் வாதவித்தை கைக்குள் ளாச்சு
மறையாதே கருவெல்லாம் வெளியாய்ச் சொன்னேம்
மைந்தனே திராவகமோ வேதம் மெத்த

கரையாத நவலோகங் கரைந்து நீறும்
கல்லோடு மண்மலைகள் கரைந்து நீறும்
புரையான பாடாண மெல்லாம் நீறும்
போக்கோடே யுபரசங்க ளீய மாமே. 556

ஈயமா மனுபானத் தோடே சேர்த்து
எள்ளளவு கொண்டிடவே யியல்பு கேளு
தோயுமே வாதமெண் பதுவுந் தான்மேல்
குன்மமொடு வாயுவென்ற விருபத் தாறு
சேயமாந் திரட்சிகுன்மந் தொண்டைக் கட்டு
சேரியாமை யுப்பிசங்கள் கிராணி மந்தம்
பேயுமே மகவைவெப்பு பிறநீர்க் கோவை
பெருவயிறு பீலியுள மாந்தை போமே. 557

மாந்தையாம் மகோதரமு மத்தி சூலை
மகத்தான குலைமுட்டி குதிரைவலி வாய்வு
மாந்தையாம் பட்சவாதம் பாரிச வாதம்
வலிவீக்கம் போர்மாந்தை பாண்டு சோகை
மாந்தையாங் கீல்வலியு மண்ட வாதம்
வளர்முழங்கால் சந்திடுப்பு சூலைவலி முடக்கு
மாந்தையாம் பக்கம்நரித் தலையாம் வாதம்
மற்றுள்ள ரோகமெல்லா மாண்டு போமே. 558

போமென்ற யின்னமொருகெந் தகசெந் தூரம்
புகலுகிறேன் வாதிக்குவயித் தியர்க்கு மாக
ஆமென்ற சுத்திசெய்தநெல் லிக்காய்க் கெந்தி
யப்பனே பலம்பத்து கல்வத் திட்டு
காமென்ற குமரிச்சார் தெளித்து வாங்கி
கைமாரு தேழுநாளிர வுபக லாட்டி
வாமென்ற மயனம்போ லாட்டி வாங்கு
மைந்தனே மூசைக்கு ளிட்டுக் கேளே. 559

கேளுநீ யரப்பொடிதான் பலமோ நாலு
கெடியாகச் சுத்திசெய்து முருக்கிலைச் சாற்றில்
வாளுமே முன்போலேயேழு நாள்தா னாட்டி
வளமாக வில்லைதட்டி மூசை மேலே
தாளுமே வைத்ததுமேல் கவசம்·செய்து
சரவுலையில் வைத்துநன்று யூதித் தீரு
ஆளுமே குகையளுக மட்டு மூது
ஆறவிட்டு யெடுத்துப்பார்செந் தூர மாமே. 560

செந்தூர மாதுளம்பூ போலாம் லோகஞ்
சிவசிவா வெடுத்ததனை வேறே வைத்து
கந்தரமா யூடமகா இசைந்த கெந்தி
கண்ணாலே பார்க்கரவி தோற்றுப் போகும்
பந்தமாம் கெந்தகசெந் தூரந் தன்னை
பரிசிக்க நவலோக மெல்லாம் பொன்னும்
செந்தூர வேதைகண்டு மகிழ்ந் திடாதே
சிவசிவா தினம்பணவெடை யுண்டு தேறே. 561

உண்ணவே சருவநோ யெல்லாந் தீரும்
ஓகோகோ வுகந்தவரை யிருத்தும் பாரு
திண்ணமா மிந்தமுறை யாருஞ் செய்யார்
சிவயோகி சித்தர்செய்வார் மற்றோ ரேது
பண்ணின லோகசெந் தூரந் தன்னைப்
பணவெடைதா னனுபானத் தோடே கொள்ள
மண்ணுகு சோகையொடு பாண்டுகா மாலை
மகோதரமும் நீராம்பல் கவிசை போமே. 562

கவிசையொடு மகவைவெப்பு வலிவீக் கங்கள்
கனமான கிராணிவகை யெல்லாம் போகும்
கவிசையொடு கிராணியாம் கழிச்சல் போகும்
கனமான பித்தவாய் வுட்டண வாய்வு
கவிசையாம் வாய்நீரு மக்கினி மந்தம்
கண்டிக்கு மேங்கலுப்ப சங்க ளெல்லாம்
கவிசையொடு யிந்தவகை தேனில் கொள்ள
கருதுமிந்த நோயெல்லாங் காணா தோடும். 563

காணாத பித்தவகை வாய்வுக் கெல்லாங்
காட்டுகிறேன் சூட்சந்தான் சூட்ச மாக
பூணாத திரிகடுகு ஓமங் காயம்
பொடிசெய்து நிம்பழந்தான் நாலு கீற்றாய்ப்
பாணாது பொடியையத னுள்ளே யிட்டுப்
பனியில்வைத்துக் காலையிலே சப்பி யுண்ணு
கோணாமல் நாள்மூன்று கொண்டு தேறு
குலைந்தோடும் பித்தவாய் வுட்ண வாய்வே 564

வாய்வோடு கிறுகிறுப்பும் பக்கம் வீக்கம்
மந்தமாம் செரியாமை நெஞ்செ ரிப்பு
வாய்வோடு வக்கினி மன்ன திறட்சி
வாய்க்கசப்பு நீரூறல் வெள்ளோக் காளம்

வாய்வோடு யிவையெல்லாங் காணு தோடும்
வளமாக நாள்மூன்று கொள்ளும் போது
வாய்வோடு பத்தியமா யுண்டு தேறு
மைந்தனே கொண்டதன்மே லொருநே ரந்தான்
வாய்வோடு நாள்மூன்று மறவாமல் கொள்ளு
வாகான பித்தமெல்லாம் வாங்கிப் போமே. 565

மாண்டுபோ மின்னமொரு சூட்சந் தன்னை
மைந்தனே நிம்பழந்தா னுலு கீற்றாய்
யூற்றியே கீறியதில் வற்கம் பாலை
யூட்டியே தலைமாட்டில் வைத்துத் தூங்கு
வேண்டுமே யுதயத்தில் யெழுந்திருந்து
விதமான நிம்பழத்தை யுண்ணு வுண்ணு
ஆண்டுமே நாள்மூன்றுயிப் படியே யுண்ணு
அசங்காத பித்தமெல்லா மெங்கே போச்சு
வேண்டுமே வாய்வெல்லா மெங்கே போச்சு
விருதுசொல்லி வைத்தியரே மெய்சொன்னேனே. 566

சொன்னதொரு வாலைரசஞ் சொல்லக் கேளு
துடியாகச் செந்தூரங் குளிகை பற்பம்
வன்னமிகு வாதங்கள் வயித்தியங்கள்
வளமாக விவைகளுக்கு மெத்த நன்று
கன்னவே சயம்புரசம் கிடையா தப்பா
கடையிலுள்ள ரசமென்றால் சுத்தி வேணும்
கன்னவே வாலைரச மெடுத்துச் செய்தால்
கசடில்லை தனிரசத்துக் கொக்கும் பாரு
வன்னமாஞ் சாதிலிங்கம் பலந்தா னொன்று
வாங்கியே பழச்சாற்றில் சுத்தி செய்யே, 567

செய்துமே கொடிவேலித் துளசி யப்பா
சிறப்பாகப் பரப்பியதன் மேலே கேளு
பையவே சாதிலிங்கம் பொடித்து மேலே
பரப்பியே மேல்சட்டிக் குள்ளே கேளு
மெய்யாட மத்தஞ்சார்மூன் றுதரம் பூசி
மேல்மூடிச் சீலைசெய் தடுப்பி லேற்றி
நையவே யோர்விறகால் தீயை மூட்டு
நாற்சாம மெறித்தாறி யெடுத்துப் பாரு
அய்யவே ரசமெல்லாமேல் சட்டிக் குள்ளே
அப்பனே பதங்கித்து நிற்கும் பாரே. 568

பதங்கித்த ரசமெல்லா மெடுத்து வைத்து
பரிவான நோயறிந்துஅனு பானத் தூட்டு
பதங்கித்த பதினெட்டுக் குட்டஞ் சூலை
பறங்கிப்புண் ணறையாப்பு கண்ட மாலை
பதங்கித்த வாயுவென்ற விருபத் தாறும்
பவுந்திரமு மஷ்டகுன்மங் கீலுச் சூலை
பதங்கித்த பிளவைகுத்துசிரங்கு சொறிக ரப்பான்
பதகரியு மூரலொடு மேகவெடி சூலை
பதங்கித்த கால்முடக்குகை முடக்குச் சூலை
பறக்குமே வாதமெண் பதுவுங் காணே. 569

காணவே வீரரசஞ் சொல்லக் கேளு
கடியதொரு சவ்வீரம் பலந்தா னென்று
ஊணவே சுத்திசெய்து புகலக் கேளு
பொடிபண்ணிப் பீங்கானில் பனியில் வைத்து
நாணவே மணிமணியா யிறங்கி நிற்கும்
ரசமெல்லாம் வாங்கியே பதனம் பண்ணி
ஆணுவமா யலையாதேகரு வாளி யானல்
அறிந்துபார் வீரரச மதீத மெத்த
தாணுவமாஞ் சருவநோ யெல்லாந் தீரும்
சகலசித்து மிதனாலே யாட லாமே. 570

ஆடவே காந்தரசஞ் சொல்லக் கேளு
அரகரா யேழூசி பிடிக்குங் காந்தம்
தேடியே பலமொன்றுமண் கலசத் திட்டு
சிறப்பாக தர்பூசனிசார் நீரை வார்த்து
வாடவே விடாதத ரைக்குள் வைத்து
வளமாக நாள்மூன்று மூடி வைத்து
ஆடவே சாறெல்லாங் காந்த முண்டு
அதிலுள்ள ரசமெல்லாங் கழன்று நிற்கும்
வாடவே யசையாமல் காந்தந் தன்னை
மைந்தனே யயக்கொரட்டா லெடுத்தி டாயே. 571

எடுத்திட்ட வயக்கொரட்டால் பிடித்துக் கொண்டு
இதமாகக் கிண்ணத்தில் தட்டித் தட்டி
அடுத்திட்ட ரசமெல்லாம் சாம்பல் போலே
அப்பனே காந்தசத்து யிறங்கும் பாரு
கடுத்திட்ட காந்தமொரு பலத்துக் கப்பால்
கால்வாசி யிறங்கிநிற்கும் புரட்டி வாங்கி
வெடித்திட்ட குடகரியி லிட்டு நீயும்
வெண்கார மிட்டுருக்கக் கனக மாமே. 572

கனகத்தைக் கண்டுநீ மகிழ்ந் திடாதே
கைச்செலவு கற்பத்துக்கு மில்லா விட்டால்
கனகமாஞ் செலவுக்கு கற்பத் துக்கு
காரணமட்டுங் கொஞ்சமதாய் செய்து கொண்டு
கனகமாய் மனமடங்கி யறிவில் கூடி
கர்த்தனையே யந்திசந்தி நித்தம் பூசி
கனகமாம் பாசாண்டி மெத்த வுண்டு
கண்டாலு மவருடனே பேச வேண்டாம்
கனகமாம் பூலோகத்தில் பரைசெய் யாதே
கண்டவர்க் கடமையைப்போ லிருந்தி டாயே 573

## வெடியுப்புச் செயநீர்

இருந்திட்டு வெடியுப்பு செயநீர் கேளு
இதமான வஞ்சாங் காச்ச லப்பா
பரைந்திட்டு பலம்பத்து கல்வத் திட்டு
பழம்புளியில் பலநாலு கெந்தி ரெண்டு
அருந்திட்ட யேறலென்ற சதையிற் கட்டி
ஓட்டிவிட்டு மேலோடுமூடியே சீலை செய்து
பரிந்திட்ட பத்தெருவில் புடத்தைப் போடு
பக்குவமா யாறவிட்டு யெடுத்துப் பாரே. 574

பார்த்ததனை நாலிலொன்று சாரஞ் சேர்த்து
பக்குவமாய்ப் பொடிபண்ணிபீங் கானி விட்டு
சேர்த்ததனை பனியில்வைக்கச் செயநீ ராகும்
சிறப்பாக வந்நீரில் வீரம் பூரம்
மார்த்திடவே பொடித்திட்டு அந்நீர் தன்னில்
அறுபத்து நால்சரக்கு வைத்து வாட்ட
காத்திடவே கட்டியது மெழுகு மாகும்
கருவான வுபரசங்கள் சத்து மாமே. 575

சத்தான வெடியுப்பு செயநீர் விட்டால்
சரக்குவகை கட்டாக வாத மெய்தும்
சித்தாக ரசவாதங் கைக்குள் ளாச்சு
செயநீருந் திராவகமு முன்னே வேணும்
முத்தான சவுக்காரஞ் செய்ய வேணும்
முப்பூவின் மார்க்கத்தை யறிய வேணும்
கத்தாக வுப்பைமுந்திக் கட்ட வேணும்
கற்பூர முப்பறிந்து செய்ய வேணும்

நத்தான துருசுகுரு முடிக்க வேணும்
　　நாதவிந்து வகைவிபரம் அறிய வேணும்
எத்தனைதான் தீர்ந்தாலும் கோச பீச
　　மில்லாட்டால் ரசவாத மேது சொல்லே. 576

ஏதென்று சொல்வதற்கு ஆசான் வேணும்
　　இல்லாட்டால் என்னூவில் சொல்ல வேணும்
நாதமாம் புனுகுகோரோ சனையும் வேணும்
　　நலமான பரிசூதம் ரெண்டும் வேணும்
ஆதியா வைங்கோலத் துப்பு வேணும்
　　அரைக்கவே குடமுடைந்த நீரும் வேணும்
போதவே கட்டியதோர்வெங் காரங் கூட்டு
　　குளிகைசெய்யக் கோசமுடன் பீச மாமே. 577

பீசமாம் ரசவாதஞ் செய்ய வேண்டில்
　　பிணம்போலே சுணங்கலா லலையா தேகேள்
காசமாஞ் சரக்குகளைச் சுட்டுச் சுட்டு
　　கதிகெட்டு அலையாதே கருவைப் பாரு
வேதமாம் முடிவுக்கே யரப்பாய் நின்ற
　　வீரமாஞ் சவுக்கார வழலை யாகும்
பீசமா மைங்கோலப் பிண்ட மாகும்
　　பேசாதே கடுஞ்சூலாய்ப்பெற் றிறந்த பாலன்
ஆசமாந் தலைமைந்த னுக வேணும்
　　அதையெல்லா மொருநாழி தன்னில் சேரே. 578

தாளியிலே வீரமொடு சூடம் பூரம்
　　சமத்தான கெந்திரசம்வெடி யுப்புச் சீனம்
தாளிசேர் கெவுரியொடு யெட்டுங் கேளு
　　சமரசமாம் வகைக்கொரு பலந்தான் சொன்னேம்
ஆளியாய்ப் பொடிபண்ணிதா ளியிலே போட்டு
　　அதில்வாரு அமுரியொடு சிப்பி நீரும்
பாளியாம் வெடியுப்புச் செயனீ ரோடும்
　　பனிக்குடத்து நீரோடு தேசி நீரும்
வாளியா வகைக்குஅரைப் படிதான் சொன்னேன்
　　வாங்கியே கூடவிட்டு வாயை மூடே. 579

மூடியே மண்டலந்தான் புதைத்து வாங்கில்
　　முசியாதே கரைந்தெல்லாம் சலமாய் நிற்கும்
ஆடியே ரவியினிலே காய்ந்த வுப்பாம்
　　அப்பனே கல்வத்தி விட்டுக் கேளு
நாடியே அண்டவெள்ளை வற்கம் பாலும்
　　நலமாக விட்டரைத்து வில்லை தட்டி

வாடியே ரவிமுகத்தி லுலர்த்தி நன்ருய்
மைந்தனே யோட்டிவிட்டுமே லோடு மூடி
ஆடியே குக்குடமாம்பு டத்தைப் போடு
வழலையது கடுங்காரச் சுண்ண மாச்சு. 580

ஆச்சென்ற வண்டபிண்ட மிதுவே யாச்சு
ஆகாச வெளியுப்பு மிதுவே யாச்சு
காச்சென்ற சகலசித்து மிதுவே யாச்சு
கைக்குள்ரச வாதமது சிக்கிப் போச்சு
காச்சென்ற விக்கருவை யார்தாம் சொல்வார்
காட்டாதே தலைதெறிக்கு முலகத் தோர்க்கு
மூச்சப்பா தொட்டதெல்லாம் குருவாம் பாரு
மூதண்ட வெளிதாண்டி யப்பா லோடும்
பாச்சப்பா வண்டரண்ட மெல்லாம் வேகும்
பாடாண வர்க்கமெல்லாம் வெள்ளை யாமே, 581

வெள்ளையா மட்டகன்மந் தொட்டதெல்லா மாட
விளம்புகிறேன் கருவெல்லாம் வெட்டவெளி யாக
கள்ளமின்றி முன்பிண்டம் வேறே வாங்கி
கரையாமல் களபகத்தூரி வாச முள்ள
வள்ளலே யுள்ளபடி ரவியு லர்த்தி
வளமாகப் பதனமாய் வைத்துக் கொண்டு
தள்ளாதே யெந்தெந்தக் கன்மத் துக்கும்
தொட்டிவிளை யாடிநீ பாரு பாரு
தெள்ளவே நவகோடி சித்து மாகும்
செகமெல்லா முன்வசமே யாகும் பாரே. 582

ஆகுமே யிதைவிட்டால் நாத விந்தால்
அல்லாட்டால் முதல்தரந்தான்கரிச் சீலை யாகும்
பாகமாம் மாவோடு கொடியு மாகும்
பாங்கரியா மோடரிதை விட்டு வேறே
தாகமாய்க் கருவறியா வித்தை யாடி
சாத்திரங்கள் பொய்யென்பார்சண் டாள ரப்பா
வேகமாம் ரசவாதம் பொய்யே யென்பார்
விடுபட்ட கழுதையைப்போ லலைவார் மட்டை
பாதகமாய்க் கருவறிந்த வாதி யென்ருல்
பதருதே கைமுறையாய்ச் செய்வான் பாரே. 583

செய்வதற்கு அஞ்சனத்தைச் சொல்லக் கேளு
செப்பரிய [1]பிரமராட் சசியின் பூண்டு
அய்வதற்கு தனித்ததொரு மூலி பார்த்து
ஆதியாம் வாரமதில் காப்புக் கட்டி
கையதற்கு மறுநாள்நிர் வாணி ரூபங்
கனிவர்க்க முள்ளவகை யெல்லாங் கொண்டு
அய்வதற்கு பழந்தேங்காய் சர்க்க ரைதேன்
பால்பொங்க லாலாத்திகற்பூர தீபம் தூபம்
மெய்யாக வைத்திட்டு அனுமார் தோத்திரம்
விளம்பியே யாயிரத்தெட் டுருத்தா னேதே. 584

ஓதியே வேரரு தெடுத்து வந்து
உலர்த்தியே தூள்பண்ணிகருச்சீ லையி லூட்டு
சாதகமாய்த் திரியாக்கி வெள்ளி வாரம்
உற்பனமா சிரசோடிட்டில் தீப மேற்றி
தீதில்லா ஆணைக்கண் சட்டி மூடி
சிறப்பாக மையெரித்து வாங்கும் போது
ஆதரவாய் சோடசஉப சாரத் தோடே
அனுமானை யுச்சரித்து மையை வாங்கே. 585

வாங்கியே கோரைபடாப் பூனைக் கண்ணன்
வலக்கையிட் டஞ்சனைசெவி யனுமன் மந்திரம்
தாங்கியே சொர்னவடு கனுக்கு நன்ருய்
தான்செவிப்பாய் சோடசவுப சாரத் தோடே
பாங்காக இப்படியே செய்தா யானல்
பார்பிளந்து ஊடுருவி யோடும் பாரு
ஆங்காணு தனமெடுக்க லாகுஞ் சொன்னேன்
அல்லாம லின்னமொருஅஞ் சனத்தைக் கேளே. 586

அஞ்சனங்கேள் புத்துமேல் கீழ்க்காய் நெல்லி
அப்பனே தனித்திருக்கு மதனைப் பார்த்து
மஞ்சள்நூ லாதிநாள் காப்புக் கட்டி
மற்றநாள் நிருவாணி ரூபத் தோடே
கஞ்சமாம் பெலிகொடுத்து தூப தீபங்
காட்டியே நாதாக்கள் சாபந் தீர்த்து
கொஞ்சியே சமூலமுங் கொண்டு வந்து
குயவனுட சூளையிலே மலர்ந்த வோடு

1. பிரம ராட்சசியின் பூண்டு=பிரமதண்டி.

அஞ்சாதே யெடுத்தடுப்புல் வைத்து மூலி
அதிலிட்டு யெரித்துநன்ருய்க் கருக்கி வாங்கி
கிஞ்சகமாம் புத்துத்தேன் மெத்த நன்று
கிடையாட்டா லாவின்வெண் ணெய்கா ராவின் நெய்யே.

நெய்யாக வாரத்தொன்றில் குழைத்துப் போடு
நிசமான வடுகனெடுசுப் பிரம ணியன்
உய்யவே யனுமனையு மோதி நன்ருய்
ஓகோகோ கையிலிடண டுருவி யோடும்
செய்யவே தனமெடுக்க லாகுஞ் சொன்னேன்
தேவாங்கி லின்னமொரு மையைக் கேளு
கையாரப் பித்தெடுத்து மையாய்ச் சேர்த்துக்
கையிலிடும் பாதாளம் உருவி யோடும்
மெய்யாகத் தனமெடுக்க லாகுஞ் சொன்னேன்
விருதான மையிதுதான் விசித மாமே. 588

விசிதமாந் தேசியிலே யனேக வித்தை
விளம்புகிறேன் சித்தர்செய்வா ரப்பா கேளு
அசிதமாங் கழுதையென்று உலகத் தோர்கள்
அழும்புசொல்லா ரதனுடைய பெருமை மெத்த
கசிதகாங் கடைப்பிறப்பி லினிமே லப்பா
காசினியில் மறுபிறவி யில்லை யில்லை
விசிதமாந் தேசியென்ருல் சிவத்துக் கொக்கும்
வீணர்கள்தா னறியார்கள் நல்லோர் காண்பார்
கசிந்துபார் சகலசித்து மதிலே யாடும்
கைகண்ட வித்தையிது கண்டு பாரே 589

கண்டுபார் சரக்குவகை சுத்திக் கெல்லாம்
கழுதைநீர் வெகுசுறுக்கு மற்ருென் ருகா
பண்டான காரீயங் கட்ட வேண்டில்
காலான பிடிகுழம்பில் தயிலம் வாங்கி
வண்டிடவே காரீய முருக்கிச் சாய்க்க
வெட்டையாய் நொருங்கியது கட்டிப் போகும்
கண்டான கண்ணுணர்த்திப் பொடியாய்ச் செய்து
கருஞ்சீலை தன்னிலே யூட்டிக் கொண்டு
வண்டான காரெள்ளு தயிலத் தாலே
வகையெரித்து வாங்கியே கையில் தீட்டே. 590

தீட்டியே பாதாள முருவி யோடும்
திரமான இம்மைதான் செப்பக் கேளு
தாட்டிமையாய்ப் புதைத்ததெல்லா மெடுக்க லாகும்
தனங்காக்கும் பிசாசெல்லா மோடிப் போகும்

மேட்டிமைகள் பண்ணுதே யின்னங் கேளு
விருதான கருங்கழுதைப் பித்து வாங்கி
காட்டவே காணுது மறையும் பித்து
காணவென்றுல் வித்துவே சனத்தை யோதே. 591

ஓதவே வழிதோணும் பித்து வாங்கி
யுத்தமனே பேய்ப்பீர்க்கின் தயிலங் கூட்டி
ஓதவே கருப்பேரண்ட தயிலம் வாங்கி
யுள்ளபடி மத்தித்துத் தயிலந் தீட்டி
ஆதவனும் தேவர்களுங் காண மாட்டார்
ஆருக்கும் சொல்லாதே அதீத மப்பா
ஓதவே மனோன்மணியே அரூபி ரூபி
உருமறைப்பா யெந்தாயே யென்று போற்றி
ஆதரவாம் மைதன்னை திலதந் தீட்டி
அருகிலே யிருந்தாலுங் காணுர் கேளே. 592

காணுது தேசியிலே யின்ன மொன்று
காட்டுகிறே னதனுடைய கொழுப்பை வாங்கி
கோணுதே நெய்யுருக்கி வைத்துக் கொண்டு
கூறுகிறேன் கருஞ்சீலை திரியாய்ப் பண்ணி
பூணுதே சிரசோட்டில் போட்டு நெய்யும்
புகட்டியே தீபசுடர் விளக்கை யேற்றிக்
காணுதே தனமெடுக்கும் போது கேளு
கருவான தீபத்தை முன்னே வைத்து
ஆணுவமாய்த் தனமதனைக் காக்கும் பூதம்
அடங்காத கணங்கள்முதல் பூதம் போமே. 593

சீதானே தனமெடுக்க லாகுஞ் சொன்னேன்
சில்லரை யொண்ணுமில்லைதே வதைக ளில்லை
சாதகமாந் திரியொன்று சொல்லக் கேளு
தலைமதுசன் கொடிமாவுங் கழுதைத் தண்டு
போதவே யேறழிஞ்சி யெட்டி வித்து
புகழ்சதுரக் கள்ளிமூஞ்சூறு மேனி வேரும்
ஆதரமா மனுடருட அத்தி கூட்டி
அதட்டியே பொடிபண்ணிகருஞ் சீலை யூட்டே. 594

ஊட்டுவது கருஞ்சீலை தன்னில் கேளு
உறுதியாந் தீதத்தில் மூட்டி யூட்டு
ஊட்டுவது காளிகோட் டத்தில் ஊட்டு
உறுதியாங் கருமத்தின் சாறு மூட்டு

ஊட்டுவது சிரசோட்டில்வேப் பெண்ணெய் விட்டு
உசத்தியாந் திரிபோட்டுத் தீப மேத்தி
ஊட்டுவது பதினறு அறைதான் கீறு
உசத்தியா மைம்பத்தோர் எழுத்தை நாட்டே. 595

நாட்டுவது அறைதோறுமட் சரத்தைக் கேளு
நலமாக வட்சரத்தை மாறிப் போட்டு
தீட்டுவது சிகாரமுத லஞ்செ ழுத்தைச்
சிரசோட்டில்போடு அன்பத்தோர் லக்கம் போடு
நாட்டுவது நடுவேகால்சக் கரத்தைப் போடு
நாற்றிசையும சிரசோட்டில்சுடலைமைக் கொண்டு நீரே.

கீறுவது தம்பனத்தை மாறிப் போடு
கெட்டியா யடியிலே மயானச் சாம்பல்
நீற்றின்மேல் சிரசோடு வைத்துக் கேளு
நிம்பெண்ணெய் விட்டுமுன் தீப மேத்தி
கூறுகிறேன் நடுமையம்சக் கரத்தின் மேலே
குறிப்பாக யிருந்துநீருந் திரணைச் சேவி
மாறுவது சிவநமா மயநவசி யென்று
மனதுரைத்து யெட்டெழுத்து மஞ்செழுத்து மாறும்
வீறுவரு மய்யனெடு துர்க்கை காளி
வேதாள பூதமொடு விருமராட் சசியே. 597

ராட்சசியாம் வஞ்சணையும் பில்லி சூனியம்
நாடாது சத்திவாதி செத்துப் போவான்
பார்க்கிரமும் உனைப்போலே யொருவ ரில்லை
பாருலகி லுள்ளோர்கள் பணிந்து நிற்பார்
அருக்கிரமாஞ் சங்கைகுண முள்ள பேரை
அழைத்துவைத்துத் தீபமுக மாற்கச் சொல்லு
உராக்கிரமா மாவிரிஷ்துரை யிரிசி முதலாய்
ஓடிப்போம் சர்வதேவ தைகள் தானே. 598

தானென்ற தேசியிலே நாகங் கட்ட
சாற்றுகிறே னதனுடைய மண்டை வாங்கி
நானென்ற குழித்தயில மிறக்கிக் கொண்டு
நவச்சார மிட்டதிலே சிறுகண் ணுக
மூனென்ற யேழுதிர முருக்கிச் சாய்க்க
உற்பனமாய் நாகமது கட்டிப் போகும்
வானென்ற நவலோகம் வேதை யாகும்
வெகுளிவிட்டு மனமடங்கிப் போதம் பாரு
கானென்ற தேசிவித்தை யின்ன முண்டு
கருவாளி யானுக்கால் கண்டு பாரே, 599

கண்டுபார் தேசிவித்து முன்னே வாங்கி
கனமான சுழல்வண்டுகிழி யாணை யோடே
கண்டிடாத் திகைப்பூட்டு பூச்சி யோடு
கருதியே யிப்புலியு மீயும் போடு
விண்டுதான் நாய்ப்பாலைமருளு மத்தம் வித்து
விதமான வைவிரலிபேய்க் கருப்பன் சாறு
கொண்டிடவே செந்நெல்முளை அரிசி கூட்டி
கூறியதோர் வகையெல்லாம் சமனாய்க் கொள்ளே.

கொள்ளவே சூதங்கோ ரோசனையுங் கூட
கூட்டியே முக்கருவா லாட்டி வாங்கி
மெள்ளவே மயக்கிவேர் கூட்டி யாட்டி
விருதான குளிகைகட்டி வைத்துக் கொண்டு
உள்ளபடி பஞ்சமல மஞ்சுங் கூட்டி
உன்னுடைய விந்துவிலே யூட்டிக் கேளு
தள்ளவே பால்பழங்கள் கறிகள் சோறு
தாம்பூல பலகாரவர்க் கத்தி லாட்டே. 601

ஊட்டவே பெண்களுக்குன் னுசை யல்லால்
உத்தமனே வேறுமோ ராசை யுண்டோ
பாட்டிலே சொன்னதென் றெண்ண வேண்டாம்
பஞ்சிவிட்ட நெருப்பதுபோல் பற்றும் பாரு
ஆட்டவே ஆண்களுக்கு வேணு மென்ருல்
அவள்கருவைக் கூட்டியதி விட்டுப் பாரு
நாட்டமுட னின்னமொரு வித்தை கேளு
நலமான ஊர்க்குருவி யாண்பெண் ரெண்டும்
ஆட்டுமே யாதித்த வார நாளில்
அப்பனே பிடித்தாவின் சாணி கேளே. 602

சாணிகே ளீனுக்கி டாரிச் சாணி
தணையெடுத்துப் பட்சிரெண்டும் வெவ்வே ருக
சாணிதனி லாதிநாள் பொதிந்து ரெண்டுந்
தானுலர்த்தி வைத்திட்டு ஆலங் குச்சி
ஊணியே யெடுக்கவகை விபரங் கேளு
யூறூர் யென்றுபே ரிருக்க வேணும்
ஆணியா முந்நூரி விருக்கு மந்த
ஆல விறகெடுத்துக் கொண்டு வந்து
நாணியே மறுஆதி வார நாளில்
நலமான சுடலையிலே நெருப்பு மூட்டே. 603

மூட்டியே நிருவாணத் தோடே நீயும்
    முனையான சோடசவு பசாரம் வைத்து
ஆட்டியே மூணூரில் யெடுத்து வந்த
    ஆலம் விறகைக்கீழ்மேலு மிட்டு நன்ருய்
மேட்டிமையாய் தணல்மூட்டி வெந்த சாம்பல்
    வெவ்வேறே சாணியுண்டை யெடுத்துப் பாரு
நாட்டியே நீறியது திருநீ ருகும்
    நலமான பட்சிமுதல் நீறி நிற்கும்
தீட்டியே யெடுத்ததனை வெவ்வே ருகச்
    செம்பிலே பிசைந்தமிழ்த்தி வைத்து மூடே. 604

வைத்துமே சோடசமாமுப சாரத் தோடே
    வசியமா மோகினியாகிருஷ ணைத்து ஓது
அய்த்துமே நிருவாணத் தோடே நின்று
    ஆயிரத்தி யெண் ணூறுருவையோது ஆகுதிகள் செய்து
உய்த்துமே கற்பூர தீப தூப
    முபசாரத் தோடவனை யுறுதி யாக
வேத்தியே தோத்திரங்கள் செய்து நன்ருய்
    யெடுத்துநீ சிமிழ்தனிலே பதனம் பண்ணே. 605

பண்ணிடவே வேண்டியவள் தன்னைப் பார்த்துப்
    பரிவான ஆண்பட்சி சுட்ட சாம்பல்
துண்ணியே பணவெடைதா னெடுத்து மேலே
    தூவிடவே பெண்தொடர்ந்து வருவாள் பாரு
உண்ணியே ஆணைத்தா னழைக்க வேண்டில்
    பெண்குருவி நீரெடுத்து மேலே போடு
நண்ணியே மேல்மயக்கங் கொண்டு தானும்
    நலமான ஆண் தாமும் தொடரு வாரே. 606

தொடருவார் மோகினிமந் திரத்தை யோது
    சொல்லுகிறே னுவரைமேல் பொன்னின் வண்டு
அடருமே புணர்ச்சல்கண்டு பிடித்து வந்து
    ஆதிநாள் முன்போலே பொதிந்து சாணி
படருமயா னத்திலே சுட்ட சாம்பல்
    பட்சிசுட்ட பக்குவமாய்ச் செய்து கொண்டு
துடரவே வெவ்வேறே சிமிழில் வைந்துத்
    தூவிடவே நினைத்தபேர் வருகு வார்கள்
அடவுடனே சருவமாம் வசிய மொன்று
    அறைகிறேன் வெகுசுளுவு அறிந்து பாரே. 607

பாரேநீ வெள்ளெருக்கு ஆதி நாளில்
பரிவாக வடவேரைக் காப்புக் கட்டிச்
சேரவே திங்களிலேஉத யாதி தன்னில்
தீபமுடன் தூபமிட்டு தியானஞ் செய்து
வேரோடு யெடுத்துவந்துவெள்ளை விஷ்ணு கிரந்தி
வேருமுன்போல் காப்புகட்டி யெடுத்து வந்து
சேரேநீ யிந்திரமாங் கோபப் பூச்சி
சிறப்பான புனுகுகோ ரோசனையுங் கூட்டே, 608

கூட்டடா முற்கருவுமிள நீரா லாட்டி
குணமாக வுண்டைசெய்து நிழலு லர்த்தி
தீட்டுவது முலைப்பாலில் மயக்கி நீரில்
தேனிளநீ ராவின்பா லாதா மொன்றில்
ஊட்டியே சகலகலை வசிய மோது
உற்றதொரு மோகினிமந் திரத்தை யோது
காட்டியே புருவமையந் திலதந் தீட்டிக்
காசினியில் பகையாளிகை வசம தாவான்
தீட்டடா திரிபுருஷா மிருக சர்ப்பம்
தெய்வமொடு பூதமுதல் வணங்குந் தானே 609

வணங்கவே ஆதிநா ளம்மா வாசை
வாதிதிரு வாதிரைநாள் மூன்று மொன்ருய்
இணங்கு நாள்தனிலே வடவேர் தன்னில்
இதமான கன்னிநூல் கட்டி யேதான்
பிணங்காமல் நிருவாண ரூபங் கொண்டு
பேசாமல் தூபமொடு தீபங் காட்டி
மணங்காமல் லெட்சமுரு வசிய மோதி
மைந்தனே வேரரருமல் வடவேர் வாங்கே. 610

வாங்கியே பரிக்குளிச மாகக் கட்டி
மகத்தான வசியர்கள்தான் செய்யு மார்க்கம்
ஓங்கியே உருதுணையாய் இருக்க வல்ல
உற்றவொரு நல்மணியாம் செய்து பாரு
தாங்கியே வெள்ளெருக்குமூ வாண்டு சென்று
தனித்துநின்ற மூலமது தேடிப் பார்த்து
ஆங்கியே யதைச்சுற்றிக் குழிதான் வெட்டி
அப்பனே குழிநிரம்பத் தண்ணீர் வாரே, 611

தண்ணீர்வார் புனர்பூசம் பூச மாதல்
தருவான ஆதிநாள் பார்த்து நன்ருய்த்
தண்ணீரா மாணிவேர் கண்ட மட்டும்
சாக்கமா யடிமூலம் கண்டு சோதி

அண்ணவே தேங்காய்போற் கிழங்கு காணும்
அடியினிற்கும் ஆணிவேர் முனைமை யத்தில்
திண்ணமாம் நாற்றிசையும் போகுமவேரைத்
திறமாகச் சோதித்துச் செப்பக்கேளே. 612

கேளப்பா கன்னிநூல் காப்புக் கட்டி
கீழ்முகத்தில் பால்பொங்கல் தூப தீபம்
வாளப்பா வெண்சாவல் பலிதா னிட்டு
வசியமுதல் மாரணத்தை மாறு மாறு
ஆளப்பா தம்பனத்தில் லெட்சமுரு வேற்றி
அளப்பனென்ற ஆகிரிஷ்ணந் தன்னை யோது
தேளப்பா நிருவாணங் கொண்டு ஊது
சிறப்பான வேறெல்லாம்வெவ் வேறு வாங்கே. 613

வெவ்வேறே வாங்கியே குளிச மாடு
விதமாக வடியில்நிற்குங் கிழங்கை வாங்கி
செவ்வாக விநாயகனைப் போலே செய்து
சிறப்பான பறித்தகட்டிலறு கோண மிட்டு
ஒவ்வாக முக்கோண முள்ளே யிட்டு
ஒவ்வாச னத்தின்மேல் வட்ட மாக
நவ்வாக ஓங்கார மேலே கேளு
நாற்கோண மிட்டுமே நவிலக் கேளே. 614

நவிலவே நடுவுநின்ற முக்கோ ணத்துள்
நலமான வட்டத்துள்ரீங் கார மிட்டு
நவிலவே அறுகோணம்ஓம் நமசி வாயம்
நாற்சதுரங் கோணத்தில் அங்கங் கென்று
நவிலவே கேசரியா மூல மப்பா
அய்யுங்கிலியுஞ் சவ்வோடு நாட்டிக் கேளு
நவிலவே யிப்படியே தகடு செய்து
நலமான விபூதிமேல் பரத்தி டாயே. 615

பரத்தியே கணபதியை யதன்மேல் வைத்துக்
பாங்கான சோடசோப சாரத் தோடே
உரத்தியே சுத்திசெய்து நாளொன் றுக்கு
உச்சிமுத லந்திசந்தி மூன்று காலை
கரத்தினிலே வந்தபுட்ப மெடுத்துச் சாற்றி
காட்சிபெற ஆயிரத்தெண் ணூறுதா னோது
பரத்தியே மண்டலந்தானிப் படியே யோத
பார்த்திட்டால் பகையெல்லாம் நசித்துப் போமே. 616

போமென்ற பூதிதனை யெடுத்துப் பாரு
புகழான மாதுளம்பூப் போலே வண்ணம்
ஆமென்ற மூலையிலே அனந்தஞ் சித்து
அறுபத்து நாலுசித்து மாட லாகும்
வேமென்ற சோதியே யுன்னைக் கண்டால்
மேல்விழுந்து மயங்கிடுவாள் மேவா தேகேள்
வாமென்ற அரசரூப காரஞ் செய்வார்
வணங்காத தேவதைகள் வணங்கும் பாரே. 617

வணங்காத சத்துருக்கள் நம்மைக் கண்டால்
வந்தடியில் விழுந்துதலை குனிந்து நிற்பார்
இணங்காத பேர்களெல்லா மிணங்கு வார்கள்
எமதூத ரஞ்சிநிற்பா ரின்னங் கேளு
புணங்காமல் மேல்நின்றவெள் ளெருக்கி லொன்று
போகாமல் நிழலுலர்த்தித் தைலம் வாங்கி
யிணங்கவே நவச்சாரந் தோய்த்துத் தோய்த்து
இளவெயிலில் போட்டெடுக்கக் கட்டிப் போமே. 618

கட்டியே பாடாணஞ் சுருக்குப் போடு
கட்டியது மெழுகாகுந் துருசு நீறும்
தட்டியே சூதத்தைக் கல்வத் திட்டு
தைலத்தில் காசெடைதான் குத்தி யாட்டி
ஒட்டியே வில்லைகட்டிக் காய வைத்து
ஓட்டிவிட்டு மேலோடு மூடி செய்து
கொட்டியே குக்குடத்தில் நீறிப் போகும்
கோடான கோடிநோ யெல்லாந் தீரும்
மட்டில்லா தைலத்தால்விடங்க ளெல்லாம் தீரும்
வகையாக யென்நூலை மருவிப் பாரே. 619

பாரேநீ ஆவாரைப் பருவே ராகப்
பாங்காகக் கொண்டுவந்து நிழலு லர்த்தி
வாரேநீ குழித்தைல மிறக்கி வாங்கி
வடிகலசத் துள்ளேகேள் நவச் சாரக் கட்டி
யோரேநீ யொருபலந்தான் கட்டி வாங்கி
யிட்டதனில் தைலத்தை வாங்கு வாங்கு
தேராத தைலந்தான் சுருக்கிட் டாப்போல்
தோளாந்திரம் போல்சாரங் கட்டிப் போமே. 620

கட்டியந்தச் சாரத்தா லனேகம் வித்தை
கரைகாணு தாடினர் தேவ தேவர்
தெட்டியதோர் தைலத்தி லின்னங் கேளு
சேவலுட கருக்கூட்டித் திலக மாக

கட்டமாம் பெண்களுக்குத் திலதந் தீட்ட
 மயங்கிடுவாள் ஆண்களெல்லாமவள் முகத்தைப் பார்த்து
கொட்டியே தைலத்தில்முக் கருவைக் கூட்டி
 கோரோசனையும் புனுகதிலே கூட்டி டாயே. 621

ஆயனெனத் தயிலத்திலுன் கருவைச் சேர்த்து
 அவளுக்குக் கொடுத்திடுவா யாசை யாவாள்
மாயவென்ற ஆண்களுக் கீய வென்றால்
 மைந்தனே யவள்கருவில் கொடுத்துப் பாரு
நாய்போலே யவளுடைய வாசல் காப்பான்
 நலமான வித்தையிது நாடிப் பாரு
பேய்போலே யலையாதே சொல்லக் கேளு
 பிலமான தங்கபற்பம் பேசு வேனே. 622

## தங்க பற்பம்

பேசுகிறேன் தங்கமது பலந்தான் வாங்கிப்
 பிலக்கவே தகடுசெய்து வில்லை யாக
வீசுகிறேன் நறுக்கியதன் மேலே கேளு
 விருதான விலையரைத்துப் பொதிந்து நன்றாய்
மூசையா மல்லாட்டால் புத்தோ டாதல்
 முசியாமல் வைத்துமேல் மூடி செய்து
தேசியாம் நூறெருவில் போட்டா யானால்
 செப்பரிய கரும்பிடமா வுருகி நீறும்
ஆசியாம் வியாதிகட்கு ஆகச் சொன்னோம்
 அதில்முக்கால் புடம்போட பதமாம் நீறே. 623

பதமான நீறாலே ரோக மெல்லாம்
 பருதிகண்ட பனிபோலே மாறிப் போகும்
பதமாக நாளொன்றுக் கந்தி சந்தி
 பணவெடைதா னிருநேரம் கொண்டு தேறு
விதமான பால்தேன்நெய்சர்க் கரையா மொன்றில்
 விருதாக மண்டலந்தான் கொண்டு தேறு
பதமான சருவநோ யெல்லாந் தீரும்
 பசுந்தங்கம் போலிருக்குந் தேகந் தானே. 624

## காரீய பற்பம்

தேகமாங் காரீய பற்பங் கேளு
 சிறப்பான வங்கமொருபலந் தகடு வாங்கி
தாகமாஞ் சுத்திசெய் ததன்மே லப்பா
 தாம்பிரச் சிலையரைத்துமேற் கவசங் கட்டி

மேகமாம் பொடியிலிட்டுமே லோடு மூடி
மேலேழு சீலைசெய்து கச்சை மட்டும்
ஆகமாங் குழிவெட்டிச் சதுர மாக
அப்பனே கெசபுடத்துக் கதிகம் போடே. 625

போட்டெடுக்கக் காரீய பற்ப மாகும்
புகலுமிந்தப் பற்பத்துக்கனு பானஞ் சேர்த்து
மூட்டிடவே சருவநோ யெல்லாந் தீரும்
மூவேழு மேகவகைகிரந் தியரை யாப்பு
நாட்டமுட னீரிழிவுஇரைப் பிருமல் சயங்கள்
நலமான அத்திசுர மத்தி வெட்டை
காட்டவே சுரங்களெல்லாம் பறந்து போகும்
கசரோக மெல்லாம்போங் கண்டு பாரே. 626

கண்டுபார் காரீயசெந் தூரங் கேளு
காரீயம் பலம்பத்துக் குடத்துக் குள்ளே
சென்றுநா னிறுத்திட்டு அதனுக் குள்ளே
சிறுகீரை வேர்நாலு இருபிடி போட்டுக்
குன்ருத குடத்தூரில்போட்டு நன்ரு யப்பா
குணமான அயக்கரண்டி கொண்டு கிண்டு
நன்ருக அடுப்பேற்றி வன்னி மூட்டி
நாலுசாமம் கைமாருமல் நன்ருய்க் கிண்டே. 627

சாமம்நாலு கிண்டியே யெடுத்துப் பாரு
சமத்தான மாதுளம்பூப் போலே நிற்கும்
சாமந்தான் எரித்தெடுத்தால்செந் தூர மப்பா
தளுக்கில்லா திருக்கவென்ரு லுருகிப் பாரு
சாமந்தா னழுக்கிருந்தா லுடம்புக் கொத்த
தளுக்கில்லா திருந்தக்கால் தீத மாகும்
ஆமமாம் மேகவகை ரெண்டு பத்து
அதிற்பிறந்த நீரிழிவு ரோகம் போமே, 628

போமேதா னனுபானம் புகலக் கேளு
புகலறிய ஆவாரைத் தைல மாகும்
மாமேதா ளுவின்பால் நெய்யு மாகும்
அழகான திரிகடுகுத் தூள்தே னுகும்
வேமேதா னனுபான மறியா விட்டால்
வியாதியெந்த வழிதீரும் விளம்பக் கேளு
நாமேதான் வெள்ளீய மான மாகும்
நாகசெந் தூரமினி நவிலக் கேளே. 629

## நாக செந்தூரம்

நவிலவே கேளப்பா சிறுகண் நாகம்
நன்ருக யிருத்துஅயச் சட்டி யிட்டு
நவிலக்கே ளரிதாரஞ் சிலைதான் கெந்தி
நலமானஆ வாரைப்பொடியும் வகைக்குஅரைப் பலந்தான்
நவிலக்கேள் பொடித்ததிலே யொக்கப் போட்டு
நன்ருக அடுப்பேற்றிஆ வரையின் வேர்கால்
நவிலவே யெரியூட்டிநாயுருவி சிவந்த வேரும்
நலமான கற்ருழை வேருங் கூட்டே. 630

கூட்டியே யொன்ருக விடித்துக் கொண்டு
குழுறவே நாற்சாமம் சேர்த்துக் கிண்டு
ஆட்டியே மஞ்சள்நிற மாகும் போது
அதன்பின்பு மாதளையின் பூப்போ லாகும்
காட்டாதே சிமிழ்களிலே பதனம் பண்ணு
கட்டியதோர் நாகமென்ருல்நவ லோகம் பொன்னும்
ஆட்டியே திரிகடுகுநெய் பாதா னந்தி
அனுபான மதில்போடு போடு போடே. 631

## காந்த செந்தூரம்

போடவே சருவநோ யெல்லாந் தீரும்
புகழான காந்தசெந் தூரங் கேளு
ஓடியே திறமான ஊசிக் காந்தம்
உடைத்துமே வெள்ளாட்டின் உதிர மூட்டு
ஆடவே பலமொன்று கெந்திபல மொன்று
அரப்பொடிதான் பலமொன்று சூதமரைப் பலமே. 632

பலமாக விவையெல்லாங் கல்வத் திட்டு
பாங்காகப் பொடிபண்ணி சட்டிக் குள்ளே
தலமாக வைத்துமேல் சட்டி மூடி
நால்சாம மெரித்தாறி யெடுத்துப் பாரு
குலமான செந்தூர முருக்கம் பூவாம்
கொடுத்திடவே வெள்ளாட்டுப் பாலு மாகும்
அலமான காமாலை பாண்டு சோகை
ஆட்டினுட கோமயமுந்திரி பலையுங் கூட்டே. 633

கூட்டுவது காந்தமொடு பலந்தான் வாங்கி
குணமான மேனியிலைக் குகைபி டித்துக்
காட்டுவது யெருக்கம்பால் நிறைய விட்டுக்
காந்தத்தை யதுக்குள்ளே வைத்து மூடு

ஆட்டியே பெரியதொரு புடத்தைப் போடு
அழகான காந்தமது நொருங்கி நிற்கும்
தீட்டியே காந்தத்தில் பாதி லிங்கஞ்
சேர்த்துகே கல்வத்தில் முலைப்பா லூட்டே. 634

பாலாலே நாற்சாபம் மாட்டி மைபோல்
பக்குவமாய் வில்லைகட்டி யுலர்த்திப் பின்பு
சேலான வெந்தோட்டில் வைத்து மூடி
செப்பரிய கெசபுடத்தில் போட்டு வாங்கு
ஆலினும் பழம்போலேசெந் தூர மாகும்
அதையெடுத்து மறுபடியுங் கல்வத் திட்டு
மேலான வெண்கார மிளகுதிப் பிலியும்
விதமான கருநாபி கூடக் கூட்டி
பாலான முலைப்பாலா லாட்டி யுண்டை
பருக்கவொரு மாத்திரையாய்ச் செய்தி டாயே. 635

செய்துமே பதின்மூன்று சன்னி வாதம்
சிறப்பான கிராணி குன்மம் வகைக ளெல்லாம்
அய்துமே யனுபான மறிந்து போடு
அகலாத நோயெல்லா மகன்று போகும்
அய்யாகேள் சருவநோ யெல்லாந் தீரும்
அவிழ்தங்கள் செந்தூரந் தைலங் கற்கம்
கையான மேல்கொண்டு களங்கு பற்பம்
கனமான லேகியங்கள் கிருதம் யெண்ணெய்
மெய்யாகச் சொல்லிவிட்டே னிவைக ளெல்லாம
விருதான பத்தியங்கள் காக்க வேணும்
செய்யவே குருபற்பம் சேர்ந்த தானால்
தீராத நோயுண்டோ செப்பக் கேளே, 636

செப்பமா யவிழ்தங்கள் கொள்ளும் போது
திறமாகப் பத்தியங்கள் காக்க வேணும்
துப்புரவே பத்தியங் காத்திட் டக்கால்
சுறுக்காக நோய்தீரு மில்லா விட்டால்
கொப்புடனே மண்டலங்கள் கொள்ள வேணும்
கொண்டாலு நாட்செல்லும் நோய்கள் தீர
தப்பாதே பத்தியந்தான் சொல்லக் கேளு
சாயறிந்து தினமறிந்து சொல்லு சொல்லே. 637

சொல்லுவது ஆசார முள்ள பேர்க்குத்
துவரையொடு சிறுபயறுதூது விளைச மூலம்
புல்லுவது சிறுகீரை பொன்னாங் கண்ணி
புளியாரை யரைக்கீரை பசரி யாரை

கல்லான வழுதலங்காய் முருங்கைப் பிஞ்சு
கதலியுட பிஞ்சாகும் மணத்தக் காளி
நல்லாதே கரு(பழைய)நெல்லி வடக மாகும்
நாரத்தங் காயச்சல் பழைய தாமே. 638

ஆமென்ற மற்ருேர்க்குவெள் ளாட்டு வத்தல்
ஆதண்டங் காய்வத்தலா வரைப் பிஞ்சும்
வேமென்ற புடலங்காய் பீர்க்கங் காயும்
விதமான ஞானியண்டம்வெள் ளெவியு மாகும்
தாமென்ற முயலாகும் உடும்பு மாகும்
தப்பாது காடைகவு தாரி யாகும்
கோனென்ற மான்மரையு மாகுஞ் சொன்னேம்
குணமாகும் பாரைவிரால் மசரி யாகும்
நாமென்ற சுருமீனு மாகும் சொன்னேம்
நலமான தேளியோடு உளுவை யாமே. 639

உளுவையா மூர்க்குருவி யாகும் சொன்னேம்
உற்ருவின் நெய்யாகும்பாலாம் கருவேம் பாகும்
பழுதில்லாச் சர்க்கரைதேன் கற்கண் டாகும்
பரிவான கதலியின் பழமு மாகும்
வழுவான மிளகுசீ ரகமு மாகும்
வறுத்ததோர் கல்லுப்புவெள் ளுள்ளி யாகும்தலை
முழுகவே தயிலமாவிளக் கெண்ணெ யாகும்
முறையாகச் சொன்னவற்றை உளத்திற் கொண்டு
பழுதின்றிப் பத்தியமா யுண்ணச் சொல்லி
பலநோய்க்குப் பத்தியமா யிருக்கச் சொல்லு
வழுவாமல் இம்முறைதான் செய்தால் நன்று
இல்லாட்டா லவபத்தியந்தான் மதிகெட் டானே. 640

மதிகெட்ட சுரதோட மானல் தாகம்
அதீதமா மடங்குதற்கு விவரங் கேளு
அதீதமாஞ் சீனிமணல் படிதா னென்று
அடிகனத்த தாளியிட்டு அடுப்பி லேற்றி
மதியுடனே சிவக்குமட்டும் வன்னி யிட்டு
மணல்பொறி பறக்கவே வறுத்துக் கொள்ளு
அதிதமா மரசினுட கொழுந்துபிடி யொன்று
அதன்மேலே போடவே சாம்ப லாகும்
சுதமாக வதன்மேலே காசெடைதா னேமம்
தாவிடவே பொரியும்போது சலத்தை வாரே. 641

சிலமென்ன அரைத்தூணிமுக மாறி வாரு
செப்பரிய தாழிவாய் வேடுகட்டி
பலமாக அடுப்பிலோர் கட்டை போட்டு
பாண்டத்துள் சூடாறப் பருவ மாடு
பிலமாக யிப்படியே வைத்துக் கொண்டு
பெருகிவருந் தாகத்துக் கெல்லாங் கேளு
அலமாக வோர்செம்பு சலந்தான் கொள்ளு
அன்னமுண்டால் பரிமாற்ற மந்நீ ராமே. 642

அந்நீராம் பத்தியங்கள் முரிவு கண்டா
லப்பனே நோய்ச்சூலை முடக்குக் கண்டால்
கன்னீரை மாத்திமிதி பாகல் ரெண்டுங்
கழாயமிட் டுண்டிடவே முறிவு தீரும்
மன்னீராம தைவிட்டால் வேறே யில்லை
யல்லாட்டா லவுரிவேர் மிளகு மாகும்
தண்ணீராம் தாமரையின் கிழங்கு மாகும்
தருநீற்ற கத்தரிவே ராகுஞ் சொன்னேன்
முன்னீராம் ரசகெந்தபா டாண முதலாம்
முதிர்ந்ததோர் விகற்பமெல்லாந் தீர்ந்து போமே. 643

தீர்ந்துபோம் சருவநோ யெல்லாந் தீரச்
செப்புகிறேன் நூருண்டு சென்ற வேம்பு
ஆய்ந்துநன்ருய் அடிமரத்துப் பட்டை வாங்கி
அப்பனே நிழலுலர்த்திசூ ரணமே செய்து
வார்ந்தகமா யந்திசந்திவெரு கடிதூ ளாக
மண்டலங்கொள் ளுப்பின்றிப்பத் தியமாய் நீயும்
தோய்ந்துவரு நோயேது பிணிதா னேது
தேகத்துக் கழிவேதுகற் பாந்த காலம்
ஆய்ந்துதா னிப்படியே மண்டலங் கொண்டால் நன்று
அல்லாட்டால் சீனிசமன் சேர்த்துண் டாயே. 644

உண்ணவே வாதமெங்கே வாயு வெங்கே
ஒடுங்காத சூலையெங்கே கபங்க ளெங்கே
திண்ணமாய் பட்டையிலே தைலம் வாங்கிச்
செப்பரிய முசுறுமுட்டைவெள் ளுள்ளி யண்டம்
வண்ணமாம் வகைவகைக்கு கழஞ்சி வீதம்
வசம்புபெருங் காயமுடன் ஓமஞ் சேர்த்து
திண்ணமாய்ப் பத்தியத்திற் பழுதில் லாமல்
நீமேலும் முறையுடனே் பூசி யுண்ணே. 645

பூசியே யுண்டிடவேபதி மூன்று சன்னி
பிடரிவலி யிசுப்போடுபிர சவித்த குத்துக்
காசியே கைமுடக்குகால் முடக்குச் சூலை
கழலண்ட வாதமொடு பட்ச வாதம்
யேகியே தேகத்தில் உளைவு குத்து
தீராத வலிகடுப்பு யெல்லாந் தீரும்
தேசியாம் வேம்பிலே தனிச்சார் வந்தால்
செத்தபே ருலகத்தி லுண்டோ சொல்லே. 646

## சூத செந்தூரம்

சொல்லவே சூதசெந் தூரங் கேளு
சொற்பெரிய வாதமொடுவயித் தியமு மாகும்
மெல்லவே வெண்குன்றி வேர ருமல்
வெண்சாவல் பலிகொடுத்துப் பிடுங்கி வந்து
அல்லவே ஆதிநாள் எடுத்து வந்து
அயச்சட்டி தன்னிலொரு பலமாஞ் சூதம்
மெல்லவே யிட்டடுப்பி லேற்றி நீயும்
விறகென்ன பூவரசம் விறகால் மாட்டே. 647

மாட்டுவது தீபம்போல் மூன்று தீத்தான்
மறுபடிதான் கமலம்போல் வன்னி மூட்டி
நாட்டுவது களியடைக்காய்வெள் ளிலையு நன்ருய்
நலமான கற்பூரச் சுண்ணம் மூட்டி
மாட்டியே யருந்தியந்தபா கத்தை யெல்லாம்
மாரு மலமென்றுமியச் சூதத் தாளில்
காட்டியே வெண்குன்றி வேரால் நீயும்
கைமாரு தெடுத்துநன்ருய்க் கிண்டிக் கிண்டி
ஆட்டியே தாம்பூல மருந்து நன்ருய்
யடிக்கடி தானுமிழ்ந்து கிண்டு கிண்டே. 648

கிண்டுவது கடிகையொரு மூன்று பத்து
கிண்டிவர முந்திமுந்தி மஞ்ச ளாகும்
அன்றியே பின்புதான் வெள்ளை யாகும்
அதன்பிறகு மாதளம்பூ நிறமே யாகும்
கொண்டுபார் செந்தூரங் கண்கொள் ளாது
கொள்ளையடா வாதம்கைக் குள்ளா குந்தான்
தண்டுமுண்டு பண்ணுதேதினம் பணந்தா னுண்ணு
சண்டாள ரோகமெல்லாம் பறந்தே போகும்
கண்டுபார் மண்டலந்தான் கொண்டா யானுல்
காயசித்தி தேகசித்தி காணுங் காணே. 649

காணவே வெள்ளிசெம்பி லீந்தா யானல்
கைகண்ட மாத்தென்ன ஒன்ப தாகும்
நாணது காவிக்கும் புடத்துக் கேகா
நலமான வங்கத்தைச் சண்ணும் சண்ணும்
பூணதே பொருள்தனையே யிச்சிக் காதே
புகழான நிருவாணி சோதிப் பாள்பார்
ஆணுவமா அபினியொடு சாரா யங்கள்
அருந்தியே வெறிபிடித்துப் புலம்பி மட்டை
யாணுமாய்த் திரிந்தலேவா ளுள்தான் பார்த்து
அவனையே நரகத்தில் போடென் பானே. 650

போடேநீ சொல்லாம லறிவில் நின்று
புகழான ரசமணிதான் புகலக் கேளு
தேடேநீ ராமத்தை வாங்கு தன்னை
சிறப்பாக பிடித்தொரு பாண்டத் திட்டு
வாடாதே மேனிச்சார் முங்க விட்டு
வாய்மூடிச் சீலைசெய்து அடுப்பி லேற்றிக்
காடான காடாக்கினியா கனலை மூட்டிச்
சலங்களெல் லாம்வற்றி வற்றிப் பின்பு
ஆடவே வற்றியே சாறு சுண்டி
அடியில்நிற்கும் பதமறிந்து யெடுத்தி டாயே. 651

எடுத்துமே ரவியிலே யுலர்த்தி நன்று
யிடுத்திடுவாய் கல்லுரலிற்கடப் பாரை கொண்டு
அடுத்துமே சமூலமங்கே வத்திர காயம்
ஆக்கிடுவாய் புதுக்கலத் திட்டு மூடு
கடுத்துமே யின்னமதில் கருவைக் கேளு
கனமான ஆதளையின் முத்தை வாங்கி
யிடித்துமே நாலுபடி கொட்டைக் கப்பா
யிதமான கல்லுப்புக்கால் படிதான் சேர்த்து
வடித்துமே யெண்ணெய்தனை வடித்து வாங்கி
வாகான ரசங்கட்ட வகைதான் கேளே. 652

வகையென்ன புதுச்சட்டி தன்னில் கேளு
வடித்திட்ட யெண்ணெயரைக் கால்படி வாரு
வகையென்ன வதன்மேலேதேங் காயின் தூள்தான்
மைந்தனே யெண்ணெயதன் மேலே போடு
வகையென்ன வதன்மேலே சுத்திசெய்த ரசந்தான்
வார்த்திடுவாய் பலமொன்று அதன்மேல் கேளு
வகையென்ன முன்போலே பொடியைப் போடு
வாகான யெண்ணெய்முன்போ லதன்மேல் வாரே.

வார்த்துமே மேல்மூடியெழு சீலை செய்து
வாகாக அடுப்பேத்தித் தீபம் போலே
பார்த்துமே கடிகையொரு மூன்று பத்து
பக்குவமா யெடுத்தாறிப் பாரு பாரு
காத்துமே சூதமொடு வட்டுப் போலே
கட்டியே நிற்குமப்பா கரியி லாகும்
வேற்றுமைக ளில்லாமல் சொல்லி விட்டேன்
வெகுசுருக்குச் சாரரச மணியே செய்யே
ஏத்திடுவா யில்லாட்டால் கெவுனமெடுத் தோடு
அண்டரண்ட மேலது வாக வோடு
காத்திட்ட குளிகைதன்னை செந்தூ ரித்தால்
கடியதொரு நவலோகம் கனக மாமே. 654

கனகமே யாகுதற்கு விபரங் கேளு
கல்லுப்பு அரைவாசி சட்டிக் கிட்டு
கனகமாங் கொட்டையென்ற குச்சிக் காளான்
கவிந்துபுகை யூரல்போ லிருக்குந் தூள்காண்
கனகமென்ற வுப்பதனின்மேல் தூளைப் போட்டு
கடியதொரு சூதத்தை யதன் மேலிட்டு
கனகமாந் தூளையந்த மேலு மூடி
கல்லுப்பு மேநிறைய அழுத்தி மூடே. 655

மூடியே சீலைசெய்து அடுப்பி லேற்றி
மூன்றுபத்துக் கடிகைதான் தீபம் வன்னி
ஆடியே யெடுத்தாறி யெடுத்துப் பாரு
அருணம்போல் செந்தூர மாகி நிற்கும்
பாடியே நவலோகம் பத்துக் கொன்று
பாச்சிடவே மாற்றேழு பகரக் கேளு
ஆடியே புடத்துக்கு நிலைக்கும் பாரு
ஆத்தாட்கும் வடுகனுக்கும் பூசை பண்ணி
பாடியே மண்டலந்தா னுண்டு தேறு
பழம்பழுக்கு முடம்பெல்லாம் பாலை யாகும்
சாடியே சருவநோ யெல்லாந் தீரும்
சங்கற்ப விகற்பமென்ற சட்டை போக்கே. 656

போக்கான வுலகத்தோ ருன்னைக் கண்டால்
போற்றியடி வணங்குமொரு புதுமை கேளு
போக்கான யின்னமொரு மருந்து கேளு
புகழான யிந்திரமாங் கோபப் பூச்சி
போக்கான வல்லூறு பித்தங் கண்ணும்
புகழான பெரியதலையானை யூணும் கூட்டிப்

போக்கான விவைசமனுய்க் கல்வத் திட்டுப்
புகட்டியரை பதுமினியாள் நாதங் கூட்டித்
தாக்கான பெலிபீடத் துதிர மூட்டிச்
சாரித்துக் கருஞ்சீலை தன்னி லூட்டே. 657

ஊட்டியே யுலர்த்திநன்ருய்க் கபால வோட்டி
லுறுதிபெறச் சித்தேரண்டத் தெண்ணெய் விட்டு
நாட்டியே ஆணைக்கண் சட்டி மூடி
நலமான அங்கணத்தில் விட்டம் போட்டு
சாட்டியே யதின்மேலா யுறிதான் ரெண்டு
தான்கட்டி ஒருரிமே லிருந்து கொண்டு
மாட்டியின்ன மோர்உரிமேல் சட்டி வைத்து
மைந்தனே மையெரித்து வாங்கும் போது
மாட்டியே வசியமுதல்மா ரணத்தை யோது
மகத்தான மோகினிமந் திரத்தை யோதே, 658

ஓதியே மைதன்னை யெரித்து வாங்கி
உற்றமையைக் கைதொடாச் சட்டி யோடே
தீதில்லா தெடுத்துநடுச் சாம வேளை
சென்றிடுநீ மயானத்தில் சுடலைச் சாம்பல்
கோதில்லா பராபரத்திலறு கோண மிட்டுக்
குடிலமில்லா தறுகோணம்சடாட் சரமே யிட்டு
மாதில்லா ஓங்கார வட்டம் போடு
மையெடுத்து அதன்மேலே வைத்துக் கேளு
தீதவே முப்பெலியுஞ் செய்து நன்ருய்
தீபதூ பத்தோடுருத் திரனை யோதே. 659

உருத்திரனை லெட்சமுரு வோதித் தீரு
நுணுக்கமா யுபசாரத் தோடே கேளு
பத்திரமாய் மையெடுத்துச் சிமிழில் வைத்துப்
பரிவாக அறுகோண மிட்ட சாம்பல்
வித்தார முச்சந்தி பிரிதல் மண்ணு
வேம்பின்மேல் பறந்திட்ட காக்கைக் கூடும்
பித்தியாய் வெள்ளையண்டங்காக் காயுயி ரோடே
பிடித்தீர லதனுடைய யிறகுங் கண்ணு
முத்திரமாங் கழுதைலத்தி யிவையோ டொக்க
முன்சொன்ன சாம்பல்வைத்துச் சுட்டு நீற்றே. 660

நீற்றியே சுடலையாஞ் சாம்ப லோடும்
ரேகித்து யெடுத்ததனை வேறே வைத்துச்
சேர்த்ததொரு மையதனைத் திலகந் தீட்ட
செப்பியே தம்பனத்தில் வசிய மூலம்
சாத்தியே புருவமையந் திலகந் தீட்ட
சகலமான பட்சியுமுன் பட்சிக் குள்ளாம்
பாத்திடவே அரசர்களு முலகுள் ளோரும்
பகரரிய மிருகமுதல் பட்சி சர்ப்பம்
காத்துமே கைகட்டி வாய்பு தைத்துக்
காலடியில் விழுந்திறைஞ்சிக் கிடப்பார் பாரே. 661

பார்த்திட்ட பகையாளி சத்தி ராதி
பலகால முனக்கிடர்கள் செய்வா ராகில்
சேர்த்திட்டேன் யென்மேலே குற்ற மில்லை
தெய்வமே நீசாட்சி யென்று சொல்வாய்
வாட்டமுடன் முன்சொன்ன சாம்பல் கொண்டு
வாகாக அவனுடைய வீட்டின் மேலே
பார்த்திட்ட வாயுவுட மூலை சென்று
பறக்கவுச் சாடனத்தை யோதிப் போடு
காத்திட்ட சாம்பல்தான் வீட்டின் மேலே
காட்டிடவே காகம்போல் பறக்குந் தானே 662

பறப்பானே யவனில்லம் பத்தை விட்டு
மறுதேசம் புக்கியே மறைந்து போவான்
பறப்பானே செனனமென்ற கழுதை யாக
புல்லுமுதல வனில்லம் முளையா தப்பா
மறைப்பான யெதிராளி யுன்னைக் கொல்ல
மனதிலே வஞ்சனைகள் நினைத்தா னாகில்
பறப்பான நம்மைத்தான் கொல்ல வந்த
பாதகரைக் கொன்றதனால் பாவ மில்லை
சிறப்பாக யெதிராளிமா ரணந்தா னென்று
செப்புகிறேன் முப்பிழைதான் பொறுத்துச் செய்யே

செய்யவே தனித்தமா தவத்தி னோடு
செய்திடவே தலைமைந்த னோட தாகும்
துய்யவே சொன்னவகை மூன்றி லொன்று
துடியாக வாங்கதிலே சுடலை மையால்
செய்யவே உடல்சக் கரத்தைக் கீறி
செய்திடுவாய் அவனுருப் போலே செய்து
கொய்யவே முன்சொன்ன கருவைத் தொட்டு
கேடாளி கருக்கூட்டிஐங் காயம் பூசே. 664

பூசியே புதவார நாள்தா னப்பா
புக்கிரவில் நடுச்சாமம் மயானம் மேவி
வீசியே கருப்பூசி முன்னே கேளு
விதமான மாரணத்தைக்கால் மாறில் போடு
வாசியே யவன்பேர்நட் சத்திர மிட்டு
வகையான மருக்காரை முள்ளு வாங்கி
தாசியா புயிர்நிலையே பார்த்து ஊனு
மருவான வெங்காயங் கருமேல் பூசு
கூசியே யெருக்கரளி யெட்டி நிம்பம்
கிறுங்கோடு சாதற்கோமம்வேப் பெண்ணெ யாமே.

எண்ணெய்விட்டு ஓமந்தாண் செய்து நன்றாய்
இருநூற்றெட் டுமுறையுரு ஓது ஓது
அண்ணாக ஆதிமுதல் கடையி லின்னுள்
அரிநசி யென்றோதி உருவைப் பார்த்துத்
திண்ணமாய்ச் சாகவென்று தீயைப் போடு
செணத்திலே மாரணஞ் செய்யொண் ணாது
பண்ணதே பரிபாவஞ் செய்யொண் ணாது
பாருலகில் உந்தனுக்கே இடராய் யார்தான்
கண்ணாரக் கண்டறிக்கை காச்சி பண்ணி
கணத்திலே மாரணஞ்செய் சாகு வாரே. 666

சாகாதே தழைத்திருக்கும் விபரங் கேளு
சாம்பலென்ற சாம்பலிலேயிடு காட்டில் நிற்கும்
சாகாதே சுடலையானவ ரையின் வேரே
தானறிந்து வெள்ளியன்று காப்புக் கட்டி
சாகாதே மறுவெள்ளி வாரந் தன்னில்
சதுரமான பொங்கல்பலி தூபதீப மிட்டு
சாகாதே நிருவாண ரூபங் கொண்டு
சாதகமாய் முப்பெலியுங் காட்டி நீயும்
சாகாதே சிக்கெனவேமா ரணமே யோது
சதுருடனே லெட்சமுரு வாக வோதே. 667

ஓதியே வேரறுதே பிடுங்கி வந்து
உற்றதொரு குளிசத்தி லடைத்து மூடி
பேசியே யடைத்து வைத்து மச்சுமுதல்
கல்லகரை கள்தனைகள் மூட்டு எல்லாம்
சேகிதமன்றி காட்டிடவே திறக்கும் பாரு
சிவசிவா குளிசத்தை யெடுத்து நீயும்
கோதன்றிப் பத்திரமா யெடுத்துப் போரிடத்
துடருவேன் மழுலியிலை யேநீ வாங்கே. 668

வாங்கியே மந்திரந்தான் ஓமேன் றேது
மகத்தான இலேகசக்கிவிலங் காணி தன்னில்
ஓங்கியே பிளந்திடவே தெறிக்கும் பாரு
உத்தமனே யின்னமொரு உண்மை கேளு
ஆங்கியே கெருடனுட குஞ்சு பார்த்து
அக்காவில் விலங்கிட்டு அப்பா லேபோய்ப்
பாங்கியே குஞ்சுகள்தான் பறக்கும் காலம்
பருவான கெருடனுமங்கே மூலி தேடி
தாங்கியே யெடுத்துவந்து காவில் வைக்க
தளைதெறிக்கும் குஞ்செல்லாம் பறந்து போமே. 669

பறந்துபோங் கூடதனை யெடுத்து வந்து
பாங்கான தணல்மூட்டிப் பார்த்தா யானல்
சிறந்தொரு மூலியது வேகா தப்பா
சிவசிவா யெடுத்ததனைப் பதனம் பண்ணு
கறந்தபால் போலேயான் வெளியாய்ச் சொன்னேன்
கட்டிடவே தலைதெறிக்குங் கண்டு கொள்ளு
சிறந்திடவே யின்னமொரு சேதி கேளு
சிவசிவா கல்லெலியிள் செய்கை கேளும்
மறைந்திடவே ஆதிநாள் வாரந் தன்னில்
மைந்தனே கல்லெலியின் வளைதான் நோக்கே, 670

வளைநோக்கி ஆதிநா ளிரவில் நீதான்
மைந்தனே அவ்விடத்தில் சென்று நீதான்
வளைதேடி மெழுகுதிரி தீப மேற்றி
வளரெரிதான் தெரியாமல் சட்டி மூடி
வளைதேடி ஒளிந்திருந்து பாரு பாரு
மகத்தான கல்லெலிதான் மேச்சல் தேடி
வளைநோக்கிப் படுகையிலே யிருக்கு மூலி
வாயிலே யெடுத்துமே லேறும் போது
வளைமூடி யடைத்திருந்த கல்க ளெல்லாம்
மைந்தனே திறந்துமே லோடிப் போமே. 671

போமென்ற கல்லெலிதான் வெளியில் வந்து
புகழ்பெரிய வேர்களைக் கீழே வைத்து
ஆமென்ற விரைதேடி மேயப் போகும்
அப்போது தீபத்தை வெளியில் காட்டில்
தாமென்ற வேரதனை யெடுத்து வந்து
சாம்பிராணி தீபமுடன் தூபங் காட்டிப்

போமென்ற வேரதனைக் கையில் வைத்துப்
பூட்டிவைத்த பூட்டெல்லாந் திறக்க வேண்டி
தாமென்ற மூலியினால் தொட்டா யானால்
தான்திறக்கு மிதுபுதுமை யாகுந் தானே, 672

புதுமையே சோதியென்ற மூலி வாங்கி
பொடியாக்கி கெந்திபொடி கலந்து நேராய்
புதுமையா மோர்கழஞ்சு சூதங் கூட்டி
மத்திக்க உண்டையாம் வாயி லிட்டு
புதுமையாம் பூட்டிவைக்கும் பூட்டி லிந்த
பொடிபோட பூட்டெல்லா முறிந்து வீழும்
புதுமையுள்ள சூட்சத்தி லின்ன மொன்று
காட்டுகிறேன் கனமானமவுனவித்தை கருதிப் பாரு
புதுமையாம் பீங்கானில் சூத மிட்டுப்
புகட்டிடுவா யோரிலையின்தா மறையின் சாறே. 673

சாறதனை வார்த்திரச முங்க விட்டுத்
தானதிலே யிந்திரமாங் கோபப் பூச்சி
வாரவடு கப்பூச்சியொன்று அதிலே போட்டு
மைந்தனே மூடிவைத்து மறுநாள் பாரு
திண்டுறுண்டு குழம்புபோ லிருக்கும் பாரு
கூறுவேன் வழித்தொரு குகையி லிட்டு
கொஞ்சமாய்க் காரம்விட்டு யுருக்கிப் பாரு
வீறுசெய்ய மனமடங்கிப் பிழைக்கச் சொன்னேன்
வெள்ளியென்ன ரசவெள்ளி வேதை யாமே. 674

வேதையென்ன நாகக் குருத்தா னென்று
விள்ளுகிறேன் வெகுதூர மெட்டி யோடும்
வேதையென்ன நாதாக்கள் செய்யு மார்க்கம்
விள்ளாதே யொருவருக்கு மடங்கி யாடும்
வேதையாஞ் சிறுகண்ணு நாகம் வாங்கி
விதமான இலுப்பைநெய்யில் சாரம் போட்டு
சாதியாம் நாகத்தைக் குகையி லிட்டுச்
சார்வாக யேழுதரம் முருக்கிச் சாயே. 675

சாய்க்கவே சுத்தியாம் சிறுகண் நாகம்
தானதிலே பலநூறு தூக்கிக் கொண்டு
காய்க்கவே குறுக்கிட சாத்தில் பார்த்துச்
சாகாதே யுருக்கியே சாய்த்து வாங்கு
வாய்க்கவே கட்டிப்போந் தேசி நீரில்
வாகான வெள்ளறுகுதூள் பலந்தா னிட்டு

ஆய்க்கவே சாரங்காரம் பலமே போட்டு
ஆடுதொடா மூலிச்சாறதனைக் கூட விட்டு
வாய்க்கவே அடுப்பேற்றி யெரித்து வாங்கி
வற்றியே குழம்பாக்கிப் பதத்தில் வாங்கே. 676

வாங்கியே குகையிலே கீழ்மே லிட்டு
வளமான நாதத்தை நடுவே வைத்து
வாங்கியே கெசபுடந்தான் போட்டுப் பாரு
மணிபோலே யிறுகியது கட்டி நிற்கும்
வாங்கியே சூதமொடு கெந்தி சேர்த்து
வளமாக உருக்கும்பொன் நாலி லொன்று
ஓங்கியே போட்டதனை யுருக்கி வாங்கு
உற்பனமாய் லோகமரப் பொடியைக் கேளே. 677

கேளப்பா பலமொன்று சுத்தி செய்து
கெடியான பழச்சாற்று லரைத்து நீயும்
கேளப்பா மனிதனக்கு அங்கி பூட்டி
குகையிலிட்டு மேல்மூடி யூதி வாங்கி
நாளப்பா உருகியது கணியாய் நிற்கும்
நாலிலொன்று தங்கமிட்டுக் கல்வத் திட்டு
வாளப்பா மல்லிகையின் சாற்றி னாலே
வளமாக நாற்சாம மாட்டி யாட்டிக்
கோளப்பா வாராமல் குப்பிக் கேற்றிக்
குறிப்பான வாலுகையி லெரித்தி டாயே. 678

எரித்திட்டு நால்சாமம் தீயை மாட்டு
எடுத்துப்பா ரருணன்போல்செந் தூர மாகும்
அருத்தியுடன் ஆத்தாட்கும்வடுகனுக்கும் பூசை பண்ணு
அருமையுடன் நினைத்ததெலாம் அடைவாய் நீயே
எரித்திட்டு நவலோகமா யிரத்துக் கொன்று
ஈந்திடவே பதினாறு மாற்றுக் காணும்
விரித்திட்ட ரசவாதங் கண்டோ மென்று
விண்டிடவே தலைதெறிக்கும் விள்ளா தேகேள்
பரித்திட்ட தினம்பணந்தா னுண்டு தேறு
பழம்பழுக்கு முடம்பெல்லாம் பாலை யாமே. 679

பாலையாஞ் சருவநோ யெல்லாந் தீரும்
பாவிகட்கு இந்நூலைக் காட்ட வேண்டாம்
ஆலையாம் அயச்செம்பு சொல்லக் கேளு
அரப்பொடிதான் பலமொன்று சுத்தி செய்து

வாலையா மாசகற்றி கலசத் திட்டு
மைந்தனேகோ வைச்சாறு நிறைய வாறு
சாலையாம் சாறுவார்த்து மூன்று நாள்தான்
சாறுவற்று மட்டுமப்பா மூடி வைத்து
மேலையாம் சாறுசுண்டிக் குழம்போ டொக்க
விதமாகக் கவனித்தொரு குகையி லூட்டே 680

ஊட்டியே காரமிட்டுக் குகையு மிட்டு
முருக்கியே யெடுத்திடவே செம்பு மாகும்
காட்டிடவே அயச்செம்பு சுயம்பு மாகும்
கடியதொரு துய்யானி லாறு நாலும்
நாட்டிடவே மாற்றஞ்சு காணும் காணும்
நலமான வித்தையிது யெளிதாம் பாரும்
ஊட்டியே யொளித்தார்கள் வாத வித்தைக்
குலகத்தோர்க் கிரும்புவெகு லெகுவாம் பாரே. 681

வெகுவாக முந்திமுந்தியிரும்பை யாட்டிப் பாரு
நிலைத்துதென்று மற்றதெல்லாங் கண்டு தேறு
லெகுவாக யின்னமொரு அயச் செம்பு சொல்வேன்
லேசாக அயத்தகடு காய்ச்சித் தட்டி
வெகுவாக வந்ததொருவா டியில ரைத்து
லேசான தகட்டின்மேல் பொதிந்து கேளு
வெகுவாகக் கடிகையொருஅறு பத்து நாலு
நின்றபின்பு ஐம்பதெரு அடுக்கிப் போடு
வெகுவாக ஆறவிட்டு எடுத்துப் பாரு
நினைவாக மும்முறைதானிப் படியே போடே. 682

போட்டெடுக்கச் செம்புருகுங் கார மிட்டுப்
பொன்போலே கண்விட்டே ஆடுஞ் செம்பு
தேடவே அரப்பொடியி லிந்திர கோபஞ்
சேர்த்துருக்கச் செம்பாகும் வேதை யாகும்
தேடவே யெளிதாகச் சொன்னேன் பாரு
சிவயோகி சித்தர்தான் செய்வா ரப்பா
ஆடவே கல்தாமரைக் கிழங்கி னோடு
அரப்பொடியே சேர்த்தரைத்து வுருக்கு செம்பாஞ்
சாடியே செம்பிலே சூதங் கெந்தி
தங்கமிட் டுருக்கியே கல்வத் தாட்டே. 683

ஆட்டுவது மல்லிகையின் சாற்று லப்பா
அரைத்துமே பொடியாக்கிக் குப்பிக் கேற்றி
மாட்டுவாய் வாலுகையின் மேலே வைத்து
மறவாமல் முத்தீயும்பனி ரெண்டு சாமம்
மாட்டியே யெரித்திட்டா றவிட்டு வாங்கு
அருணன்போல் செந்தூர மாகும் பாரு
ஊட்டியே நவலோகமா யிரத்துக் கொன்று
உள்புகுதப் பத்தரையா மாற்றுக் காணும்
தீட்டியே பொருளென்ன தள்ளு தள்ளு
தினம்பணந்தா னுள்ளுக்குக் கொண்டு தேறே, 684

தேறவே தேகமது இரும்பு போலாம்
செத்தவர்க ளில்லையப்பாகற் பாந்திர காலம்
ஆறவே நோயெல்லா மகன்று போகும்
அப்பனே பாண்டுகா மாலை சோகை
மீறிவரும் பித்தநோ யெல்லாந் தீரும்
விருதான வாதமென்ன வைத்யம் பாரு
கூறுவேன் வாதிசெய்யும் வைத்யமி தப்பா
கூறுகெட்டு அலையாதே குறிப்பாய்ப் பாரே. 685

## இலிங்க செந்தூரம்

பாரப்பா லிங்கசெந் தூர மொன்று
பாடுகிறேன் லிங்கமொரு பலந்தான் வாங்கி
நேரப்பா பழச்சாற்றில் சுத்தி செய்து
நேர்பாக அயக்கரண்டிக் குள்ளே வைத்து
ஆரப்பா அடுப்பேற்றிக் கொம்புத்தே னதிலே
அழகாக ஒருபடிதான் சுருக்குத் தாக்கு
பாரப்பா லிங்கமது கட்டிப் போகும்
பச்சரிசி மூலிகைதா னரைத்துப் பூசே. 686

பூசியே புடத்துக்கோர் விராட்டி யேற்றிப்
புடமென்ன நவபுடந்தான் போட்டுத் தீரு
மாசியே கட்டியதுசெந் தூர மாகும்
மாட்டிடவே நவலோகமாற் றெட்டுக் காணும்
ஆசியே வெகுதூர மெட்டி யோடும்
அறைகிறே னதன்மேலேபரித் தகடு சுற்றி
பாசியே வெடியுப்புச் செய்நீர் தோய்த்துப்
பரிவாகச் சூடனீந் தன்னில் வாட்டே. 687

வாட்டியே யேழுதரந் தோய்த்து வாட்ட
வளமான பரியுள்ளே வாங்கும் பாரு
நீட்டிடவே வறியோடு லிங்கமொன்று
யிரேகித்து மயனம்போல்செந் தூர மாகும்
ஊட்டிடவே மெழுகாகும் நூற்றுக் கொன்று
அணைத்திடவே நவலோகம் பத்து மாற்றும்
தாட்டிகமாய் நான்தீர னென்று சொல்லி
சாகாமல் தினம்பணந்தான் உண்டு தேறே. 688

உண்டிடவே சருவநோ யெல்லாந் தீரும்
உற்றுநின்ற திரோதாயி மாயை தள்ளு
உண்டிடவே சாகாம லிருக்க வென்றல்
ஓகோகோ வாசிகொண்டு மேலே யேறு
உண்டிடவே சரியையிலே ஒருபோ துண்ணு
உரைத்தபின்பு கிரியையிலே உப்பைத் தள்ளு
உண்டிடவே கருங்குறுவை யரிசி யப்பா
ஒருபோது ஆவின்பால் பொங்கி யுண்ணே. 689

பொங்கியே பஞ்சகற்பந் தேய்த்து மூழ்கு
புகையோடு சாராயங்கள் ரெண்டு மாகா
பொங்கியே பட்சத்துக் கொருகா லப்பா
புகழான ஆவின்நெய் தேய்த்து மூழ்கு
பொங்கியே கற்பங்க ளுண்ணும் போது
புகல்கிறே னிம்முறைதா னறிய வேணும்
பொங்கியே புளியுப்பு பெண்ணுந் தள்ளு
போக்கரிய கற்பத்துக் குறுதி யாகும்
பொங்கியே கற்பமுறை வாசி யோகம்
புகலரிய சரியையொடு கிரியை மார்க்கம்
பொங்கியே ஞானமுறை வாத மார்க்கம்
புகலரிய அஞ்சனமும் வசிய மாமே. 690

வசியமொடு தத்துவங்கள் தொண்ணூற் றுறு
மகத்தான சரக்குவைப்பு முறைதப் பாமல்
வசியமா மட்சரமும்சக் கரமு நன்றாய்
மாந்திரிக கருக்குருவும் வயித்தியமுந் தெளிவாய்
வசியமாய்ப் பாடிவைத்தேன் எட்டுக் காண்டம்
மைந்தனே யதைக்குறுக்கி யெண்ணூ றாக
வசியமாய் வெட்டவெளி யாகச் சொன்னேன்
மகத்தான இந்நூலைக் காட்ட வேண்டாம்
வசியமா மனமுருக்கி முறைதப் பாமல்
வரிசையாய்க் கைபாக மறிந்து செய்யே. 691

செய்யவே யாத்தாளை யடுத்துக் காரு
செப்பரிய பலநூலுந் தெளிந்து பாரு
மெய்யான என்னுடைய சாத்திரத்தை
வேதாந்த சிரோமணியா மேன்மை யாகும்
கையுமெய்யு மாகவே காணச் சொன்னேன்
கருவாளி நீயானல் கண்டு சோதி
மெய்யாக வாதமொடு வைத்யஞ் சொன்னேன்
விபரமாய்ச் சவுக்காரம் வழலை சொன்னேன்
பையவே யடிமுடியு மண்ட பிண்டம்
பாடிவைத்தேன் முப்பூவின் பாகந் தானே. 592

பாகமா மட்டாங்க வாசி யோகம்
பாடுகிறேன் குருநிலையு மார்க்கம் பாரு
வாகான வசியமுடனஞ் சனமுந் திலதம்
மைந்தனே ஆள்மறைப்பு அட்ட கன்மம்
நாகான சித்தநெறி நவிலும் யோகம்
நாடிபெற மைசால எண்மா சித்து
தாகான தகமைபெற சூத மணியைத்
தேடவே பொருள்களெல்லாம் கைக்குள் ளாமே, 693

கைக்குள்ளாய் சித்தருக்குச் சித்த னுவாய்
காசினியில் என்னை வந்து கண்டு கொள்வாய்
கைக்குள்ளாங் கேட்டதெல்லாந் தந்து வுன்னை
கண்ணுன சீடனென்று எண்ணிக் கொள்வேன்
கைக்குள்ளாங் கெவுனசித்தி குளிகை சித்தி
காயசித்தி யோகசித்தி காட்சி பெற்று
கைக்குள்ளாங் கண்ணுக்குள் மணியாய் நின்ற
காரணமாங் குருபதத்தைக் காணு வாயே, 694

காணுவாய் சத்துவகையுருக் கினத்துக் கெல்லாங்
காடுகட்டு நீலகண்டன் கண்விட் டாட
காணவே யுருக்கினத்துக் காதி யான
கருவான குடோரியொன்று கழறக் கேளு
காணவே தாளகமோ பலந்தா னுலு
கரையாக வெங்காரம் பலந்தா னென்று
காணவே வீரமது பலந்தா னென்று
கருவான அண்டத்தோல் குக்கி லாமே. 695

குக்கிலொடு சீனமுட னுருக்கு தொட்டி
குறையாத வகைக்கொரு பலந்தான் தூக்கி
செய்க்கவே கல்வத்திலிட் டதனிற் கேளு
சிறப்பான வற்கம்பால் சிப்பி நீரால்

மெய்க்கவே நால்சாம மரைத்துக் கட்டி
வில்லைசெய்து உலர்த்திநன்ரு யோட்டில் மூடி
அய்க்கவே குக்குடமாம் புடத்தில் போடு
அப்பனே மும்முறைதான் போட்டுத் தீரு
பைக்கவே யெடுத்ததனைப் பதனம் பண்ணு
பகரரிய உருக்கினத்துக் காதி யாமே. 696

ஆதியாம் நவலோக முருக்கும் போது
அழகான சத்துகள்தா னிறங்கா விட்டால்
காதியா கண்திறந்து உருகா விட்டால்
கரிகொடுத்து நவலோகந் தெறித்த தானல்
சாதியாங் குடோரியொரு காசு போடு
சணத்திலே யுருகியது கட்டும் பாரு
பேதியாம் நவலோகம் பேதித் தாடும்
பிலத்ததொரு வுருக்கினத்துமித் துருவி தாமே, 697

மித்துருவாஞ் செந்தூரம் வைக்கக் கேளும்
வீடுவிட்ட தாளகமப் பிரகந் துத்தம்
மித்துரு மனோசிலையுஞ் சூதங் கெந்தி
வெடியுப்பீ தேழுஞ்செந் தூரத் தாதி
சத்தியமா மிதுவேழு சேரா விட்டால்
சாற்றியதோர் செந்தூரமா காது பாரு
குத்திரமாய்ச் சொல்லவில்லை குவிந்து பாரு
கூருக அஞ்சுநீர் விபரங் கேளே. 698

விபரமாய்ச் பழச்சாறு வாய்நீ ரோடு
வெண்கருவு முலைப்பாலும் சிப்பி நீரும்
விபரமாம் சரக்குகள்தான் கல்வத் திட்டு
விளம்பியதோர் நீர்வார்த்து அரைத்து ருக்க
விபரமாய் சாறுகள்தான் விட்டே யாட்டு
மெழுகாகும் குருவாகும் வேதை யாகும்
விபரமாய்ச் சொல்லுகிறேன் இன்னங் கேளு
விருதான குப்பிமுறை விளம்பு றேனே. 699

விளம்புகிறே னின்னென்று வளையல் குப்பி
மெய்யான காசியென்ற மேரு வாதல்
விளம்புகிறேன் யெழுசீலை மண்தான் செய்து
விளக்கிலே முகங்காட்டி குப்பிவா யூழ்த்து
விளம்புகிறேன் குப்பிக்குஅரை வாசி யூற்று
மிஞ்சிட்டால் பொறுக்காது சட்டி யொன்றில்
அளம்பாதே நாலுவிரல் மணல்தா னிட்டு
அதன்மேலே குப்பிவைத்து மணலைக் கொட்டே, 700

கொட்டுவது குப்பியது வாய்தான் மேலே
குறியாக விரற்கடைதான் ரெண்டு விட்டு
திட்டமாய் மணலிட்டு அமிழ்த்தி நன்றாய்
செப்பியதோர் வாலுகையின் அடுப்பி லேற்றிக்
கொட்டயே யெரிக்கவேசெந் தூர மானல்
குப்புவாய் மூடாதே தளத்தி நின்றால்
வட்டமாய் வளப்பக்கல் கொண்டு குப்பி
வாய்மூடி யெரிக்கவே விபரங் கேளே. 701

விபரமா மொருவிறகு தீப மாச்சு
விறகிரண்டு கமலமாமூன்று காடாம் நாலு
விபரமாங் குப்பிவைப்பு முறைதான் சொன்னேன்
விளம்புகிறேன் புடத்திட்டம் நன்றாய்க் கேளு
விபரமாம் புடத்துக்குக் காட்டு முட்டை
வேணுமானல் தட்டியதோர் விராட்டி யாகா
விபரமாய் கானகத்தில் காய்ந்து லர்ந்து
விராட்டிபார்த் தெடுத்துவந்து விபரங் கேளே. 702

கேளப்பா விராட்டியெல்லா நிறையொன் றாகக்
கெட்டியாய் தேய்ந்துவிட விபரங் கேளு
நாளப்பா ஓரெருதான் காடை யாகும்
நலமான கவுதாரிப் புடந்தான் மூன்று
வாளப்பா குக்குடந்தான் விராட்டி பத்து
வாரணந்தான் அஞ்சுபத்துக் கெசந்தா னூறு
வாளப்பா புடத்திட்ட மின்னங் கேளு
வளமான கெசபுடத்துக்கா யிரந்தான் சொல்லே. 703

சொல்லவே அஞ்சுசுண்ணக் குகைதான் கேளு
சொற்பெரிய நண்டுநத்தை சங்கு சிப்பி
வல்லவே யண்டத்தோல் சமனாய்க் கொண்டு
வற்கம்பா லண்டவெள்ளைக் கருவுங் கூட்டி
சொல்லவே கல்வத்திலாட்டி வில்லை செய்து
உலர்த்தியே யோட்டிவிட்டுமே லோடு மூடி
சொல்லியதோர் குக்குடமாம் புடத்தைப் போடு
சுண்ணமாய் வாங்கியதைவெண் கருவா லாட்டிச்
சொல்லிய குகைபிடித்துமேல் மூடி செய்து
சுகமாக நிழலுலர்த்தி வைத்தி டாயே. 704

வைத்ததொரு சுண்ணமென்ற வகைகட் கெல்லாம்
வளமாகச் சொல்லியதோர் குகையாம் பாரு
செய்திட்ட வெங்காரக் குகைதான் கேளு
செப்பியதோர் சுண்ணமது கல்வத் திட்டு
அய்த்ததொரு சுண்ணும்பு நீரா லாட்டி
அப்பனே வில்லைசெய்து புடத்தைப் போடு
உய்த்ததொரு அண்டவெள்ளை வற்கம் பாலும்
உரைத்திட்ட சுண்ணும்பு நீறுங் கூட்டி
கைத்துமே யரைத்ததனைக் குகைதான் பண்ணி
கடுங்காரச் சுண்ணமொன்று கைதா னுச்சே, 705

ஆச்சென்ற வாதிகட்கு இதுமுன் வேணும்
அல்லாட்டால் குருமுடிக்கச் சுண்ண மாகா
வாச்சென்ற நவலோக முரைக்க வேண்டில்
வச்சிரமாங் குகைகேளுசீலை சுட்ட சாம்பல்
காச்சென்ற வுமிக்கருக்கில் கழுதை லத்தி
காணவகைக்குப் பலம்ரெண்டு வழித்து மண்தான்
ஆச்சென்ற பலமென்ன யீரா ருகும்
அழகான கடுக்காய்நீர் விட்டே ஆட்டி
நீச்சென்ற குகைபிடித்துமேல் மூடி செய்து
நிழலுலர்த்தி நீபதனம் பண்ணிச் செய்யே, 706

செய்யவே சொல்லியதோர் குகைதா னன்றி
செப்பரிய சந்துகள்தா னிறங்க வேண்டி
வெய்யவே உலோகங்க ளுருகும் போது
வெருகுகைக ளானுக்கால் மைய்ஞ்சு போகும்
உய்யவே வாதிகட் கிதுமுன் வேணும்
ஊதிடவே சரக்குவகைசேர்ந் துறுதி யாகும்
துய்யதொரு லோகங்கள் கண்விட் டாட
துருத்திரெண்டு சத்துவகை துருத்தி மூன்றே. 707

மூன்றுன குருமுடிக்கக் காலங் கேளு
மூர்க்கமாஞ் சித்திரைவை காசி யோடும்
மூன்றுகும் மானியாஞ் செந்தூ ரங்கால்
முடிக்கவே புரட்டாசி ஆடியா வணியும்
ஆன்றுன சத்திறங்கும் காலங் கேளு
ஐப்பசியுங் கார்த்திகையுமார் கழியு மாகும்
தாண்டியே செய்நீர்தான் வைக்குங் காலம்
தையோடு மாசிபங் குனியு மாமே. 708

ஆமென்ற குப்பிமுறை செந்தூ ரங்கள்
அஞ்சுசுண்ண மஞ்சுநீர்தா னிறங்குங் காலம்
ஓமென்ற குப்பிமணி மந்திர யோகம்
ஊதுமுறை புடத்திட்ட மெரிப்புத் திட்டம்
ஆமென்ற இவையெல்லாம் விவர மாக
அறியாத பசலைக்கு மறிய வேண்டிப்
பாமென்ற யென்னூலின் வெளியாய்ச் சொல்லி
பாடிவிட்டே னெண்ணூற்றுச் சிலவாம் முற்றே. 709

குறிப்பு :—இந்நூலில் இடையே நூறு பாடல்கள் விடுபட்டுள்ளனவாகக் கருதப்படுகிறது.